# உலக மொழிகள்

முதல் பகுதி

இந்தோ - ஐரோப்பிய மொழிகள் 1

டாக்டர் ச. அகத்தியலிங்கம்
எம்.ஏ., பி.எச்.டி. (கேரளா), பி.எச்.டி. (இந்தியானா)

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

uh
105

உலக மொழிகள்

முதல் பகுதி

இந்தோ-ஐரோப்பிய மொழிகள் I

# உலக மொழிகள்

## முதல் பகுதி

## இந்தோ—ஐரோப்பிய மொழிகள் I

டாக்டர் ச. அகத்தியலிங்கம்
எம்.ஏ., பி.எச்.டி. (கேரளா), பி.எச்.டி. (இந்தியானு)
பேராசிரியர், மொழியியல் துறை
அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

விற்பனை உரிமை
பாரி நிலையம்
59 பிராட்வே, சென்னை 1.

சண்முகம்பிள்ளை அகத்தியலிங்கம் (1929)
**வெளியீடு** — பொன்னகம், அண்ணாமலைநகர்
உரிமை ஆசிரியருக்கே
முதல் பதிப்பு, 1968
விலை ரூ. 8.00

அச்சிட்டது
அழகு அச்சகம்
தெற்கு வீதி, சிதம்பரம்

# முன்னுரை

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மொழி தமிழ் மொழி"

குழந்தைப் பருவம் முதல் இன்று வரையிலும் என் காதுகளில் ஒலித்து வரும் இவ்வரிகள் என் வளர்ச்சிக்கேற்பப் பல்வேறு உணர்ச்சிகளையும் எண்ண அலைகளையும் என்னிடம் எழுப்பி நின்றன. பள்ளிப் பருவத்தில் இவ்வரிகளைக் கேட்ட போது தமிழ்மொழியின் தொன்மையையும் பழைமையையும் எண்ணி எண்ணி இறுமாந்து நின்றது என் உள்ளம். தமிழ்ப் பெருங்குடியின் அங்கமாக இருப்பது பற்றிப் பெருமையும் பூரிப்பும் கொண்டு இவ்வரிகளை மீண்டும் மீண்டும் உச்சரித்து, உள்ளத்தில் நிறுத்தி உறக்கத்திலும் புலம்பிய நாட்கள் எத்தனையோ உண்டு.

ஆனால் கல்லூரி நாட்களில் இவ்வரிகளைக் கேட்ட போதும் கூட்டங்களில் பேசிய போதும் பல சிந்தனைக் குறிகள் என்னுள்ளத்தில் எழும்பி நின்றன. கல் தோன்றிய காலம் எது? அல்லது மண் தோன்றிய காலம் எது? என்று எண்ண முற்படவில்லையாயினும் உண்மையிலேயே கன்னித் தமிழ் தோன்றிய காலம் எது என்று எண்ண முற்பட்டேன். மேலும் உலக மொழிகள் பலவற்றைப் பற்றிப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்த நிலையில் தமிழ்மொழியையும் பிற மொழிகள் பலவற்றையும் பல்வேறு நிலைகளில் ஒப்பிட்டுப் பார்க்கும் பக்குவ நிலையும் ஏற்பட்டது. இன்று உலக மொழிகளாகக் கருதப்படும் ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்யன், ஜெர்மன் போன்ற மொழிகளை ஒருபுறமும் ஒரு சில நாடுகளில் வழங்கும் தமிழை மற்றொரு புறமும் வைத்து ஒப்பிட்டு நின்றது உள்ளம். இது போன்றே அன்று உலக மொழிகளாகக் கருதப்பட்ட கிரீக், லத்தீன், அக்கேடியன் போன்ற மொழிகளும் தமிழும் என்

எண்ண அலையில் நீங்காது நிழலாடி நின்றன. இந்நிலையில் பழமையான வரலாறும் இலக்கியச் சிறப்பும் கொண்ட வட மொழியும் சீன மொழியும் பண்டைய எகிப்தின் எகிப்திய மொழியும் என் சிந்தனையை எத்தனையோ நாட்கள் தாக்கிய துண்டு. எனினும் அன்று இவையெல்லாம் என் சிந்தனையின் அடித்தளத்தின் நிழலாகவே நின்றன.

மொழிப்படிப்பையும் மொழியாராய்ச்சியையும் மேற் கொண்டபோது உள்ளத்தில் ஒரு புதிய வேகம், ஒரு புதிய எழுச்சி ஏற்படக் கண்டேன். சில மொழிகளின் அமைப்புக் களைப்பற்றி மொழியியல் ஆசிரியர்கள் விளக்கிய நிலையில் பல மொழிகளின் அமைப்பையும் அறிய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. "ஆங்கிலமும் வடமொழியும் லத்தீனும் கிரேக்கமும் உட்பிணைப்பு மொழிகள், அதனல் சிறந்த வளர்ச்சியும் பெருமையும் கொண்டன" என்று சிலர் எழுதிச் சென்றதைக் கண்டபோது ஒட்டுநிலை மொழியான தமிழ் சிறந்த வளர்ச்சியும் பெருமையும் இல்லாத ஒன்ரு? என்ற கேள்விக்குறியும் எழுந்தது. இந்நிலையில் "கல் தோன்றி....தமிழ் மொழி" என்று யாரோ சொல்லிச் சென்ற இவ்வரிகள் "உலக மொழிகளில் தமிழ்மொழியின் நிலை என்ன ?" என்று என்னை ஆராயத் தூண்டி நின்றன.

இந்தியான பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வோகளின் (C. F. Voegelin) அவர்கள் கற்பித்த "உலகமொழிகள்" (Languages of the World) பாடத்தைக் கேட்டபோது முன்பே வேர்விட்டிருந்த எண்ணம் பன்மடங்கு பெருகி நின்றது. உலக மொழிகளின் வரலாறு, அமைப்பு, பண்டைப் பெருமை, இன்றைய நிலை போன்றவற்றைத் தெரிந்து கொண்டால் தான் தமிழ் மொழியின் நிலை தெளிவாகும் என்ற உண்மை யும் பளிச்சிட்டது. இதில் எழுந்த முயற்சியில் பல உண்மை கள் வெளியாயின. "யான் பெற்ற பேறு இவ்வையகமும் பெறுக" என்ற எண்ணத்தின் விளைவே இச்சிறுநூல்.

இன்று உலக மொழிகள் எனக் கருதப்படும் ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், ரஷ்யன் போன்ற மொழிகள் காலத்தால் மிகமிகப் பிந்தியன. இம்மொழிகளின் வரலாற்றையும் தமிழ் மொழியின் வரலாற்றையும் ஒப்பிட்டு நோக்கும்போது தமிழ் மொழியின் தொன்மை நன்கு விளங்கும். ஆங்கில மொழியின் முதல் இலக்கியம் கி. பி. ஏழாம் நூற்றுண்டைச் சார்ந்தது. பிரஞ்சு மொழியில் காணப்படும் முதல் எழுத்துருவமாகிய ஸ்டிராஸ்பர்க் ஆணை கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டைச் சார்ந்தது. இது போன்றே ஜெர்மன் மொழிச் சொற்கள் கி. பி. எட்டாம் நூற்றுண்டு முதல்தான் காணப்படுகின்றன. ஒரு சில உடன்படிக்கைகளிலும் பத்திரங்களிலும் காணப்படும் சில மக்கள் பெயர்களும் இடப் பெயர்களுமே இம்மொழியின்கண் காணப்படும் முதல் எழுத்துருவங்கள். கி.பி. பதினுன்காம் நூற்றுண்டில்தான் இம்மொழி தன்னுடைய நிலைமொழியொன்றை வகுத்துக்கொள்ள முடிந்தது.

எனினும் இம்மொழிகளின் வளர்ச்சியை நோக்கும்போது தமிழ்மொழியின் இன்றைய நிலை நன்கு விளங்கும். கி. பி. ஆறு, ஏழாம் நூற்றுண்டுகளில் இங்கிலாந்தில் ஒரு சில குழுவினரால் பேசப்பட்ட ஆங்கிலம் இன்று உலக மொழியாய் இருபத்தாறு கோடிக்கு மேற்பட்ட மக்களின் மொழியாய் விளங்கக் காண்கிறோம். கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டில் பாரிசில் ஒரு சில மக்களால் பயிலப்பட்ட பிரஞ்சு இன்று இருபதுக்கு மேற்பட்ட நாடுகளின் அரசியல் மொழியாக இருக்கக் காண்கிறோம். பதின்மூன்றும் நூற்றுண்டில் நிலைமொழியின்றி இருந்த ஜெர்மன் இன்று அறிவியல் மொழியாய் ஆட்சி செலுத்தக் காண்கிறோம். ஆனுல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கவிதைகளையும் கவிஞர்களையும் இலக்கண அறிஞர்களையும் கண்ட தமிழ்மொழி இன்று அறிவியல் மொழியாவதற்கு ஏற்ற வளம் உடையதுதானு எனக் கேட்குமளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

இது போன்றே பல துறைகளில் உலக மொழிகளின் நிலையையும் தமிழ் மொழியின் நிலையையும் பொருத்திக் காணலாம்.

நிலை மொழிகளின் தோற்றம், அதற்கு உதவிய சூழ்நிலைகள், இலக்கியப் பரப்பு, இலக்கண வரம்பு, கல்வெட்டுக்களின் பண்பு, கால வரையறை, மொழிவளர்ச்சியில் அரசியலாரின் பங்கு, பல்கலைக் கழகங்களின் பணி, அறிஞர்களின் தொண்டு என்றின்னோரன்ன பல நிலைகளில் பிற மொழிகளுடன் ஒப்பிட்டு நோக்கின் தமிழ் மொழியின் வாழ்வும் வளர்ச்சியும் தேய்வும் தேக்கமும் நன்கு தெளிவாகும். இவையனைத்தும் "உலக மொழிகள்" நான்காவது பகுதியில் தமிழ் மொழிபற்றி எழுதும்போது இடம்பெறும்.

உலகில் எத்தனையோ மொழிகள் உள்ளன. மூவாயிரத்துக்கும் அதிகமான மொழிகள் இன்றைய உலகில் காணக் கிடக்கின்றன எனக் கூறுவர் மொழியியல் அறிஞர்கள். இவற்றுள் சில, பல கோடி மக்களால் பேசப்படுவன. சில, ஒரு சில ஆயிரம் மக்களால் வாழ்வன. சிறந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் கொண்ட மக்களால் பேசப்படுவன ஒரு சில; காட்டில் வாழும் நாகரிகமற்ற மக்களிடையே பயிலப்படுவன பல. சிறந்த இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கொண்டன சில; இலக்கியம் எதுவுமின்றி இருப்பன பல. அழிந்த மொழிகள் சில; அழிந்து கொண்டிருக்கின்றவை ஒரு சில. இவையனைத்தையும் பற்றிக் கூறுதல் இயலாததொன்றும். எனினும் முக்கியமானவை எனக் கருதப்படும் ஒரு சில மொழிகளின் வரலாறு, அமைப்பு போன்றவற்றைச் சுருங்கக் கூறுவதே நோக்கம். இம்மொழிகளை இவற்றின் பண்பு, பேசப்படும் இடங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு

1. இந்தோ–ஐரோப்பிய மொழிகள்–I
2. இந்தோ–ஐரோப்பிய மொழிகள்–II
3. இந்தோ–ஐரோப்பிய மொழிகள்–III
   (இந்தோ–இரானிய மொழிகள்)
4. திராவிட மொழிகள்

5. தென் கிழக்காசிய மொழிகள்
6. அமெரிக்க–இந்திய மொழிகள்
7. ஆப்பிரிக்க மொழிகள்
8. வழக்கிழந்த மொழிகள்

என எட்டுப் பகுதிகளாக வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்த முதல் முயற்சியே இச்சிறுநூல்.

இதன்கண் கீரீக், லத்தீன், ஸ்பானிஷ், போர்ச்சுக்கீஸ் போன்ற இருபத்தெட்டு மொழிகள் இடம் பெற்றிருக்கின்றன. இதில் இம்மொழிகள் வழங்கும் இடங்கள், இவற்றைப் பேசும் மக்களின் எண்ணிக்கை, இவற்றின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, போன்ற பல நிலைகள் விளக்கப் பெற்றுள்ளன. இம்மொழிகள் பற்றிய செய்திகள் அனைத்தும் இச்சிறு நூலின் கண் தரப்பட்டுள்ளன எனக் கூறமுடியாது. என்னுடைய நோக்கமும் அது அன்று. இம்மொழிகளைப் பற்றித் தமிழ் மக்கள் ஓரளவு தெரிந்து கொள்ள இந்நூல் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையில் எழுந்த நூலே இது. உலக மொழிகளைப் பற்றித் தெரிந்து கொள்ளும் அதே நேரத்தில் நம் மொழியின் நிலையும் நன்கு விளங்கும். இதுவே என் நோக்கம்; என் ஆசை.

இப்பணிக்குத் துணைபுரிந்த நூல்கள் பல. இவை கிடைப்பதற்குத் துணை புரிந்த நூல் நிலையங்கள் சில. அவற்றுள் சிக்காக்கோ பல்கலைக்கழகம், இந்தியானு பல்கலைக் கழகம், வாஷிங்டன் பல்கலைக்கழகம், அண்ணுமலைப் பல்கலைக் கழகம், டெல்லி பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நூல் நிலையங்கள் குறிப்பிடத் தக்கன. வேண்டும் போதெல்லாம் நூல்களைத் தந்துதவிய நூல் நிலையப் பொறுப்பாளர்களுக்கு என்றும் என் நன்றி.

இந்நூல் அச்சாவதற்கு முன்னர், கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டு உதவிய நண்பர் திரு. செ. வை. சண்முகத்திற்கும், அச்சுப் பிரதியை ஒப்பு நோக்கித் திருத்தியுதவிய மாணவர் திரு. பொன். கோதண்டராமனுக்கும் அச்சிட்டுத் தந்த அழகு அச்சகத்தாருக்கும் என் உளமார்ந்த நன்றி.

*ச. அகத்தியலிங்கம்*

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 0.1 | மொழியமைப்பு | 1 |
| 0.2 | மொழியினம் | 20 |
| 1.0 | இந்தோ-ஐரோப்பிய மொழிகள் | 42 |
| 1.1 | கிரீக் | 53 |
| 1.2 | லத்தீன் | 68 |
| 1.3 | ரொமான்ஸ் மொழிகள் | 88 |
| 1.3.1 | ஸ்பானிஷ் | 98 |
| 1.3.2 | போர்ச்சுக்கீஸ் | 109 |
| 1.3.3 | போர்ச்சுக்கீஸ் கிரியோல் | 118 |
| 1.3.4 | காட்டலன் | 119 |
| 1.3.5 | பிரஞ்சு | 121 |
| 1.3.6 | பிரஞ்சு கிரியோல் | 134 |
| 1.3.7 | பிராவன்சல் | 135 |
| 1.3.8 | ரயட்டோ ரொமான்ஸ் | 137 |
| 1.3.9 | இத்தாலியன் | 139 |
| 1.3.10 | சார்டினியன் | 149 |
| 1.3.11 | ருமேனியன் | 151 |
| 1.4 | கெல்டிக் மொழிகள் | 159 |

| | | |
|---|---|---|
| 1.4.1 | ஐரிஷ் | 172 |
| 1.4.2 | மேங்ஸ் | 175 |
| 1.4.3 | ஸ்காட்டிஷ் கேயலிக் | 181 |
| 1.4.4 | பிக்டிஷ் | 181 |
| 1.4.5 | வெல்ஷ் | 186 |
| 1.4.6 | கார்னிஷ் | 191 |
| 1.4.7 | பிரிட்டன் | 195 |
| 1.4.8 | காலிஷ் | 195 |
| 1.5 | ஜெர்மானிய மொழிகள் | 196 |
| 1.5.1 | கோதிக் | 210 |
| 1.5.2 | பழைய நோர்ஸ் | 226 |
| 1.5.3 | ஐஸ்லாண்டிக் | 235 |
| 1.5.4 | நார்வேஜியன் | 246 |
| 1.5.5 | பெரோயிஸ் | 254 |
| 1.5.6 | டேனிஷ் | 255 |
| 1.5.7 | சுவீடிஷ் | 259 |
| | ரூனிக் எழுத்து முறை | 272 |
| | பிற்சேர்க்கை 2 | 283 |
| | பிற்சேர்க்கை 1 | 284 |
| | உதவிய நூல்கள் | 287 |

# இந்தோ-ஐரோப்பிய மொழிகள் I

## 0. 1. மொழியமைப்பு

மனிதனைப் பேசத் தெரிந்த விலங்கு என்பர். ஆம், பிற உயிர்கட்கு இல்லாத இத்தனி ஆற்றல் பெற்றவன் மனிதன். இவ்வாற்றலால்தான் மனிதன் இன்று செயற்கரிய செயல் களைச் செய்கிறான். எத்தனையோ நூற்றாண்டுகளாக நம் முன்னோர் விட்டுச் சென்ற செய்திகளை நம்மால் அறிய இயலா தாயின் அத்துறைகளில் ஒரு அடிகூட முன்னேற முடியாமல் பண்டைக் காலத்தில் வாழ்ந்துவந்த நம் முன்னோர்களைப் போன்றே நாமும் வாழ்ந்திருப்போம்.

மனிதனை மனிதனுக்கும் இத்தகைய பேச்சு பல மாதிரி யாக இருக்கக் காணலாம். கன்னியாகுமரியில் வாழும் தமிழ் மொழி பேசுவோனும் இமாலயத்தில் வாழும் இந்தி மொழி பேசுவோனும் ஒரேமாதிரியாகப் பேசுவதில்லை. இவர்கள் பேசப் பயன்படுத்தும் உறுப்புக்களில் ஒற்றுமை காணப் படினும் அவற்றால் வெளிவரும் பேச்சில் வேற்றுமையைக் காண்கிறோம். இது போன்றே அவர்கள் சொல்லும் கருத்தில் ஒற்றுமை இருப்பினும் அவர்கள் அதைத் தெரிவிக்கப் பயன் படுத்தும் ஒலிகளில், ஒலிகள் இணைந்து நிற்கும் சொற்கூறு களில், அக்கூறுகள் இணைந்துவரும் சொற்களில், அச்சொற் களின் இணைப்பில் வேற்றுமைகள் பல காண்கிறோம். தனித் தனியாக நிற்கும் இவ்வமைப்புக்களையே தனித்தனி மொழி என்கிறோம்.

இத்தகைய மொழிகள் ஆயிரக்கணக்கில் காணக் கிடக் கின்றன. உலகில் எத்தனை மொழிகள் உள்ளன என்ற வினா விற்கு விடையிறுப்பது சற்றுக் கடினந்தான். உலக மொழிகள் அனைத்தையும் பற்றிய சரியான அறிவு இன்னும் கிடைத் திலது. மலைகளிலும், காடுகளிலும் சிறு சிறு கூட்டமாக வாழும் எத்தனையோ மக்களின் மொழிகளைப் பற்றி நாம் நன்கு அறிந்

திலோம். மேலும் எது மொழி, எது கிளை மொழி (dialect) எனத் திட்டவட்டமாக நிர்ணயிக்க வேண்டிய நிலைகள் பல உள்ளன. எனினும் மொழியியல் அறிஞர்கள் உலக மொழிகளின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதில் விடாமல் உழைத்து வருதல் காணலாம்.[1]

சில மொழிகள் தங்கள் அமைப்பில் ஒற்றுமையுடையனவாகக் காணப்படுகின்றன. ஒலிகளிலும், ஒலிகள் இணைந்து நிற்கும் சொற்கூறுகளிலும் (morpheme), சொற்களிலும் (words), சொற்களின் இணைப்பிலும், அவை தரும் பொருளிலும் ஒற்றுமை காணலாம். இத்தகைய மொழிகளுக்குள் ஏதோ ஒரு விதமான தொடர்பு இருக்கிறது என முடிவு கட்டுகிறோம். இத்தொடர்பினை இனத்தொடர்பு (Genetic relation) என்றும், இம்மொழிகள் ஒரே இனம் அல்லது குடும்பத்தைச் (family) சார்ந்தன என்றும் கூறுவர்.

இது போன்றே உலகின்கண் காணப்படும் மொழிகளில் வெறும் அமைப்பில் மட்டும் சில ஒற்றுமைகள் காணப்படும். ஒலிகளிலும், அம்மொழிகளில் காணப்படும் இலக்கணக் கூறுகளிலும், அவற்றைக் காட்டும் விதத்திலும் இவ்வொற்றுமைகள் உள்ளன. ஆனால் இம்மொழிகளினிடையே ஒலி-பொருள் ஒற்றுமை இருப்பதில்லை. இவற்றின் அமைப்பில் மட்டும் ஒற்றுமை இருப்பின் அதை அடிப்படையாக வைத்துப் பல வேறு வகைகளாகப் (types) பிரிப்பர். இதனை அமைப்பு வகைப்பாடு (Typological Classification) என்பர்.

---

1. F. N. Finck என்பார் தம்முடைய நூலொன்றில் (Die Sprachstämme des Earkkreises) உலகில் 2000 மொழிகட்கு மேலாக உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். லூயிஸ் க்ரே என்பார் தம் நூலில் (Foundations of Language) 2796க்கும் அதிகமான மொழிகள் உள்ளன என்று கூறியுள்ளார். இதனையே மரியோ பை என்பாரும் தம் நூலில் (The world's chief languages) குறிப்பிட்டிருக்கிறார்.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றுண்டு முதல் மொழிகளை அவற்றின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பல வேறு வகைகளாகப் பிரித்தல் காணலாம். பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பப் பகுதியிலும் வாழ்ந்துவந்த மொழியியல் அறிஞர்கள் பலர் இவ்வாறு மொழிகளைப் பிரிப்பதில் ஆர்வம் காட்டிவந்தனர். எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தகுந்த முறையில் இம்முறைப்பாகுபாடு பயன் தரவில்லையாயினும் ஒவ்வொரு மொழியைப் பொறுத்த மட்டிலும் அது எத்தகைய அமைப்பைக் கொண்டது எனக் கூறுவதற்கு மிகவும் பயன்படும் என்பர்.[1] எனினும் இன்றைய மொழியியல் அறிஞர்கள் பலர் இத்தகைய வகைப்பாடு அதிகப் பயன் தருவதில்லை என்றே கருதுகின்றனர். மேலும் உலக மொழிகள் அனைத்தையும் குறிப்பிட்ட சில அமைப்பு முறைகளின் கீழ்க்கொண்டு வருதல் மிகவும் கடினமாகும். குறிப்பிட்ட ஒரு மொழியே பல பண்புகளைக் காட்டி நிற்பதால் திட்டவட்டமான முடிவு எதையும் கூறுதல் முடியாது. பலவேறு அறிஞர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டுப் பின்னர் கைவிட்ட நிலையினையும், 'இது பயனற்றது' எனக் கூறிப் போந்த நிலையினையும் காணலாம்.[2] எனினும் மொழிகளின்

1. Though not satisfactory in every respect, they have the advantage of easy illustration; a language is isolating like Chinese, agglutinative like Turkish, flexional like Sanskrit or Greek, semi-flexional like Finnish, analytical like Eskimo, and incorporating like Mexican Nahutl.

W. J. Entwistle, Aspects of Language, p. 286.

2 This began with Steinthal, who in various works tried to classify languages partly from geographical, partly from structural points of view, without however arriving at ony definite or consistent system. Friedrich Muller in his great Grundriss der Sprach wissen chaft, really gives up the psychological or structural division of languages, distributing the more than hundred different languages among twelve races of mankind, characterized chiefly by external criteria that have nothing to do with language.

Otto Jespersen, Language, p. 79.

அமைப்பு முறையை அடிப்படையாக வைத்து அவற்றைப் பலவேறு வகைகளாகப் பிரித்துள்ளனர்.

**தனிநிலை மொழி** (Isolating Languages)

இம்மொழிகளில் சொற்கள் தனித் தனியாக நின்று ஒட்டுகள் எதையும் ஏற்காமல் அவைகள் வாக்கியங்களில் வரும் இடத்தைப் பொறுத்துக் குறிப்பிட்ட இலக்கணப் பொருளைத் தருகின்றன. இப்பிரிவுக்கு எடுத்துக்காட்டாகச் சீன மொழியைக் குறிப்பிடலாம். இதன்கண் பொதுவாகச் சொற்கள் எவ்விதமான மாற்றத்தையும் அடைவதில்லை. தமிழில் 'வந்தான்', 'செய்தான்' போன்ற சொற்களில் பல ஒட்டுகள் நின்று பல இலக்கணக் கூறுகளைக் காட்டுதல் போன்று இம்மொழிச் சொற்கள் ஒட்டுகளை ஏற்பதில்லை.[1]

**ஒட்டுநிலைமொழி** (Agglutinative Languages)

இதன்கண் இலக்கணக் கூறுகள் பல ஒட்டுகளால் காட்டப்படும். இதனால்தான் இம்மொழிகள் இப்பெயர் பெற்றன. பின்னொட்டு (suffix) முன்னொட்டு (prefix) இடையொட்டு (infix) எனப் பல இணைந்து நின்று சொற்களை உருவாக்குகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழில் வேர்ச் சொற்களுடன் பல ஒட்டுகள் இணைந்து காலம், பால்பகுப்பு போன்ற இலக்கணக் கூறுகளைத் தருகின்றன. இவ்வாறே துருக்கிய மொழி போன்ற பல மொழிகளில் இந்நிலை நன்கு காணப்படுகிறது என்பர். பழைய இலக்கிய சுமேரியன், ஏலமைட் (Elamite), அல்டய்க், காக்கேசியன் போன்ற பல இனமொழிகள் இப்பிரிவினுள் அடங்கும்.

---

1. In contemporary terminology an isolating language is one in which word consists of a single morpheme.

Joseph H. Greenberg, Essays in linguistics, p. 60.

இதில் அடங்கும் மொழிகள் தம்முள்ளும் பல வேற்றுமைகள் காணலாம். சிலமொழிகளில் பின்னொட்டுகள் வருவதையும் (வ-ந்த்-ஆன்) சில மொழிகளில் முன்னொட்டுக்கள் வருவதையும் சில மொழிகளில் இடையொட்டுக்கள் உள்ளதையும் (காக்கேசியன்) காணலாம். பொதுவாக இவ்வகை மொழிகளில் பின்னொட்டுகளே அதிகமாகப் பயன்படுகின்றன என்பர்[1]. கம்போடிய மொழி பின்னொட்டுகள் அதிகமின்றிக் காணப்படுகிற மொழி என்பர்.

இடையொட்டுகள் மிகச்சில மொழிகளிலேயே காணப்படுகின்றன. லத்தீன், கிரீக், வடமொழி போன்றவற்றுள்ளும் இத்தன்மை காணப்படுகிறது என்பார் சபீர்.

| | | |
|---|---|---|
| *vic-i* வென்றேன் | } | (லத்தீன்) |
| *vinc-o* வெல்லுகிறேன் | | |

| | | |
|---|---|---|
| *e-lab-on* எடுக்கிறேன் | } | (கிரீக்) |
| *lamb-an-o* எடுத்தேன் | | |

இவற்றில் மெல்லின மெய்களாய நகரமும் மகரமும் இடையொட்டுகளாக உள்ளன என்பது அவர் எண்ணம். இது

---

1. Of the three types of affixing-the use of prefixes, suffixes and infixes-suffixing is much the commonest....... The reverse case, the use of prefixed elements tothe complete exclusion of suffixes, is far less common. A good example is Khmer (or Cambodian), spoken in French Cochin-China, though even here there are obscure traces of old suffixes that have ceased to function as such and are now felt to form part of the radical element.

Edward Sapir, Language, pp. 70-71.

போன்றே தென் கிழக்காசிய நாடுகளில் பேசப்படும் சில மொழிகளில் இத்தன்மை காணப்படுகிறது என்பார்.[1]

## உட்பிணைப்பு நிலைமொழி (Inflexional Languages)

இம் மொழிகளில் இலக்கணக் கூறுகள், ஒட்டுகள் வேர்ச் சொற்களுடன் மிகப் பிணைந்து இணைவதாலும் உயிர்களின் மாற்றங்களாலும் காட்டப்படுகின்றன. கிரீக், லத்தீன், ஆங்கிலம் போன்ற இந்தோ-ஐரோப்பிய மொழிகளையும் (இ. ஐ.) செமிட்டிக் மொழிகளையும் எடுத்துக்காட்டுகளாகக் காட்டுவர். இத்தகைய மொழிகள் மிகவும் குறைவே.

சில மொழியியலாளர்கள் இம்மொழிகளே மிக வளர்ச்சி யடைந்தவை என்றும், இதனால் இம்மொழி பேசும் மக்களே மிகவும் நாகரீகமானவர்கள் என்றும் கருதினர். இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் உட்பிணைப்பு அதிகமாகக் காணப் படுகின்ற மொழிகளே சிறந்தவை என எண்ணியவர்களும் உண்டு. ஜெர்மானியர்கள் தங்கள் மொழி ஆங்கில மொழி யினை விடச் சிறந்தது என்றும், தாங்கள் மிக நாகரீக வளர்ச்சி பெற்றவர்கள் என்றும் எண்ணி வந்தனர். ஆனால் இத் தகைய தவறான எண்ணத்துக்குக் காரணம் அவரவர் தாய் மொழிப்பற்றே என்பதில் ஐயப்பாடு எதுவும் இல்லை.

இம்மொழிகள் தம்முள்ளும் வேறுபாடுகள் காணலாம். செமிட்டிக் மொழிகள் மூன்று மெய்யெழுத்தாலான வேர்ச் சொற்களைக் கொண்டு நிற்பதும் அவற்றினிடையே பல

---

1. It is particularly prevalent in many languages of southeastern Asia and of the Malay archipelago. Good examples from Khmer (Combodgian) are *tmeu* 'one who walks' and *daneu* 'walking' (verbal noun), both derived from *due* 'to walk'.

Edward Sapir, ibid, p. 75.

உயிர்களை இட்டு இலக்கணக் கூறுகள் பலவற்றைக் காட்டுவதும் இவண் குறிப்பிடத்தக்கவை.

**இணைப்பு நிலைமொழி (Synthetic Languages)**

சில ஒட்டு மொழிகளும் உட்பிணைப்பு மொழிகளும் மிக அதிகமான ஒட்டுகளைக் கொண்டு வரின் அவற்றைச் சிலர் இணைப்பு நிலைமொழி என்று அழைப்பர். இம்மொழிகள் உட்பிணைப்பு மொழிகளிலோ அல்லது ஒட்டு மொழிகளிலோ அடங்குமாயினும், ஒட்டுகளின் எண்ணிக்கையிலும் அதனுல் அவைகாட்டும் பல வேறு இலக்கணக் கூறுகளிலும் உட்பிணைப்பு, ஒட்டு மொழிகளிலிருந்து மாருனவை எனக் கருதலாம். தமிழ், மலையாளம் போன்ற மொழிகளில் ஒரு சில ஒட்டுகளே காணப்பட ரஷ்யன் போன்ற மொழிகளில் பல வேறு ஒட்டுகள் உள்ளன.

**பல்லிணைப்பு நிலைமொழி (Polysynthetic Languages)**

எஸ்கிமோ போன்ற மொழிகளில் இவ்விணைப்புத் தன்மை இன்னும் அதிகமாகக் காணப்படும். நாம் ஒரு வாக்கியத்தில் கூறும் கருத்துக்களை இம்மொழியினர் ஒரே சொல்லில் பலவேறு ஒட்டுகளை இணைத்துக் கூறிவிடுவர். ஒரு சொல்லுடன் பல சொற்களையும் ஒட்டுகளையும் இணைத்து விடுவர் இம்மக்கள். எனவே ஒரு வேர்ச் சொல்லை ஒட்டிப் பல ஒட்டுகளும் பிற வேர்ச் சொற்களும் வருதல் காணலாம் ‘*qasuersarfigssarsingitdulinarnarpoq*’ என்ற ஒரே சொல் ‘ஒருவன் தங்குவதற்கேற்ற இடம் எதையும் கண்டுபிடிக்கவில்லை’ எனப்பொருள்பட்டு நிற்கக் காணலாம். இச் சொல்லில் உள்ள பல சொற்கூறுகளில் *quasu*-என்பதே வேர்ச்சொல். பிற அனைத்துமே ஒட்டுகள்.

**உள்ளடக்கு நிலைமொழி (Incorporating Languages)**

சில மொழிகளின் வினைச் சொற்களில் பெயர்ச் சொற்களையும் உள்ளடக்கிச் செயப்படு பொருளைக் காட்டிவிடுவர். இத்தகைய மொழிகள் மிகமிகக் குறைவே. பல மொழிகளில்

செயப்படுபொருள் காட்டும் விகுதிகளைக் காணலாம். (தமிழில்-ஆன் விகுதி எழுவாயைக் காட்டுதல் போன்று.) வட அமெரிக்க மொழிகளில் ஒன்றான தொத்தானக் மொழியில் 'என்னை' 'எங்களை' என்பன போன்ற செயப்படுபொருள் காட்டும் சொற்கள் தமிழ் மொழியில் போலல்லாமல் ஒரே சொல்லில் வருதல் காணலாம். *kin-tuk-s-li* என்ற சொல்லில் (அவன் என்னைக் குத்தினான்) *kin*-என்ற ஒட்டு 'என்னை' எனப் பொருள் தந்து நிற்கக் காணலாம். ஆனால் செயப்படுபொருளாக வருகின்ற பெயரையே வினைச்சொல்லில் இணைத்துக் காட்டுகின்ற மொழிகள் மிகச் சிலவே. இவற்றையே உள்ளடக்கு மொழிகள் என்பர். மெக்சிக்கோவில் வழங்கும் இந்திய மொழி (Nahutl) போன்ற ஒரு சில மொழிகளே (Paiute, Nahutl, Iroquois) இதனுள் அடங்கும்.

*naka-tl* இறைச்சி
*ni-naka-kwa* நான் இறைச்சி உண்ணுகிறேன் (Nahutl)

இத்தகைய வகைப்பாடு ஒரே நாளில் தோன்றியதன்று; கி. பி. 18, 19ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே பல வேறு மொழியியல் அறிஞர்கள் இப்பணியில் ஈடுபட்டிருந்ததைக் காணலாம். மொழிகளின் அமைப்பு முறையை அடிப்படையாக வைத்து முதன் முதலாக மொழிகளை வகை செய்த பெருமை பிரடரிஷ் வான் சிலேகலைச் (Friedrich von Schlegel 1772-1829) சாரும். பாரிசில் வடமொழி பயின்ற இவர் உலக மொழிகள் அனைத்தையும் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்தார். வடமொழியில் மிகவும் பற்றுக்கொண்டிருந்த இவர் அம்மொழியினையும் அதனைச் சார்ந்த பிறமொழிகளையும் ஒரு பிரிவாகவும் பிற உலக மொழிகள் அனைத்தையும் மற்றொரு பிரிவாகவும் பிரித்தார். முதல் பிரிவு மொழிகளில் வேர்ச் சொற்கள் எழுத்துக்களை மாற்றிப் பல வேறு பொருள் மாற்றங்களைத் தரவல்லன என்றும் அதனால் இதன்கண் ஒரு சிறந்த வளர்ச்சி இருக்கிறது என்றும் கூறினர். மொழியியல் உலகில் 'flexion' என்ற சொல்லை முதன் முதல்

பயன்படுத்தினவர் இவரே. உட்பிணைப்பு மொழிகள் மிக உயர்ந்த வளர்ச்சியடைந்தவை; எனினும் மக்களின் சோம்பேறித்தனத்தால் இம்மொழிகள் மீண்டும் அழகற்று சாதாரண மொழிகளைப் போன்று அவல நிலைக்கு வந்து விடுகின்றன என்றும் எண்ணினர். இந்நிலையை ஆங்கிலம், ஜெர்மன், இந்தி, வங்காளி போன்ற மொழிகளில் காணலாம் என்றார். ஆனல் பிற மொழிகளில் காணப்படும் ஒட்டுகள் நாளடைவில் வேர்ச் சொற்களுடன் கலந்துவிடுகின்ற நிலைக்கு வந்து விடுகின்றன எனவும் கூறியுள்ளார் இவர்.[1]

ஓரசை மொழிகள் எனக் கருதப்படும் சீன மொழி போன்றவற்றையும் இரண்டாவது பிரிவிலேயே அடக்கியுள்ளார் இவர். இவை ஒட்டு மொழிகளிலிருந்து மாறுபட்டிருந்த போதிலும் அவர் இதுபற்றி என்ன கருதியிருந்தார் எனத் தெளிவாகத் தெரியவில்லை. இது போன்றே வேர்ச் சொற்களில் உயிர் மாற்றங்களினல் பலவேறு பொருள் தரும் செமிட்டிக் மொழிகளையும் இவர் இரண்டாவது பிரிவிலேயே அடக்கினமை பொருந்தாது என்பர். இக் குறைகளைக் கண்ட இவருடைய அண்ணன் ஆகஸ்ட் ஸ்லேகல் (August wilhelm Schlegel, 1767-1845) உலக மொழிகளை மூன்றுகப் பிரித்தார்.

சில மொழிகளில், வாக்கியங்களில் காணப்படும் சொற்கள் எவ்விதமான ஒட்டுகளையும் ஏற்காமல் அவைகள் நிற்கும்

---

1. In the organic languages, which represent the highest stage the beauty and art of their structure is apt to be lost through indolence; and German as well as Romanic and modern Indian languages show this tendency when compared with the earlier forms of the languages. In the affix languages, on the other hand, we see that the beginnings a:e completeley artless, but the 'art' in them grows more and more perfect the more affixes are fused with the main word.

Jespersen, Language, p. 35

இடங்கட்கேற்ப இலக்கணப் பொருளைத் தருகின்றன. இம் மொழிகள் இலக்கண உருவம் (grammatical form) எதையும் கொண்டதல்ல என்பது இவர் எண்ணம். இத்தகைய மொழி களைத் தனிநிலை மொழிகள் என்பர். சீன மொழி போன்ற வற்றில் சொற்கள் எவ்வித ஒட்டுகளையும் ஏலாது. இடங் களுக்கேற்ப பல இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன.

வேர்ச் சொற்களுடன் ஒட்டி நிற்கும் ஒட்டுகளால் இலக் கணப் பொருளை உணர்த்துவன. பல்வேறு ஒட்டுகளை ஒன்றன் பின் ஒன்றாக இணைத்துக் காலம் இடம் போன்ற இலக்கணக் கூறுகளைக் காட்டுவதே இவற்றின் பண்பு. இந்நிலை நம்தம் தமிழ் மொழியில் சிறக்க இருப்பதைக் காணலாம். திராவிட மொழிகள், பின்னோ—உக்ரிக் மொழிகள் போன்றவை இப்பிரி வினுள் அடங்கும். இவற்றை 'ஒட்டுநிலை மொழிகள்' என்றார்.

வேர்ச் சொற்களில் காணும் உயிர் மாற்றத்தினால் இலக் கணப் பொருளை உணர்த்துவன உட்பிணைப்பு நிலை. ஆங்கில மொழியில் இத்தன்மையை ஓரளவு காண முடியும். 'sing - sang', 'swim - swam' போன்ற சொற்கள் எடுத்துக் காட் டாக அமையும். எனினும் லத்தீன், செமிட்டிக் மொழிகளில் இந்நிலை நன்றாகக் காணப்படுகிறது என்பர்.

தன்னுடைய தம்பியைப் போலவே இவரும் உட் பிணைப்பு மொழிகள் மிகவும் வளர்ச்சியடைந்தவை எனக் கூறியதுடன் இவற்றை மீண்டும் இணைப்பு நிலை (Synthetic languages), பிரிநிலை (Analytic languages) மொழிகள் என இரண்டாகப் பிரித்துள்ளார். பிணை நிலை மொழிகளில் வேற்றுமை போன்ற இலக்கணக் கூறுகள் ஒரே சொல்லுடன் வரும் உருபுகளால் உணர்த்தப்படுகின்றன என்றும் பிரிநிலை மொழிகளில் முக்கிய சொல்லிலிருந்து பிரிந்து நிற்கும் முன்னுருபுகள், பின்னுருபுகள் துணைவினை போன்றவற்றால்

காட்டப்படுகின்றன என்றும் கூறினர். வடமொழி, லத்தீன் போன்றவை பிணை நிலை மொழிகளாக இருக்க அவற்றி லிருந்து பிறந்த ரொமான்ஸ் மொழிகளும், இந்தி, வங்காளி போன்றவையும் பிரிநிலை மொழிகளாக இருத்தல் காணலாம்.

ஒப்பு மொழியியலின் தந்தையாகக் கருதப்படும் பிரான்சு பாப்பும் (Franz Bopp, 1791–1867) இவ்வடிப்படை யில் மொழிகளை வகை செய்துள்ளார். தன்னுடைய நூல் ஒன்றில் (Vergleichende grammatik) உலக மொழிகளை மூன்று வகைகளாகப் பிரிவு செய்துள்ளார்.

1. எந்த விதமான ஒட்டுக்களையும் ஏலாது தனிச் சொற் களாகவே காணப்படும் வேர்ச் சொற்களைக் கொண்ட மொழி கள். இப்பிரிவின்கண் சீனமொழி போன்றவை அடங்கும். இதன்கண்ணுள்ள சொற்கள் வாக்கியங்களில் நிற்கும் இடத்திற்கேற்பத் தம் இலக்கணக் கருத்தைத் தெரிவிக்கும்.

2. ஓரசையாலான வேர்ச் சொற்களைக் கொண்ட மொழிகள். இச்சொற்கள், ஒட்டுக்கள், உயிர் மாற்றம் போன்ற பல வழிகளில் இலக்கணப் பொருளைத் தரும்.

3. மூன்று மெய்யெழுத்துக்களாலான வேர்ச் சொற்களை யுடைய மொழிகள். பல்வேறு உயிர்கள் இவற்றினிடையே வரும்போது பல இலக்கணக் கூறுகளைத் தரும். இந்நிலை செமிட்டிக் இனமொழிகளில் மட்டுமே காணப்படுதல் இவண் கருதத்தக்கது.

பாப் செய்த பிரிவினைகூட இன்றைய மொழியியல் அறிஞர்களால் ஒத்துக் கொள்ளப்படுதல் இல்லை. இரண்டா வது பிரிவில் இ. ஐ. மொழிகள் மட்டுமல்லாமல், முதல் பிரிவி லும் மூன்றாவது பிரிவிலும் அடங்காத உலக மொழிகள் அனைத்தும் அடங்குதல் காணலாம், செமிட்டிக் இனத்தைப் போன்றே இ. ஐ. இனமும் உயிர் மாற்றங்களைக் கொண்டு விளங்குதலும், செமிட்டிக், சீன மொழிகள் போன்ற விரல்

விட்டு எண்ணக்கூடிய ஒரு சில மொழிகளைத் தவிர உலக மொழிகள் அனைத்தும் ஒரே பிரிவில் சார்ந்து நிற்பதும் இவ் வகைப்பாட்டினைப் பயனற்றதாக்கிவிடுகின்றன.

ஒட்டு (agglutination), உட்பிணைப்பு (flexion) போன்ற சொற்களையும் இவர் பயன்படுத்தவில்லை. இரண்டு பண்பு களும் அடங்கிய இனமாகவே இ. ஐ. மொழிகளைக் கருதி னமையால்தான் இச்சொற்களை இவர் உபயோகிக்கத் தயங் கினர் போலும்! வேர்ச்சொல்லை அடிப்படையாக வைத்தே இவர் மொழிகளைப் பிரித்துள்ளார். சரியான வேர்ச் சொல் லற்ற மொழிகள் (சீன மொழி), ஓரசையாலான வேர்ச்சொற் களைக் கொண்டவை (monosyllabic), ஈரசையாலாகி மூன்று எழுத்துக்களைக் கொண்ட வேரை உடையவை என் பதே அவர் பகுப்பின் சாரம்.

இவருடைய காலத்தில் இப்பணியில் ஈடுபட்டிருந்த மற்றொரு அறிஞர் வான் ஹம்போல்ட் (Wilhelm Von Humboldt, 1767–1835). இவர் உலக மொழிகள் அனைத்தையும் நான்காகப் பிரித்தார்.

1. உட்பிணைப்புநிலை மொழி
2. ஒட்டுநிலை மொழி
3. தனிநிலை மொழி
4. உள்ளடக்கு நிலை மொழி

அமெரிக்க ஐக்கிய நாட்டில் வழங்கும் சில மொழிகளின் வினைச் சொற்களில் செயப்படு பொருளைத் தரும் பெயர்களும் அடங்கியிருத்தல் காணலாம். தமிழில் '(நான்) புலால் உண் டேன்' என இரண்டு அல்லது மூன்று சொற்களில் கூறுவதை இம்மொழிகள் ஒரே சொல்லில் கூறிவிட முடியும். எடுத்துக் காட்டாக மெக்சிக்கோவில் வழங்கும் நகுவத்ல் (Nahuatl)

மொழியில் (*naka-tl*) என்ற சொல் புலால் எனப் பொருள் தர (*ni-naka-kwa*) என்ற சொல் நான் புலால் உண்ணு கிறேன் என்று பொருள்படக் காணலாம். இதன்கண் (*naka*) என்ற பெயர்ச் சொல் வினைச் சொல்லின் ஒரு பகுதியாக நிற்பது தமிழ் போன்ற பல மொழிகளில் காணப்படாத ஒரு பண்பாகும். சில மொழிகளில் செயப்படு பொருள் காட்டும் பெயர், வினை ஒட்டின் முன்னல் வருவதும் இன்னும் சில வற்றில் பின்னல் வருவதும் உண்டு. இப் பண்பினைக் கண்ட ஹும்போல்ட் இம்மொழிகளைத் தனிப் பிரிவாகக் கருதிய துடன் இவை செயப்படுபொருளை வினையின் கண் உள்ள டக்கிக் காட்டுதலால் இவற்றை உள்ளடக்கு நிலை மொழி (Incorporating) என்றும் கூறினர்.

பிற ஆசிரியர்களைப் போலவே இவரும் சீன மொழிக்கு இலக்கண உருவம் (grammatical form) இல்லை என்றார். அதைப் போன்ற மொழிகளை ஒரு பிரிவாகவும் இலக்கண உருவம் கொண்ட (அவர் கருத்துப்படி) பிற மொழிகள் அனைத்தையும் மேற்கூறியவாறு மூன்று பிரிவுகளாகவும் பிரித்தார்; இவற்றுள்ளும் உட்பிணைப்பு மொழியே சிறந்தது என்றும் கருதினர் இவர். உலக மொழிகள் அனைத்தையும் இவ்வாறு பிரிக்கலாம்; ஆயினும் ஒரே பண்பினை மட்டும் கொண்ட மொழிகளைக் காணுதல் இயலாது என்பது இவர் கருத்தாகும். 'மொழிகள் மாறும் தன்மையன. இம்மாற்றத்தில் இரண்டு வகையான நிலைகளைக் காண முடியும். ஒன்று, புதிதான சக்தியும் உணர்ச்சியும் கொண்டு மொழிகள் பல வேறு ஆக்க நிலைகளில் செழித்து வளரும். ஆனல் அடுத்த நிலையில் ஒரு தேக்க நிலை ஏற்படும். இப்போது மொழி பழைய நிலையை விட்டு வாழ்க்கைக்கு இன்றியமையாத அளவுக்கு மட்டுமே பயன்பட்டு நிற்கும். இத்தகைய நிலையில் தான் இன்றைய ஆங்கிலம் காணப்படுகிறது; தன்னுடைய பழைய உட்பிணைப்புத் தன்மையை விட்டு இது சீன மொழி போன்று காணப்படுகிறது. ஜெர்மனைப் போன்று இது

அத்துணைச் சிறந்ததன்று' என்பார் இவர்.[1] ஆங்கிலம் ஜெர்மனைப் போன்று உட்பிணைப்புப் பண்பு அதிகம் இல்லாதிருப்பதால் அத்துணை உயர்ந்த மொழியன்று என இவர் எண்ணுவது தாய் மொழிப் பற்றினால் வந்ததே ஒழிய உண்மையில்லை எனக் கூறுவார் சாய்ஸ்.

இவரைப் போலவே ஆகஸ்ட் ஸ்லேகர் (August Sehleicher, 1821-68) என்பாரும் மொழிகளை வகை செய்வதில் ஈடுபட்டிருந்தார். கூர்த்த அறிவும் சொல்ல வேண்டியவற்றைத் தெளிவாகக் காரண காரியங்களுடன் விளக்கும் ஆற்றலும் பெற்றிருந்த இவர் ஹெஜிலியன், டார்வின் கொள்கைகளில் மிகுந்த மோகம் கொண்டிருந்தார். இதனால் மொழி பற்றிய இவருடைய கொள்கைகளிலும் இவ்வறிஞர்களின் செல்வாக்கினைக் காணமுடியும். ஹெஜிலியன் எதிலுமே மூன்று பகுப்பினைக் காண்பவர். இதனால் இவரும் ஹம்போல்ட், பாட் (August Pott, 1802-87) போன்றோர் மொழிகளை நான்கு பிரிவுகளாகப் பிரித்திருந்தபோதிலும் மூன்று வகைகளாகவே பிரித்தார்.

1. தனிநிலை
2. ஒட்டுநிலை
3. உட்பிணைப்புநிலை

இத்துடன் இவற்றின் பண்புகளைக் குறிக்கும் பொருட்டு ஒருவகையான குறியீடுகளையும் வகுத்தார். பாப் எவ்வாறு வேர்ச் சொற்களை அடிப்படையாகக் கொண்டாரோ அதே போன்று இவரும் அவ்வடிப்படையிலேயே தன்னுடைய பாகுபாட்டையும் அமைத்தார்.

---

1. In ihis way such a language as English may reduce its forms so as to resemble the structure of Chinese; but there will always remain traces of the old flexions; and English is no more eapable of high excellencies than German(Versoh, 282-6)

Jespersen, ibid. p. 60

(1) ஒரு சொல்லில் வேர்ச்சொல் மட்டும் வருவன.

R R R (R=வேர்ச் சொல்)

(2) வேர்ச் சொல்லுடன் முன்னும், பின்னும் ஒட்டுகள் கலந்து வருவன

PRS PRS PRS

P=முன்னொட்டு

S=பின்னொட்டு

(3) இவற்றுடன் உள் மாற்றங்களும் கலந்து வருவன.

PR×S PR×S PR×S

× = உள்மாற்றம்

பெரும்பாலான பிற ஆசிரியர்களைப் போலவே இவரும் ஒரு நிலையிலிருந்தே இன்னொரு நிலை உண்டாகிறது என்றும், இவற்றுள் உட்பிணைப்பு நிலையே சிறந்தது என்றும் கருதினார். ஒரு மொழி ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் வளர முடியாது என்றும் செடிகள் எவ்வாறு பல நிலைகளைக் கடந்து நிறைந்த வளர்ச்சி பெற்றுப் பின்னர் தேய்வடைகிறதோ அதைப் போன்று மொழிகளும் நிறைந்த வளர்ச்சிக்குப் பின்னர் தேய்வடைகின்றன என்றும் கருதினார். இதனால் மொழிகள் குறிப்பிட்ட ஒரு நிலையினைக் கடந்து வளர முடியாது அழிந்து விடுகின்றன என்று எண்ணினரோ என ஐயுறுகின்றனர் பல மொழியியல் அறிஞர்கள்.

ஒரு நிலையிலிருந்துதான் இன்னொரு நிலை உண்டாகியிருக்க வேண்டும் எனக் கருதுவதும் உட்பிணைப்பு மொழியே சிறந்தது என்பதும் பொருந்தாக் கொள்கையாகவே காணப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் ஒட்டு மொழியாக இருக்க முதல் நூற்றாண்டுத் தமிழும் இதே நிலையில் அமைந்திருப்பதையே காண்கிறோம். சீனமொழி இன்று தனிநிலைமொழி எனக் கருதப்படினும் பல நூற்றாண்டுக் காலம் இந்நிலையிலேயே இருத்தல் காணலாம். இவருடைய இவ்

வுயர்வு தாழ்வுக் கொள்கை மிகச் சீக்கிரமாக மறைந்துவிட்ட போதிலும் மூன்று வகையான பிரிவு பல காலம் அறிஞர் களால் ஒப்புக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. இதற்குக் காரணம் உட்பிணைப்பு மொழிகளைப் பேசிவரும் மக்கள் நாகரிகம் வாய்ந்தவர்கள் என்ற எண்ணமே. இ. ஐ. மொழியினரும் செமிட்டிக் மொழியினரும் இவ்வுலகில் நாகரிகம் வாய்ந்தவர்கள் என்ற எண்ணம் வெளிப்படை யாகவோ அல்லது மறைமுகமாகவோ சில ஆசிரியர்களிடம் அமைந்திருந்தமைதான் இதற்கு முக்கிய காரணம். மாக்ஸ் முல்லர், விட்னே போன்ற அறிஞர்கள் தங்கள் எழுத்திலும் பேச்சிலும் இந்த வகைப்பாட்டினை ஒத்துக் கொண்டு விளம்பரப்படுத்தியதும் இவண் குறிப்பிடத்தக்கது.

மாக்ஸ்முல்லரும் இம்மூன்று வகைகளையே கைக் கொண்டிருந்தார். இவர் சிலரைப் பின்பற்றியே தம் வகைப் பாட்டினை அமைத்திருந்தார். பாப்பின் மாணவராக இருந்த போதிலும் சிலேகரின் செல்வாக்கு இவரிடம் அதிகமாக இருந்தது என்பர். இம்மூன்று நிலை மொழிகளுடன், இவர் சமுதாயத்தின் வளர்ச்சியையும் இணைத்துத் தொடர்பு கண் டார். சாதாரண நிலையில் (familiar stage) தனிநிலை மொழி களும் நாடோடி நிலையில் (nomadic stage) ஒட்டு மொழிகளும் அரசியல் நிலையில் (political stage) உட்பிணைப்பு மொழி களும் உருவாகின்றன என்றார் இவர்.

அமெரிக்க நாட்டு மொழியியல் அறிஞரான எட்வர்ட் சபீரும் (Edward Sapir, *1884—1939*) இத்தகைய பாகு பாடு ஒன்றினைச் செய்துள்ளார். மொழி நிலையை வைத்துக் கொண்டு அம்மொழி பேசும் மக்களின் நாகரிகத்தையும் வளர்ச்சியையும் கணக்கிட்ட பிற ஆசிரியர்களைப் போலல் லாமல் விருப்பு வெறுப்பின்றி மொழிகளை ஆராய்ந்து எழுதும் பழக்கம் உள்ளவர் இவர். 'உட்பிணைப்பு மொழிகளே சிறந்த வளர்ச்சியடைந்தவை; பிறமொழிகள் பூரண வளர்ச்சி யடையாது ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றன' என்றெல்

லாம் கூறிய ஆசிரியர்களைப் போலல்லாமல் மொழிகளில் காணும் பண்புகளை மனதில் நிறுத்தியே இவர் பாகுபாடு செய்துள்ளார். 'உட்பிணைப்பு மொழிகள் சிறந்தவை எனக் கூறக்காரணம் அவற்றை ஆராய்ந்து எழுதியவர்கள் இ. ஐ. மொழிகளைப் பேசுபவர்கள்; பலர் லத்தீன் கிரீக் போன்ற மொழிகளைத் தங்கள் இளம் பருவத்திலிருந்தே படித்தவர்கள். அதன் காரணமாகவேதான் தெரிந்தோ தெரியாமலோ தங்கள் மொழியின் மீதுள்ள மோகத்தைக் காட்டியுள்ளனர்' என்று கூறுவார் இவர்.[1] இத்துடன் மொழிகளில் சில உருவ மற்றவை எனக் கூறுவது தவறு என்றும் எல்லாமொழி களுமே உருவம் கொண்டவை என்றும் கூறுவார். இத்துடன் மொழிகளை ஆராயும்போதோ அல்லது வகை செய்யும் போதோ இத்தகைய குறுகிய மனப்பான்மையுடன் நோக்கு தல் கூடாது என்பதை இவர் திட்டவட்டமாக விளக்கியுள் ளார். மொழிகளின் அமைப்பு முறை அம்மொழிகளைப் பேசும் மக்களின் நாகரிக வளர்ச்சியைப் பொறுத்ததன்று. நாகரிக மற்று காட்டில் வாழும் சிவப்பிந்தியர்களின் மொழிகளும் ஆப்பிரிக்க நாட்டில் வழங்கும் ஹாட்டன்டோட், புஷ்மன் மொழிகளும், எஸ்கிமோ மொழிகளும், வளர்ச்சியும் நாகரிகமும் கொண்டு வாழும் பிற மக்களின் மொழிகளிலிருந்து அமைப்பு முறையில் குறைந்ததல்ல. ஒவ்வொரு தனி மொழியும்

---

1. The vast majority of linguistic theorists themselves spoke languages of a certain type, of which the most fully developed varieties were the Latin and Greek that they had learned in their childhood. It was not difficult for them to be persuaded that these familiar languages represented the "highest" development that speech had yet attained and that all other types were but steps on the way to this beloved "inflective" type, whatever conformed to the pattern of Sanskrit and Greek and Latin and German was accepted as expressive of the "highest," whatever departed from it was frowned upon as a short coming or was at best an interesting abberation.[2]

Sapir, ibid. p. 131.

அதற்கேற்ற முறையில் அமைந்துள்ளது.[1] பிளிக், லெப்சியஸ் போன்றோர் ஹாட்டன்டோட் மொழிகளை உட்பிணைப்பு மொழிகள் எனக் கூறிப்போந்தமை இவண் கருதத்தக்க தாகும்.

சபீர் என்பார் தம்முடைய 'மொழி' என்ற நூலில் (Language, 1921) மொழிகளின் அமைப்பு முறையையும் அதன் அடிப்படையில் காணும் வகைகள் பற்றியும் விளக்க மாக எழுதியுள்ளார். உலக மொழிகளில் காணப்படும் பல வேறு வகைகள், ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளமை யால் அவற்றை ஒன்றுபடுத்திக் குறிப்பிட்ட சில ஒழுங்கு முறைக்குள் கொண்டு வருவதிலுள்ள இன்னல்கள் போன்ற பல வேறு செய்திகளை இந்நூலின்கண் ஆராய்கிறார். மேலும் ஒரே மொழியில் பல அமைப்பு முறைகளையும் காணலாம் என்றும் இதனால் எல்லோரும் ஒப்புக்கொள்ளும் வகையில் வகைப்படுத்துதல் இயலாத காரியம் என்றும், எனினும் முயன்று பார்ப்பதில் தவறு ஒன்றும் இல்லை என்றும் கூறுவார். இவருக்கு முன்னால் காணப்படும் வகைப்பாடு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறந்ததாயினும் குறிப்பிட்ட சில மொழிகளைக் கருத்தில் வைத்து அமைக்கப்பட்டமையால் எல்லா மொழிகளையும் உள்ளடக்குவதாக இல்லை என்பார்.

இவர் சொற்களின் நிலைமை, ஆக்கம், ஆக்கப்பிணைப்பு, அவ்வாக்கம் எவ்வளவு தூரம் பிணைந்திருக்கிறது (Conceplual

---

1. Langnage in its fundamental forms is the symbolic expression of human intutions. These may shape themselves in a hundred ways, regardless of the material advancement or backwardness of the people that handle the forms, of which, it need hardly be said, they are in the main unconscious. If, therefore, we wish to understand language in its true inwardness we must disabuse our minds of preferred "values"[3] and accustom ourselves to look upon English and Hottentot with the same cool, yet interested detachment.

Sapir, ibid. pp. 131-132

Technique, and degree of Synthesis) என்பவனற்றை அடிப் படையாக வைத்து உலக மொழிகளைப் பிரித்தார். இவருடைய இப்பாகுபாட்டினை இவருடைய மாணவர்கள் பின் பற்றவில்லை. இன்னும் சிலர் 'இது வகைப்பாடாக இல்லை, விளக்கமாக அமைந்துள்ளது' என்பர்.

இன்று இம்முறையில் அமைந்த வகைப்பாடு அத்தனை செல்வாக்குடன் விளங்காவிடினும் கிரீன்பர்க்கு போன்ற ஒரு சிலர் இம்முறையில் ஆராய்ந்து வருதல் குறிப்பிடத்தக்கது.

---

## 0·2. மொழியினம்

உலகில் காணப்படும் மொழிகளில் பல தம்முள் இனத் தொடர்புடையன என்பர் மொழியியல் அறிஞர்கள். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகள் ஒரே இனத்தைச் சார்ந்தன என்றும் வங்காளி, இந்தி, பஞ்சாபி, ஆங்கிலம், ஜெர்மன், லத்தீன், பிரஞ்சு போன்றவை மற்றொரு இனத்தைச் சார்ந்தவை என்றும் நாம் அறிவோம். இத்தகைய பாகுபாடுகள் எவ்வடிப்படையில அமைந்துள்ளன என்பதை ஆராய்தல் நலம்.

மொழிகளில் பல கூறுகளைக் காணலாம். ஒலி, பொருளைத் தந்து நிற்கும் சொற்கள், அச்சொற்களின் பகுதிகள் (பகுதி, விகுதி, இடைநிலை) போன்ற பல கூறுகள் உள்ளன. ஒரு சொல்லை எடுத்து நோக்கின் அதன்கண்ணும் இடைநிலை விகுதி போன்ற பல ஒட்டுகள் இருக்கக் காணலாம். சொல்லில் காணப்படும் ஒலிக்கும் அச்சொல் தரும் பொருளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. குறிப்பிட்ட ஒரு ஒலி குறிப்பிட்ட ஒரு பொருளைத்தான் தரவேண்டும் என்ற நியதி இல்லை. மொழிகளின் ஆக்கக் காலத்தில் சில பொருட்களைக் குறிக்கும் ஒலிகளாகச் சிலவற்றை அமைத்துக் கொண்டனர். எக்காரணம்பற்றி அக்குறிப்பிட்ட ஒலிகளைக் குறிப்பிட்ட பொருட்களைத் தரத் தேர்ந்தெடுத்தனர் எனக் கூறுதல் இயலாது. தமிழ்மொழியினர் 'இடுகுறிப் பெயர்' எனக் கூறுதல் இக்கருத்தின் அடிப்படையில் எழுந்ததே. காரணப் பெயர் என ஒரு பிரிவு உள்ளதாகக் கூறினும் மீண்டும் அப்பெயர்களை ஆராயின் அவைகளும் இடுகுறியாக அமைந்துள்ள உண்மை புலப்படும். பறப்பதால் பறவை என்கிறோம். ஆனால் பறக்கின்ற தொழிலைக் குறிக்கும் சொல்லாக ஏன் 'பற' இருத்தல் வேண்டும்? இபபொருளுக்கும் இச்சொல்லில் காணப்படும்

ப—ற என்ற ஒலிகட்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. இதனால்தான் தொல்காப்பியனாரும்,

'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' எனக் கூறிப் போந்தார்.

'நாம் 'நாய்,' என்பதை ஆங்கிலேயர்கள் 'dog' என்றும் ஜெர்மானியர்கள் 'hund' என்றும் அராபியர்கள் 'kalb' என்றும் அழைக்கின்றனர். ஒரே பொருளைத் தரும் சொற்கள் பல மொழிகளில் பலவேறு ஒலிகளைக் கொண்டுள்ளன. ஒரு மொழியில் வழங்கும் ஒரு குறிப்பிட்ட ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லுக்கும் வேறொரு மொழியில் அதே பொருளைக் குறிக்கும் சொல்லுக்குமிடையே எவ்வித ஒலி ஒற்றுமையும் ஏற்பட வழியில்லை. ஆனால் பலவேறு மொழிகளை எடுத்து நோக்கின் சில மொழிகளிடையே இத்தகைய ஒற்றுமைகளைக் காணமுடியும்.

1. தமிழில் உள்ள 'பேச்சு' 'தாக்கு' போன்ற சொற்கள் ஆங்கில மொழியில் இதே பொருளைத் தரும் 'speech' 'attack' என்ற சொற்களுடன் ஒலி ஒற்றுமை கொண்டுள்ளன. இவ்வாறு இருமொழிகளுக்கிடையே ஒற்றுமையுடன் காணும் சொற்கள் மிகமிகக் குறைவாகவே உள்ளன.

2. தமிழில் உள்ள அப்பா, அம்மா போன்ற சொற்கள் ஆங்கில மொழியில் உள்ள 'papa,' 'mamma' போன்ற சொற்களுடன் பொருந்திக் காணப்படுகின்றன. இத்தகைய சொற்களும் மிகச் சிலவாகவே உள்ளன.

3. தமிழில் வழங்கப்படும் புக், பென், பென்சில், கார் போன்ற சில சொற்கள் ஆங்கிலச் சொற்களுடன் ஒலியிலும் பொருளிலும் பொருந்தி நிற்கின்றன.

4. ஆங்கிலத்தையும் ஜெர்மனையும் எடுத்து நோக்கின் பல சொற்கள் ஒரே விதமான ஒலியையும் பொருளையும் கொண்டிருக்கின்றன.

| ஆங்கிலம் | ஜெர்மன் |
| --- | --- |
| *plant* | *pflanze* |
| *apple* | *apfel* |
| *open* | *offen* |
| *heart* | *herz* |
| *eat* | *essen* |
| *corn* | *korn* |
| *that* | *das* |

இத்தகைய நூற்றுக்கணக்கான சொற்களைக் காணலாம். இதுபோன்றே தமிழ், மலையாளம் போன்ற மொழிகளை நோக்கினும் இத்தகைய சொற்கள் பல காணப்படும்.

| தமிழ் | மலையாளம் |
| --- | --- |
| அடித்தான் | அடிச்சு |
| வந்தான் | வந்நு |
| இடிந்தது | இடிஞ்ஞு |
| பன்றி | பன்னி |
| பனை | பன |
| தலை | தல |

இவ்வாறு இருமொழிகளிலும் பொருள்-ஒலி ஒற்றுமை கொண்டு வரும் சொற்களை ஆராயின் சில உண்மைகள் வெளி வரும். சில சொற்கள் இரு மொழிகளிலும் தற்செயலாக எக் காரணமுமின்றிப் பொதுவாக வருதல் காணலாம். தமிழில் உள்ள 'பேச்சு' என்ற சொல்லுர்கும் ஆங்கில மொழியில் காணப்படும் 'speech' என்ற சொல்லுக்கும் எவ்விதத் தொடர்பு மில்லை. எனினும் எக்காரணமுமில்லாமல் தற்செயலாக (accidental) இருமொழிகளிலும் சில சொற்கள் தம்முள் பொருள்-ஒலி கூறுபாட்டில் ஒத்துக் காணப்படுகின்றன. இது போன்றே இன்றைய கிரீக் மொழியில் 'மதி' 'mati' என்ற சொல் 'கண்' என்று பொருள்பட அதே பொருளில் மலாய் மொழியிலும் 'mata' என்ற சொல் காணப்படுகிறது. சூடான்

நாட்டில் வழங்கும் திதிங்கா (Didinga) மொழியில் 'badh' என்ற சொல்லும் ஆங்கிலத்தில் 'bad' என்ற சொல்லும் ஒரே பொருள் தருகின்றன. இவ்வாறு சில சொற்கள் சில மொழிகளில் பொருள்—ஒலி ஒற்றுமை கொண்டு காணப்படினும் இம்மொழிகளுக்கிடையே எவ்விதத் தொடர்பையும் மொழியியல் அறிஞர்கள் கற்பிப்பதில்லை. இவை காரணம் எதுவுமின்றித் தற்செயலாக வந்தவை என்றே முடிவு கட்டுகிறார்கள்.

சில குறிப்புச் சொற்களும் (onamato-poetic words) சில குழந்தைச் சொற்களும் பல மொழிகளில் பொதுவாகக் காணப்படலாம். அம்மா, அப்பா போன்ற சொற்கள் இதனுள் அடங்கும்.

இத்தகைய சொற்களும் மிகக் குறைவாகவே உள்ளன. இச்சொற்கள் காணப்படும் மொழிகளை மேலும் துருவி ஆராயின் இவற்றிடையே அதிகமான பொதுச் சொற்களைக் காணுதல் முடியாது. இதனால் இவ்விரு மொழிகளுக்கும் இடையே எவ்வித இனத் தொடர்பையும் நம்மால் காட்ட முடிவதில்லை.

இனித் தமிழில் காணப்படும் புக், பென்சில், பென் போன்ற சொற்களை எடுத்துக் கொள்ளுவோம். இவை அனைத்தும் ஆங்கிலச் சொற்கள். ஆங்கிலேயர்களின் வரவால், அவர்களின் செல்வாக்கினால் இவண் வந்து புகுந்தவை. இந்நிலைமையை உலக மொழிகள் அனைத்திலும் காண முடியும். இருமொழிகள் கலந்து உறவாடுகின்றபோது ஒரு மொழியினரிடமிருந்து இன்னொரு மொழியினர் கடனாகச் சொற்களைப் பெறுவதும் வழங்குவதும் இயற்கை. இவ்வாறு கடன் பெறுவதும் கொடுப்பதும் எல்லாப் பகுதிச் சொற்களிலும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. தமிழுக்கும் வடமொழிக்குமிடையே நீண்ட காலமாகத் தொடர்பு இருந்து வந்துள்ளது. எந்தனையோ சொற்களைக் கடனாகப் பெற்

றிருக்கிறோம்; கொடுத்திருக்கிறோம். இவ்வாறு கடனாகப் பெற்ற சொற்களை ஆராயின் இவ்வுண்மை புலப்படும். வட மொழியினர் செல்வாக்கு நம்முடைய சமயம், கடவுள் வழி பாடு, சமயச் சடங்குகள் போன்ற கலாச்சாரத் துறைகளில் அதிகமாக இருந்தது. ஆதலால் அவற்றைக் குறிக்கும் சொற் களையே அதிகமாகப் பெற்றோம். அன்றாட வாழ்க்கைக்குரிய சொற்கள், நம் உடல் உறுப்புகளின் பெயர்கள் போன்ற வற்றில் அதிகமான வடமொழிச் சொற்களைக் காண முடிவ தில்லை. பொதுவாக மொழிகள் இத்தகைய சொற்களைப் பிற மொழிகளிடமிருந்து அதிகமாகக் கடனாகப் பெறுவதில்லை. இதுபோன்றே அடிக்கொருமுறை ஆங்கிலச் சொற்களை இணைத்துப் பேசும் தமிழர்களிடையேயும் இத்தகைய ஆங்கிலச் சொற்களைக் கேட்க முடியாது. இவற்றையே மொழியியல் அறிஞர்கள் **அடிப்படைச் சொற்கள்** என்பர்.[1]

மேலும் கடனாகக் கொடுத்த மொழியுடன் தொடர்புடைய பிறமொழிகளில் காணப்படும் சொற்கட்கும் இச்சொற்கட்கு மிடையே ஏதாவது தொடர்பு உள்ளதா எனவும் பார்த்தல் நலம். ஆங்கிலம், பிரெஞ்சு மொழியிலிருந்து ஏராளமான சொற்களைக் கடனாகப் பெற்றுள்ளது. ஆனால் ஆங்கிலம் உண்மையில் ஒரு ரொமான்ஸ் மொழியாக இருப்பின் அடிப்படைச் சொற்களிலும் இத்தன்மை புலப்படுவதுடன் பிற ரொமன்ஸ் மொழிகளுடனும் மிகுந்த தொடர்புகொண்டும் காணப்படும்.

பொதுவாகச் சொற்கள் முழுச் சொற்களாகவே பிற மொழிகளில் புகுகின்றன. இலக்கணக்கூறுகளைக் காட்டும்

---

1. Most apparent is simimilarity of basic vocabulary: words for lower numerals, kinkhip, domestic animals, every day activities.

Lehman, Historical Linguistics, p. 17.

ஒட்டுகள் பிறமொழிகளில் அதிகமாகப்புகுவதில்லை. எனினும் இந்நிலை உலக மொழிகளில் இல்லாமலும் இல்லை.[1] ஆயினும் முழுச் சொற்களைப் போன்று மிக எளிதில் பிற மொழிகளில் புகுவதில்லை. கடன் வாங்கும் சொற்களுடன் தமிழ்மொழி ஒட்டுகளை இணைத்துப் பேசும் நாம் (டெரிபிலா (terrible) இருக்கு) பிறமொழி ஒட்டுகளை நம் மொழிச் சொற்களுடன் இணைத்துப் பேசுதல் மிக மிகக் குறைவே. இந்நிலையும் ஒரு மொழியில் பிற மொழியில் காணப்படும் சொற்கள் அதிகமாக இருப்பின் கடனாகப் பெற்றதால் ஏற்பட்ட விளைவா, அன்றி இன உறவினால் ஏற்பட்ட விளைவா என்பதைக் காண உதவும். இதுபோன்றே மாற்றுச் சொற்கூறுகளும் (morph alternants) பயன்படுகின்றன. ஆங்கிலத்தில் *good better, best* என்ற சொற்களில் காணப்படுவது போன்றே ஜெர்மன் மொழியிலும் *gu : t-, bes-, be-,* என்ற மாற்றுச் சொற்கூறுகள் காணப் படுகின்றன. இவற்றுள் *bes, ər* என்ற சொற்கூறுடன் இணைந்து ஒப்புப் பொருளிலும் (*besər, "better"*) *be-, st* என்ற சொற்கூறுடன் இணைந்து மேல்பொருளிலும் (super lative) வருதல் காணலாம். இவ்விரண்டு மொழிகளிலும் இச் சொற்களில் மிக ஒற்றுமை இருக்கக் காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| *gu : t-* | : | *gud-* |
| *bes-* | : | *bet-* |
| *be-* | : | *bes-* |
| *-ər* | : | *-ər* |
| *-st* | : | *-st* |

---

1. I have already pointed out in passing that English has taken over a certain number of morphological elements from French. English also uses a number of affixes that are derived from Latin and Greek. Some of these foreign elements like the *-ize* of *materialize* or the *-able* of *breakable*, are even productive today.

Edward Sapir, Language, p. 215.

இத்தகைய பல வேறு காரணங்களால் ஜெர்மன் மொழிக்கும் ஆங்கிலத்துக்குமிடையே காணப்படும் உறவுக்கும் ஆங்கிலத்துக்கும் தமிழுக்குமிடையே உள்ள தொடர்புக்கும் வேற்றுமை உண்டு என்ற முடிவுக்கு வருகிறேம். தமிழில் பென், புக், போன்ற சொற்கள் கடனுக வந்தவை என முடிவு கட்டுகிறேம். இச் சொற்களும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ருமேனியன் மொழியில் ஐந்தில் ஒரு பகுதிச் சொற்களே லத்தீன் சொற்களாகக் காணப் படினும் அமைப்பிலும் அன்ருட வாழ்க்கையில் பயன்படும் சொற்களின் எண்ணிக்கையிலும் இது லத்தீன் மொழியி லிருந்து பிறந்த ரொமான்ஸ் மொழியாக உள்ளமை இவண் கவனித்தற்பாலது.

மலேயாள மொழியையும் தமிழையும் எடுத்து நோக்கின் நூற்றுக்கணக்கான சொற்கள் பொதுவாக உள்ளமை காண லாம். வடமொழிக்கும் தமிழுக்குமிடையே காணப்படும் பொதுச் சொற்கள் அடிப்படைச் சொற்களாக இல்லாமல் கலாச்சார சொற்களாக (cultural words) இருக்க, தமிழ்-மலேயாளச் சொற்களில் பல அடிப்படைச் சொற்களாகவு மிருத்தல் காணலாம்.

| தமிழ் | மலேயாளம் |
|---|---|
| தலே | தலா |
| கண் | கண்ணெ |
| மூக்கு | மூக்கெ |
| வாய் | வாயெ |
| பல் | பல்லெ |
| தோள் | தோளெ |
| கை | கைய்யெ |
| கால் | காலெ |

இத்தகைய சொற்களும் உறவுப் பெயர்களும் இன்னே ரன்ன பலவும் பொதுவாக உள்ளன. இந்நிலே ஆங்கிலத் துக்கும் தமிழுக்கும் அல்லது தமிழுக்கும் வடமொழிக்கும்

பொதுவாகக் காணப்படும் சொற்களிலிருந்து வேறுபட்ட நிலையைக் காட்டும். மேலும் இத்தகைய பொதுப் பண்பு வெறும் பெயர்ச் சொற்களில் மட்டுமல்லாது வினைச்சொல், இடைச்சொல், துணைவினை போன்ற பல பகுதிகளிலும் பரந்து கிடக்கிறது.

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| அடித்தான் | அடிச்சு |
| வந்தான் | வந்நு |
| இடிந்தது | இடிஞ்ஞு |
| அந்த | ஆ |
| இந்த | ஈ |
| ஐயோ | ஐயோ |
| வந்திருந்தான் | வந்நிருந்நு |

இவை மட்டுமல்லாமல் இரு மொழிகளிலும் காணப்படும் ஓட்டுகளிடையேயும் (suffixes) ஒரு வகைத் தொடர்பு உள்ளது. அடித்தான் என்ற சொல்லில் வருகின்ற இறந்த கால இடைநிலைக்கேற்ப மலையாளத்தில் –ச்ச்– இடைநிலை வருவது இவண் கவனித்தற்பாலது. இது போன்றே ஒலிகளைப் பொறுத்தமட்டில் இவ்விரண்டு மொழிகளுக்கு மிடையே ஒரு வகையான ஒழுங்கான தொடர்பினைக் காணலாம். தமிழில் 'தலை' எனக் கூறுவதை மலையாளத்தார் 'தலா' என்பர்; ஐகாரம் ஆகாரமாக உள்ளது. இம் மாற்றத்தை மலையாள மொழியில் பரக்கக் காணலாம்.

| தமிழ் | மலையாளம் | |
|---|---|---|
| தலை | தலா | ஐ → ஆ |
| மலை | மலா | |
| பனை | பன | |
| அடித்தான் | அடிச்சு | இத்த் → இச்ச் |
| கடித்தான் | கடிச்சு | |
| இடித்தான் | இடிச்சு | |
| வந்தான் | வந்நு | ந்த் → ந்ந் |

ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழியின் சொற்கூறுகள் வேறுபட்டிருந்தாலும் அவற்றிடையே ஒரு ஒழுங்கான ஒப்புமையைக் காணுகிறோம். இவ்வொழுங்கினை ஒழுங்கு ஒப்பு ஒலி மாற்றம் (regular phonetic correspondence) என்பர்.

இவ்வாறு இரு மொழிகளிடையே காணப்படும் தொடர்பு ஏதோ தற்செயலாக ஏற்பட்டதன்று என்ற முடிவுக்கு வந்து விடலாம். இது போலவே ஒரு மொழி இன்னொன்றி லிருந்து சொற்களைக் கடனாகவும் பெற்றிருத்தல் முடியாது. எனவே இவ்விரு மொழிகட்கும் ஏதோ ஒருவித ஆழத் தொடர்பு இருப்பதை உணரலாம். இத் தொடர்பினை இனத் தொடர்பு (genetic relation) என்பர் மொழியியல் அறிஞர்கள்.

உலகில் காணப்படும் பல மொழிகளினிடையே இத் தொடர்பினைக் காணமுடியும். இந்தியாவின் தென் கோடி யிலும் இலங்கையின் ஒரு பகுதியிலும் வழங்கும் தமிழும், பாகிஸ்தானில் வழங்கும் பிராகுய் மொழியும் ஒரே இனத் தவை என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இது போலவே அமெரிக்க நாட்டில் வழங்கும் ஆங்கிலமும், இந்தியாவில் வழங்கும் இந்தியும் ஒரே இனத்தவை. உலகில் வழங்கும் மொழிகள் அனைத்தையும் 30 அல்லது 40 இனங்களாகப் பிரிப்பர் மொழியியல் அறிஞர்கள். இவற்றுள் இந்தோ-ஐரோப்பிய இனம், ஆப்பிரிக்க-ஆசிய இனம், சீனோ-திபேத்திய இனம், உராலிக்-அல்டய்க் இனம், ஆஸ்ட்ரோ-ஆசிய இனம், திராவிட இனம் போன்றவை முக்கிய மானவையாகும்.

உலக மொழிகளின் எண்ணிக்கையைப் பற்றியும், அவற்றின் இன உறவு பற்றியும் ஆராய்ந்த பிரஞ்சு அறிவியல் கழகம் (French Academy) உலகில் 2796 மொழிகள் பேசப் படுகின்றன என்றும் இவை அனைத்தும் இருபத்தேழு இனங் களில் அடங்கும் என்றும் கூறியுள்ளது. எனினும் உலகில் 2500 முதல் 3500 மொழிகள் உள்ளன என்றும் பிரஞ்சுக்

கழகம் தந்துள்ள பட்டியலில் பல மொழிகள் விடப்பட்டுள்ளன என்றும் கூறுவர்.[1]

**இந்தோ - ஐரோப்பிய மொழிகள்**

இந்தோ - ஐரோப்பிய மொழி இனம் இன்று உலகில் வழங்கும் மொழி இனங்களில் மிக முக்கிய இனமாகக் கருதப் படுவது. இதனை இந்தோ - ஜெர்மானிக் என்றும், ஆரியன் என்றும் அழைப்பர். இந்த இனத்தின் மொழிகள் ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களிலும் பல வேறு தீவுகளிலும் வாழும் பலகோடி மக்களால் பேசப்படுகின்றன. இந்த மொழி இனம் இந்தோ-இரானியன், பால்டோ - சிலாவிக், ஜெர்மானிக், இத்தாலோ - கெல்டிக் போன்ற பல வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்திய நாட்டில் வழங்கும் இந்தி, வங்காளி, குஜராத்தி, மராத்தி, அசாமி, பஞ்சாபி போன்ற மொழிகள் இதனுள் அடங்கும். ஆசியா மைனரில் வழக்கி லிருந்து பின்னர் இறந்துவிட்ட ஹிட்டைட் மொழிக்கும் இவ்வினத்திற்கும் மிகுந்த தொடர்புண்டு. இவற்றை இணைத்து இந்தோ-ஹிட்டைட் என அழைப்பர்.

**ஆப்பிரிக்க-ஆசிய மொழிகள் (Afro - Asiatic)**

இவ்விரு கண்டங்களிலும் பேசப்படுவதால் இது இப் பெயர் பெற்றது. முன்னர் ஹெமிட்டோ - செமிட்டிக் என்றழைத்த மொழிகளையே இன்று இப்பெயரால் அழைக் கின்றனர். இதனை எகிப்திய மொழிகள், பெர்பர் (Berber), குஷிட்டிக் (Cushitic), சாட் (Chad), செமிட்டிக் என ஐந்து பிரிவுகளாகப் பிரிப்பர். செமிட்டிக் மொழிகளை மீண்டும் கிழக்கு, மேற்கு என இரு பிரிவுகளாகப் பிரிப்பர். பண்டைக் காலத்தில் உலக மொழியாய் விளங்கிய அக்கேடியன் (Akkadian) கிழக்குப் பிரிவினையும், ஹீப்ரு, பினீசியன், அரபிக் போன்றவை மேற்குப் பிரிவினையும் சார்ந்தவை.

---

1. Louis H. Gray, ibid, p. 418.

**சீனே-திபேத்தியன்** (Sino - Tibetan)

இதனைத் தாய்-சீன மொழி, திபேத்திய - பர்மன், யெனிசை-ஒஸ்தயக் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். இவற்றுள் சீனமொழி முக்கியமானதாகும். இதனை ஒரே மொழி எனப் பலர் எண்ணினும் இதன்கண் ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினர் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குக் கிளை மொழிகள் (dialects) உள்ளன. இவற்றைத் (Mandarin, Wu, Fukien, Hakka, Cantonese) தனி மொழிகளாகக் கருதுவாரும் உளர்.[1] இவற்றுள் மிகப் பெரும்பாலோரால் பயன்படுத்தப்படுவது (515,000,000) மாண்டரின் சீன மொழியாகும். இதுவே சீனு, பார்மோசா நாடுகளின் அரசியல் மொழியாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்து மொழிகளில் ஒன்ருகவும் உள்ளது.

திபேத்திய பர்மன் மொழிகள் திபேத், பர்மா போன்ற இடங்களில் வழங்குகின்றன. திபேத்தன், பர்மீஸ் போன்ற பல மொழிகளைத் தன்னுள் கொண்டது இது.

சீனே-திபேத்திய மொழிகள் 30-க்கும் அதிகமாகக் காணப்படுகின்றன என்றும் இவற்றைப் பேசுவோராக சுமார் 760,000,000 மக்கள் உள்ளனர் என்றும் கூறுவர்.

**உராலிக்-அல்டய்க்** (Uralic - Altaic)

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் வழங்கும் மற்ருெரு இனம் உராலிக்-அல்டய்க். இதன்கண் நாற்பது மொழிகள் உள்ளன. இவற்றைப் பேசுவோராக இன்று 90,000,000 மக்கள் உள்ளனர். இவற்றை உராலிக், அல்டய்க் என இரு பிரிவுகளாகப் பிரிப்பர். உராலிக் பிரிவை மீண்டும் பின்னிஷ் உக்ரிக், பெரிமியன் எனவும் அல்டய்க் பிரிவினை துருக்கி,

---

1. Since one writing system is used throughout China, the assumption is sometimes made that *Chinese* comprises one language. It actually consists of nine, possibly seven mutually unintelligible languages, each with subdialects.

Lehman, ibid. p. 46.

மங்கோலியன், மஞ்சு-துங்கூஸ் எனவும் பிரிப்பர், இந்த இனத்தில் பின்னிஷ், ஹங்கேரியன், துருக்கி, மங்கோலியன், துங்கூஸ் போன்ற மொழிகள் அடங்கும். இம்மொழிகள் பின்லண்டு, ஹங்கேரி, எஸ்தோனியா, துருக்கி, ரஷ்யா, சீனு, மங்கோலியா போன்ற நாடுகளில் வழங்குகின்றன. இவற்றை டாக்டர் கால்டுவெல் சித்திய இனம் என்றழைத்தார். இவற்றிற்கும் திராவிட மொழிகட்கும் மிகுந்த தொடர்புண்டு என்பது அவர் கொள்கை.

ஜப்பானிய, கொரியன் மொழிகளை இவற்றுள் அடக்குவாரும் உளர்.

**திராவிட மொழியினம்**

தென்னிந்தியா, பாகிஸ்தானில் பெலுச்சிஸ்தானம் இலங்கை, மலேசியா, தென்னுப்பிரிக்கா போன்ற இடங்களில் வழங்குகின்றன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய இருபத்திரண்டு மொழிகள் இதனுள் அடங்கும். 120,000,000 மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர்.

இவற்றைத் தெற்கு, நடு, வட திராவிட மொழிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். பழைமையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட இவ்வினம் பண்டு இந்தியா முழுவதும் பரந்திருந்தது என்றும் இதுவே இந்திய நாட்டிற்குரிய மொழியினம் என்றும் கூறுவர்.[1]

**தென்கிழக்காசிய மொழிகள்**

வியட்னும், கம்போடியா, மலேசியா, இந்தியா, போன்ற நாடுகளில் வாழும் 45,000,000 மக்களால் பேசப்படும்

---

1. Since some Dravidian languages are still found in the north of India, and Brahui in eastern Baluchistan, it is suggested that Dravidian was the most widely distributed indegenous language family in India when Indo-European speakers invaded it near the end of the second millennium B. C.

Lehman, ibid. p· 43.

இருபதுக்கும் அதிகமான மொழிகள் இதனுள் அடங்கும் இவற்றை முண்டா, மோன் - கமர் (*Mon-Khmer*) அன்னம் முவாங் (Annam-Muong) என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். சிமித் என்பார் (Father W. Schmidt) இவற்றை ஆஸட்ரோ-ஆசிய (Austro-Asiatic) மொழிகள் என அழைப்பதுடன் மலேயோ - பாலினேசியன் மொழிகளுடன் இணைத்து ஆஸ்டிரிக் மொழிகள் (Austric) என்பர். சந்தாளி, முண்டாரி, வியட்டனமீஸ், கம்போடியன் (Khmer) மோன் போன்ற மொழிகளும் இதனுள் அடங்கும்.

**மலேயோ-பாலினேசியன்** (Malayo-Polynesion)

இவற்றைச் சிலர் 'ஆஸ்ட்ரோனேசியன்' என்றும் அழைப்பர். இது கிழக்கே பசிபிக் கடல் தீரத்தில் உள்ள ஈஸ்டர் தீவு (Easter Island) முதல் மேற்கே ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையிலுள்ள மடகாஸ்கர் வரையிலும் வடக்கே பார்மோசா முதல் தெற்கே நியூசிலாந்து வரையும் பரந்து வழங்கும் மொழியினம். ஆயிரக்கணக்கான தீவுகளில் இவை வழங்கப்படுவதால் பல வேறு கிளை மொழிகள் உருவாகிப் பின்னர் அவற்றினின்று தனிமொழிகள் பல உருவாகி யுள்ளன. இக்குழுவில் உள்ள முக்கியமான மொழிகள் பற்றியே ஆராய்ந்துள்ளனர். இப்பிரிவின்கண் சுமார் 500 மொழிகள் உள்ளன என்றும் 130,000,000 மக்கள் இம் மொழிகளைப் பேசி வருகின்றனர் என்றும் கூறுவர். இவற்றை இண்டோனேசியன், மலேனேசியன் (Malenesian) மைக்ரோ னேசியன் (Micronesian) பாலினேசியன் (Polynesian) என நான்கு பிரிவுகளாகப் பிரிப்பர்.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் வழங்கும் தகலாக் (Tagalog) இலகானோ (Ilocano) சுமத்திராவில் வழங்கும் படக் (Batak),. மலாய், ஜாவாவில் வழங்கும் ஜாவனீஸ் மடகாஸ்கரில் வழங்கும் மலகாசி (Malagasy) போன்றவை முதல் பிரிவிலும் சாலமொன் (Salomon) சாந்தா குரூஸ் (Santa Cruz) புதிய ஹெப்ரிட்ஸ் (New Hebrides), பிஜி போன்ற தீவுகளில்

வழங்கும் பல சின்னஞ்சிறு மொழிகள் இரண்டாவது பிரிவிலும், கிங்ஸ்மில் (Kingsmill, Marshall, Caroline, Gilbert) போன்ற பகுதிகளில் வழங்குவன மூன்ருவது பிரிவினுள்ளும் பாலினேசியன் தீவுகளில் வழங்கும் மாவோரி போன்ற மொழிகளும் (Tahitian, Samoan Maori போன்றவை) ஹவாயில் வழங்கும் ஹவாய் மொழியும் நான்காவது பிரிவிலும் அடங்கும்.

### பாப்பன் மொழிகள் (Papuan)

இதனுள் சுமார் 150 மொழிகள் உள்ளன. நியூகினியிலும் அதைச் சுற்றியுள்ள பலவேறு தீவுகளிலும் வழங்கும் இம் மொழிகளைப்பற்றி அதிகம் தெரிவதில்லை. இட அடிப்படையில் இவற்றை இணைத்துக் கூறுகின்றனரே யன்றி இனவடிப் படையில் இவற்றினிடையே ஒற்றுமையை நிர்ணயிக்கும் அளவுக்குத் தெளிவான செய்திகள் கிடைத்தில. இந்த மொழிக் குடும்பத்தில் 2,000,000 மக்கள் உள்ளனர்.

### ஆஸ்திரேலிய மொழிகள்

இம்மொழிகளும் இடவடிப்படையிலேயே இணைக்கப் படுகின்றன. நூற்றுக்கு அதிகமான மொழிகள் இவண் உள்ளன. 200,000 மக்கள் இவற்றைப் பேசுகின்றனர். அமெரிக்க இந்திய மொழிகளைப் போலவே இவையும் அழிந்து கொண்டிருக்கின்றன. பல வேறு விசேட இலக்கணக் கூறுகளை இவற்றின்கண் காண முடியும்.

### அமெரிக்க இந்திய மொழிகள்

இந்த இனத்தில் ஏழுநூறுக்கதிகமான மொழிகளைக் காணலாம். இவற்றின்கண் பலவேறு இனங்கள் உள்ளன. இவற்றை வட அமெரிக்க மொழிகள், மெச்சிக்கோ மொழிகள், நடு அமெரிக்க மொழிகள், தென் அமெரிக்க மொழிகள் எனப் பிரிப்பர். இவை ஒவ்வொரு பிரிவிலும் பல இனங்கள் உள்ளன. இம்மொழிகளைப் பேசுவோராக சுமார் 12,000,000

மக்கள் உள்ளனர். பிறமொழிகளில் காணப்படாத இலக்கணக் கூறுகள் பல இம்மொழிகளில் காணக்கிடக்கின்றன.

**ஜப்பானிய மொழி**

இந்த மொழிக்குடும்பம் ஜப்பானில் வாழும் சுமார் 95,000,000 மக்களால் பேசப்படுவது. சில மொழியியலாளர்கள் கொரியன் மொழியையும், இதனையும் அல்டய்க் இனத்துடன் இணைப்பர். சீன மொழியின் செல்வாக்கினை இதில் அதிகமாகக் காணலாம்.

**கொரியன்**

இது கொரிய நாட்டில் வாழும் 37,000,000 மக்களால் பேசப்படுவது. ஜப்பானில் இம்மொழி பேசுவோராகச் சுமார் 600,000 மக்கள் உள்ளனர். இம்மொழியின்கண் ஏராளமான சீன மொழிச் சொற்களைக் காணலாம். கி.பி. 15ஆம் நூற்றுண்டு வரையிலும் சீன எழுத்துக்களாலேயே எழுதப்பட்டு வந்தது. அதன் பின்னர் வடமொழி எழுத்துக்களை ஒட்டிக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்தில் எழுதப்பட்டு வருகிறது.

**பாஸ்க் (Basque)**

வட ஸ்பெயினிலும் பிரஞ்சு நாட்டின் தென்மேற்குப் பகுதிகளிலும் வழங்குகிறது. இன்று ஐரோப்பாவில் வழங்கும் மொழிகளில் எவ்வினத்தையும் சாராத மொழி இது ஒன்றுதான். இம்மொழி பேசுவோர் ஸ்பெயின் நாட்டில் சுமார் 50,000-50,000 மக்களும் பிரஞ்சு நாட்டில் சுமார் 90,000 மக்களும் உள்ளனர். ஆயிரக்கணக்கான வருடங்களாக நடந்து வந்த அந்நிய மொழியினரின் படையெடுப்பிற்கும் ஆதிக்கத்திற்கும் உள்ளாகியும் அழிவுபட்டுச் சிதைவடையாத மொழி இது. பிற மொழிகளின் செல்வாக்கிற்குட்பட்டிருப்பினும் தன்னுடைய தனித்தன்மையை விட்டு அவற்றுடன் இரண்டறக் கலந்துவிடவில்லை.

உலக மொழிகளை இன உறவு அடிப்படையில் இவ்வாறு பல வேறு வகைகளாக இன்று பிரிக்க முடியினும் இது பற்றிய ஆராய்ச்சி மிகப் பழங்காலத்திலேயே ஆரம்பமாயிற்று எனக் கூறலாம். வேதாகமக் காலத்திலேயே மக்கள் உலகில் காணப்படும் மொழிகளின் தொடர்பு பற்றி எண்ண ஆரம்பித்து விட்டனர். இதனுல்தான் வேதாகமத்தில் 'உலகம் முழுவதும் ஒரே மொழி பேசப்பட்டது' என்றும் 'மனிதன் கடவுளுக்கெதிராக பாபல் கோபுரத்தை எழுப்ப முயன்ற போது கடவுள் மனிதனின் மொழியைக் குளறுபடி செய்து ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளாமல் செய்து விட்டார்' என்றும் கூறப்படுதல் காண்கிறோம்.

முதன் முதல் பேசப்பட்ட மொழி ஹீப்ரு (Hebrew) என்றும் அதிலிருந்துதான் உலக மொழிகள் அனைத்தும் கிளைத்தன என்றும் சிலர் எண்ணி வந்தனர். இதன் கண்ணிருந்தே நோவாவின் (Noah) மூன்று மக்களும் அவர்களின் சந்ததியார்களும் பிரிந்து எழுபத்திரண்டு மொழிகளைப் (ஜேபத் 14, ஹேம் 32, ஷாம் 26) பேசி வந்தனர் எனவும் கூறினர். மொழி கடவுளால் ஆக்கப்பட்டது என்றும் அவ்வாறு ஆக்கப்பட்டதே ஹீப்ரு எனவும் வாதாடினர் பலர். 14, 15ஆம் நூற்றுண்டில் ஸ்காட்லாந்தில் அரசுசெலுத்தி வந்த மன்னன் 4-வது ஜேம்ஸ் (James IV 1488 – 1513) எகிப்திய மன்னன் சாமித்திக்கோஸ் போன்றே இருகுழந்தைகளைப் பரிசோதித்துப் பார்த்தபோது அவர்கள் ஹீப்ருமொழியையே முதன் முதல் பேசினர் என முடிவு கட்டினுனும்.[1]

---

1. Herodotos records that the Egyptian king Psammitichos thus selected two children, whose first utterance *bekos*, which was identified with the Phyrigian world for 'bread'. Emperor Friederick II (1194-1250) made a similar experiment, but the infants died before producing any intelligible sounds; and James IV of Scotland (1488 – 1513) is said similarly interned two children who he determined 'spak guid Ebrew'.

Louis H. Gray, Foundations of Language, p. 30.

ஹீப்ருவே உலக முதன் மொழி என்ற எண்ணம் கி. பி. பதினெட்டாம் நூற்ருண்டு வரையிலும் வழக்கிலிருந்தமை காணலாம். கி. பி. 1606இல் பிரஞ்சு அறிஞரான குச்சார்டு (E. Guichard) ஹீப்ரு, சால், டைக், சிரியாக், லத்தீன், பிரஞ்சு, இத்தாலியன், ஸ்பானிஷ், ஜெர்மன், பிளிமிஷ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் சொல் வரலாற்று அகராதி ஒன்றை வெளியிட்டார். ஒரு சொல்லிலிருந்து இன்னெரு மொழிச் சொல்லைப் பெறுவதில் கடினம் ஒன்று மில்லை என்றும் சில விகுதிகளைக் கூட்டவோ குறைக்கவோ மாற்றவோ செய்யின் மிக எளிதாகப் பெற்றுவிடலாம் என்றும் கூறினர். இது போலவே பதினெட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த ஹெர்டர் (Johann Gottfried Herder, 1744–1803) ஹீப்ரு மொழியே முதல் மொழி என்ருர். மொழி கடவுளால் ஆக்கப்பட்டதன்று என இவர் வாதாடிய போதிலும் ஹீப்ரு விலிருந்துதான் பிற உலக மொழிகள் அனைத்தும் பிறந்து வளர்ந்தன என எண்ணினர் இவர்.[1]

இத்தவருன எண்ணத்தை எதிர்த்துக் கூறிய பெருமை பேரறிஞர் லெபனிஸைச் (Gottfried wilhelm Von Leibniz, 1646–1716) சாரும்[2]. கணிதம், தத்துவம், போன்ற பல துறைகளிலும் சிறந்து விளங்கிய இப்பெரியார் இக்கொள் கையை எதிர்த்ததுடன் தன்னுடைய கட்டுரை ஒன்றில் (Breviz designatio meditationum de Originibus gentium ductis potissimum exindiciis linguarum, *1710*) மொழிகள்

1. Jespersen, Language, pp. 27–28.

2. Rejecting the Hebrail theory which was at that time, and had been for centuries, the great stumbling-block in the path of philology, he was the first to see that linguistic science was as exact as any other and therefore should only be studied on the same principles and by the same methods as any of the natural sciences.

Rev. Friederic W. Farrar, Language and Languages, pp. 289-290.

W. K. Matthews, Russian Historical Grammar, p. 3.

பலவற்றையும் ஒரு பழைய மூலமொழியிலிருந்து (Proto Specch) தருவித்தல் முடியும் எனக் கூறினர். இம்முறை இன்று ஒப்பு மொழியியலின்கண் மிக அதிகமாகப் பயன் படுதல் காணலாம். உராலிக்-அல்டய்க் மொழிகளில் அடங்கும் துருக்கி, மங்கோல், மஞ்சு, பின்னிஷ், லாப்பிஷ், எஸ்தோனியன், ஹங்கேரியன் போன்ற மொழிகளி னிடையே காணப்படும் சில ஒற்றுமைகளையும் இவர்தான் முதன்முதலில் கண்டு கூறினர். இதுபோன்றே ஐரோப்பா வில் காணும் பாஸ்க் பிற மொழிகளிலிருந்து வேறுபட்டுள்ளது எனக் கருதினர்.

மொழிகளின் இன உறவினைக் காண வேண்டின் அம் மொழிகள் பற்றிய செய்திகளைச் சேகரித்தாக வேண்டும் என எண்ணினர். இதனல் மதக் குருக்கள், யாத்திரை செய்வோர் போன்ற பலரிடம் பல வேறு மொழிகளைச் சேகரிக்குமாறு வேண்டினர். இத்துடன் பேரரசன் பீட்டரிடம் (Peter the Great) பத்து கற்பனைகளையும் கடவுள் தொழுகையினையும் (Lord's Prayer) அவன் நாட்டில் வழங்கும் மொழிகள் அனைத் திலும் மொழிபெயர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட துடன் அவன் நாட்டு மொழிகள் அனைத்தையும் சேகரித்து அவற்றின் இலக்கணங்கள், அகராதிகள் போன்றன செய்யு மாறு தூண்டினர். இதன் பயனாக அவனுக்குப் பின்னர் பட்டத்துக்கு வந்த காதரினின் (Catherine II) காலத்தில் இருநூற்றுக்கதிகமான மொழிகள் சேகரிக்கப்பட்டு (1786-1787) வெளி வந்தன. இப்பணியில் ஈடுபட்டிருந்தவர் பேராசிரியர் பல்லாஸ் (P. S. Pallas) என்பவராவார்.

கூர்த்த மதியும் ஆழ்ந்த ஆராய்ச்சி நுட்பமும் கொண்டி ருந்த லெபனிசும் சில தவறுகளைச் செய்துள்ளார் என்பர். ஐரோப்பா, ஆசியா, எகிப்து என்ற நாடுகளில் பயிலப்பட்ட மொழிகள் ஒரே இனத்தைச் சார்ந்தவை என்பது இவரு டைய தவருன எண்ணம்.

இதன் பின்னர் பல மொழிகள் பற்றிய செய்திகள் வெளி யாயின. ஹெர்வாஸ் (Lorenzo Hervas Y Panduro, 1735-

1809) என்ற ஸ்பானிஷ் பாதிரியார் ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் பேசப்படும் முன்னூறு மொழிகளின் சொற்களைச் சேகரித்து 1800-1805இல் வெளியிட்டார். இது போன்றே ஜெர்மானிய அறிஞரான ஆதுலாங் (Johann Christop Adelung 1732-1806) என்பாரின் முயற்சியால் 1806ல் (இவர் இறந்த பின்னர்) வெளிவந்த நூலும் (Mithridates) இவண் குறிப்பிடத்தக்கதாம்[1]. இந்நூல் தெற்கு ஆசியா, மேற்கு ஆசியா, ஐரோப்பா நாடுகளில் வழங்கிய பல மொழிகள் பற்றிக் குறிப்பிடுவதுடன் கிரீக், லத்தீன் போன்ற மொழிகளினிடையே தொடர்புள்ளது எனவும் குறிப்பிடுதல் காணலாம். 'பெர்சியன் மொழியினை ஒரு ஜெர்மானியன் நன்கு புரிந்து கொள்ளுதல் முடியும்' என்பது போன்ற பல பொருந்தாக் கூற்றுகளைக் கொண்டிருப்பினும் பல சிறந்த அம்சங்களைக் கொண்டுள்ளது இந்நூல்.

இந்நூற்றுண்டில் இத்தகைய நூற்கள் பல வெளிவந்துள்ளன. 1702இல் லுடால்ப் (Job Ludof, 1624–1704) பல செமிட்டிக் மொழிகளை ஒற்றுமைப் படுத்தி ஆராய்ந்த நூல் ஒன்றை வெளியிட்டார். இதனை அடுத்து லூயிட் (Edward Lhuyd, 1660—1709) என்பாரால் 1707இல் கெல்டிக் மொழிகள் பற்றிய நூல் ஒன்று வெளிவந்தது. இதன் பின்னர் கி. பி. 1769இல் சுவீடிஷ் அறிஞர் ஒருவரால் (J. Ihre, 1707 - 80) வெளியிடப்பட்ட சுவீடிஷ் சொல் வரலாற்றகராதி ஒன்றும் (Glossarium Suio—Gothicum), 1799இல் கியார்மதி (Gyarmathi 1751-1830) வெளியிட்ட ஹங்கேரியன்-பின்னிஷ் இனத் தொடர்பு பற்றிய நூலும் குறிப்பிடத்தக்கவை.

இவ்வாறு 18ஆம் நூற்றுண்டில் வெளிவந்த நூற்கள் மொழிகள் பலவற்றிடையே காணப்பட்ட இனத்தொடர்பு பற்றிய ஒரு சில எண்ணங்களைக் கொண்டிருந்தன. இவை

---

1. இந்நூல் இவர் இறந்த பின்பே வெளி வந்தது. இப் பெரும் முயற்சியில் தமது 74வது வயதில் தான் இவர் ஈடுபட்டார் என்பர்.

கள் அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து எழுதப்படாமல் பிழைகள் மலிந்து காணப்பட்ட போதிலும் ஒப்பு மொழியிய லுக்கும் அதனல் மொழிகளை இனவடிப்படையில் பிரித்து வகை செய்தற்கும் மிகவும் உதவியாக இருந்தன.

எனினும் இப்பணிக்கு வித்திட்டவர் சர் வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones, 1746--1794) என்ற ஆங்கில அறிஞர் ஆவார். கல்கத்தாவில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிவந்த இப்பெரியார் வடமொழி பயின்றபோது இம்மொழிக்கும் ஐரோப்பிய மொழிகள் பலவற்றிற்கும் இடையே காணப்படும் பல ஒற்றுமைகளைக் கவனித்தார். இவற்றிடையே காணப்படும் இவ்வொற்றுமைகள் ஒரு மூல மொழியிலிருந்து இவையனைத்தும் வந்ததன் காரணமாக அமைந்திருக்கலாம் என எண்ணினர். இதனைத் தன்னு டைய பேச்சிலும் எழுத்திலும் (1786) வெளியிட்டார்.[1] இதுவே இன்றைய மொழியியலின் தோற்றத்திற்கு வழி வகுத்தது.

வடமொழிக்கும், கிரீக், லத்தீன் மொழிகட்குமிடையே காணப்படும் இன உறவினைப் பற்றியும் இம்மொழிகள் ஒரு மூல மொழியிலிருந்து வந்திருக்கலாம் என்றும் திட்டவட்ட மாக, எல்லோரும் அறியும் வண்ணம் கூறிய பெருமை

---

1. The *Sanscrit* language, whatever be its antiquity, is of a wonderful structure; more perfect than the *Greek*, more copious than the *Latin*, and more exquisitely refined than either, yet bearing to both of them a stronger affinity, both in the roots of verbs and in the forms of grammar, than could possibly have been produced by accident; *so strong indeed, that no philologer could examine them all three, without believing them to have sprung from some common source, which perhaps no longer exists*: there is a similar reason, though not quite so forciful, for supposing that both the *Gothick* and *Celtic*, though blended with a very different idiom, had the same origin with the *Sanscrit*; and the old *Persian* might be added to the family.

John T. Waterman, Perspectives in Linguistics, p. 16.

ஜோன்சையே சாரும். எனினும் இவருக்கு முன்பே பல ஐரோப்பியர்கள் வடமொழி பற்றி அறிந்திருந்ததுடன் அதன் கண் நல்ல பயிற்சியும் பெற்றிருந்தனர். கி. பி. 16-ஆம் நூற்ருண்டில் (1583–1584) கோவாவில் வாழ்ந்துவந்த சாசெத்தி (Flippo Sassetti) என்ற இத்தாலியர் தம்முடைய முடங்கல்களில் இம்மொழியின் பழைமை, அழகு, ஆழம் போன்ற பல பண்புகள் பற்றிக் குறிப்பிட்டிருந்ததுடன் இத்தாலி மொழிக்கும் இதற்குமிடையே காணப்படும் தொடர்பு பற்றியும் குறிப்பிட்டுள்ளார். ரோஜர் என்ற டச்சுப் பாதிரி (A. Roger) *1630–1647*-இல் வடமொழி பயின்ற துடன் பர்த்ருஹரியின் பாடல்கள் பலவற்றை டச்சு மொழியில் (Open – Deure tot het Verborgen heydendom, Amsterdam, 1651) மொழிபெயர்த்துள்ளார். இது போன்றே ராபர்ட் டி நொபிலி (1577–1656), ஜெர்மன் பாதிரி ராத் (H. Roth) போன்ற பலர் வடமொழியில் பயிற்சி பெற் றுள்ளனர். எனினும் வில்லியம் ஜோன்சுக்குக் கிடைத்த பெருமை வேறு எவருக்கும் கிடைக்கவில்லை

இது போன்றே இவர் வெளியிட்ட கருத்துக்களை இவருக்கு முன்பே பல அறிஞர்கள் கூறியுள்ளனர். தொடர் புள்ள மொழிகளை ஒரு மூல மொழியிலிருந்து வருவித்தல் இயலும் என்பதைப் பேரறிஞர் லெபனிசும், 'மொழிகளை இன வடிப்படையில் வகை செய்தல் வேண்டும்; அம் முறைக்கு வெறும் சொற்கள் பயனற்றவை; இலக்கண ஒழுங்கே முக்கிய மானது' என்ற கருத்தை லுடால்பும் (J. Ludolf) கூறி யிருத்தல் காணலாம். ஆனுல் அன்றைய உலகம் இக்கருத்துக் களைக் கவனியாதிருந்ததுடன் இப்பணியில் நாட்ட மின்றியும் இருந்தது. ஆனுல் ஜோன்சின் பேச்சைக் கேட்ட மொழியியல் உலகம் அப்பணியில் ஈடுபட்டதுடன் ஒப்பு மொழியியலின் தோற்றத்திற்கும் அடிகோலியது. இதன் பின்னர் பல வடமொழி நூற்கள் மொழிபெயர்க்கப்பட்டன. பல ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் வடமொழிப் பயிற்சியும் ஆரம்பமாயிற்று. நெப்போலியனுல் பாரிசில்

வைக்கப்பட்டிருந்த அலக்சாண்டர் ஹாமில்டனிடம் வான் ஸ்லேகல் வடமொழி பயின்றார். இவருடைய நூலில்தான் (liber die Sprache und weisheit der Indier, 1808) முதன் முதல் ஒப்பிலக்கணம் (Comparative Grammar) என்ற சொல்லைக் காண்கிறோம். ஹாமில்டனிடம் கற்ற செசி (M. de che'zy) என்பாரே ஐரோப்பிய நாட்டின் முதல் வடமொழிப் பேராசிரியர்.

இந்நிலையில் பலவேறு மொழி நூல் அறிஞர்கள் பல வேறு மொழிகளை ஆராய்ந்தனர். ர்ாஸ்மஸ் ராஸக் (Rasmus Rusk, 1787-1832) ஜேக்கப் கிரிம், (Jacob Grimm) 1785–1863) பிரான்ஸ் பாப் போன்றோர் இ. ஐ. மொழிகளை ஆராய்ந்து மொழியியல் வளர்ச்சிக்கு வித்திட்டனர். இவர்களை ஒட்டிப் பல அறிஞர்கள் உழைத்ததன் பயனே இன்றைய மொழி யியல் வளர்ச்சி.

உலகின் பல பாகங்களில் வழங்கிய மொழிகள் பலவற்றையும் ஆராய்ந்து பல வேறு இனங்களாகப் பிரித்தனர். தமிழ், மலையாளம் போன்ற மொழிகள் வடமொழியிலிருந்து தோன்றியவை என்ற எண்ணத்தை நீக்கி இவை ஒரு தனி இனத்தைச் சார்ந்தவை என்று நிலைநாட்டிய பெருமை அறிஞர் கால்டுவெல்லைச் (Rev. Robert Caldwell, 1814–91) சாரும். சித்திய இனத்துடன் திராவிட மொழிகளைத் தொடர்பு படுத்திக் காட்டிய போதிலும் திராவிட மொழியியலின் தந்தையாகக் கருதப்படுபவர் இவ்வறிஞர் பெருமகனே.

## 1.0 இந்தோ-ஐரோப்பிய மொழிகள்

உலகில் வாழ்வோரில் ஐம்பது விழுக்காடு மக்கள் (1,580,000,000) இம்மொழிகளைத் (140) தாய்மொழியாகப் பேசுகின்றனர். மேலும் இவற்றைப் பேசத் தெரிந்தோராக இலட்சக் கணக்கான மக்கள் உள்ளனர். மிகப் பழங்காலந் தொட்டே இலக்கியச் சிறப்பிலும் நாகரிக வளர்ச்சியிலும் இம்மொழிகளில் பல மிக் முக்கியத்துவம் பெற்று வழங்கி வந்துள்ளன. கிரீக், லத்தீன், ஆங்கிலம் போன்ற மொழிகள் உலகப் புகழ்பெற்று உலக மொழிகளாய் வழங்கி வருகின்றன. வடமொழியின் பெருமையும் சிறப்பும் உலக அறிஞர்கள் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளமை இவண் கருதத்தக்க தாகும். ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க, ஆஸ்திரேலிய, ஆப்பிரிக்கப் பெருநிலப் பகுதிகளிலும் பலவேறு சின்னஞ்சிறு தீவுகளிலும் இம்மொழிகள் பேச்சு மொழிகளாக வழங்கி வருகின்றன. சுருங்கக் கூறின், உலகின் எல்லாப் பாகங் களிலும் இம்மொழிகள் வழங்குதல் காணலாம்.

'இந்தோ-ஐரோப்பியன்' என்ற சொல் பொதுவாக இம்மொழிகளை இணைத்து வழங்கும் பெயராக உள்ளதே யன்றி இவற்றைப் பேசும் மக்களின் நாகரிகத்தையோ, பண்பையோ, இன உறவினையோ குறிப்பிடுவதில்லை. அமெரிக்க நாட்டில் வாழும் நீக்ரோ மக்கள் ஆங்கிலத்தையே தங்கள் தாய்மொழியாகக் கொண்டுள்ளனரெனினும் வெள்ளை இனத்தைச் சார்ந்தவர்களல்லர். இது போன்றே பல்கேரி யர்கள் துருக்கிய இனத்தவர் என்பர். ஒரே இனத்தவர்கள் பல மொழிகள் பேசுதலை உலகின் பல பாகங்களிலும் காண லாம். இது போன்று பல இனத்தவர்கள் ஒரே இன மொழி களைப் பேசுதலையும் காண முடியும்.

இம்மொழிகளை இணைத்துப் பலர் பல வேறு பெயர்களால் அழைத்து வந்துள்ளனர். ஜெர்மானிய மொழிநூல் அறிஞர்கள்

இவற்றை 'இந்தோ-ஜெர்மானிக்' என்று இன்றும் அழைக்கின்றனர்.[1] கலப்ராத் என்பாரால் சூட்டப்பட்ட இப்பெயரையே பாப் என்ற மொழிநூல் அறிஞரும் கையாண்டுள்ளார். இதுபோன்றே சில காலம் 'ஆரியன்' என்ற சொல் இம்மொழிகள் அனைத்தையும், குறித்து வந்துள்ளமை காணலாம். மாக்ஸ் முல்லர் தம்முடைய நூல்களில் இப்பெயரையே பயன்படுத்தி வந்துள்ளார். ஆனால் இன்று 'இந்தோ-ஐரோப்பியன்' என்ற பெயரே மொழியியல் அறிஞர்களிடையே அதிகமாகப் பயன்படுகிறது. தாமஸ் யெங் (Thomas Young) என்ற ஆங்கில அறிஞரால் 1813-ல் சூட்டப்பட்ட இப்பெயர் இன்று ஆங்கில, பிரஞ்சு மொழி இயலாளர்களிடையே மிகச் செல்வாக்குடன் விளங்கி வருகிறது என்பர்.[2]

இம்மொழிகளில் காணப்படும் நூறு என்ற பொருளைத் தரும் சொல்லின் முதல் ஒலியினை வைத்து இவற்றை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். சில மொழிகளில் ககர, ஹகர ஒலிகளும், இன்னும் சிலவற்றில் சகர ஒலியும் உள்ளன. இதனை அடிப்படையாக வைத்து முதல் பிரிவினைக் 'கென்றம்' (centum) மொழிகள் எனவும் இரண்டாது பிரிவினைச் 'சதம்'

---

1. The parent language gradully came to be known as (1) *Indo-Germanic* (used by Klaproth in *Asia Polyglotta*, Paris, 1823), still in general use in German, Dutch and the Scandinavian languages, (2) *Aryan*, a term well known in this country chiefly through the writings of Max Muller but now used in a more restricted sense, and (3) *Indo-European*, the term of which the first instance is in an article by Dr. T. Young in *Quarterly Review*, vol. x (1813) and now most prevalent among French and English writers to-day.

R. Priebsch and W. E. Collinson, The German language, p. 5.

2. F. Norman, "Indo-European" and "Indo-Germanic", Modern Language Review, Vol. XXIV (July, 1929), pp. 313-22.

(satem) மொழிகள் எனவும் வழங்குவர். இவற்றை முறையே மேற்கு, கிழக்கு மொழிகள் எனவும் கூறுவர்.[1]

இவற்றுள் சதம் பிரிவினில் பால்டோ – சிலாவிக், இந்தோ-இரானியன், அல்பேனியன், ஜிப்சி போன்ற மொழிகள் அடங்கும்.

**பால்டிக் மொழிகள்** (Baltic)

சிலர் இவற்றையும் சிலாவிக் மொழிகளையும் இணைத்துப் பால்டோ–சிலாவிக் என ஒரு பிரிவாகக் கருதுவர். பால்டிக் பிரிவில் லித்துவேனியன், லேட்டிவியன், பழைய பிரஷியன் என்ற மூன்று மொழிகள் அடங்கும். இவற்றுள் லித்துவேனியன் லித்துவேனியாவிலும் (3,000,000) லேட்டியன் லேட்டியாவிலும் (1,000,000) வழங்குகின்றன. இவை சோவியத் நாட்டின் இலக்கிய, அரசியல் மொழிகளாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன. லித்துவேனியனில் கி. பி. 1547 முதலும் லேட்டிவியனில் கி. பி. 1586 முதலும் இலக்கியங்கள் உருவாகி வந்துள்ளன.

பழைய பிரஷியன் இன்று வழக்கில் இல்லை. கி. பி. 16–20 நூற்றுண்டுகள் வரையிலும் வழங்கி வந்துள்ள இம் மொழியில் லூத்தரால் எழுதப்பட்ட வேதாகம நூலும் (Catechism) 13, 14-ஆம் நூற்றுண்டில் குறிக்கப்பட்டுள்ள சில நூறு சொற்களுமே கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து அதிகமாக இம்மொழி பற்றித் தெரியவில்லையாயினும் இதன் கண் இரு கிளை மொழிகள் (dialects) இருந்துள்ளன என்பர். பொதுவாகப் பால்டிக் மொழிகள் இந்தோ–ஐரோப்பியனின் பழைமைக் கூறுகள் பலவற்றைக் கொண்டு காணப்படுகின்றன என்பர் சிலர்.[2]

---

1. Louis H. Gray, Foundations of language, p. 311.
2. R. Priebsch, The German Language, p. 9.


சதம் மொழிகள்
பால்டோ-சிலாவிக்
இந்தோ-இரானியன்
அல்பேனியன்
ஆர்மெனியன்
பால்டிக்
சிலாவிக்
லித்துவேனியன்
லெட்டிஷ்
பழைய பிரஷியன்
இந்தியன்
இரானியன்
மேற்கு இரானியன்
பெர்சியன்
கிழக்கு இரானியன்
காஸ்பியன்
குர்டிஷ்
ஆப்கன்
பெலுச்சி
பமீர்

**சிலாவிக் மொழிகள் (Slavic)**

ரஷ்யா, போலந்து, செக்கஸ்லவோக்கியா, பல்கேரியா, யுகஸ்லாவியா போன்ற நாடுகளில் வாழும் 180,000,000 மக்களால் வழங்கப்படும் ரஷ்யன், போலிஷ், செக், செர்பொகிரோஷியன் போன்ற பல மொழிகள் இதனுள் அடங்கும். கி. பி. 10–11 ஆம் நூற்ருண்டுகளில் எழுதப் பட்ட வேதாகமம் போன்ற சமய நூல்களே இம்மொழிகளின் பழைமையான எழுத்துச் சான்றுகள். இவற்றில் காணப் படும் மொழியினைப் பழைய கோயில் சிலாவானிக் (Church Slovanic) என்பர். சிலாவிக் மொழிகள் மிக வேகமாக மாறிக் கொண்டிருந்த காலத்தில் எழுதப்பட்ட இந்நூல்களில் காணப்படும் மொழி நிலை இத்தன்மையை நன்கு காட்டும் என்பர்.

**அல்பேனியன் (Albanian)**

இது பழைய இல்லிரியன் மொழியிலிருந்து உருவானது என்று சிலரும் திரேசியன் மொழியிலிருந்து பிறந்தது என்று வேறு சிலரும் கூறுவர். இதன் பழைமையான எழுத்துச் சான்று கி. பி. 1462 ஐச் சார்ந்தது. 1555-ல் வேதாகம மொழி பெயர்ப்பு ஒன்றும் இதன்கண் உருவாகியுள்ளது.

இன்று இம்மொழி பேசுவோராக 3,000,000 மக்கள் உள்ளனர். இன்று ரோமன் எழுத்து முறையினுல் எழுதப் படும் இம்மொழியின்கண் ஆண், பெண் பால் வேற்றுமை உள்ளது. இதில் லத்தீன், கிரீக், பல்கேரியன் போன்ற பல மொழிச் சொற்களைக் காணலாம். இதுவே அல்பேனியாவின் அரசியல் மொழி.

**ஆர்மெனியன் (Armenian)**

4,000,000 மக்கள் இம்மொழி பேசுதல் காணலாம். இவர்களில் பெரும்பாலோர் சோவியத் ரஷ்யாவில் வாழு கின்றனர். முன்னர் இதனை இந்தோ-இரானியன் பிரிவினுள் ஒன்ருகக் கருதிய போதிலும் இன்று இதனைத் தனி ஒரு

பிரிவாகவே கருதுகின்றனர். இரானியன் மொழிகளிலிருந்து பல சொற்கள் இதன்கண் வந்து புகுந்துள்ளன. கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமம் ஒன்றே இதன்கண்ணுள்ள முதல் நூல். கிரீக், சிரியாக் போன்ற மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சமய நூற்கள் இந்நூற்றுண்டில் தோன்றின.

**ஆரிய (இந்திய) மொழிகள்**

இந்தியாவிலும் இலங்கையிலும் வழங்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளையே ஆரிய மொழிகள் என்கிறோம். இப்பிரிவினுள் இந்திய நாட்டில் வழங்கும் வங்காளி, மராத்தி, இந்தி, குஜராத்தி போன்ற மொழிகளும் இலங்கையில் வழங்கும் சிங்களம் போன்றவையும் அடங்கும். இவை மட்டுமன்றி வேல்ஷ், ஜெர்மனி, ஸ்பெயின், ஹங்கேரி போன்ற நாடுகளில் வழங்கும் ஜிப்சி மொழியும் இப்பிரிவினைச் சார்ந்ததே. பொதுவாக ஆரிய மொழிகளின் காலப் பகுதியைப் பழங்காலம், இடைக் காலம், தற்காலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர்.

பழங்காலத்தைச் சார்ந்தனவாக நமக்குக் கிடைக்கும் நூற்கள் வேதங்களாகும். வேதங்களின் காலத்தைப் பற்றிப் பல வேறு எண்ணங்கள் நிலவி வருதல் காணலாம். கி. மு. இருபது நூற்றுண்டுகட்கு முன்னரே வேதங்கள் தோன்றி விட்டன என்று ஒரு சிலரும், கி. மு. பதினைந்து நூற்றுண்டு கட்கு முன்னர் எழுதப்பட்டவை என்று வேறு சிலரும், மிகவும் பிற்காலத்தவை என்று மற்றொரு குழுவினரும் கூறுதல் காணலாம். இவ்வேதங்களுள் ரிக்கு வேதம் காலத்தால் முந்தியது. வேதங்களில் காணப்படும் மொழி நிலையினை ஆராயும் மக்கள் இம்மொழி அக்காலத்தில் வாழ்ந்துவந்த கற்றுத் தேர்ந்தவர்களின் மொழியாகவே காணப்படுகிறது என்பர். எனினும் சாதாரண மக்களால் பேசப்பட்டுவந்த பேச்சுக் கிளை மொழிகளும் பல இருந்திருக்கலாம் என்று கருதுவர் மொழியியல் அறிஞர்கள். காலம் செல்லச்செல்ல

வேத மொழி வெறும் இலக்கிய மொழியாக மாறிவிட்ட நிலையினைக் காணலாம்.

வேதங்களின் உரைகளும் உபநிடதங்களும் பழைய வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. இம்மொழியிலேயே பாணினியின் இலக்கணமும் அமைந்துள்ளது. மகாபாரதம் இராமாயணம், பஞ்சதந்திரம் போன்ற நூற்களில் காணப் படும் மொழிக்கும் பழைய வட மொழிக்கும் அதிக வேற்றுமை யில்லை. பாணினி கி. மு. 4-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தவர் என்பர்.

**இடைக்காலம்**

வேதங்களில் காணப்படும் மொழி, படித்த மக்களின் மொழியென்றும் அம்மொழியினூடே படிக்காத மக்களின் பேச்சு மொழிகள் கிளை மொழிகளாக வழங்கி வந்தன என்றும் குறிப்பிட்டோம். இந்நிலையில் பேச்சு மொழிகள் நாளடை வில் மாறுபட்டு வளர்ந்தன. இம்மொழிகளின் பழங்காலத்திய நிலை பற்றி நமக்குத் தெரியாவிடினும் கி. மு. நான்காவது நூற்றுண்டு முதல் உள்ள நிலைமையை ஓரளவு தெரிந்து கொள்ளும் வாய்ப்பு உள்ளது. பாமர மக்களிடையே வெறும் பேச்சு மொழிகளாக இருந்தவை நாளடைவில் எழுத்து மொழியாக, குறிப்பாக நாடகங்களில் வளர ஆரம் பித்தன. இவற்றையே பிராகிருதமொழி (Prakrits) என்ற ழைக்கிறோம். கி. மு. மூன்றும் நூற்றுண்டு முதல் இதன் கண் எழுத்துச் சான்றுகள் உள்ளன. இது தவிர சமய மொழியாகப் பாளியும் (Pali) இடைக் காலத்தில் வளர்ந்து வந்தமை காணலாம்.

**தற்காலம்**

இவ்வாறு பல இடங்களில் பல வேறு மாதிரியாக வழங்கி வந்த பிராகிருத மொழியிலிருந்து தோன்றிய மொழிகளே இன்றைய வட இந்திய மொழிகள். இந்தி, வங்காளி, மராத்தி, குஜராத்தி, போன்றவை இதனுள் அடங்கும். இவற்றைப் பற்றிப் பின்னர் விளக்கமாகக் காண்போம்.

**இரானியன் (Iranian)**

இதனையும் பழைய இரானியன், இடைக்கால இரானியன், தற்கால இரானியன் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். இவற்றுள் பழைய இரானியனை மேற்கு, கிழக்கு மொழிகள் என இரு பிரிவுகளாகப் பகுப்பர். மேற்கு மொழியாகப் பழைய பெர்சியன் மொழியும் கிழக்கு மொழியாக அவஸ்தென் (Avesten) மொழியும் அமைந்திருக்கக் காணலாம். பழைய பெர்சியன் கி. மு. நான்காவது நூற்றுண்டு முதலே 'கூனிபாரம்' எழுத்துருவத்தில் காணக்கிடக்கிறது. அவஸ்தென் கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல்தான் எழுத்துருவத்தைப் பெற்றுள்ளது. சோராஸ்டர் சமய நூற்கள் (Zoroaster) இம்மொழியில் எழுதப்பட்டுள்ளன.

**இடைக்காலம்**

பழைய பெர்சியனின் தொடர்ச்சியாக வந்த பாலவி (Pahlavi) மொழியினையே இடைக்கால பெர்சியன் என்றழைப்பர். இது பழைய பெர்சியன் (கூனிபாரம் கல் வெட்டு மொழி) மொழியினின்றும் உருவானது. இது தவிர வேறு சில கிளை மொழிகளும் (Sogdian, Saka) இக்காலத்தில் நிலவி வந்துள்ளன என்பது தற்கால ஆராய்ச்சியின் முடிவாகும்.

**தற்காலம்**

தற்கால இரானியன் மொழிகள் ஈரான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா, துருக்கி, ஹங்கேரி, பெர்சியன் குடா தீவுகள் போன்ற பல இடங்களில் பேசப்படுகின்றன. இவற்றுள் பெர்சியன் (20,000,000), குர்டிஷ் (5,000,000, - 10,000,000) புஷ்டோ (12,500,000) போன்ற மொழிகள் முக்கியமானவை. கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு முதலே சிறந்த இலக்கியங்கள் பெர்சியன் மொழியில் உருவாகி வந்துள்ளன. ஈரான் பகுதியில் வழங்கும் இம்மொழிகள் அரபிக்கினின்று ஏராளமான சொற்களைக் கடனுகப் பெற்றுள்ளன.

———


கென்றம்
CEN
ஹெலனிக்
இத்தாலோ-கெல்டிக்
இலக்கிய கிரீக்
இன்றைய கிரீக்
கெல்டிக்
இத்தாலிக்
பி. கெல்டிக்
கியூ. கெல்டிக்
ஆஸ்கோ
உம்பிரியன்
லத்தீன்–
பாலிஸ்கன்
பிரிட்டானிக்
ஆஸ்கன்
உம்பிரியன்
காலிஷ்
வெல்ஷ்
கார்னிஷ்
லத்தீன்
பாலிஸ்கன்
ரொமான்ஸ்
மாங்க்ஸ்
ஐரிஷ்
ஸ்காட்ஸ்
ஐரிஷ் கெயிலிக்
மேற்கு
கிழக்கு
ஸ்பானிஷ்
போர்சுக்
கீஸ்
பிரஞ்சு
காட்ட
லன்
பிரஞ்சு
கிரியோல்
போர்ச்சுக்
கீஸ்
கிரியோல்
இத்தாலியன்
ருமேனியன்
ரயட்டோ
ரொமானிக்


TUM
ஜெர்மானிக்
மேற்கு
கிழக்கு
வடக்கு
ஆங்கி
லம்
ஜெர்
மன்
டச்சு–
பிளிமிஷ்
பிரிஷி
யன்
ஆப்
ரிக்
கான்ஸ்
கோதிக்
நார்வேஜியன்
டேனிஷ்
சுவீடிஷ்
ஐஸ்லாண்டிக்

**கென்றம் மொழிகள்**

இவற்றை ஜெர்மானிக், இத்தாலோ-கெல்டிக், கிரீக் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்.

**ஜெர்மானிக் மொழிகள் (Germanic)**

இவற்றைக் கிழக்கு, வடக்கு, மேற்கு மொழிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். மேற்குப் பிரிவில் ஆங்கிலம், டச்சு, ஜெர்மன், போன்ற மொழிகளும் வடக்குப் பிரிவில் டேனிஷ், சுவீடிஷ், நார்வேஜியன், ஐஸ்லாண்டிக் போன்ற மொழிகளும் அடங்கும். கிழக்குப் பிரிவு மொழிகள் அனைத்தும் இன்று இறந்துபட்டன. இவற்றுள் முக்கியமானது கோதிக். ஜெர்மானிக் மொழிகளைப் பேசுவோராக இன்று 420,000,000 மக்கள் உள்ளனர்.

**இத்தாலா - கெல்டிக் (Italo-Celtic)**

இதன் கண் இத்தாலிக், கெல்டிக் என இரு பிரிவுகள் உள்ளன. இத்தாலிக், கெல்டிக் மொழிகளிடையே காணும் சில ஒற்றுமைகளை வைத்தே இவற்றை இத்தாலோ-கெல்டிக் என இணைக்கின்றனர். இத்தாலிக் பிரிவினுள் அடங்கிய லத்தீன் மொழியிலிருந்து பிறந்த மொழிகளே பிரஞ்சு, இத்தாலியன், ஸ்பானிஷ், போர்ச்சுக் கீஸ் போன்ற ரொமான்ஸ் மொழிகள். வெல்ஷ், ஐரிஷ் போன்றவை கெல்டிக் பிரிவினுள் அடங்கும்.

**கிரீக்**

இதனை ஹெலனிக் (Hellenic) என்றும் அழைப்பர். இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் முக்கியமானது என்பர் சிலர். மிகப் பழைய மொழிக் கூறிணையும் (primitive vowel system) கொண்டுவிளங்குகிறது இம்மொழி.கி. மு. எட்டாவது நூற்றுண்டிலிருந்தே தொடர்ச்சியாக இலக்கியங்கள் பலவற்றைக் கொண்டு, லத்தீன், எகிப்தியன், வடமொழி, போன்று வழக்கற்று விடாமல் இன்றும் பேச்சு மொழியாக விளங்கி வருகிறது. பல வேறு கிளைமொழிகளில் எழுதப் பட்டிருக்கும் பழைமையான கல்வெட்டுகள் பலவற்றையும் கொண்டுள்ளது இம்மொழி.

## 1·1 கிரீக் (Greek)

உலகமொழிகளில் இதற்கெனத் தனி இடம் உண்டு. குறிப்பாக இது மேனாட்டு மொழிகளில் மிகப் பழைமையான இலக்கியங்களையும் எழுத்துருவத்தினையும் கொண்டுள்ளது. மேனாட்டு நாகரிகத்துக்கு இம்மொழியும், இம்மொழி மக்களும் செய்துள்ள பணி மகத்தானது. இம்மொழி மிகப் பழைமை யான இலக்கியத்தைக் கொண்டு பழைய மொழியாக இருப் பினும் லத்தீன் போன்று பல மாற்றங்களையடைந்து புதிய மொழிகளைத் தோற்றுவித்துப் பேச்சு வழக்கருமல் இன்றும் பேச்சு மொழியாக இலங்கிவருகிறது. இத்தகைய பெருமை சீனம், தமிழ் போன்ற ஒரு சில மொழிகட்கே உண்டு. அலெக்சாந்தர் காலத்திலேயே உலக மொழியாக அங்கீகரிக் கப்பட்டு கிரீஸ், ஆசியா மைனர், எகிப்து போன்ற பல இடங்களிலும் வழக்கிலிருந்துவந்த பெருமை பெற்றது இது. ஐரோப்பிய மொழிகள் அனைத்திலும் இதன் கண் ணின்று கடனாகப் பெற்ற சொற்கள் பலவற்றைக் காணலாம்.

மொழியியல் அடிப்படையிலும் இது பெருமை பெற்றது. இந்தோ-ஐரோப்பிய மொழியின் உயிர் எழுத்தினை வரை யறை செய்வதற்கு இது மிகவும் உதவியாக அமைந்துள்ளது. இதன் உயிர்கள் இந்தோ-ஐரோப்பிய மொழியிலிருந்து அதிக மான மாற்றமில்லாமல் காணப்படுகின்றன என்பர். இத் தகைய பண்பினை ஆஸ்கன், லித்துவேனியன் மொழிகளி லேயே காணமுடியும். இதுபோன்று வினைச்சொல் ஆக்கத்தி லும் வேத காலத்திய வடமொழிச் சொற்களைப் போன்று பண்டைய இ. ஐ.பண்புகள் பலவற்றைக் கொண்டு விளங்கு கிறது இது. மேலும் கி. மு. எட்டாம் நூற்றாண்டு முதலே இதன் கண் எழுதப்பட்ட கல்வெட்டுக்களும் இலக்கியங்

களும் கிடைப்பதால் உலக மொழிகளில் பழைமை பெற்று விளங்கும் பெருமையையும் கொண்டுள்ளது இம்மொழி.[1]

இம்மக்கள் கி. மு. 2000க்கு முன்பே தங்கள் இருப்பிடத்தை விட்டுக் குடிபெயர்ந்து கிரீசில் குடியேறினர் என்பர். இவர்களைப் பற்றிய செய்திகள் கி. மு. 14ஆவது நூற்றுண்டு முதலே (ஹிட்டைட் கல்வெட்டுக்கள்) காணக் கிடக்கின்றன. இந்தோ-ஐரோப்பிய மக்கள் வாழ்ந்த இடத்தினின்றும் குடிபெயர்ந்து கிரீஸ் நாடு வந்து சேரும் முன்பே கிரேக்க மொழி இ. ஐ. மொழியினின்றும் மாறுபட்டு கிரேக்க மொழித் தன்மைகளையும், பண்புகளையும் அடைந்து விட்டது எனக் கருதலாம். இதுபோன்றுதான் இக்காலப் பகுதியில் இம்மொழி இதன்கண் காணப்படும் நான்கு கிளை மொழிக் கூறுகளையும் அடைந்திருத்தல் வேண்டும் என்பர்.

கிரேக்க மக்கள் கிரீஸ் வருவதற்கு முன்னர் அவண் மீனேவன் (Minoan) மக்கள் வாழ்ந்து வந்தனர் என்றும், அவர்கள் சிறந்த ஒரு நாகரிகத்தையும் மொழியையும் கொண்டிருந்தனர் என்றும், இம்மக்களின் நாகரிகமும் மொழியும் கிரேக்க நாகரிக, மொழி வளர்ச்சியில் சிறந்த ஒரு இடத்தைப் பெற்றுள்ளன என்றும் கருதுவார் பலர். பல நூற்றுண்டுக் காலமாக இவண் வளர்ந்திருந்த இந்நாகரிகம் கிரேக்க நாகரிகத்திற்குத் துணைபுரிந்து உலக நாகரிகங்களில் ஒன்ருக விளங்கச் செய்துள்ளது.

---

1. Greek is further noteworthy in that it has had a continuous literary record from the eigth century B. C. to the present day. In historic form it is thus older than the Italic group, which is really known only five centuries later; and we are particularly fortunate in having a large mass of inscriptions in many dialects over a long period and a wide area. The sole rival of Greek in this respect is Italic, where, however, the non-Latin remains are relatively scanty.

Louis H. Gray, Foundations of Language, pp. 327-328.

கிரேக்கர்கள் கிரேக்க நாடு வருவதற்கு முன்பே அம்மொழியினிடையே கிளைமொழிக் கூறுகள் பல தோன்றி வளர்ந்துவிட்டன என்றும், அக்கிளைமொழிகளையுடைய மக்கள் வெவ்வேறு கூட்டங்களாகவே கிரேக்க நாட்டில் குடியேறினார்கள் என்றும், அதன் காரணமாகத்தான் மிகப் பழங்காலந் தொட்டே கிரேக்க மொழியின் கண் பல கிளை மொழிகள் காணப்பெறுகின்றன என்றும் கூறுவர். வெவ் வேறு கூட்டங்களாகக் குடியேறிய இம்மக்கள் தங்களுக்குள் அதிகத் தொடர்பின்றி வாழ்ந்து வந்த நிலையில் கிளை மொழிக் கூறுகளும் வளர்ந்து நின்றன. கிரேக்க மக்கள் மாசிடோனியாவுக்கு அடங்கி ஒரு மன்னனின் கீழ் வருவது வரையிலும் இவர்களிடையே எந்த விதமான பொது மொழி யும் உருவாகவில்லை. பேரரசன் பிலிப்பு காலத்தில்தான் கிரேக்க மக்களிடையே பொதுமொழி ஒன்று உருவாக ஆரம்பித்தது என்பர்.[1]

கிரேக்க மொழியில் தோன்றிய பல இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் கிளைமொழிக் கூறுகளை நன்கு காட்டுவன வாக உள்ளன. ஸட்ரேபோ (Strabo) போன்ற பண்டைய ஆசிரியர்களும் இந்நிலைபற்றிக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

---

1. But the most important single event which determined the future predominance of Attic and made possible its final triumph in the form of the *koine* was its adoption by Phillip of Macedon as the official language of the court and the state, and especially its similar use of later by Alexander and *Diadochoi*, when, owing to its favourable position as the language of administration and the recognized norm in literature, it became the medium of intercourse and communication, as a sort of *lingua franca*, between the various nationalities, Egyptians, Persians, Jews, Arabs, Syrians etc. making up the population of the several kingdoms that came into existence following the dissolution of Alexander's vast empire.

P. S. Costas, An Outline of the History of the Greek Language, pp. 42-43

கி. பி. முதல் நூற்றுண்டைச் சார்ந்த இவர் நான்கு கிளை மொழிகள் வழங்கி வந்ததாகக் கூறுகிறுர் என்பர்.[1] ஒவ்வொரு கிளை மொழியும் ஒவ்வொரு வகையான இலக்கியங்களை உருவாக்கியிருக்கக் காணலாம். ஹோமரின் இலக்கியங்கள் அயோலிக் (Aeolic) பண்புகள் நிறைந்து காணப்பட்டாலும் அயோனீக் (Ionic) மொழியில் ஆக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து காப்பியங்கள் இம்மொழியிலேயே தோன்றின.

இதுபோன்று டோரிக் (Doric) ஒருவகை உணர்ச்சிப் பாடல்கள் (choral lyrics) நிறைந்து காணப்படுகின்றது. அட்டிக் (Attic) கிளையில் பல உரைநடை நூல்கள் தோன்றி யுள்ளன. அயோலிக் கிளையோ (Aelic) கவிதைகள் பலவற்றைக் கொண்டுள்ளன. எத்தனை கிளைமொழிகள் இருந்தன என் பதில் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை காணப்பட்ட போதிலும் நிலைமொழி ஒன்று தோன்றுவதன் முன்பு பல கிளை மொழிகள் இருந்தன என்பதிலும், அவை அனைத்தும் அரசியல் மொழிகளாக ஆங்காங்கே வழங்கி வந்தன என்பதிலும் இவர்களிடையே கருத்து வேற்றுமை இல்லை. சிலர் (Wackernagel போன்ருேர்) முப்பதுக்கும் அதிக மான கிளை மொழிகள் இருந்தன என்பர்.[2] இன்னும் சிலர் கிழக்கு, மேற்கு என இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து இவற்றை முறையே வடமேற்கு, டோரிக் எனவும் அட்டிக் - அயோனிக், ஆர்கடோ-சிப்பிரியன், அயோலிக் எனவும் பகுத்து இவற்றில் பல வேறு சின்னஞ்சிறு கிளை மொழிகள் இருந்தன எனக் கூறுவர்.[3]

இத்தகைய பல வேறு கிளை மொழிகளைக் கொண்டு விளங்கிய கிரீக் படிப்படியாக ஒரு நிலை மொழியை உரு

---

1. Anatol F. Semenov, The Greek Language in its evolution, p. 41.

2. Ueber Geschichteder der griechischen Sprache, Gottingen, 1913.

3. Carl Darling Buck, The Greek Dialects, pp. 9-14.

வாக்கியது. பெர்சியன் போருக்குப் பின்னர் ஏதென்ஸ் நகரம் முக்கியத்துவம் பெற அவண் வழங்கி வந்த அட்டிக் மொழி மக்களிடையே பெருமை பெற ஆரம்பித்தது. ஏதென்ஸ் வாணிப-அரசியல் நகரமாக மாறியபோது பல நாடுகளிலிருந்தும் கிரீசின் பல பாகங்களிலிருந்தும் அறிஞர்களும் தத்துவ ஞானிகளும் இலக்கிய மேதைகளும் இவண் அடிக்கடி வந்து தங்கினர். உலக வாணிபத்தில் முன்னின்ற காரணத்தால் பிற நாட்டுத் தங்கமும் வெள்ளியும் இவண் குவிந்த நிலையில் இவண் வழங்கிய மொழிக்கும் ஒரு பொற்காலம் பிறந்தது. அயோனிக் கிளையுடன் நெருங்கி வாழ்ந்த இம்மொழி படிப்படியாக அதன் செல்வாக்கிலிருந்து விடுபட்டுத் தனியாக வளர்ந்ததுடன் அயோனிக் போன்ற பிற கிளைமொழிகளை அழித்து நிலைமொழியாக வளர்ந்தது. கவிதையைப் பொறுத்த மட்டில் இது சில காலம் அயோனிக்கின் செல்வாக்கில் இருந்த போதிலும் உரை நடையில் சிறந்த வளர்ச்சியைப் பெற்றது. பல உரை நடை ஆசிரியர்கள் அயோனிக்கில் மோகம் கொண்டிருந்த போதிலும் படிப்படியாக இவர்கள் அட்டிக் மொழியைக் கையாண்டமை காணலாம். ஆண்டிபோன்ஸ், துசிடைட்ஸ் போன்ற எழுத்தாளர்கள் அட்டிக்கிலேயே எழுதினர். இந் நிலையில் கி. மு. 4-5-ஆம் நூற்றுண்டுக் காலப்பகுதியில் ஒரு உறுதி நிலையை அடைந்து, இது நிலைமொழியாக உருவாகியது. முன்னர்க் குறிப்பிட்டது போன்று பேரரசன் பிலிப்பும் அவனது மைந்தன் அலெக்சாந்தரும் கிரேக்கமொழி வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர்கள். எந்தத் தலைமையுமின்றி இருந்த கிரேக்கர்களை மொழிகளிடையே ‘அட்டிக்கை’ அரசியல் மொழியாக அங்கீகரித்த செய்கையினுல் ஒரு நிலை மொழியை வளர்த்த பெருமை இவர்களைச் சாரும். கிரேக்கப் பேரரசின் கீழ் வாழ்ந்த எகிப்தியர்கள், பெர்சியர்கள், யூதர்கள், அராபியர்கள், சிரியர்கள் போன்ற மக்களிடையே இம் மொழி நீடித்து நிற்கத் துணைபுரிந்தனர். அலெக்சாந்தரின் காலத்துக்குப் பின்னர் அவனுடைய பேரரசு பலவேறு

சின்னஞ்சிறு நாடுகளாகப் பிரிந்து நின்றபோதும் கிரேக்க மொழியே அரசியல் மொழியாக இருந்து வந்தது. கி.மு. மூன்றும் நூற்றுண்டு முதல் கி.பி. ஆருவது நூற்றுண்டு வரையிலும் அட்டிக் மொழியே கிரேக்க நாடுகளின் பொது மொழியாக விளங்கி வந்தமை காணலாம்.[1]

பரந்து கிடந்த பேரரசில் வழக்கிலிருந்த இம்மொழி எங்கணும் ஒரே மாதிரியாக இல்லை. நாட்டுக்கு நாடு ஆங்காங்கே வழங்கிய நாட்டு மொழிகளின் பண்புகளுடன் கலந்து உறவாடி நின்ற நிலையில் இலக்கிய அட்டிக் மொழிக்கும் பேச்சு அட்டிக்குக்குமிடையே (Spoken Attic) வேற்றுமைகள் பல வளர்ந்தன. பிற கிளை மொழிகள் அனைத்தும் கி. மு. 4-ஆம் நூற்றுண்டுக் காலப் பகுதியிலேயே அழிந்து விடப் பேச்சு மொழியாக அவண் நுழைந்த அட்டிக் அவற்றின் கூறுகள் பலவற்றைக் கொண்டு இலக்கிய மொழியினின்று வெகு தூரம் மாறி நின்றது. இந்த மொழியைப் பலரும் பொதுமொழி (Koine) என்றழைப்பர்.[2] இலக்கிய அட்டிக்-பேச்சு அட்டிக்கிலிருந்து உருவானதே இந்தக் 'கொய்னி' இதுவே முன்னர்க் குறிப்பிட்டது போன்று கிரேக்க நாட்டின் அரசியல் மொழியாக எங்கணும் இருந்து வந்தது.

ஆனல் இதே நேரத்தில் ஏதென்ஸ் நகரத்துப் பேச்சு மொழி மிக வேகமாக மாறி வளர்ந்தது. கி.மு. நான்காம் நூற்றுண்டுக் காலப் பகுதியிலேயே அயோனிக், டோரிக் போன்ற கிளைமொழிகள் எழுத்து வழக்கில் வழக்கிறந்து போயினும் பேச்சு வழக்கில் சிறிது காலம் தொடர்ந்து இருந்து வந்துள்ளன. கல்வெட்டுகள், கண்ணுடிப் பாத்திரங்

---

1. P. S. Costas, ibid p. 43.

2. இதன் ஆக்கம்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை உண்டு. சிலர் (sturz, De dialecto alexandriana) இது பல வேறு கிளை மொழிகளிலிருந்து உருவானது என்றும், சிலர் (Brugmann போன்ருேர்) மாசிடோனியனிலிருந்து வந்தது என்றும் கூறுவர்; எனினும் அட்டிக் மொழியினின்று உருவானது என்றே பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

Anatol F. Semenov ibid p. 82.

கள் போன்றவற்றில் எழுதப்படாது போயினும் கி. பி. 4-ஆம் நூற்றாண்டு வரையிலும் மக்களிடையே வாழ்ந்து வந்த இம்மொழிகளின் சொற்களையும் கூறுகளையும் தன்னகத்தே கொண்டு மிக வேகமாக எழுத்துக் 'கொய்னி'யிலிருந்து மாறி வளர்ந்தது 'பேச்சுக் கொய்னி'. எனவே பிற கிளைகளின் அழிவில் 'எழுத்துக் கொய்னி' 'பேச்சுக் கொய்னி' என இரு கிளைமொழிகள் ஒரே நேரத்தில் வளர்ந்து வந்த நிலையினைக் காண்கிறோம்[1]. இவற்றுள் எழுத்துக் கொய்னியை விடப்பேச்சுக் கொய்னி மிக வேகமாக மக்களின் பேச்சு மொழியாக இருந்து கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் இன்றைய கிரீக் மொழியின் பிறப்பிற்கு அடிகோலியது.




1. It is best, therefore to agree with Hatzidakis who, refusing to commit himself to any particular date places the disappearance of the dialects in the time between Alexander and Constantine, i. e., from the end of the 4th centuary. B.C. to the beginning of the 4th century A. D.[3]

P. S. Costas, ibid . p. 49.

மக்களிடையே பேச்சு மொழி வழங்கி வந்த போதிலும் எழுத்துக் கொய்னியே இலக்கியங்களிலும் பிறநூல்களிலும் பயன்பட்டது. புதிய ஏற்பாடு மக்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் பொருட்டுப் பேச்சுக் கொய்னியில் எழுதப்பட்டாலும் கிறித்தவ ஆசிரியர்கள் இலக்கிய மொழியிலேயே எழுதிவந்த தால் அதுவே கோயிலில் அங்கீகரிக்கப்பட்டது. கி.பி. ஆரும் நூற்ருண்டு முதல் (பிரகோபியஸ்) 15-ஆம் நூற்ருண்டு வரையிலும் (Chalcondyles) வாழ்ந்து வந்த ஆசிரியர்கள் இம் மொழியிலேயே தொடர்ந்து எழுதி வந்தனர். பிரகோபியஸ் ஹெரடோட்டசைப் பின்பற்றி வந்தமையால் அவர்காலத்தில் அழிந்துவிட்ட சில பழைமையான மொழிக் கூறுகளையும் அவருடைய எழுத்தில் காண முடியும் என்பர். இன்று படித்த மக்களிடயே பேச்சு மொழிக்கு எவ்வளவு செல்வாக்கு உள்ளதோ, அத்தனை செல்வாக்கே அன்றும் இருந்திருக்கக் காணலாம். 12-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த வரலாற்று ஆசிரியர் ஒருவர் (Anna Comnena) அவருடைய இலக்கியப் படிப்பையும் பழக்கத்தினையும் பற்றிப் பெருமையாகப் பேசுதலையும், ஆனல் அதே நேரத்தில் பேச்சு மொழியில் தனக்குள்ள வெறுப்பைச் சுட்டிக் காட்டியுள்ளமையையும் குறிப்பிடலாம். பொதுமக்கள் தங்கள் இலக்கிய நடையில் எழுதப்பட்ட கோயில் சொற்பொழிவுகளைப் புரிந்து கொள்ள வில்லை என்பது தெரிந்தும் அந்நடையிலேயே தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்துள்ளனர் பாதிரிகள்.

எனினும் பேச்சு மொழி தொடர்ந்து வேகமாக வளர்ந்து வந்தது. கி.மு. மூன்ரும் நூற்ருண்டிலேயே இலக்கிய மொழியிலிருந்து மாறுபட்டுவிட்ட பேச்சு மொழி கி.பி. 12ஆம் நூற்ருண்டில்தான் ஒரு சில இலக்கியங்களில் புக முடிந்தது. கற்ருேர்களும் செல்வந்தர்களும் பாதிரிகளும் புறக்கணித்து ஒதுக்கி வந்த போதிலும் பேச்சு மொழியின் கூறுகள் பல வடிவில் கி. பி. மூன்ரும் நூற்ருண்டு முதலே சில எழுத்துகளில் தோன்ற ஆரம்பித்து விட்டன என்பர். தனிப் பட்டோர்களின் கடிதங்களிலும் வாழ்க்கை வரலாறுகளிலும்

எகிப்தில் காணப்பட்ட பாப்பிரி எழுத்துகளிலும் பேச்சு மொழி காணப்படுகின்றது.[1] இவற்றிலிருந்து இதன் பண்பு கள் பலவற்றை நம்மால் நிர்ணயிக்க முடியும்.

இப்பேச்சு மொழியிலிருந்து தோன்றியதுதான் இன்றைய கிரீக் மொழி. இது பழைய மொழி நிலையிலிருந்து நன்கு மாறுபட்டிருக்கக் காணலாம். தற்காலக் கிரீக்கின் தோற்றம் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் (Hatzidakins) கி. பி. ஆரும் நூற்ருண்டு முதலே இதன் பண்புகள் தோன்றிவிட்டன என்றும் இடைக்கால ஆசிரியர் களின் எழுத்துகள் இதனைக் காட்டவில்லை என்றும் கூறுவர். இன்னும் சிலர் (Pschari) கி. பி. 10 முதல் 18ஆம் நூற்ருண்டு வரையுள்ளபகுதிதான் தற்காலக் கிரீக்கின் தோற்றக் காலம் என்றும் கூறுவர்.[2] இன்னும் சிலர் கி. பி. 15-ஆம் நூற்ருண்டின் இறுதியிலேயே தற்காலக் கிரீக்கின் எல்லாப் பண்புகளும் வளர்ந்து விட்டன என்பர்.[3]

முன்னர்க் குறிப்பிட்டது போன்று கிரேக்க மொழி சிறந்த இலக்கியங்களைக் கொண்டது. இந்தோ-ஐரோப்பிய மொழி களில் வடமொழியில் காணப்படும் வேதங்கட்கு அடுத்த படியான பழைமையான இலக்கியம் ஹோமரால் இயற்றப் பட்ட 'இலியட்' 'ஆடிசி' என்ற இரு பெரும் காப்பியங் களாகும். இவை கிரேக்க இலக்கியங்களில் மட்டுமல்லாமல் உலக இலக்கியங்களிலும் சிறந்த இடத்தைப் பெற்று விளங்குவன. இதுவே கிரேக்க இலக்கியங்களில் பழைமை யானவை என்ருலும் இவற்றின் தோற்றத்துக்கு முன்பே கிரேக்க மொழி தனக்கென ஒரு சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டு விளங்கி வந்தது எனக் கூறலாம். இத்தகைய

1. P. S. Costas, ibid p. 80.
2. ibid. p. 93.
3. ibid. p. 95.

சிறந்த பாரம்பரியத்தின் எடுத்துக்காட்டாக விளங்கும் இக்காப்பியங்கள் கி. மு.900 ஐ ஒட்டி எழுந்திருக்கலாம் என எண்ணுவர் அறிஞர்கள்.[1]

ஹோமரின் கவிதைகள் அயோனிக் கிளைமொழியில் எழுதப்பட்டன எனச் சிலரும், முதன் முதலில் அயோலிக் (Aeolic) கிளை மொழியில் எழுதப்பட்டுப் பின்னர் அயோனிக் மொழியில் மாற்றப்பட்டன என வேறு சிலரும் கருதுவர். இக் கவிதைகள் கருத்தில் மட்டுமன்றி, கிளைமொழி, பாணி போன்றவற்றிலும் பின்னர் எழுந்த கவிதைகட்கு வழி காட்டியாய் விளங்கினமை காணலாம். அப்பலோனியஸ் எழுதிய கவிதைகள் (Argonautica) இதே பாணியில் எழுதப் பட்டிருத்தல் காணத்தக்கது. இது மட்டுமன்றி தத்துவம், துன்பியல், இன்பியல், உணர்ச்சிக்கவிதைகள் (lyrics) போன்ற பல துறைகளிலும் ஹோமரின் செல்வாக்கினைக் காணலாம்.

ஹோமருக்குப் பின்னர் ஹெசியாட் (Hesiod) என்பவரால் எழுதப்பட்ட நூற்கள் (The Works of Days, Theogony) குறிப்பிடத்தக்கவை. கி. மு. எட்டாம் நூற்றுண்டில் எழுந்த இந்நூற்களின் மொழிநிலை ஹோமர் கால மொழி நிலைக்கும் ஹெரடோட்டஸ் கால மொழிநிலைக்கும் இடைப்பட்ட நிலையை நன்குக் காட்டும். இந்நூற்களும் ஹோமரின் இலக்கியங்களைப் போன்றே மிகச் செல்வாக்குடன் விளங்கிக் வந்தன.

கி. மு. ஏழாம் நூற்றுண்டுக்குப் பின்னர் இடையீடு இன்றி இலக்கியங்கள் உருவாகி வந்துள்ளன என்பர். ஹோமரைப் போன்று சிறந்து விளங்காவிடினும் ஆர்ச்சி லோக்கஸ் போன்ருர் (கி.மு. 650) போன்ருர் குறிப்பிடத்தக்

---

1. The date of the composition of the *Iliad* and *Odyssey* may be said on linguistic, archaelogical and other evidence to be about the year 900 B. C.

B. F. C. Atkinson, The Greek Language, p. 190.

கவர்கள். ஏழாவது நூற்றுண்டின் இரண்டாவது பகுதிக்குப் பின்னர் பல வேறு உணர்ச்சிப் பாடல்கள் தோன்றின, இந் நூற்றுண்டில் பல வேறு கவிஞர்களைப் (Alcman, Stesichorus, Sappho, Alcaeus) பெற்றெடுத்தது கிரேக்கம்.

கிரேக்க மொழி வரலாற்றில் கி. மு. 6 ஆவது நூற்றுண்டில் தொடங்கப் பட்ட தத்துவ ஞானிகள் கழகமும் குறிப்பிடத் தக்கது. கிரேக்க நாட்டுத் தத்துவத்தின் ஆரம்பகால ஞானிகளின் (Thales, Anaximander. Anaximenes) எழுத்தோ வியங்களைக் காணமுடியாவிடினும் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ருேரால் இவர்கள் பற்றி அறியும் வாய்ப்பு உள்ளது. வெறும் கவிதையாக்கத்தில் சென்று கொண்டிருந்த கிரேக்க நாட்டில் உரைநடை தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் இத்தத்துவஞானிகளே காரணமாக இருந்தனர் என்பர்.

**கிரேக்க எழுத்துமுறை**

கி. மு. எட்டு அல்லது ஏழாவது நூற்றுண்டிலிருந்தே கிரேக்க மொழியில் எழுத்துச் சான்றுகள் உள்ளன. கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் நகரில் காணப்பட்ட டிப்ளான் கல் வெட்டு (Greek inscription on a Dipylon vase) கி. மு. எட்டாவது நூற்றுண்டைச் சார்ந்தது என்பர். இபோன்றே கி. மு. எட்டாவது அல்லது ஏழாவது நூற்றுண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் சிலவும் கிடைத்துள்ளன.[1] இக்கல்வெட்டுகளில் ஒலி எழுத்து முறையே (alphabetic writing) பயன்படுத்தப்பட்டிருக்கக் காணலாம். ஒலி எழுத்து முறையை

1. Rock-cut inscriptions from Thera.
   Short legends on geometric pottery from Mount Hymettes.

   Two inscribedbed shreds from Corinth.

உலகுக்குத் தந்த பெருமை கிரேக்க நாட்டையே சாரும் என்பர்.[1]

எனினும் கிரேக்கர்கள் தங்கள் எழுத்து முறையை செமிட்டிக் மக்களிடமிருந்தே பெற்றனர் என்பர். இதுபற்றி அறிஞர்களிடையே எவ்விதமான கருத்து வேற்றுமையும் இல்லை. கிரேக்க எழுத்துக்களின் பெயர், வரிசை முறை அவற்றின் உருவம் போன்றவற்றை மேலெழுந்த வாரியாக நோக்கினும் இவ்வுண்மை புலப்படும். கிரேக்க எழுத்துக்களின் பெயர்களும் (ஆல்பா, பீட்டா, காமா போன்று)[2] செமிட்டிக் எழுத்துக்களின் பெயர்களும் ஒன்றுயிருப்பதுடன் செமிட்டிக் மொழிகளில் இச்சொற்கட்குத் தனித்தனிப் பொருள் இருப்பதும் கிரேக்க மொழியில் இச்சொற்கள் வெறும் எழுத்துக்களின் பெயர்களாகவே உள்ளமையும் இவண் கவனித்தற்பாலன.

செமிட்டிக் மொழிகள் தம்முள்ளும் பினீசிய மொழியிலிருந்தே கிரேக்க மொழியாளர்கள் தங்கள் எழுத்து முறையை கைக்கொண்டனர் என்பது அறிஞர்களின் முடிபு. பினீசியர்கள் தங்கள் வாணிபத்தின் பொருட்டுக் கிரேக்க

---

1. If the alphabet is defined as a system of signs expressing single sounds of speech, then the first alphabet which can justifiably be so called is the Greek alphabet. However, the new type of writing did not spring up suddenly on the Greek soil as a new and strange blossom. We have had occasion on preceding pages to refer often enough to that important aspect of evolution which show that for every new feature in a new type of writing parallels can be found in some older types. And so it happened with the Greek alphabet. Its roots and its background lie in the Ancient Orient.

I. J. Gelb, A Study of Writing, p. 166.

2. alpha, beta, gamma, delta, epsilon, zeta, eta, theta, iota, kappa, lambda, mu, nu, xi, omicron, pi, rho, sigma, tau, upsilon, phi, chi, psi, omega.

நாடு சென்று பல வேறு பகுதிகளில் உறைந்தபோது கிரேக்க மக்கள் இவர்களிடமிருந்து எழுத்து முறையைக் கற்றனர் என்பர்.

கிரேக்க எழுத்துமுறை உருவான காலத்தைப்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. மெண்ட்ஸ் (A. Mentz) என்பார் கி.மு. 1400ஐ ஒட்டி இவ்வெழுத்து முறை உருவாயிற்று என்றும் உல்மன் (B. L. Ullman) போன்ஞேர் மைசீனியன் காலத்தின் இறுதியில் உருவாயிற்று என்றும் கார்பண்டர் (Rhys Carpenter) போன்ருேர் கி. மு. எட்டாம் நூற்ருண்டில்தான் உருவானது என்றும் கூறுவர். எனினும் கி. மு. எட்டாம் நூற்ருண்டில்தான் இம்முறை உருவாகியிருக்க வேண்டும் என்று கூறுவார் எழுத்தின் தோற்றத்தை ஆராய்ந்த கெல்ப்.[1]

பழைய கல்வெட்டுகளே நோக்கின் எல்லாக் கல்வெட்டுகளும் ஒரே மாதிரியாக எழுதப்படவில்லே என்பது தெரியவரும். பழைய கல்வெட்டுகளில் இரண்டு முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கக் காணலாம். ஒன்றை மேற்கு முறை (Chalcidic) என்றும் மற்ருென்றைக் கிழக்கு முறை (Ionic) என்றும் கூறுவர்.[2] எனினும் கி. மு. நான்காம் நூற்ருண்டுக் காலப்பகுதியில் மேற்கு முறை மறைந்து கிழக்கு முறையே கால்கொண்டது. இதுவே இன்றும் வழக்கிலிருந்து வரும் கிரேக்க எழுத்துமுறை. ஆனல் மேற்கு முறையோ இத்தாலி, சிசிலி போன்ற இடங்களில் பரவி லத்தீன் எழுத்து முறை உருவாக வழி வகுத்தது.

---

1. I. J. Gelb, ibid. pp. 171-179

2. Two main varieties of alphabet were in use in early times, the western or Chalcidic, and the eastern or Ionic. Ionic gained ground over the Chalcidic and by the fourth century B. C. had been adopted everywhere exeept in the extreme west of the Greek world.

B.F C. Atkinson, The Greek Language, p. 335

மேலும் பழைய கல்வெட்டுகளை நோக்கின் மற்ருெரு உண்மையும் புலப்படும். எழுத்துகள் எழுதப்படும் தன்மையிலும் பல வேற்றுமைகள் காணப்படுகின்றன. பல கல்வெட்டுகள் இடமிருந்து தொடங்கி வலம் சென்று பின்னர் வலமிருந்து இடமாகவும் பின்னர் இடமிருந்து வலமாகவும் உழவுச்சால் போல் செல்லுதல் காணலாம். இன்னும் சில கல்வெட்டுகள் வலமிருந்து இடம் சென்று பின்னர் இடமிருந்து வலம் செல்லும் நிலையில் உள்ளன. இந்நிலை காலம் செல்லச் செல்ல படிப்படியாக மாறிப் பின்னர் இடமிருந்து வலம் செல்லும் நிலையில் அடைந்துள்ளது.[1]

செமிட்டிக் முறைக்கும் கிரேக்க முறைக்கும் உள்ள பெரும் வேற்றுமை உயிர் எழுத்துக்களைக் கையாண்ட முறையேயாகும். செமிட்டிக் மொழிகளில் மெய்யை அடுத்து பின்னுல் வரும் உயிரினை விளக்கமாக எழுதுதல் இல்லை. ஆனுல் கிரேக்க முறையிலோ இத்தன்மை நன்கு வளர்ந்திருக்கக் காணலாம். இந்நிலையிலும் கிரேக்க மக்கள் புதிதாக எந்த எழுத்துருவத்தையும் கண்டதில்லை. செமிட்டிக் மொழிகளில் உள்ள சில ஒலிகள் தங்கள் மொழியில் இல்லாதிருக்க அவற்றைக் குறிக்கும் எழுத்துக்களை உயிர் எழுத்துக்களாகப் பயன்படுத்தினர் என்றுஃ இத்தகைய நிலையில் படிப்படியாகவே எழுத்து முறை உண்டாயிற்று என்றும் கூறுவர். எனினும் கிரேக்க மக்களே ஒலி எழுத்து முறை ஆக்கத்துக்குக் காரணமாய் அமைந்தார்கள் என்பது அறிஞர்களின் கருத்தாம்.[2]

---

1. The direction of signs in wrting varies greatly in the oldest Greek inscriptions, as it runs either from right to left or from left to right continuing in boustrophedon fashion, alternately changing direction from line to line. Only gradually did the classical method of writing from left to right assert itself in the Greek system.

I. J. Gelb, ibid, p. 178.

2. I. J. Gelb, ibid. p. 197.

ஒரு கோடிக்கு அதிகமான மக்கள் இன்றும் இம்மொழியினைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இவர்களுள் எண்பது விழுக்காடு மக்கள் கிரீஸ் நாட்டிலும் 450,000 மக்கள் சைப்பிரஸ் தீவிலும் எஞ்சியோர் துருக்கியக் கரையோரப் பகுதிகள் (95,000), அலக்சாண்டிரியா (60,000) இத்தாலி (30,000), யுகஸ்லாவியா, ருமேனியா, பல்கேரியா, அமெரிக்க ஐக்கிய நாடு போன்ற பல இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். கிரேக்க நாட்டிலும் சைப்பிரஸ் தீவிலும் இதுவே அரசியல் மொழி.[1]

இன்றைய கிரீக் மொழியில் தமிழைப் போன்று ஐந்து உயிர்களும் (i, e, a, u, o,) பத்தொன்பது மெய்களும் உள்ளன.[1] இதன்கண் நெட்டெழுத்துக்கள் இன்று இல்லை. இவண் காணப்படும் பல கிளைமொழிகளில் கத்தரவொசா (Katharvausa) திமோதிகி (Dhimotiki) என்பவை முக்கியமானவை[2]

---

கிரேக்க மொழி தவிர துருக்கிய (Turkish) மொழியும் பல இ. ஐ. மொழிகளும் இவண் பேசப்படுதல் காணலாம். துருக்கி, *180,000*, மாசிடோனியன் சிலாவிக், 41,000, விலாச் (Vlach) *40,000*, அல்பேனியன், *23,000—50,000*, பொமொ, (Pomoh இது பல்கேரியன் கிளை மொழி) *19,000*, ஆர்மெனியன், ரஷயன் போன்ற பல மொழிகள் கிரீசில் வழங்குகின்றன.

1. Anthropological Linguistics Vol. 7, No. 8, 1965, pp. 158–180.

2. Fred. W. Householder, Kostas kazazis, and Andreas koutsoudas, Reference Grammar of Literary Dhimotiki.

## 1.2 லத்தீன் (Latin)

உலக மொழிகளில் முக்கியம் வாய்ந்தவற்றுள் ஒன்ருகக் கருதப்படுவது லத்தீன். இன்று பேச்சு மொழியாக இல்லா விடினும் கத்தோலிக்க மதத்தினரின் புனித மொழியாகக் கருதப்படுதல் காணலாம். கி. மு. ஏழாவது நூற்ருண்டில் ரோம் நகரின் மொழியாக மட்டும் விளங்கிய இது படிப்படி யாக வளர்ந்து பிற லத்தீன் கிளைமொழிகளையும், பின்னர் இத்தாலியில் வழங்கிய பிற மொழிகளையும் அழித்து, அதன் பின்னர் ரோமப் பேரரசு, பிரான்சு, ஸ்பெயின். போர்ச்சுக்கல் ருமேனியா போன்ற இடங்களில் பரந்தபோது அந்நாடு களின் அரசியல் மொழியாகப் பரவி ரொமான்ஸ் மொழிகளைத் தோற்றுவித்து நின்றது. அன்று தைபர் (Tiber) ஆற்று முகத்துவாரத்தில் மட்டும் பேசப்பட்ட இம்மொழி இன்று வடமொழியைப் போன்று வழக்கற்று இறந்துவிட்ட நிலையி லும் உலக மொழிகளில் ஒன்ருகத் திகழ்தல் காணலாம்.

ரோம் நகரின் மொழியாக இருந்த நேரத்தில் இத்தாலி நாட்டில் பலவேறு மொழிகள் வழக்கிலிருந்தன. லிகுரியன் (Liguirian) கெல்டிக் (Celtic), லெபோந்திக் (Lepontic), ரயட்டிக் (Raetic), வெனடிக் (Ventic), மொஸாப்பிக் (Messapic), இல்லிரியன், (Illyrian), எத்துருஸ்கன் (Ethuruscan), ஆஸகன் (Oscan) உம்பிரியன் (Umbrian), பாலிஸ்கன் (Faliscan) சபெலியன் (Sabellian) போன்ற பல மொழிகள் இந்நாட்டில் வழங்கின. இவற்றுள் எத்துருஸ்கன் மட்டுமே இந்தோ–ஐரோப்பிய இனத்தைச் சாராத ஒரே மொழி. ஆஸ்கோ-உம்பிரியன் மொழிகளை ஒரு பிரிவாகவும் லத்தீன்-பாலிஸகன் மொழிகளை மற்ரெரு பிரிவாகவும் சபேலியனை வேரொரு பிரிவாகவும் பிரித்து இவற்றை இணைத்து இத்தாலிக் மொழிகளென ஒரேபிரிவாகக் கருதுவர் மொழி நூல் அறிஞர்கள். இத்தாலியில் வழங்கிய பிற இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூறுதற்கில்லை.




**லிகுரியன் (Liugrian)**

இதன்கண் சில இடப்பெயர்களும் சில சொற்களுமே கிடைத்துள்ளன. இது இந்தோ-ஐரோப்பிய மொழியா, இல்லையா என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு.[1] எனினும் இன்று பலர் இதை இவ்வினமொழியாகவே கருதுகின்றனர்.[2] கெல்டிக் மொழிக்கும் இத்தாலிய மொழிகட்குமிடைப்பட்ட ஒரு மொழி இது என்பர். லத்தீன் மொழியாளர்களைப் போன்று இவர்களும் இத்தாலிய நாட்டில் வந்து உறைந்தவர்கள் என்றும் இந்நாட்டிலுள்ள இ.ஐ.மொழிகளில் மிகவும் பழைமையானது என்றும் கூறுவர்.

---

1. Whatmough, The Foundations of Roman Italy, pp. 129–130.

L. R. Palmer, The Latin Language, pp. 54-55.

2. Hence Ligurian in our sense of the term, may well have been the oldest type of Indo-European spoken in Italy, which may in part account for the paucity of its records.

Ernst Pulgram, The Tongues of Italy, p. 202.

**கெல்டிக் (Celtic)**

இவன் வழங்கிய இம்மொழி பற்றி அதிகம் தெரிவதில்லை லிகுரியனை ஒட்டி இத்தாலி நாட்டின் வட மேற்குப் பகுதி களில் வழங்கிய இம்மொழியில் மூன்று கல்வெட்டுகளே கிடைத்துள்ளன. இம்மக்கள் தங்கள் இருப்பிடமான ரைன், டெனூப், நதிகளின் கரையோரங்களிலிருந்து கி. மு. 900 ஐ ஒட்டி இத்தாலி வந்து எத்துருஸ்கன் மக்களை வென்றதுடன் கி. மு. 390ல் ரோம் நகரையும் அழித்து வெற்றி பெற்றனர். என்னும் தங்களுடைய நிலையான அதிகாரத்தை இவண் நிறுவ முடியாது போயிற்று[1]. ரோமர்களைப் போன்று இம் மக்களிடையே ஒற்றுமையும் தங்கள் குறிக்கோளில் ஒருமைப் பாடும் இருந்திருப்பின் இவர்கள் இத்தாலி நாட்டின் அரசின ராக மாறியிருப்பர்[2].

**லெபோந்திக் (Lepontic)**

இது கெல்டிக் வழங்கிய பகுதிகளின் வடக்கே மேற்கு ஏரிகளின் (Orte, Maggiore, Lugano, Coma) பக்கங்களில் வழங்கியது. இம்மொழி கல்வெட்டுகளாக ஒரு சிலவே கிடைத்துள்ளன. எத்துருஸ்கன் எழுத்து முறையை ஒட்டி எழுதப்பட்ட இக்கல் வெட்டுகள் கி. மு. 4–2 ஆம் நூற்றுண் டைச் சார்ந்தன. பின்னர் உள்ள கல்வெட்டுகள் சிலவற்றில் லத்தீன் எழுத்துகள் புகுந்துள்ளமை காணலாம். ரோமப் பேரரசின் செல்வாக்கினுல் கி. பி. முதல் நூற்றுண்டில் இம் மொழி வழக்கற்று விட்டது.

**ரயட்டிக் (Rhaetic)**

லெபோந்திக் பகுதியின் சிழக்கே பயிலபட்ட இம்மொழி யின் கண் காணப்படும் பல எத்துருஸ்கன் சொற்களினுலும், இம்மொழி கல்வெட்டுகள் எத்துருஸ்ருகன் எழுத்தில் எழுதப்

1. L. R. Palmer, ibid. pp. 52–53.

Ernst Pulgram, ibid. p. 204.

பட்டிருப்பதாலும் பலர் இம்மொயிஇன எத்துருஸ்கனுடன் இணைத்துக் கூறினர். ஆனால் இதன்கண் காணப்படும் சொற்கள் எத்துருஸ்கன் மொழியினின்றும் கடனாகப் பெற்ற வையே என்றும் அக்காலத்தில் எத்துருஸ்கன் எழுத்து முறை இப்பகுதிகளில் செல்வாக்குடன் இருந்தமையால் அதனையே இம்மொழியினர் பயன்படுத்தினர் என்றும் அடிப்படையில் இது ஒரு இ. ஐ. மொழியே என்றும் கூறுவர் பலர்[1].

**வெனெட்டிக் (Venetic)**

ரயட்டிக் பகுதிகளின் கிழக்கே ஏட்ரியாட்டிக் கரை யோரங்களில் வழங்கியது. இம்மொழியில் ஏராளமான கல் வெட்டுகள் உள்ளமையால் எவ்வித ஐயப்பாடுமின்றி மொழி நூலறிஞர்கள் இதனை இ. ஐ. இனத்துடன் இணைப்பர். எனி னும் அவ்வினத்தில் எப்பிரிவுடன் இணைப்பது என்பதில் கருத்து வேறுபாடு இல்லாமல் இல்லை. சிலர் இதனை லத்தீன் பிரிவுடனும் இன்னும் சிலர் இல்லிரியனுடனும் மற்றும் சிலர் தனிப் பிரிவாகவும் கருதுவர்.[2]

**மெஸாப்பிக் (Messappic)**

இது இன்றைய அபுலியா (Apulia) பகுதிகளில் வழங்கிய மொழியாகும். கிரேக்கர்கள் இப்பகுதியில் வாழ்ந்த மக்களை இப்பெயரால் அழைக்கவே இதுவே இம்மொழிக்கும் நிலைப்ப தாயிற்று. கி. மு. ஐந்தாவது நூற்றாண்டு முதலே கிடைக் கும் கல்வெட்டுகளினின்று இம்மொழி இல்லிரியனுடன் தொடர்புடையது என்பது விளங்கும்.

---

1. ibid. p. 209.

J. Whatmough, The Foundations of Roman Italy, pp. 166–171.

2. L. R. Palmer, ibid. p. 43.

Ernst Pulgram, ibid. 212.

**ஆஸ்கோ - உம்பிரியன் (Osco-Umbrian)**

இத்தாலிய மொழிகளில் ஒரு பிரிவாகும். நடு இத்தாலியில் உள்ள கம்பேனியா, அபுலியா, லூக்கானியா பகுதிகளில் ஆஸ்கன் வழங்கியது. இவ்விடங்களில் எல்லாம் இம்மொழிக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கி. மு. ஐந்தாவது நூற்ருண்டு முதல் கி. பி. முதல் நூற்ருண்டுவரையுள்ள இக் கல்வெட்டுகள் ஆஸ்கன், லத்தீன், கிரேக்க எழுத்து முறைகளில் எழுதப்பட்டுள்ளன. எனினும் பெரும்பான்மையானவை ஆஸ்கன் எழுத்திலேயே கிடைக்கின்றன. இவ்வெழுத்து முறை எத்துருஸ்கன் வழியாகக் கிரேக்க முறையிலிருந்து உருவானது என்பர்.

ரோமர்களின் அதிகாரம் இவண் ஏற்படுவது வரையிலும் இத்தாலியின் முக்கிய மொழிகளில் ஒன்ருக இது இருந்து வந்தது. இதன் கண் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் முக்கியமானது (Banlia) 1763ல் கண்டெடுக்கப்பட்ட பித்தளைத் தகடாகும். லத்தீன் எழுத்திலேயே அமைந்துள்ள இது நகரவையின் சட்டதிட்டங்கள் பற்றிக் கூறும்.

இதனுடன் தொடர்பு கொண்ட மொழி உம்பிரியன். உம்பிரியாவில் (Gubbio) 1447ல் கிடைத்த கல்வெட்டே இம்மொழிக் கல்வெட்டுகளில் பெரியது. உம்பிரியன் எழுத்து முறையினுலும் லத்தீன் எழுத்துகளாலும் எழுதப்பட்ட இந்த ஒன்பது பித்தளைத் தட்டுகளும் இம் மொழி பற்றி ஓரளவு அறிந்துகொள்ளப் பயன்படுகின்றன. கி.மு. 400-க்கும் 90-க்கும் இடைப்பட்ட கால அளவினதாகக் கருதப்படும் இப் பித்தளைத் தகடுகள் மட்டுமல்லாமல் உம்பிரியா நாடு முழுவதும் பலவேறு கல்வெட்டுகள் இம்மொழியின் கண் கிடைத்துள்ளன.

இவ்விரு மொழிகள் தவிர சபெலியன் மொழிக் கல்வெட்டுகளும் உம்பிரியாவை அடுத்துள்ள பகுதிகளில் கிடைக்கின்றன. ஒரு சில மக்களால் பேசப்பட்ட இம்மொழி

ஆஸ்கன் அல்லது உம்பிரியன் மொழிகளுடன் தொடர்புடையது என்பர்[1].

**பாலிஸ்கன்** (Faliscan)

லத்தீனுடன் மிகத் தொடர்புடையது. லேட்டியம் பகுதிகளுக்கு அருகாமையில் வழங்கிய மொழியாகும். ரோமின் வளர்ச்சியால் லத்தீன் பெருமை பெற்ற போது அப்பெருமையில் மங்கி மறைந்தது.

**சிஸெல்** (Sicel)

இத்தாலியின் தெற்கே சிசிலியில் வழங்கிய இந்தோ - ஐரோப்பிய மொழியாகும். இது ஒரு இ. ஐ. மொழி என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லையாயினும் எப்பிரிவில் உட்படுத்துவது என்பதில் அறிஞர்களிடையே வேற்றுமை உண்டு. இதன் கண் ஒரு சில கல்வெட்டுகளும் இடப் பெயர்களும் மக்கள் பெயர்களும் கிடைத்துள்ளன. வரோ போன்ற பழைய ஆசிரியர்கள் 'இம்மக்கள் பண்டைக் காலத்தில் இத்தாலி நாட்டிலும் பரந்து வாழ்ந்திருந்தனர்' என்பர்[2].

**எத்துருஸ்கன்** (Etruscan)

முன்னாள் இத்தாலியில் பேசப்பட்ட மொழிகளில் இது ஒன்றே இ. ஐ. இனத்தைச் சாராதது கி. மு. 9 ஆம் நூற்

---

1. In additton to Oscan and Umbrian we have some slight evidence of the dialects of the lesser tribes of central Italy which are sometime conveniently grouped under the name 'Sabellian'. These include the dialects of the Paeligni, the Marucini, and the Vestini, all of which closely resemble Oscan.

L. R. Palmer, *ibid* p. 6.

Ernst Pulgram, *ibid*, 218.

2. According to some ancient authorities (Varro and Favorinus) the Sicels were settled over the whole peninsula as far as Gisalpine Gaul, and these statements are supported by the widespread occurence of certain personal and local names (eg. Sicilinum)

L. R. Palmer, ibid. p. 43.

ருண்டு முதல் இவர்கள் இத்தாலியில் வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. இவர்கள் இத்தாலி நாட்டைச் சார்ந்தவர்களா அன்றிப் பிற நாடுகளிலிருந்து இவண் வந்து குடியேறின வர்களா என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை உண்டு. பலர் இம்மக்கள் லிடியா (Lydia) பகுதியிலிருந்து ஆல்ப்ஸ் மலைச்சாரல் வந்து குடியேறிப் பின்னர் தெற்கே தங்கள் அதிகாரத்தைப் பரப்பினர் என்பர்.[1] கி.மு. ஒன்பதா வது நூற்றுண்டில் இவர்கள் லிடியாவினின்று வந்து குடியேறி ஞர்கள் என்பதைப் புதை பொருள் ஆராய்ச்சியும் வலி யுறுத்துகிறது என்பார் பாமர்.[2] மேலும் இவர்களுடைய எழுத்து முறையும் லிடியாவில் காணப்பட்ட முறையும் பொருந்துவனவாகவும் உள்ளன.[3] ஒன்றரை நூற்றுண்டுகள் லேட்டியம் பகுதிகளிலும் ரோம் நகரிலும் தங்கள் அதிகா ரத்தை நிலைநிறுத்திய இவர்களின் செல்வாக்கினை லத்தீன் மொழியிலும் ஓரளவு காணுதல் முடியும். சமயம், கலை, அரசியல், நிர்வாகம் போன்ற துறைச் சொற்கள் பல எத்துருஸ்கன் சொற்களாக உள்ளன. ரோம் நகரின் செல் வந்தர்கள் எத்துருஸ்கன் மக்கள் பலரைத் தங்கள் குழந்தை களின் ஆசிரியர்களாக நியமித்ததுடன் மெய்க்காப்பு முறை யினையும் இம்மக்களிடமிருந்தே தெரிந்து கொண்டனராம். லத்தீன் மொழி கிரேக்கச் சொற்கள் சிலவற்றை நேரடியாக வும் எத்துருஸ்கன் வாயிலாகவும் பெற்றுள்ளது.

---

1. Some Ancients regarded Etruscan to be like no other language. Herodotus suggested Lydian affinities. Other affinities of Etruscan sought in Caucasian languages. If the Etruscans were not aborginal to Italy, they migrated from Asia Minor via Greece (perhaps as the Pelasgians).

2. Ernst Pulgram, *ibid.* p. 46.
   Anthropological Linguistics, Vol. 6, No. 8., p. 34.
   L. R. Palmer, *ibid.* p. 46.

3. L. R. Palmer, *ibid.* p. 46.

எத்துருஸ்கன் மக்கள் வரும்போது தங்களுடன் பழைய கிரேக்க எழுத்து முறையினையும் கொண்டு வந்துள்ளனர். இவண் வந்து உறைந்த போது ஒரு சில மாற்றங்களுடன் இம்முறையைப் பயன்படுத்தினர். இவ்வெழுத்து முறையினை ஒட்டியே பல இ. ஐ. மொழிகள் தங்கள் எழுத்து முறையை அமைத்துக் கொண்டன. எத்துருஸ்கன் மக்கள் எழுதப் படிக்கத் தெரியாத மக்களாக இருந்திருப்பின் இத்தாலி நாட்டின் பழங்காலம் பற்றி எதுவும் தெரியாத நிலையே இருந்திருக்கும்.

தங்கள் குடியேற்றக் கொள்கையிலேயே கவனம் செலுத்திக் கடற்கரைப் பகுதிகளை விட்டு உள்நாட்டில் புகுந்து வாழ விருப்பமில்லாதிருந்த கிரேக்க மக்களிட மிருந்து கிரீக் எழுத்து முறையினைக் கற்க இத்தாலி உள் நாட்டினருக்கு அதிக நாட்கள் வேண்டியிருந்திருக்கும் என்பர் பலர்.[1]

இந்தோ-ஐரோப்பிய மொழியினர் சுமார் 3000 வருடங் கட்கு முன்பே இத்தாலி வந்து குடியேறினர் என்றும் அவர் களில் லத்தீன் மொழியினர் கி. மு. 10 ஆம் நூற்றுண்டை யொட்டிய காலப் பகுதியில் தங்கள் இருப்பிடமான லேட்டி யம் பிரதேசங்களில் சென்று வதிந்தனர் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். இப்பகுதிகளில் வாழ்ந்த லேட்டினி மக்க

---

1. Whatever be the disputed details on the spread and development of these Italic scripts, the fact remains that the speakers of InJo-European dialects in Italy learnt the art of writing from the Etruscans. It is therefore the Etruscans to whose civilizing influence we owe our earliest records in Italy, sparse and late though they are in comparison with those of the more eastern Mediterranean regions, to say nothing of Egyptian and Babylonian. No doubt if the Etruscans had not been literate, the people of Italy would nonetheless have !earned eventually the use of an alphabet from the Greeks of Magna Graecia.

1. Earent Pnlgram, ibid. p. 196.

ளால் பேசப்பட்ட காரணத்தால்தான் இம்மொழி லத்தீன் என்றழைக்கப்படுகிறது என்பர்.[1] கெல்டிக், ஜெர்மானிக் மொழிகளிலும் இதன்கண்ணும் காணப்படும் பொதுச் சொற்களின் அடிப்படையில் இப்பிரிவு மொழிகளைப் பேசிய மக்கள் பண்டைக் காலத்தில் மிக அருகாமையில் வாழ்ந்து பின்னர் பிரிந்தனர் எனக் கருதுகின்றனர் அறிஞர்கள். எனினும் லத்தீனின் முதல் எழுத்துச் சான்ருகக் கிடைக்கும் கல்வெட்டுகளில் காணப்படும் மொழி நிலையிலிருந்து மேற் கூறிய மொழிகள் மட்டுமன்றி ஆஸ்கன் உம்பிரியன் மொழி களும்கூட மிகப் பழங் காலத்திலேயே பிரிந்திருக்கவேண்டும் என்றும் லத்தீன் தனக்கென ஒரு தனித் தன்மையைக் கொண்டு விளங்கியது என்றும் கருத முடியும். ரோம் நகரில் பேசப்பட்ட லத்தீன் ரோமப் பேரரசின் உதவியால் பிற நாடுகளில் எல்லாம் பரந்து வளர்ந்த போதிலும் அதற்கு முன்னர் லேட்டியம் பகுதிகளில் பல வேறு கிளை மொழிகளும் வழக்கிலிருந்தன. அவற்றுள் ஒன்ருகவே ரோமில் பேசப் பட்ட லத்தீனும் கருதப்படுகிறது.

லத்தீனின் எழுத்துச் சான்ருகக்கிடைக்கும் முதல் கல் வெட்டுகூட ரோமில் வழங்கிய லத்தின் கிளை மொழியன்று என்பது அறிஞர்களின் எண்ணம். கி. மு. ஆருவது நூற்ருண் டைச் சார்ந்த இக்கல்வெட்டு கிரீக் எழுத்தினுல் எழுதப் பட்டுள்ளது. இது போன்றே பிற இடங்களில் (Faliscan, Cupua, Falarii) கிடைத்த கல்வெட்டுகளும் பல வேறு கிளை மொழிகள் இருந்தமையைக் காட்டும்.

இவ்வாறு பல வேறு கிளைமொழிகளைப் பேசி வந்த மக்களிடையே அவர்களின் பாதுகாவலின் பொருட்டுப் பல உடன் படிக்கைகள் நடந்தன. ரோமின் தலைமையில் இம் மக்கள் எதிரிகட்கெதிராகப் பல நேரங்களில் ஒன்று பட்ட தன் காரணமாக மெல்ல மெல்ல ரோம் வன்மை வாய்ந்த

1. L. R. Pulgram, *ibid.* p. 3.

தாக மாறியது. இந்நிலையில் படிப்படியாகப் பிற பகுதிகள் ரோமின் அதிகாரத்துக்குட்பட்ட போது இவண் பேசப்பட்ட லத்தீன் கிளை மொழியும் பரந்து வளர்ந்தது. இத்தகைய மாற்றத்துக்கு முழு முதல் காரணம் ரோமர்களின் மொழிக் கொள்கையாகும். இவர்கள் தங்கள் மொழியினை எக்காலத்தும் எவர் மீதும் திணித்ததில்லை[1]. ரோமப் பேரரசு ஸ்பெயின், போர்ச்சுக்கல், பிரான்சு, ருமேனியா போன்ற நாடுகளில் அதிகாரம் பெற்ற போதும் இதே கொள்கையை உடையவர்களாகவே இருந்தனர் ரோமர்கள். இவர்களின் அரசியல் அதிகாரம், இலக்கியப் பெருமை, கலைப் பெருமை இவைகளால் பிற நாட்டினர் லத்தீன் மொழியைத் தங்கள் மொழியாகக் கொண்டனரேயன்றி எக்காலத்திலும் ரோமர்கள் தங்கள் மொழியினைப் பிறர் மீது திணிக்கவில்லை.

கி. மு. மூன்ருவது நூற்ருண்டில் ரோம் பேரரசாக விரிவடைந்த நேரத்தில் லத்தீன் வெறும் பேச்சு மொழியாகவே

---

1. Unlike some conquerors the Romans did not impose upon their allies and subjects any policy of linguistic assimilation, in part surely because they rightly feared that attempted suppression of a local language would only enhance its importance as a possible sentimental rallying point of anti Roman discontent, but also because the policy of *diuide et impera* 'divide and conquer' made it seem more opportune to withhold from the peoples of Italy such an effective instrument of unification as a common language with all its inherent dangers of facilitating a common understanding against the Roman rulers[4].

Ernst Pulgram, ibid. p. 265.

But the Roman way of consolidation was not suppression but absorption.

L. R. Palmer, ibid. p. 68.

வழங்கியது. இலக்கியம் என்று சொல்லத்தக்க விதத்தில் எவ்வித எழுத்துருவங்களும் இல்லாது எந்த விதமான பெருமையும் அற்று இருந்தது. கிரேக்க நாட்டை இவர்கள் வென்று தங்கள் அரசினை நிலை நிறுத்திய போதிலும் கிரேக்கர்களின் வானளாவி உயர்ந்த இலக்கியப் பெருமையினை எண்ணி வியந்ததுடன் தங்கள் மொழியின் எளிமையினைப் பார்த்து வருந்தி நின்றனர். இதனால் ரோமப் படைத்தலைவர்கள் கிரேக்க ஆசிரியர்களையும் அறிஞர்களையும் தத்துவ ஞானிகளையும் தங்களுடன் கொண்டு வந்து தங்கள் குழந்தைகளின் ஆசிரியர்களாக நியமித்தனர். பாலஸ் (Aemilius Paullus) கி. மு. 168-ல் மாசிடோனியாவில் பெர்சியூசை (Perseus) வென்றபோது திறையாக அவனுடைய நூல் நிலையத்தினைக் கேட்டானும்[1]. ரோமர்கள் தங்கள் நாடும் தங்கள் மொழியும் கிரேக்க நாட்டினையும் மொழியினையும் போன்று சிறந்து விளங்கவேண்டும் என எண்ணினர். இதனால் அந்நாட்டுப் பழக்கவழக்கங்களும் கிரேக்க மொழிச் சொற்களும் ரோம் நாட்டில் ஏராளமாகப் புகுந்தன. ரோமப் பெண்கள் கிரேக்க நாட்டுப் பெண்களின் உடையினையும் பழக்கங்களையும் பின் பற்றினர்[2]. கிரேக்க இலக்கியங்களைப் பின்பற்றிக் கவிதைகளும் காப்பியங்களும் எழுந்தன. வசைப்பா (Satire) மட்டுமே ரோம நாட்டுக்குரியது என்றும் அந்நாட்டில் எழுந்த பிற இலக்கியப் படைபல்கள் கிரேக்க இலக்கியங்களை அடியொற்றி எழுந்தவை என்றும் கூறுவர்[3].

---

1. L. R. Palmer, ibid. pp. 95–95.

2. L R. Palmer, ibid. pp. 81–82.

3. The only genuine literary contribution of Rome was the genre of the satire, commencing with Gaius Lucilius (180–102 B. C.)

Ernst Pulgram, *ibid* p. 352.
L. R. Palmer, *ibid* p. 96.

முதன் முதலாக ஹோமரின் ஆடிசி (Odyssey) ஆண்ட்ரோனிக்கஸ் (Livius Andronicus 294–204) என்பாரால் மொழிபெயர்க்கப்பட்டது. நெவியஸ் (Gnaeus Naevius, சுமார் 270–199) என்னியஸ் (Ennius 239-169) போன்ருேர்களின் நூற்களில் கிரீக் மொழியின் செல்வாக்கினை ஏராளமாகக் காணலாம். இதே போன்று நாடகம், காப்பியம், உணர்ச்சிக் கவிதைகள் (Lyrics) போன்ற பல இலக்கியப் படைப்புகள் கிரீக் மொழியின் செல்வாக்கினுல்தான் உருவாயின. நாடக ஆசிரியர்கள் பலருள் நகைச்சுவை நாடகங்களை எழுதிய பிளாத்துஸ் (T. Maceius Plautus, சுமார் 254-184) குறிப்பிடத்தக்கவர். இவர் எழுதிய நூற்களில் கிரேக்க மொழியின் செல்வாக்கு காணப்படினும் இவர் லத்தீன் மொழியின் பழைய சொற்களைத் தேடிப் பிடித்துத் தம் கவிதைகளில் பயன்படுத்தியுள்ளார். ஆனுல் உரை நடைகளில் ஏராளமான கிரீக் சொற்களைக் காணலாம். லத்தீன் மொழியின் முதல் உரை நடை கி. மு. 200-ல் தோன்றியது. இது விவசாயத்தைப்பற்றிய ஒரு நூலாகும்.

இம்மொழியின்கண் ஐந்து உயிர்களும் (அ, இ, உ எ, ஒ), பதினைந்து மெய்களும் உள்ளன. தமிழைப் போலவே இம் மொழி உயிர்களும் குறில், நெடில் வேற்றுமையைக் கொண்டுள்ளன. இலக்கிய லத்தீனில் இத்தகைய வேற்றுமை காணப்பட்டபோதிலும் பேச்சு லத்தீனில் (Vulgar Latin) இந்நிலை மறைந்துவிட்டது. இதே நிலைதான் பேச்சு லத்தீனிலிருந்து கிளைத்த ரொமான்ஸ் மொழிகளிலும் காணக் கிடக்கிறது. மேலும் இம்மொழியில் பல இணை உயிர்கள் (dipthongs) உள்ளன.

ரொமான்ஸ் மொழிகளில் அஃறிணை பால் பகுப்பு காணப்படாவிடினும் லத்தீன் மொழிப் பெயர்கள் ஆண்பால், பெண்பால், அஃறிணை என மூன்று பால்களும் ஒருமை, பன்மை எண் பகுப்பும் கொண்டுள்ளன. எனினும் தமிழில் காணப்படும் இயற்கைப் பால்பகுப்பினைப் போன்றதன்று.

ஆண்களைக் குறிக்கும் பெயர்கள் ஆண்பாலாகவும் பெண்களைக் குறிப்பன பெண்பாலாகவும் காணப்படினும் அஃறிணைப் பொருட்களைக் குறிக்கும் பெயர்கள் பல ஆண், பெண் பாலாக வருதல் காணலாம். எடுத்துக் காட்டாகத் தெருவினைக் குறிக்கும் சொல் (*via*) பெண்பாலாகவும் கண்ணைக் குறிக்கும் சொல் (*oculus*) ஆண்பாலாகவும் சாலையினைக் குறிப்பது (*iter*) அஃறிணையாகவும் இருக்கின்றன.[1]

ரொமான்ஸ் மொழிகளைப் போலன்றி இதன் கண் எழுவாய், ஐ, கு, இன், அது வேற்றுமைகள் உள்ளன. இவையனைத்தும் பின்னொட்டுகளாலும் ஒடு, கண் வேற்றுமைப் பொருட்கள் இன் வேற்றுமைச் சொற்களுடன் வரும் சில முன்னுருபுகளாலும் காட்டப்படுகின்றன. இ.ஐ. மொழியில் காணப்படும் விளி வேற்றுமை சில இடங்களில் வருகின்றன என்பர். தமிழில் பெயர்கள் ஒருமையாயினும் பன்மையாயினும் வேற்றுமை உருபுகள் மாறுவதில்லை (கண்ணில்-கண்களில்). கண், கண்கள் என்ற சொற்களுடன் 'இல்' உருபினை இணைத்து இடப்பொருளைக் காட்டுகிறோம். ஆனால் இம்மொழியில் அங்ஙனமன்று. ஒருமைக்கெனத் தனி வேற்றுமை உருபும் பன்மைக்கெனத் தனி வேற்றுமை உருபும் இருத்தல் காணலாம். எடுத்துக்காட்டாகத் 'தோட்டத்தை' என ஒருமையில் கூறும் போது-உம் உருபினையும் (*hort-um*)' 'தோட்டங்களை' எனப் பன்மையில் கூறும் போது – ஓஸ் என்ற உருபினையும் (*hort-ōs*) இணைத்துக் கூறுதல் காணலாம். அதே நிலையினை எல்லா வேற்றுமைகளிலும் காண முடியும். பெயர்கள் முடியும் எழுத்துகட் கேற்பப் பெயர் மாற்றங்கள் (declension) மாறுகின்றன. இப்பெயர் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு இம்மொழிப் பெயர்களை ஐந்து வகையாகப் பிரிப்பர். இவற்றிற்கேற்ப பல உருபுகளும் காணப்படுகின்றன. 'ஐ' வேற்றுமை உருபாக (ஒருமை)

---

1. Wilmot H. Thompson and others, Essential Latin, p. 7.

– அம் (*vi-am*, 'தெருவை') – உம் (*hort-um*) – எம் (*mīlit-em*), 'படை வீரனை') – ம் (*re-m* 'பொருளை') – உம் (*man-um* 'கையை') என ஐந்து வருதல் காண்க[1].

| | |
|---|---|
| *via* | தெரு |
| *viam* | தெருவை |
| *viaa* | தெருவின் |
| *viae* | தெருவுக்கு |
| *viā* | தெருவிலிருந்து |
| *viae* | தெருக்கள் |
| *viās* | தெருக்களை |
| *viārum* | தெருக்களின் |
| *viīs* | தெருக்களுக்கு |
| *viīs* | தெருக்களிலிருந்து |
| *in viā* | தெருவில் |

பெயர்களைப் போன்றே பெயரடைகளும் பொதுவாக எண், பால் வேற்றுமை காட்டும்.[2] ஆங்கிலம் தமிழ் போன்ற மொழிகளைப் போலல்லாமல் பெயரடைகள் முன்னும்

1. In Latin, nouns are inflected to indicate both number and case. The inflection of a noun, adjective, or pronoun is called its declension. Nouns are divided into five declensions according to the varieties of inflection that they display.

*Ibid p.* 7

2. There are in Latin many adjectives which are inflected like nouns of the first and second declensions. Thus the word for large is *magnus* in the masculine, *magna* in the feminine, and *magnum* in the neuter.

An adjective must agree with its noun in gender, number and case.

*ibid. p.* 10.

பின்னும் வருகின்றன. அளவினைக் காட்டும் அடைகள் பொதுவாக முன்னுலேயே வரும் என்பர் இலக்கண நூலோர்.[1]

*insula magna* – பெரும் தீவு

*Insulae magnae* – பெரும் தீவுகள்

தமிழ் மூவிடப் பெயர்களைப் போலவே இம்மொழி மூவிடப் பெயர்களும் உள்ளன. ஒருமை, பன்மை, ஆண் பால், பெண்பால், அஃறிணை வேற்றுமைகளைக் காட்டு கின்றன. தமிழில் படர்க்கைப் பன்மையில் ஆண், பெண் வேற்றுமை இருத்தல் காணலாம். தமிழ் மொழி போன்றே இம்மொழியிலும் சுட்டுப் பெயரே படர்க்கை மூவிடப் பெய ராக விளங்குதல் ஒப்பு நோக்கத்தக்கது.[2]

*ego* நான்

*tū* நீ

*is* அவன், இவன்

*ia* அவள், இவள்

*id* அது, இது

*ei* அவர்கள் (ஆண்)

---

1. In English an adjective precedes the noun it modifies: in Latin it may either precede or follow its noun. But adjectives denoting quantity generally precede.

*ibid. p.* 10.

2. The Latin language has no third personal pronoun, i.e. no words for *he*, *she*, *it*, and *they*. Instead is used a demonstrative pronoun *is*.

*ibid. p.* 186.

| | |
|---|---|
| *eae* | அவர்கள் (பெண்) |
| *ea* | அவை |

லத்தீன் வினைச் சொற்கள் தமிழ் வினைச் சொற்களைப் போலவே காலம் எழுவாய் போன்ற பல இலக்கணக் கூறு களைக் காட்டுகின்றன. இறப்பு, எதிர்வு, நிகழ்வு, இறப்பில் இறப்பு போன்ற பல காலங்கள் இதன் கண் உள்ளன. இவையனைத்தும் பல ஒட்டுகளால் தான் உணர்த்தப் படுகின்றன.

| | |
|---|---|
| *am-ō* | காதலிக்கிறேன் |
| *amā-s* | காதலிக்கிருய் |
| *amā-t* | காதலிக்கிருன் |
| *amā-mus* | காதலிக்கிறோம் |
| *ama tis* | காதலிக்கிறீர்கள் |
| *ama-nt* | காதலிக்கிருர்கள் |
| *amā-ba-m* | காதலித்துத்துக்கொண்டிருந்தேன், காதலித்தேன் |
| *amā-bā-s* | நீ காதலித்தாய் etc. |
| *ama-ba-t* | அவன் காதலித்தான் ,, |
| *amā-ba-mus* | நாம் நாங்கள் காதலித்தோம் ,, |
| *amā-ba-tis* | நீங்கள் காதலித்தீர்கள் ,, |
| *amā-ba-nt* | அவர்கள் காதலித்தார்கள் ,, |
| *amā-b-ō* | நான் காதலிப்பேன் |
| *ama-bi-s* | நீ காதலிப்பாய் |

| | |
|---|---|
| *amaā-bi-t* | அவன் காதலிப்பான் |
| *ama-bi-mus* | நாம்/நாங்கள் காதலிப்போம் |
| *amā-bi-tis* | நீங்கள் காதலிப்பீர்கள் |
| *amā-bu-nt* | அவர்கள் காதலிப்பார்கள் |
| *amāv-i* | காதலித்தேன், காதலித்திருக்கிறேன் |
| *amā-visti* | நீ காதலித்தாய் ,, |
| *amāv-it* | அவன் காதலித்தான் ,, |
| *amav-im-us* | நாம், நாங்கள் காதலித்தோம் ,, |
| *amāv-bitis* | நீங்கள் காதலித்தீர்கள் ,, |
| *amāv-eerunt* | அவர்கள் காதலித்தார்கள் ,, |
| *amāv-era-m* | காதலித்திருந்தேன் |
| *amāv-era-s* | நீ காதலித்திருந்தாய் |
| *amāv-era-t* | அவன் காதலித்திருந்தான் |
| *amāv-era-mus* | நாம், நாங்கள் காதலித்திருந்தோம் |
| *amāv-erā-tis* | நீங்கள் காதலித்திருந்தீர்கள் |
| *amāv-era-nt* | அவர்கள் காதலித்திருந்தார்கள் |
| *amāv-er-ō* | காதலித்திருப்பேன் |
| *amāv-eri-s* | நீ காதலித்திருப்பாய் |
| *amāv-eri-t* | அவன் காதலித்திருப்பான் |
| *amāv-eri-mus* | நாங்கள் காதலித்திருப்போம் |
| *amāv-eri-tis* | நீங்கள் காதலித்திருப்பீர்கள் |

*amāv-eri-nt* அவர்கள் காதலிததிருப்பார்கள்

*ama-re* காதலிக்க[1]

**ரோம எழுத்து முறை**

கி. மு. ஒன்பதாவது நூற்றுண்டில் எத்துருஸ்கன் மக்கள் இத்தாலியில் குடியேறினர்கள் என்றும் அவண் வந்த போது தங்களுடன் கிரேக்க எழுத்து முறையினைக் கொண்டு வந்தனர் என்றும் அம்முறையினை ஒட்டித் தங்கள் எழுத்து முறையினையும் அமைத்துக் கொண்டனர் என்றும் கண்டோம். இத்தாலியில் வாழ்ந்த இம்மக்களிடமிருந்தே ரோமர்கள் தங்கள் எழுத்து முறையினை அமைத்துக் கொண்டனர். ஆஸ்கன், உம்பிரியன், பாலிஸ்கன் போன்ற இத்தாலியில் வழங்கிய பழைய மொழிகளும் பிரிட்டீஷ் தீவில் வழங்கிய கெல்டிக் மொழிகளும் எத்துருஸ்கன் முறையிலிருந்தே தங்கள் எழுத்து முறைகளை வகுத்துக் கொண்டன என்பர்.[2]

ரோம எழுத்து முறை கி. மு. 7 ஆவது நூற்றுண்டுப் பகுதியில் உருவாயிருக்கலாம் என எண்ணுகின்றனர். கி.மு. ஏழாம் நூற்றுண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் பிரோச் ஒன்றில் காணப்படும் எழுத்துக்கள் எத்துருஸ்கன் முறைக்கும் ரோம முறைக்கும் உள்ள தொடர்பை நன்குக் காட்டுவதுடன் ரோம எழுத்துக்களின் தோற்ற காலத்தையும் காட்டுவன வாக அமைக்துள்ளன.

எத்துருஸ்கன் மொழியிலுள்ள இருபத்தாறு எழுத்துக்களில் இருபத்தொரு எழுத்துக்களையே ரோம முறை பெற்றது என்றும் கி. மு. முதல் நூற்றுண்டில் கிரேக்கர்களை வென்ற போது அவர்கட்கும் ரோமர்களுக்கும் ஏற்பட்ட உறவினுல்

1. இவ்வொருமைச் சொற்களனைத்தும் (paradigms) "Elements of Latin" Barry C. Smith, pp. 107-108) என்ற நூலிலிருந்து எடுத்தவை. சொற்களின் பகுப்பு (segmentation) அந்நூலில் கண்டபடியே தரப்பட்டுள்ளன.

2. David Dringer, Writing, p. 165.

கிரேக்க முறையினின்றும் Y, Z என்ற இரு எழுத்துக்களையும் தங்கள் எழுத்துக்களுடன் இணைத்துக் கொண்டனர் என்றும் இதனுல் தான் இவ்விரு எழுத்துக்களும் இறுதியில் வைக்கப் பட்டுள்ளன என்றும் கூறுவர். கி. மு. முதல் நூற்ருண்டில் ரோம அரிச்சுவடியில் A, B, C (ககர ஒலியுடன்), D, E, F, G, H, I, K, L, M, N, O, P, Q, R (வேறு வடிவில்) S, T, V, X, Y, Z என்ற இருபத்து மூன்று எழுத்துக்களே இருந்தன. இதன் பின்னர் இவ்வெழுத்து முறை அடிப்படை வேற்றுமை எதுவுமின்றி உலகின் பல பாகங்களிலும் ஊடுருவிப் பரந்து வளர்ந்துள்ளமை காணலாம். ஒரு சில மன்னர்கள் சில எழுத்துக்களை இதனுடன் இணைக்க முயற்சித்தனர் எனினும் அம் முயற்சிகள் வெற்றி பெற வில்லை [1].

இப்போது ரோமன் அரிச்சுவடியில் இடம் பெற்றுள்ள U, W, J, என்பவை V, I என்ற இரு எழுத்துக்களிலிருந்து பிரித்தறிதல் பொருட்டு இடைக்காலத்தில் இணைக்கப்பட்ட வைகளே [2].

ரோமப் பேரரசின் விரிவால் இவ்வெழுத்து முறையும் ஐரோப்பா முழுவதும் பரந்து நின்றமை காணலாம். கி. மு. ஆருவது நூற்ருண்டு வரையிலும் எவ்வித அழகும் ஒருமைப் பாடுமின்றிக் காணப்பட்ட இவ்வெழுத்துக்களே கி. மு. முதல் நூற்ருண்டு முதல் கற்றூண்களிலும் கட்டடங்களிலும் செதுக் கப்பட்ட நிலையில் சிறந்த சிற்பிகளின் கைவண்ணத்தில் அழகும் எடுப்பான தோற்றமும் கொண்டு மிளிரத் தலைப் பட்டன.

ரோமன் பேரெழுத்துக்கள் (capitals) மூன்று வகையின தாகக் காணப்படுகின்றன. இவற்றுள் லாப்பிடரி (lapidary capitals) மிக நேர்த்தியான வடிவம் கொண்டவை என்றும்

1. ibid. p. 167.
2. ibid. p. 167.

இவையே கற்றூண்களிலும் பிற இடங்களிலும் செதுக்கப் பயன்பட்டன என்றும் கூறுவர். இவை தவிர வேறு பல கையெழுத்து (cursive) முறைகளும் வழக்கிலிருந்தன.

ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் இவ்வெழுத்து முறையும் பல வேறு இடங்களில் பல வேறு மாற்றங்களை யடைந்தன. ரோம கையெழுத்து முறையினின்றும் தோன்றிய இத்தாலிய முறை (semi cursive) கி. மு. 7ஆவது நூற்றாண்டு முதல் கி. பி. 9 ஆவது நூற்றாண்டு வரை இத்தா லியில் வழக்கிலிருந்துள்ளமை காணலாம். இம்முறை யினின்று தோன்றிய மற்றொரு எழுத்துமுறையே (pre caroline book hand) பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் பரந்தது என்பர். இது தவிர பிரான்சு நாட்டில் கி.பி. 68-ஆம் நூற்றாண் டில் வழக்கிலிருந்த மெரோவின்ஜியன் (Merovingian) ஸ்பெயின் நாட்டில் கி. பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டு களில் பயன்படுத்தப்பட்ட விசிகோதிக் (Visigothic seript), ஆங்கில ஐரிஷ் தீவுகளில் கி. பி. 10ஆம் நூற்றாண்டு வரை வழக்கிலிருந்த எழுத்து முறை (Anglo Saxon semi uncial style) போன்ற பல முறைகள் ரோம அரிச்சுவடியினின்றும் தோன்றியுள்ளன.

கி. பி. ஐந்தாம் நூறறுண்டில் ரோமப் பேரரசு வீழ்ந்த போதிலும் கத்தோலிக்க மதக்குருக்களும் பிறரும் தங்கள் மதத்துடன் லத்தீன் மொழியையும் எழுத்து முறையையும் கொண்டு சென்ற நிலையில் இம்முறை பரந்து நின்றது. இதனுல் ஐரோப்பா முழுவதும் ரோமன் எழுத்து பரவிய துடன் அங்கங்கே வழக்கிலிருந்த பல வேறு எழுத்துமுறை களையும் அழித்து நின்றது. ஜெர்மானிக், ரொமான்ஸ், சிலாவிக் போன்ற இ. ஐ. மொழிகளும் பின்னோ-உக்ரிக் போன்ற பிற மொழிகளும் இம் முறையை இன்று பயன் படுத்துதல் காணலாம்.

---

## 1.3 ரொமான்ஸ் மொழிகள் (Romance Languages)

ரோமப் பேரரசு தென் ஐரோப்பாவில் தன்னுடைய ஆட்சியையும் அதிகாரத்தையும் நிலை நிறுத்திய போது பேச்சு லத்தீனிலிருந்து பிறந்த மொழிகளையே இப்பெயரால் அழைக்கின்றனர். ரொமான்ஸ் அல்லது ரொமானிக் மொழிகள் என்ற பெயர் ரோமானிக் என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். ரோமப் பேரரசு இத்தாலி, பிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுக்கல், ருமேனியா, கிரீஸ் போன்ற இடங்களில் பரவி நின்ற போது இவ்வரசின் கீழடங்கிய இடங்களனைத்தையும் ரோமானியா என்றும் அதன் கண் வாழ்ந்த மக்களை ரோமானி என்றும் அழைத்தனர். அதே நேரத்தில் பிற பகுதிகளில் வாழ்ந்தோரை 'பார்பாரி' என்று பொதுவாக அழைத்த போதிலும் பின்னர் அஃது ஜெர்மன் மக்களுக்கே பொருந்துவதாயிற்று. 'பார்பாரி' என்ற சொல் 'விளங்காத மொழி பேசுவோர்' எனப் பொருள்படும் கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததாகும். பின்னர் இது ஜெர்மன் மொழி பேசுவோருக்கே ஆயிற்று எனக் கூறலாம்[1]. ரொமான்ஸ் மொழிகளில் காலோ-ரொமான்ஸ் (Gallo-Romance) ஹிஸ்பனோ-ரொமான்ஸ் (Hispano-Romance) இத்தாலோ-ரொமான்ஸ் (Italo-Romance) ரெட்டோ-ரொமன்ஸ் (Rheto-Romance) பால்கன்-ரொமான்ஸ் (Balkan Romance) ஆகிய பல பிரிவுகள் அடங்கும். இவற்றுள் காலோ ரொமான்ஸ் பிரஞ்சு நாட்டில் வழங்கும் பிரஞ்சையும், பிரான்சு நாட்டின் தென் பகுதியிலும் இத்தாலியின் வடபகுதியிலும் பேசப்படுகிற பிராவன்சல் (Provencal) மொழியையும் தன்னுள் கொண்டது. இதுபோன்றே ஸ்பானிஷ், போர்சுக்கீஸ் காட்டலன் (Catalan) மொழிகள் ஹிஸ்பனோ-ரொமான்ஸ் பிரிவினுள்ளும், இத்தாலியும் சார்டினியாவில் வழங்கும்

---

1. W. D. Elcock, The Romance Language, pp. 17-18.

மொழியும் இத்தாலோ-ரொமான்ஸ் பிரிவினுள்ளும், இத்தாலியின் வட பகுதியில் வழங்கும் ஒரு சில சின்னஞ் சிறு மொழிகள் (Romansh, Engadinish) ரெட்டோ-ரொமான்ஸ் பிரிவினுள்ளும், ருமேனியாவில் வழங்கும் ருமேனியனும் பால்கன் பகுதிகளில் பேசப்படும் சில சிறு கிளை மொழிகளும் பால்கன்-ரொமான்ஸ் பிரிவினுள்ளும் அடங்கும். இவற்றுள் பால்கன்-ரொமான்ஸ், இத்தாலோ-ரொமான்ஸ், ரயட்டோ ரொமான்ஸ் பிரிவுகளைக் கிழக்கு ரொமான்ஸ் என்றும் பிறவற்றை மேற்கு ரொமான்ஸ் மொழிகள் என்றும் அழைப்பர்.

கி. மு. நான்காம் நூற்றூண்டில் இலக்கியங்களோ அல்லது இலக்கணங்களோ இன்றி வெறும் பேச்சு மொழியாக இருந்த லத்தீன் கிரீக் மொழியின் செல்வாக்கினால் இலக்கிய மொழியாக வளர்ந்தது. ஏனியஸ், சிசரோ, குயிண்டிலியன், சீசர் போன்றோர் இவ்வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தனர். அரசு மொழியாகவும் செல்வந்தர்களின் மொழியாகவும் இலக்கிய லத்தீன் இருந்தபோதிலும் சாதாரண மக்களின் மொழியாகப் பேச்சு லத்தீன் வளர்ந்தது. அரசியல் பாதுகாப்பும் அறிஞர்களின் அரவணைப்பும் செல்வந்தர்களின் பேணுதலும் இன்றி இருந்த பேச்சு லத்தீன் ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் வெகு வேகமாக வளர்ந்ததுடன் பல மாற்றங்களையும் கண்டது. சாதாரண மக்களும் படிப்பற்ற அரசியல் அலுவலாளர்களும் படைவீரர்களும் பேசி வந்த இப்பேச்சு மொழியே (Vulgar Latin) ரொமான்ஸ் மொழிகளின் பிறப்புக்குக் காரணமாக இருந்தது. ரோமப் பேரரசு நிலை பெற்றிருந்த காலத்திலும் பல விதமான லத்தீன் கிளை மொழிகளைப் பேசி வந்த ரோமர்கள் பிற நாட்டு மக்களிடையே சென்று உறைந்து பழகிய காரணத்தால் பல வித மாற்றங்கள் அம்மக்களின் பேச்சில் ஏற்பட்டன. ரோமர்கள் பேசி வந்த மொழிகள் லத்தீனே ஆயினும் பலவேறு மாற்றங்களைக் கொண்டிருந்தது என்பதை மறுத்தல் இயலாது.

பேச்சு லத்தீனில் எந்த விதமான இலக்கியமும் அன்று இல்லை எனினும் சில கல்வெட்டுக்கள், இலக்கிய ஆசிரியர்


ரொமான்ஸ் (Romance)
மேற்கு ரொமான்ஸ்
கிழக்கு ரொமான்ஸ்
ஹிஸ்பனோ ரொமான்ஸ்
காலோ ரொமான்ஸ்
போர்ச்சுக்கீஸ்
ஸ்பானிஷ்
காட்டலன்
போர்ச்சுக்கீஸ்
போர்ச்சுக்கீஸ் கிரியோல்
பிரஞ்சு
பிராவன்சல்
பிரஞ்சு
பிரஞ்சு கிரியோல்
ரயட்டோ ரொமான்ஸ்
இத்தாலோ ரொமான்ஸ்
பால்கன் ரொமான்ஸ்
ரோமானிஷ்
எங்காடினிஷ்
இத்தாலியன்
சார்டினியன்
ருமேனியன்
சில சிறு கிளை மொழிகள்

களின் எழுத்துகளின் இடையே காணப்படும் சில பேச்சு லத்தீன் சொற்கள், இலக்கண ஆசிரியர்களின் உச்சரிப்பு பற்றிய சில குறிப்புகள் போன்றவை அன்றைய பேச்சு லத்தீன் பற்றி அறிய உதவுகின்றன. கி. மு. இரண்டு, மூன்றும் நூற்றுண்டுகளில் வாழ்ந்த நகைச்சுவை நாடக ஆசிரியரான பிளாத்தூசின் (Plautus 254–184 B. C.) நாடகங்களில் பல கொச்சைச் சொற்களும் கொச்சை மொழிக் கூறுகளும் கலந்திருக்கக் காணலாம். சிசரோ சிறந்த இலக்கிய எழுத்தாளராயினும் அவர் நண்பர்கட்கும் பிறருக்கும் எழுதியுள்ள கடிதங்களில் பல கொச்சை மொழிக் கூறுகள் உள்ளன. இலக்கிய லத்தீனில் காணப்படாத பல முன்னுருபுகளை இவர் பயன்படுத்தியுள்ளார். இது பேச்சு லத்தீனுக்கும் இலக்கிய லத்தீனுக்கும் உள்ள வேறுபாடுகளில் ஒன்றுரும்[1].

ரோம் தன்னுடைய ஆட்சியை இத்தாலி (265 B. C.) சார்டினியா (227 B. C.) இஸ்திரியா (178 B. C.) ஸ்பெயின் (133 B. C.) கால் (50 B. C.) டாசியா (106 A. D.) போன்ற இடங்களில் நிலைநிறுத்திய போது தன்னுடைய மொழியையும் அவண் நிலைபெறச் செய்தது. எனினும் கிரீஸ், மத்திய கிழக்கு நாடுகள், எகிப்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் லத்தீன் மொழி நிலைபெருது போனமை இவண் குறிப்பிடத் தக்கது; காரணம், கிரீக் மொழியின் செல்வாக்காகும். இங்கிலாந்தில் பல லத்தீன் சொற்களை வெல்ஷ், ஆங்கிலம் போன்ற மொழிகளில் புகுத்த முடிந்ததெனினும் அம்மொழிகளை அழித்து வளர முடியவில்லை.

ஆனல் ஸ்பெயின் போன்ற நாடுகளின் நிலைமை வேருக இருந்தது. இந் நாடுகளில் வழங்கிய மொழிகளில் இலக்கியங்களோ, இலக்கணங்களோ இல்லாத நிலை. இந் நாட்டு மக்கள் ரோமின் ஆட்சியும் அதிகாரமும் வந்தபோது ரோம் நாட்டின் கலை, மொழி, பண்பாடு போன்றவற்றைப் பெரி

1. L. R. Palmer, The Latin Language, pp. 151–52.
Robert K. Spaulding, How Spanish Grew, pp. 28-32.

தாக மதித்துப் போற்ற ஆரம்பித்தனர். ரோமப் பேரரசின் அங்கம் என்று கூறிக்கொள்வதில் பெருமை கொண்டனர். இந்நிலையில் லத்தீன் மொழி புகுந்து வளர்ந்து பின்னர் பல மொழிகளின் பிறப்பிற்குக் காரணமாக அமைந்தது.

கெல்டிக், ஐபீரியன் போன்ற மொழிகள் வாழ்ந்த இடங்களில் ரொமான்ஸ் மொழிகள் தோன்றிய போதிலும் இம் மொழிகளின் அமைப்பு, இலக்கணம் அனைத்தும் லத்தீன் மொழியினுடையவை ஆகும்[1]. சில சொற்களைத் தவிர அந்தந்த மொழிகளின் செல்வாக்கினைப் புதிய ரொமான்ஸ் மொழிகளில் காணுதல் முடியாது. முழுக்க முழுக்க லத்தீனின் அமைப்பையும் சொற்களையும் கொண்டுள்ளன. இதனால் இம்மொழிகளைப் புதிய லத்தீன் (Neo Latin) என்றும் கூறுவர். எனினும் லத்தீனுக்கும் இவற்றிற்குமிடையே வேற்றுமை மிக இருப்பதால் ரொமான்ஸ் மொழிகள் எனக் கூறுவதே பொருத்தம் என்பர் பலர்.

இலக்கிய லத்தீனுக்கும் பேச்சு லத்தீனுக்குமிடையே பல வேற்றுமைகள் இருந்தன. இம்மாற்றங்கள் எப்போது உண்டாயின என்று கூறுவது கடினமாயினும் மிகப் பழங்காலந் தொட்டே வேற்றுமைகள் பல வளரத் தொடங்கின எனக் கூறமுடியும். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆசிரியர்களின் எழுத்துக்களில் கூட பல மாற்றங்களைக் காணலாம்.

இலக்கிய மொழியில் காணப்படும் உயிர்களில் தமிழ் மொழியைப் போன்று குறில் நெடில் வேற்றுமை இருந்தது என்றும் பின்னர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும்

---

1. The languages spoken in Spain at and before the arrival of the Phoenicians, the Greeks, the Carthaginians, and the Romans, have not at all the structure of Spanish, which is in this respect totally an importation....It is evident in any case that Spanish is the product of the evolution of the Latin of daily intercourse. Vulgar Latin it is commonly called.
*ibid.* p. 33.

ஐந்தாம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இவ்வேற்றுமை மறைந்து நெடில் உயிர்கள் அடைப்பு உயிர் களாகப் (closed vowels) பேச்சு லத்தீனில் மாறி அமைந்தன என்றும் கூறுவர் [1].

| | | |
|---|---|---|
| ஆ, அ | → | அ |
| எ | → | எ (திறப்பு) |
| ஏ, இ | → | எ (அடைப்பு) |
| ஈ | → | இ |
| ஒ | → | ஒ (திறப்பு) |
| ஓஸ், உஸ் | → | ஒ (அடைப்பு) |
| ஊ | → | உ |

இலக்கிய லத்தீனில் பல வேற்றுமை உருபுகள் வேற்றுமைப் பொருள் காட்ட, பேச்சு லத்தீனில் முன்னுருபு கள் (prefixes) அவற்றின் இடத்தில் நின்று வேற்றுமைப் பொருள் தருதல் காணலாம். முன்னர்க் கூறிய உயிர் மாற்ற மும், சொற்களின் இறுதியில் செயப்படுபொருள் காட்டும் உருபாக நின்ற மகரத்தின் கேடும் இந்நிலைக்குத் துணை நின்றன. இதனுல் பல வேற்றுமை உருபுகள் தம்முள் வேற்றுமை எதுவும் இல்லாது போகத் தெளிவின் பொருட்டு முன்னுருபுகளை இணைத்துக் கூறவேண்டிய நிலை ஏற்பட்டது[2].

---

1. J. B. Trend, The Language and History of Spain, p. 30.
   L. R. Palmer, ibid, p. 155.

2. The exactness of the function performed by case endings was of course lessened by the disappearance of final *m* and the confusion in unstressed syllables, of *e* and *i*, *o* and *u*. The result was that dative, accusative, ablative, and often the nominative (and vocative) too, sounded alike (nom., acc., abl. *stella*; nom. *vinu*, dat, *vino*; acc. *vinu*, abl. *vino*; dat. *turri*, acc. *turre*, abl. *turre*). Here is another reason for rise of preposition and loss of declension.

   Spaulding, *ibid*. pp. 38–39.

| | இலக்கிய லத்தீன் | பேச்சு லத்தீன் |
|---|---|---|
| எழுவாய் | *–ă* | *–a* |
| ஐ | *–am* | *–a(m)* |
| அது | *–ae* | *–e* |
| கு | *–ae* | *–e* |
| இன் | *-ā* | *–a* |

ரொமான்ஸ் மொழிகளில் ஆண், பெண் பால்கள் மட்டும் இருக்க இலக்கிய லத்தீனில் அஃறிணையும் இருத்தல் காண லாம். இதற்குக் காரணம் சொற்களில் இறுதி மகரம் கெட்ட மையும் இரண்டாவது, நான்காவது பெயர் மாற்றங்களில் (declensions) ஏறபட்ட மாற்றங்களுமே[1].

இலக்கிய லத்தீனில் சிறப்புச் சுட்டுக்கள் (definite articles) எதுவும் இல்லே. ஏதாவது ஒரு பொருளேக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டின் சாதாரணச் சுட்டுக்களே உபயோகித்தே காட்டி வந்தனர். ஆனல் பேச்சு லத்தீனில் *ille*, *ipse*, *hic* என்ற சுட்டுக்கள் தம் சுட்டுப் பொருளே இழந்து வெறும் சிறப்புச் சுட்டுக்களாக மாறின.

வினைகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இவற்றுள் எதிர் காலத்திலும் 'செய்தால்' என்ற வினையெச் சத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பிடத்தக்கன. இலக்கிய லத்தீனில் எதிர்காலம் கால இடைநிலேயால் (*bi*, *b*) காட்டப்பட, பேச்சு லத்தீனில் முக்கிய வினையின் 'செய' எனும் எச்சத்துடன் துணைவினையினை இணைத்துக் கூறும் நிலே ஏற்பட்டது.[2]

---

1. Edwin B. Williams, From Latin to Portuguese, p. 7.
   L. R. Palmer, *ibld*. pp. 159–160.
   J. B. Trend, *ibid*. pp. 32–33.
2. Edwin B. Williams, *ibid*. p. 9.

அமர் காதலிக்க
ஹெ உடையேன்
அமரெ ( ← அமர்ஹெ) காதலிப்பேன்

இத்தகைய மாற்றங்கள் பிணைப்பு மொழியாக (synthetic language) இருந்த லத்தீனை ஒரு பிரிப்பு மொழியாக (analytic) மாற்றியது என்று கூறுவர் பலர். பல முன்னுருபுகளும், செயப் பாட்டு வினையின் அமைப்பும் இது போன்ற பல இலக்கணக் கூறுகளும் இத்தன்மையினை நன்கு காட்டும்[1].

ரொமான்ஸ் மொழிகளில் இன்று கிடைக்கும் பழைமை யான எழுத்துச் சான்று கி.பி. 842 இல் எழுதப்பட்ட ஸ்டிராஸ் பர்க் சூளுரையாகும். ஷார்லமன் பேரரசனின் பேரர்க ளிடையே நடந்த உடன்படிக்கையே இது. கி.பி. 842 பெப்பிர வரித் திங்கள் பதினான்காம் நாளன்று சார்லசும் (Charles the Bald) லூயிசும் லோதயருக்கு (Lothair) எதிராக ஒன்று சேர்ந்து இணைந்த போது படைகளும் அரசர்களும் எடுத்துக் கொள்ளுவதற்காக எழுதப்பட்ட ஆணையே இப்பெயரால் அழைக்கப்படுகிறது. காலோ ரொமான்ஸ் மொழியில் எழுதப் பட்டிருக்கும் இவ்வாணை எக் கிளைமொழியில் எழுதப்பட் டுள்ளது எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது என்பர்.

இதனை அடுத்து எழுந்தது பிரஞ்சு நாட்டில் வழக்கிலிருந்த பிக்கார்ட் கிளைமொழியில் எழுதப் பட்டிருக்கும் இருபது வரிகளைக் கொண்ட கவிதை ஒன்றாகும். இதுவும் கி. பி. ஒன் பதாம் நூற்றாண்டைச் சார்ந்ததே. ரொமான்ஸ் மொழிகள் எழுத்துருவில் வருமாறு செய்த பெருமை பொதுவாகக் கிறித்தவ மதக் குருக்களையும் மடங்களையும் அரசவைகளையும் சாரும் என்பர். இம்மொழிகளில் பிரஞ்சு மொழியே முதன்

1. A trait of Vulgar Latin is the tendency toward analytical expression of an idea. An indication of this tendency is the use of prepositions to define the relation of a noun to other members of a sentence.

Spaulding, *ibid.* p. 38.
Elcock, *ibid.* pp. 55–56.

முதல் பலவேறு சின்னஞ் சிறு கவிதைகளை எழுத்துருவில் கண்டது என்றும் ஒரு இலக்கிய பாரம்பரியத்தை உருவாக்கியது என்றும் கருதுகின்றனர் ரொமான்ஸ் மொழியியல் அறிஞர்கள்.

பிராவன்ஸ் பகுதிகளில் கவிதையாக்கம் ஒரு புதிய எழுச்சியுடன் எழுந்தது என்றும் பத்தாம் நூற்றுண்டைச் சார்ந்தனவாகக் கருதப்படும் பல வேறு கவிதைகள் பிராவன்சல் மொழியின்கண் கிடைக்கின்றன என்றும் இந்நூற்றுண்டுக்கு முன்னரே பேச்சு மொழியில் எழும் கவிதைகளின் திறம் பற்றிக் கோயில் பாதிரிகள் நன்கு அறிந்திருந்தனர் என்றும் கூறுவர்.

ஸ்பெயின் நாட்டில் காணக் கிடைக்கும் ரொமான்ஸ் எழுத்துக்கள் பத்தாம் நூற்றுண்டின் நடுப்பகுதியைச் சார்ந்தவை. எனினும் இதற்கு முன்பே பல தோன்றியிருக்கலாம் என்றும், அவை காலவெள்ளத்தால் அழிந்துபட்டன என்றும் கூறுவர். பத்தாம் நூற்றுண்டைச் சார்ந்தனவாக நமக்குக் கிடைப்பன 'Glosas Silenses' என்பதில் இணைந்துகாணப்படும் ஒரு சில ஸ்பானிஷ் வரிகளே.

போர்ச்சுக்கீஸ் காட்டலன் மொழிகளில் 12 ஆம் நூற்றுண்டு முதல் பல உரைநடைகள் காணக் கிடக்கின்றன. போர்ச்சுக்கீசில் சட்டம் பற்றிய நூற்களும் காட்டலனில் சமயம் பற்றிய நூற்களும் உண்டாயின. இது போன்றே இத்தாலியன் மொழியிலும் காணக் கிடக்கும் முதல் எழுத்துருவம் கி. பி. 13ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது என்றும் லத்தீனுடன் ஒன்றிக் காணப்படும் இம்மொழி அதன் பிடியினின்றும் விடுபட்ட நேரத்தில் பிரஞ்சு, பிராவன்சல் மொழிகள் மிக வேகமாக முன்னேறி சிறந்த இலக்கியங்களைத் தோற்றுவிக்கும் நிலையில் இருந்தன என்றும் கூறுவர்.

ரொமான்ஸ் மொழிஇயலின் தந்தையாகக் கருதப்படுபவர் பிரடரிஷ் டயஸ் (Friedrich Diez 1794–1876) என்ற

ஜெர்மானிய அறிஞர் ஆவார்[1]. இவருடைய நூல்களே (Grammatik der romanischen Sprachen 1836-44, worterbuch der romanischen Sprachen, 1853) ரொமான்ஸ் மொழிஇயலின் அடிப்படையான நூற்கள். ராஸ்க் (Rasmus Rask, 1787–1832) கிரிம் (Jacob Grimm, 1785–1863) போன்ஞேர் இந்தோ-ஐரோப்பிய மொழிகட்கு என்ன செய்தார்களோ அதனை இவர் ரொமான்ஸ் மொழிகளில் பயன் படுத்தி இம்மொழிகள் பற்றி ஆராய்ந்தார். பத்தொன்பதாவது நூற்ருண்டில் மொழி இயல் இருந்த நிலையில் பல மொழிகளிலிருந்து ஒழுங்கான ஒலி மாற்றங்களைக் கொண்ட பல சொற்களைத் தருவதுடன் அமைய வேண்டிய நிலைமையே ரொமான்ஸ் மொழியியலிலும் இருந்தது. விதிவிலக்குகளைக் கண்டபோது அவற்றின் காரண காரியங்களைத் தரமுடியாமல் விட்டுவிட வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது எனக் கூறலாம்.

எனினும் ரொமான்ஸ் மொழிஆராய்ச்சி ஆரம்பித்த நாள் முதற் கொண்டே "இம்மொழிகளின் பிறப்புக்குக் காரணமாக இருந்த தாய்மொழி இலக்கிய லத்தீன் அன்று; பேச்சு லத்தீனே" என்பதுதான் மொழியியல் அறிஞர்களின் எண்ணம்.

---

1. Robert A. Hall Jr. Idealism in Romance Linguistics p. 5.

## 1.3.1 ஸ்பானிஷ் (Spanish)

லத்தீனிலிருந்து பிறந்த மொழிகளில் இன்று அதிகமான மக்களால் பேசப்படும் மொழி ஸ்பானிஷ் ஆகும். ஐரோப்பாவில் ஸ்பெயின்[1], அதைச் சார்ந்த கானரி தீவுகள் (Canary islands), பாலரிக் தீவுகள் (23,000,000), அமெரிக்க நாடுகளில் அர்ஜெண்டினு (16,000,000), கொலம்பியா (13,000,000), சிலி (7,000,000), கியூபா (7,000,000), வெனசூலா (7,000,000), பெரு (6,000,000), இக்குவேடர் (4,000,000), டொமினிக்கன் (3,000,000), மெக்சிக்கோ (35,000,000), வட அமெரிக்கா (3,000,000), பொர்ட்டரிக்கோ (2,500,000), உருகுய் (2,500,000) பொலிவியா (2,500,000), கோஸ்டரிக்கோ, பனுமா போன்ற பல நாடுகளிலும் இம்மொழி பேசப்படுதல் காணலாம். இதே போன்று வட ஆப்பிரிக்காவில் மொராக்கோவிலும், பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் ஸ்பானிஷ் வழங்குகிறது. ரொமான்ஸ் மொழிகளில் ஏராளமான மக்களால் பேசப்படும் ஸ்பானிஷ் ஒரு சிறந்த எதிர்காலத்தைக் கொண்டு விளங்குகிறது எனக் கூறலாம்.

ஸ்பெயின் போன்ற இருபது நாடுகளில் இது அரசியல் மொழியாக உள்ளது. மேலும் அமெரிக்காவில் (U.S.A) நியூமெக்சிக்கோ மாநிலத்தில் ஆங்கிலத்துடன் ஆட்சி மொழியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நியூயார்க் போன்ற இடங்களில் இம்மொழி பேசும் மக்கள் ஏராளமாக உள்ளனர்.

இன்று ஸ்பெயின் நாட்டில் வழங்கும் ஸ்பானிஷ் மொழியைக் **காஸ்டிலியன்** என்றும் அழைப்பர். ரோமப் பேரரசின் வீழ்ச்சியின்போது காஸ்டில் என்னும் சிறிய

---

1. இவண் ஸ்பானிஸ் தவிர பிற மொழிகள் சிலவும் வழங்குதல் காணலாம்.

காட்டலன் (Catalan) 5,000,000; போர்ச்சுக்கீஸ் (Portuguese) 2,000,000; பாஸ்க் (Basque) 700,000; ரோமானி (Romany) 200,000.

பகுதியில் வழக்கிலிருந்த லத்தீன் மொழியே இன்றைய ஸ்பானிஸ் மொழியாக வளர்ந்துள்ளது. ஸ்பானிஷ் தவிர இன்றைய ஸ்பெயினில் பாஸ்க், போர்சுக்கீஸ், காட்டலன் (Catalan) போன்ற சில மொழிகளும் வழக்கிலுள்ளன.

ஸ்பெயின் நாட்டை அன்று ஐபீரியா என்றும், அதன் கண் வாழ்ந்து வந்த மக்களை ஐபீரிய மக்கள் என்றும், அவர்கள் பேசிய மொழியை ஐபீரிய மொழி என்றும் அழைத்தனர். ஹெரடோட்டஸ் தம்முடைய நூலில் (History I. 163) ஸ்பானிஷ் நாட்டினை ஐபீரியா என்றே அழைத்துள்ளார். எனினும் இவண் வாழ்ந்த மக்கள் ஆப்பிரிக்காவினின்றும் இவண் வந்து குடியேறினவர்கள் என்றும் இவர்கட்கு முன்பே இவண் வாழ்ந்து வந்த பாஸ்க் மக்களே இந்நாட்டுக் குடியினர் என்றும் கருதுவர் பலர்.

ஸ்பெயின் நாட்டு வரலாற்றினை நோக்கின் பலவேறு அந்நிய நாட்டினரின் படையெடுப்புக்கும் அவர்களுடைய மொழி, கலை, பண்பாட்டிற்கும் உட்பட்டு அவற்றை யெல்லாம் தனதாக்கிக் கொண்டு வளர்ந்து வந்துள்ளது அந்நாடு என்பது நன்கு புலப்படும். முன்னர் குறிப்பிட்டது போன்று வரலாற்றுக் காலத்திற்கு முன்பே வட ஆப்பிரிக்காவினின்றும் இவண் வந்து குடியேறி வாழ்ந்து வந்த ஐபீரிய மக்களின் மொழியினைக் குறிக்கும் சான்றுகளாகச் சில நாணயங்களில் காணும் சொற்களும் கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. எனினும் இன்றைய ஸ்பானிஸ் மொழியில் இம்மொழிச் சொற்களாக எதுவுமில்லை என்றே கூறலாம்.[1]

---

1. The Southern visitors, the people who came over from North Africa. are more interesting. History has called their descendants Iberians; anthropology and linguistics relate them to the Berbers of Morocco.

J. B. Trend, The Language and History of Spain, p. 15.

Iberian place-names, and even some personal names, became known to the Greeks and Romans; and there are not a few words in modern Spanish which have been given an Iberian ancestry, mainly because no adequate derivation can be found for them in Latin, Greek or Arabic.

*ibid.* p. 15.

Words inherited by Spanish from Pre-Roman times are not numerous. Most, if not all of them, like *izquierdo* and *toca*, can be related to modern Basque terms.

Robert K. Spaulding, How Spanish Grew, p. 8.

கி. மு. 1000–ஐ ஒட்டி கெல்ட் மக்கள் ஸ்பெயின் நாட்டில் கிழக்குப் பகுதியில் பைரீன் மலை வழி வந்து குடியேறினர் என்றும், பின்னர் மேற்குப் பகுதியிலும் தென்பகுதியிலும் பரந்து வாழத் தலைப்பட்டனர் என்றும் கூறுவர். சிறந்த போர்வீரர்களாகவும், கன்றுகாலிகளை உடையவர்களாகவும் வாழ்ந்த இம்மக்கள் ஸ்பெயின் நாட்டில் காலிசியா போன்ற இடங்களைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்ததுடன் போர்ச்சுக்கல் நாட்டிலும் குடிபெயர்ந்து வாழ்ந்தனர். பல கெல்ட் சொற்கள் இன்றைய ஸ்பானிஷ் மொழியில் காணப் படினும் இச்சொற்கள் இவர்களிடமிருந்து நேரடியாக ஸ்பானிஷ் மொழியில் வந்தனவா அல்லது இவர்களுடன் முன்பே தொடர்பு கொண்டிருந்த ரோமர்களின் வாயிலாக இதன்கண் வந்து புகுந்தனவா என்றும் தெரியவில்லை என்பர் மொழிநூலறிஞர்கள்[1]. எனினும், சட்டை, வண்டி, குடில், பாதை போன்ற பல பொருள்களைக் குறிக்கும் சொற்கள் இன்றைய ஸ்பானிஷ் மொழியின்கண் உள்ளன.

இவர்களைப் போன்றே பினீசியர்களும், கார்தேஜினியர் களும் ஸ்பெயின் நாடு வந்து தங்கள் வாழ்க்கையினை நடத்தியதாக அறிகிறோம். கி. மு. பதினொன்றாவது நூற் றாண்டில் வாணிபத்தின் பொருட்டுத் தென் கரையோரமாக வந்த பினீசியர்கள் பல வேறு தொழிற்சாலைகளை நிறுவிய தோடு சுரங்கத் தொழில், மீன் பதனிட்டுப் பாதுகாத்தல், உப்பெடுத்தல் போன்ற பல தொழில்களில் ஈடுபட்டு வாழ்ந்

---

1. A number of Celtic words also passed into Spanish, though it is difficult to say of any particular word whether it was there before the Romans, was brought to Spain by Roman legionaries (some of whom came from Britain), or came in later with the Germanic invasions.

J. B. Trend, *ibid*. p. 17.

Robert K. Spaulding, *ibid*. p. 12.

தனர். இவர்களிடமிருந்தே ஐபீரிய மக்கள் எழுத்து முறையைக் கற்றனர் என்பர்.[1]

கார்தேஜியப் பேரரசு விழுந்ததை யொட்டி ஹனிபால் (Hannibal) காலத்தில் நடந்த இரண்டாவது பூனிக் போரினுல் (218 B.C. 206) ரோமப் பேரரசு தன்னுடைய அதிகாரத்தை இவண் நிறுத்தியது. ஸ்பெயின் நாட்டு மக்களிடையே காணப்பட்ட எதிர்ப்பினுல் இவ்வரசு நிலை பெற்று உறுதிபெற இரண்டு நூற்ருண்டுகள் சென்ற போதிலும் பின்னர் பல நூற்ருண்டுகள் (476 A.D. வரை) ரோமர்களின் கலையும் பண்பாடும், குறிப்பாக அவர்களின் மொழியும் செழித்து வளர்ந்தன. இக்காலத்தில் ரோமர்களின் ஆட்சியும் அதிகாரமும் ஸ்பெயினில் மட்டுமன்றி, இத்தாலி, பிரான்சு (கால்), பிரிட்டிஷ் தீவுகள், கிரீஸ், ருமேனியா, ஜெர்மனியின் ஒரு பகுதி, ஆசியா மைனர், வட ஆப்பிரிக்கா போன்ற பல இடங்களிலும் நிலைபெற்றன. பாஸ்க், ஐபீரியன் போன்ற பல சின்னஞ்சிறு மொழிகளைக் கொண்டிருந்த ஸ்பெயின் சிறந்த கட்டுக்கோப்பும், இலக்கியச் சிறப்பும், அரசியல் அதிகாரமும், மதப்பெருமையும் கொண்ட லத்தீன் மொழியையே தன்னுடைய அரசியல் மொழியாகக் கொண்டது. சாதாரண மக்களிடையே பேசிப் பழகிய படிப்பற்ற ரோமப் போர்வீரர்களும், பிற அரசியல் ஏவலாளர் களும் தாங்கள் பேசிவந்த சாதாரணப் பேச்சு லத்தீன் மொழியிலேயே பேசியும் பழகியும் வந்தனர். பலவேறு மொழிகளைக் கொண்டிருந்த ஸ்பெயின் நாட்டில் லத்தீன் பொதுமொழியாகவும் ஒற்றுமைச் சின்னமாகவும் விளங்கத் தலைப்பட்டது.

---

1. To Spain the Phoenicians brought the perfection of certain industries (mining, the salting of fish, the extraction of salt) and probably the art of writing, since most Iberian inscriptions use the Punic Alphabet.

Robert K. Spaulding, *ibid*, p. 14.

இவ்வாறு பிற மொழிகளிடையே லத்தீன் புகுந்தபோது பலவேறு மாற்றங்களைக் கண்டது. ஏற்கனவே இலக்கிய மொழியினின்றும் மாறி மாறி வந்த லத்தீன் மேலும் மேலும் பல மாற்றங்களைக் காண முற்பட்டபோது ஒரு புதுமொழியின் தோற்றத்திற்கு அடிகோலியது.[1]

இந்நிலையில் ரோமப் பேரரசு (476 A.D.) வீழ்ந்தது. பல வேறு கிளைகளாகப் பேச்சு லத்தீன் மாறுபட்டிருந்த நிலையில் இவ்வீழ்ச்சி ஒரு புதுமொழியின் தோற்றத்திற்கு அடிகோலியது. இதுவே ஸ்பானிஷ் மொழியின் தோற்றம்[2]

கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாண்டல் மக்களும் பிறரும் (Vandals, Alani, Suvei) பிரான்சில் பிராங்கு மக்களை வென்று பின்னர் 409-இல் ஸ்பெயின் நாட்டின் கண் புகுந்து ரோமப் பேரரசுக்கு முடிவு கண்டனர். இதன் பின்னர் விசிகோதியர்கள் (Visi Goths) பிரஞ்சு நாட்டிலிருந்து பிராங்கு மக்களால் துரத்தப்பட்டபோது ஸ்பெயினில் புகுந்து (ஐந்தாவது நூற்றுண்டில்) தங்கள் ஆட்சியினை நிலை நிறுத்தினர். ஆனல் இவர்களின் அரசும் அதிக நாள் நீடிக்கவில்லை. கி. பி. எட்டாவது நூற்றுண்டில் ஸ்பெயினின் தென்பகுதி வழியாக வந்த அராபியர்கள் ஸ்பெயின் நாட்டினைத் தங்களின் கீழ்க்கொண்டு வந்தனர். விசிகோதி

1. The Latin which gave to Spanish and other Romance languages was not the written language, it was the Latin of every day speech. The Latin of the schools was invented first by Cicero and then made "more certain" by Julius Caesar.

J. B. Trend, *ibid*, p. 25.

2. The use of the vernacular and it is now time to call it Spanish, continued throughout the Moorish domination. Latin may be said to have become Spanish when the authority of Rome weakened to such a degree that local tendencies of speech went unchecked among the ruling classes. The date may be set at the fifth or sixth century A. D.

Spaulding, *ibid*. p. 68.

யர்களின் ஆட்சியில் வெறுப்புற்றிருந்த மக்கள் அராபியர் களுடன் இரண்டறக் கலந்து பழகினர். பல அராபியர்கள் ஸ்பெயின் நாட்டு மக்களை மணந்து ஒன்றி வாழ்ந்தனர். இதனால் அராபிய மொழியும் ஸ்பெயின் மொழியும் கலந்து உறவாடிய நிலை ஏற்பட்டது. வாணிபம், கலை போன்ற பல துறைகளில் பல வேறு சொற்களும், மரங்கள், செடிகள் கொடிகள், காய்கறி வகைகள் போன்றவற்றைக் குறிக்கும் பல சொற்களும் புகுந்துள்ளன. பல இலக்கியங்கள் அரபிக் எழுத்து முறையில் எழுந்தன. இவற்றை "algamiada" இலக்கியங்கள் என்பர்.[1]

கி. பி. முதல் நூற்றுண்டில் ஜெருசலேம் நாட்டில் யூதர் களின் கோயில்கள் இடிக்கப்பட்ட நாளிலிருந்தே பல யூதர்கள் இவண் வந்து குடியேறியிருந்தனர். 1492–இல் இங்கிருந்து வெளியாக்கப்பட்ட நாள் வரையிலும் இவண் வாழ்ந்து வந்த இம்மக்களும் தங்கள் எழுத்து முறையில் ஸ்பானிஷ், அராபிய இலக்கியங்களை எழுதியுள்ளனர்.

பதினொன்ருவது நூற்றுண்டில் அராபியர்களின் ஆட்சியும் விழுந்தது. ஆப்பிரிக்க நாட்டினின்று பெர்பர் மக்கள் இவண் வந்து உறைந்தனர். இந் நிலையில் பல இடங்களில் சிற்ற ரசர்கள் பலர் தோன்றினர். இவர்களில் காஸ்டிலியன் நாட்டினர் முக்கியமானவர்கள். பர்கோஸ் பகுதிகளில் மட்டும் வழக்கிலிருந்த காஸ்டிலியன் கிளைமொழி இம்மக்களின் ஆட்சி தெற்கே பரவிய போது அவண் பரந்து வளரத் தலைப் பட்டது. காஸ்டிலியன் மன்னர்களான முதல் பெர்டினண்டு,

---

1. The Spanish, the Mozarabs, adopted the word, too, but in a rather different sense; and it eventually came to mean Spanish or Romance, though written in Arabic characters instead of Roman, *aljamia*; and the literature of that kind, which is considerable, is now called *literatura* aljamiada.

J. B. Trend, *ibid.* p. 54.

(Ferdinand I, 1037-1065), அல்பன்சோ (Alphanso VI, 1072-1109) மூன்ருவது பெர்டினண்டு (1217-1252) போன்றவர்கள் இம்மொழி வளரத் துணை நின்றனர். மூன்ருவது பெர்டினண்டு மன்னனே ஸ்பானிஷ் மொழியைத் தன் நாட்டு மொழியாக்கினுன். பின்னர் ஆட்சிக்கு வந்த அல்பன்சோ (Alphanso X, 1252-1284) ஸ்பானிஷ் உரைநடையின் தந்தையாகக் கருதப்படுகிருன். இம்மன்னன் காலத்தில் பல வேறு மொழிபெயர்ப்புகளும் உருவாயின என்பர்.

இம்மொழியின் முதல் எழுத்துச்சான்ருகக் கருதப்படுவது ஒன்பதாம் நூற்ருண்டைச் சார்ந்த ஒரு வழிபாட்டு உரையாகும். இதை எழுதியவன் ஒரு பாஸ்க் மொழியினன் எனக் கருதுகின்றனர் பலர்.

லத்தீனுக்கும் ஸ்பானிஷ் மொழிக்கும் இடையே பல வேற்றுமைகள் உள்ளன. லத்தீன் ஒரு உட்பிணைப்பு மொழியாக இருக்க ஸ்பானிஷ் ஒரு பிரிநிலை மொழியாக (analytic) உள்ளது. லத்தீன் மொழியில் ஆறு வேற்றுமைகள் காணக்கிடக்க ஸ்பானிஸ் மொழியிலோ ஒரே ஒரு வேற்றுமையே உள்ளது. செயப்படுபொருள் தவிர மீதி வேற்றுமைகள் முன்னுருபுகளால் தான் உணர்த்தப்படுகின்றன.

ஹொமினிஸ் மனிதனின் (லத்தீன்)

தெல் ஹொம்ப்ரெ மனிதனின் (ஸ்பானிஷ்)

லத்தீன் எதிர் காலம் காட்டும் முறைக்கும் ஸ்பானிஷ் எதிர்காலம் காட்டும் முறைக்கும் வேற்றுமை உண்டு. ஸ்பானிஷ் 'உடைய' என்னும் வினையினை முக்கிய வினையின் செயவென் எச்சத்துடன் இணைத்துக் காட்டுகிறது.

அமெர் காதலிக்க

ஹெ உடையேன்

அமெரெ (< அமொ-ஹெ) காதலிப்பேன்

இது போன்றே லத்தீன் உயிர்களில் குறில், நெடில் வேற்றுமை இருப்பதும் ஸ்பானிஷில் இவ்வேற்றுமை மறைந்து இருப்பதும் மற்றொரு முக்கிய வேற்றுமையாகும்

லத்தீன் மொழியில் சிறப்புச் சுட்டுக்கள் இல்லையாயினும் ஆங்கிலம், இத்தாலி மொழிகளைப் போன்று இதன் கண் இச் சுட்டுக்கள் உள்ளன. இத்தாலிய சுட்டுக்களைப் போன்றே இச் சுட்டுக்களும் ஆண், பெண் பால்களையும். ஒருமை, பன்மை எண்களையும் காட்டி நிற்கின்றன. இலக்கிய லத்தீனில் இச்சுட்டுக்கள் காணப்பட வில்லையாயினும் நாளாவட்டத்தில் பேச்சு மொழியின்கண் சுட்டுப் பெயர்கள் இப்பொருளில் பயன்பட்டன என்றும் இவற்றினின்றும் உருவாகிய சொற் களே ஸ்பானிஷ் மொழியின் கண் சிறப்புச் சுட்டுக்களாகப் பயன்படுகின்றன என்றும் கூறுவர்[1].

எல் ஒம்ப்ரெ (*el hombre*) the man

ல முஹெய்ர் (*la mujer*) the woman

லொஸ் ஒம்ப்ரெஸ் (*los hombres*) the men

லஸ் முஹெய்ரெஸ் (*las mujeres*) the women

உன் எர்மனெ அண்ணன், தம்பி

உன எர்மன தமக்கை, தங்கை

---

1. It is, perhaps, one of the more archaic features of Latin that it has no definite article, and one of the triumphs of the great Latin writters that they could dispense with it. In conversation, the place of an article may have been filled by pointing and shouting: for an article is a means of referring to one definite person or thing, and not to another. Speakers of Vulgar Latin gradually grew accustomed to using demonstrative pronouns in this way; ILLE and IPSE. The sixth century nun Aetheria, on her wanderings, tends to use IPSE rather than ILLE. In Spain ILLE was more favoured, and gave rise to the *el* of modern Spanish. The feminine is *la* (ILLA), plural (from the accusative plural of the Latin) *los* and *las*.

J. B. Trend, *ibid.* p. 34.

இன்றைய ஸ்பானிஷ் ஆண், பெண் பால் வேற்றுமை யையும் ஒருமை, பன்மை எண் வேற்றுமையையும் கொண்டுள்ளது. ஆனல் இதன் தாயான லத்தீனே ஆண், பெண் பால் வேற்றுமையுடன் அஃறிணைப் பகுப்பினையும் கொண்டிருந்தது. பெயர்ச் சொற்கள் மட்டுமல்லாமல் ஸ்பானிஷ் பெயரடைகளும் இத்தகைய பால், எண் வேற்றுமைகளைக் காட்டுவனவாக உள்ளன [1]. பொதுவாக ஆண்பாற் சொற்கள் -ஒ கொண்டும், பெண்பாற் சொற்கள் -அ கொண்டும் முடிவதுடன் ஆங்கிலத்தைப் போன்று பன்மை உருபாக சகர வொற்று உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாம்.

நெக்ரொ கறுப்பான (ஆண்பால்)
நெக்ர கறுப்பான (பெண்பால்)
நெக்ரொஸ் கறுப்பான (ஆண், பலர்)
நெக்ரஸ் கறுப்பான (பெண், பலர்)

இத்தாலியைப் போலவே இதன் கண்ணும் பல விதமான மூவிடப் பெயர்கள் உள்ளன. பெயர்ச் சொற்களைப் பொறுத்த மட்டில் அஃறிணை அழிந்து விட்ட போதிலும் மூவிடப் பெயர்களில் அஃறிணை ஒருமைப் பெயர் இன்றும் பயன்படுதல் காணலாம். இதே நிலைதான் வேற்றுமைப் பொருளிலும் காணக் கிடக்கிறது. லத்தீனில் காணப்பட்ட வேற்றுமை உருபுகள் இம்மொழியின் கண் அழிந்து விட்ட போதிலும் மூவிடப் பெயர்களில் ஐகார, குகர வேற்றுமைப் பொருள்கள் காட்டும் சொற்கள் வேருக உள்ளன [2].

---

1. Adjectives in Spanish, like articles, vary in form to indicate gender and number, taking those of the nouns to which they relate. This is called agreeing with a noun.

M. Montrose Ramsey, A Spanish Grammar, p. 51.

2. The personal pronouns are the only words in Spanish which retain distinctions of case. In their full inflection they have four cases:—

The nominative, or subjective.
The dative[1], or indirect object.
The accusative[1], or direct object.
The prepositional, i.e. when governed by any prepostion.

*ibid*. p. 85.

| | எழுவாய் | கு | ஐ | முன்னுருபுடன் |
|---|---|---|---|---|
| நான் | யொ | மெ | மெ | மி |
| நீ | து | தெ | தெ | தி |
| அவன் | எல் | லெ | லெ,லொ | எல் |
| அவள் | எல்யா | லெ | ல | எல்ய |
| அது | எல்யொ | — | லொ | எல்யொ |
| நாம் (ஆண்) | நொஸொத்ரொஸ் | நொஸ் | நொஸ் | நொஸொத்ரொஸ் |
| நாம் (பெண்) | நொஸொத்ரஸ் | நொஸ் | நொஸ் | நொஸொத்ரஸ் |
| நீங்கள் (ஆண்) | வொஸொத்ரொஸ் | ஒஸ் | ஒஸ் | வொஸொத்ரொஸ் |
| நீங்கள் (பெண்) | வொஸொத்ரஸ் | ஒஸ் | ஒஸ் | வொஸொத்ரஸ் |
| அவர்கள் (ஆண்) | எல்யொஸ் | லெஸ் | லொஸ் | எல்யொஸ் |
| அவர்கள் (பெண்) | எல்யஸ் | லெஸ் | லஸ் | எல்யஸ் |

சாதாரணமாக வினைகளுடன் மூவிடப் பெயர்கள் எழுவாயாக வருவதில்லை. வாக்கியங்களில் பொதுவாக இவ்வேற்றுமைச் சொற்கள் வினைச் சொல்லின் முன்னலேயே வரும். வினைச் சொற்கள் செயவெனும் எச்சமாகவோ, அன்றி ஏவல் வினையாகவோ, பிற எச்சங்களாகவோ இருப்பின் வினைகளின் பின்னல் வருவது இம் மொழியில் காணக்கிடக்கும் ஒரு பண்பாகும் என்று கூறுவர். லத்தீன் மொழியின்கண் காணப்படும் ஆன், ஒடு, இன் போன்ற வேற்றுமைப் பொருட்கள் இதன்கண் பல்வேறு முன்னுருபுகளால் காட்டப்படுவது லத்தீனினின்றும் இம்மொழி வேறுபட்டிருக்கும் தன்மையைக் காட்டும்[1]. இந்நிலை பேச்சு லத்தீனிலேயே காணப்படுகிறது என்பர்.

---

1. The condition has already been mentioned in which all the case-endings had become the same, and the meaning was conveyed by prepositions. By the fourth and fifth centuries prepositions had practically taken the place of case-endings.
J. B. Trend, *ibid.* p. 34.

| | |
|---|---|
| கொன் | ஒடு |
| தெ | இலிருந்து |
| என் | உள்ளே |
| எந்த்ரெ | இடையே |

கொன் நொஸொத்ரொஸ் = எங்களுடன், நம்முடன்

ஸ்பானிஷ் வினைச் சொற்கள் தன்வினை, பிறவினைச் சொற்களாகப் பகுக்கப்படும். இவை தமிழ் வினைகளைப் போன்றே காலம், எண், இடம் போன்ற இலக்கணக் கூறுகளைக் காட்டும்.

| | |
|---|---|
| அமொ (*am-o*) | காதலிக்கிறேன் |
| அமஸ் (*am-as*) | காதலிக்கிருய் |
| அம (*am-a*) | காதலிக்கிருன் |
| அமாமொஸ் (*am-amos*) | காதலிக்கிரேம் |
| அமாய்ஸ் (*am-áis*) | காதலிக்கிறீர்கள் |
| அமன் (*am-an*) | காதலிக்கிருர்கள் |
| அமப (*am-ab-a*) | காதலித்தேன் |
| அமரெ (*amar-é*) | காதலிப்பேன் |
| அமராஸ் (*amar-ás*) | காதலிப்பாய் |

ஆங்கில மொழியைப் போலவே ஸ்பானிஷ் செயப்பாட்டு வினைகளும் துணைவினையினுல் காட்டப்படுகின்றன. இது லத்தீனிலிருந்தும் மாறுபட்ட மற்ருெரு பண்பாகும்[1]. கடந்த கால வினையெச்சத்துடன் (செய்து) 'இரு' என்ற வினையினை இணைத்துக் காட்டுகின்றனர் இம்மொழியினர். தமிழைப் போன்றே இன்றைய பேச்சு மொழியில் இவ்வினை அதிகமாகப் பயன்படுவதில்லை என்பர்[2].

---

1. The Latin passive is replaced by a periphrastic passive, formed by auxiliary *ser* or *estar* and the past participle of the verb used.

A. Hjalmar Edgren, A Brief Spanish Grammar, p. 28.

2. In modern Spanish the formal passive is but little used, as it is considered too lengthy and roundabout; its place is usually taken by the much overworked reflexive form of the verb.

(This however occurs only in the third person,)

Ramsey, *ibid*, p. 345.

## 1.3.2 போர்ச்சுக்கீஸ் (Portuguese)

இன்று இம்மொழி பேசுவோராக 85,000,000 மக்கள் உள்ளனர். இவர்களுள் 72,000,000 பேர், தென் அமெரிக்காவில் பிரேசில் நாட்டிலும், 9,000,000 மக்கள் போர்ச்சுக்கல் நாட்டிலும் அதைச் சார்ந்த தீவுகளிலும் (Maderia Azores) வாழுகின்றனர். மேலும் அங்கோலா, மொசாம்பிக், கினி போன்ற நாடுகளில் வாழும் மக்கள்சிலரும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வாழும் சுமார் 200,000 மக்களும் இம்மொழி பேசுகின்றனர்.

பிற ரொமான்ஸ் மொழிகளைப் போலவே இதுவும் பேச்சு லத்தீன் மொழியிலிருந்து பிறந்ததே. ஐபீரியப் பகுதிகளில் ரோமப் பேரரசின் பிடி தளர்ந்த நிலையில் ஜெர்மானியர்களும் பின்னர் அராபியர்களும் தங்கள் ஆட்சியை நிலை நிறுத்திய போது பேச்சு லத்தீன் பல்வேறு கிளை மொழிகளாகப் பிரிந்து நின்றது. ஐபீரியாவின் பிற பகுதிகளில் ஜெர்மானியர்களின் செல்வாக்கு மிகுந்திருந்த போதிலும், காலீசியப் பகுதிகளில் குறைவாகவே இருந்தது என்பர். விசி கோதியர்கள் இவண் உறைந்திருந்த போதிலும் இவர்களின் சொற்களாகச் சுமார் இருபது சொற்களே இன்றைய போச்சுக்கீஸ் மொழியில் உள்ளனவாம். காலீசியாவிலும், போர்ச்சுக்கல்லின் தென் பகுதிகளிலும் காணப்படும் பல ஜெர்மானிய இடப்பெயர்கள் கி.பி. எழுநூற்றுக்குப் பின்னர் புகுந்த சொற்களே. இது போன்றே ஒரு சில கெல்டிக் சொற்களும் சமய ஒற்றுமையின் காரணமாகப் பல கிரேக்கச் சொற்களும் இதன்கண் உள்ளன.[1]

---

1. The Portuguese language[1] was evolved principally from the popular Latin spoken in the Portuguese part of the Spanish peninsula after the Roman conquest in the second century before Christ. Only a few words of the former Celtic dialects spoken there were preserved in the later Portuguese. The subsequent Gothic invasion also introduced a few words of Germanic origin, while the religious life of the people led to the introduction of certain words of Greek origin.

John C. Branner, A, Brief Grammar of the Portuguese Language, p. 1.

ஜெர்மானியர்களின் செல்வாக்குக் குறைவைப் போர்ச்சுக்கீஸ் மொழியின் தோற்றத்திற்குரிய காரணங்களில் ஒன்ருகக் கருதுவாரும் உளர்.[1]

கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டில் (1143) அபன்சோ ஹென்றிக்ஸ் (Afanso Henrigues, 1106–85) என்பான், காஸ்டில் லியோன் மன்னனுன அல்பன்சோவை (Alfanso VII) வென்று தன் அரசினைத் தகூஸ் (Tagus) பள்ளத்தாக்கில் நிறுவினுன். பின்னர் 1147இல் அராபியர்களை வென்று லிஸ்பனைக் கைப்பற்றிப் போர்ச்சுக்கல் அரசுக்கு வழி வகுத்தான். பத்தாவது நூற்ருண்டு முதலே பிரஞ்சு மொழியின் செல்வாக்கு பரந்து காணப்பட்ட இப்பகுதியில் போர்ச்சுக்கீஸ் மொழியாக வளர ஆரம்பித்தது பேச்சு லத்தீன். போர்ச்சுக்கீஸின் முதல் எழுத்துச் சான்று கி.பி. 12ஆம் நூற்ருண்டைச் சார்ந்ததாகும்.

காலீசியப் பகுதிகளில் ஆரம்பித்த இம்மொழி படிப்படியாகத் தெற்கே பரவி 13ஆம் நூற்ருண்டில் இன்றைய போர்ச்சுக்கல் முழுவதும் பேசும் மொழியாக மாறியது. காலீசியா பின்னர் பிரிந்து ஸ்பெயின் நாட்டின் பகுதியாக இன்று காணப்படினும் இவண் பேசப்படும் மொழி போர்ச்சுக்கீஸியக் கூறுகளை அதிகமாகக் கொண்டே காணப்படுகின்றது என்பர்.

12ஆவது நூற்ருண்டிலிருந்து இம்மொழி தொடர்ந்து வளர்ந்தது. 15ஆவது நூற்ருண்டில் ஸ்பானிஷ் கவிஞர்களைப் பின்பற்றிப் போர்ச்சுக்கீஸியக் கவிஞர்களும் பல கவிதைகளை இயற்றினர். பலர், தங்கள் கவிதைகளை ஸ்பானிஷ் மொழியிலேயே யாத்திருத்தல் காணலாம். இந்நிலை பதினுருவது நூற்ருண்டு வரையிலும் தொடர்ந்தது. பிரஞ்சு நாட்டில் லத்தீனுக்கு ஏற்பட்ட எதிர்ப்பினைப் போன்றே இந்நாட்டில் ஸ்பானிஷ் மொழிக்கும் பலத்த எதிர்ப்பு எழுந்தது. பல கவிஞர்களும் இலக்கண ஆசிரியர்களும் எதிர்த்ததன் விளைவாக ஸ்பானிஷ் மொழிக்கும் இம் மொழிக்குமிடையே

1. Edwin B. Williams, From Latin to Portuguese, p. 17

உள்ள தொடர்பு குறைந்து வேற்றுமை அதிகரித்தது. இந்நிலையில் மேற்கு ரொமான்ஸ் மொழிகளில் போர்ச்சுக்கீஸ், லத்தீன் மொழியுடன் நெருங்கிய தொடர்புடன் விளங்குகிறது என்றும்,அதனால் பிறமொழிகளைவிட இதுவே சிறந்தது என்றும் ஒரு எண்ணம் உண்டாகியது. இவையெல்லாம் ஸ்பானிஷின் செல்வாக்கினைமட்டுப்படுத்தும் முறையில் உண்டானவையே.

இதே போன்று இதன்கண் பிரஞ்சு மொழியின் செல்வாக்கும் அதிகமாக இருத்தல் காணலாம். ஆரம்பக் காலம் முதலே மிகச் செல்வாக்குடன் விளங்கிய ரொமான்ஸ் மொழி பிரஞ்சு ஆகும். பிரஞ்சு மக்களின் பழக்கவழக்கங்களும் வாணிபப் பொருள்களும் கலைப் பண்புகளும் கி. பி. பத்தாம் நூற்றுண்டு முதல் போர்ச்சுக்கல் நாட்டில் நுழைய ஆரம்பித்தன. அபன்சோ, காஸ்டில் அரசனை அல்பன்சோவுடன் போரிட்டு வென்றபோது பல பிரஞ்சு பாதிரிகளும் போர் வீரர்களும் போர்ச்சுக்கல் நாடு வந்து குடியேறினர். மேலும் 17ஆவது நூற்றுண்டில் போர்ச்சுக்கலும் பிரான்சும் ஸ்பெயின் நாட்டிற்கெதிராக இணைந்து போரிட்டதால் பிரஞ்சுப் போர்வீரர்களும், அரசியல் வாதிகளும் இந்நாட்டில் தங்கவேண்டியிருந்தது. இத்தகைய பல்வேறு காரணங்களால் பிரஞ்சு மொழியின் செல்வாக்கு போர்ச்சுக்கீஸ் மொழியின்கண் வளந்தது. எனினும் போர்ச்சுக்கீஸிய அறிஞர்கள் பலர் இதை விரும்பினுர்களில்லை. இவர்களின் எதிர்ப்பினுல் இம்மொழியின் தூய்மை நிலை ஓரளவுக்குப் பாதுகாக்கப்பட்டாலும் பிரஞ்சு மொழியின் செல்வாக்கினுல் ஸ்பானிஷ்-போர்ச்சுக்கீஸ் மொழிகளிடையே உள்ள வேற்றுமை வளர்வதாயிற்று[1].

---

1. The influence of French in words and expressions has continued until it has become a cause of alarm, and many modern Ferreiras have risen to defend the purity and integrity of their mother tongue. But this influence has been an important force in accentuating the difference between Portuguese and Spanish.

Edwin B. Williams, *ibid.* p. 17.

தென் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டபோது பிரேசில் நாட்டின் கண்ணும் இம்மொழி புகுந்து வளர்ந்தது.[1] இதே போன்று சில ஆப்பிரிக்க நாடுகளிலும் இம் மொழி வழங்குதல் காணலாம்.

பிற ரொமான்ஸ் மொழிகளில் காணப்படும் சிறப்புச் சுட்டுக்களைப் போன்றே போர்ச்சுக்கீஸ் மொழியிலுள்ள சிறப்புச் சுட்டுக்களும், ஆண், பெண் பால்களையும் ஒருமை பன்மை எண்களையும் காட்டுகின்றன. சொற்கள் ஆண் பாலாயின் 'o' ஓ என்ற சுட்டையும், பெண் பாலாயின் 'அ' (*a*) சுட்டையும், ஆண்பால் பன்மையாயின் 'ஓஸ்' (*os*) சுட்டையும், பெண்பால் பன்மையாயின் '*as*' சுட்டையும் ஏற்கின்றன. இதே போன்று பொதுச் சுட்டுக்களிலும் பால், எண் வேற்றுமைகள் உள்ளன.

| | |
|---|---|
| ஓ மெனினு | the boy |
| அ மெனின | the girl |
| உம் அமிகோ | (ஒரு) நண்பன் |
| உம் பில்ய (*uma filha*) | மகள் |

போர்ச்சுக்கீஸ் பெயர்ச் சொற்கள் பிற ரொமான்ஸ் மொழிப் பெயர்ச் சொற்களைப் போலவே, ஆண், பெண் பால் வேற்றுமையினையும், ஒருமை, பன்மை எண்களையும் காட்டு கின்றன. மூவிடப் பெயர்களைத் தவிர பிற பெயர்களில் வேற்றுமை இல்லை.[2] வேற்றுமைப் பொருள்கள் முன்னுருபு களால்தான் உணர்த்தப்படுகின்றன. மேலும் இச்சொற்கள்

---

1. பிரேசில் நாட்டில் போர்ச்சுக்கீஸ் தவிர பிற மொழிகள் பலவும் வழங்குதல் காணலாம்.

ஜெர்மன், 700,000; இத்தாலியன், 500,000; குவாரனி (Guarani), 300,000; குவச்சா (Guechua) 300,000; ஜப்பானிய மொழி 200,000; காரிப் (Garib), 100,000.

2. Portuguese nouns have no case forms, they distinguish in form only betweem singular and plural.

John C. Branner, *ibid.* p. 26.

ஸ்பானிஷ், இத்தாலியச் சொற்களைப் போன்று, சிறு பொருள், பெரும் பொருள்காட்டும் ஒட்டுக்களை ஏற்று, சிறுமை, பெருமை பண்புகளை உணர்த்துதல் காணலாம். பெரும் பொருள் காட்டும் ஒட்டுக்களாக ஏழு ஒட்டுக்களும், சிறு பொருள் காட்டுவனவாகப் பதினான்கு ஒட்டுக்களும் உள்ளன என்பர் இலக்கண ஆசிரியர்கள். ஸகரவொற்று (*s*) பன்மையைக் காட்டுமாயினும் இதனை ஏற்கும்போது இம் மொழிச் சொற்கள் பல வேறு மாற்றங்களை அடைகின்றன.

| | |
|---|---|
| அமிகொ (*amigo*) | நண்பன் |
| அமிகொஸ் | நண்பர்கள் |
| சல் | உப்பு |
| சயெஸ் | உப்புக்கள் |

முன்னர்க் குறிப்பிட்டது போன்று, இம் மொழிப் பெயர்களும் பிற ரொமான்ஸ் மொழிப் பெயர்களைப் போலவே வேற்றுமைப் பொருள் காட்டுவதில்லை. ஆனால் மூவிடப் பெயர்களில் லத்தீனில் காணப்பட்ட சில வேற்றுமைகள் இன்னும் காணப்படுகின்றன என்பர்[1]. இந்நிலை ஸ்பானிஷ் போன்ற மொழிகளிலும் உள்ளது. எல்லா மொழிகளையும் போன்று, இதன் கண்ணும் தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்கள் காணப்படினும் நண்பர்கள், உறவினர்கள், குழந்தைகள் போன்ற ஒரு சிலருடன் பேசும்போது மட்டுமே முன்னிலை இடப்பெயர்களைப் பயன்படுத்துகின்றனர் இம் மொழியினர். பிற இடங்களில் எல்லாம் படர்க்கைப் பெயர்களோ அன்றி '*senhor*' (Mr.) '*senhora*' (Madam) போன்ற சொற்களோதான் பயன்படுத்தப்படுகின்றன[2].

---

1. Edwin B. Williams, *ibid.* p. 141.

2. In address, the third person is commonly used except to close friends, relatives, children, and domestics when *tu* may be employed. Persons may be addressed, according to circumstances, as Vossa Excellencia, Your Excellency, Vossa Senhoria; Your lordship, Vossa merce, Your mercy, Your grace, Voce, a common abbreviation of Vossa merce, but one to be used only in case of extreme familiarity, or as Senhor, Mr., and Senhora, madam, or Mrs.

Brenner, *ibid.* p. 57.

மூவிடப் பெயர்கள், எழுவாயாக வருவன, முன்னுருபின்றி வருவன, செயப்படுபொருளாகவோ, அல்லது 'கு' வேற்றுமையாகவோ வரும் போது முன்னுருபுடன் வருவன, என மூன்று வகைப்படும்.

| | எழுவாய் | முன்னுருபின்றி | முன்னுருபுடன் |
|---|---|---|---|
| நான் | எயு (*eu*) | me மெ (*me*) | மிம் (*mim*)<br>மிகோ (*migo*) |
| நாம்/<br>நாங்கள் | நொஷ் (*nos*) | us நொஷ் (*nos*) | நொஷ் (*nOs*)<br>நொஷ்கொ *nosgo* |
| நீ | து | thee தெ (*te*) | தி (*ti*)<br>திகொ (*tigo*) |
| நீங்கள் | வொஷ்(*vOs*) | ye வொஷ் (*vOs*) | வொஷ் (*vOs*)<br>வொஷ்கொ *vosgo* |
| அவன்/<br>அவள்/<br>அது | எல்லெ(*elle*)<br>எல்ல (*ella*) | him<br>her<br>it — *o,a,lo,*<br>*la, lhe*<br>*(/lle/)* | எல்லெ (*elle*)<br>எல்ல (*ella*) |
| அவர்கள்<br>அவைகள் | எல்லெஷ்<br>எல்லஷ் | *them* — *os,as,los*<br>*las,lhes* | எல்லெஷ் (*elles*)<br>எல்லஷ் (*ellas*) |

இவற்றுள் *lhe, lhes* (அவனுக்கு, அவளுக்கு, அதற்கு, அவர்கட்கு) என்பன எப்போதும் 'கு' வேற்றுமைப் பொருளிலும் *o, a, lo, la, os, as, las, los* என்பன 'கு' அல்லது 'ஐ' வேற்றுமைப் பொருளிலும் வருவனவாம். பிற ரொமான்ஸ் மொழிகளில் காணப்படுவது போலவே இதன் கண்ணும் உடைமைப்பொருள் காட்டும் மூவிடப்பெயர்களும் உள்ளன. தன்மையிலும் முன்னிலையிலும் கூட ஆண், பெண் பால்களை இவை காட்டுகின்றன.

பழந்தமிழ்ச் சுட்டுப் பெயர்களைப் போன்று இம்மொழிச் சுட்டுக்களும், அண்மை, சேய்மை, இடைநிலைப்பொருள்களைச் சுட்டுவனவாக அமைந்துள்ளன. மேலும், இவை ஆங்கிலச் சுட்டுக்களைப் போன்று பெயராகவும், பெயரடைகளாகவும் வருதல் காணலாம். பெயரடைகள் தமிழைப் போலல்லாமல்

ஆண், பெண் பால்களையும் ஒருமை, பன்மை எண்களையும் கொண்டுள்ளன[1]. பெயராக வரும்போது, முன்னர் குறிப் பிட்ட செய்திகளைக் குறிக்கும் சுட்டுப் பெயர் (*isso, isto, aqillo*) அஃறிணையாகப் பயன்படுகிறது. பிற இடங்களில் எல்லாம் ஆண், பெண் பால் வேற்றுமையே உள்ளது.

| | | |
|---|---|---|
| எஸ்தெ | (*este*) | இவன், இந்த |
| எஸ்த | (*esta*) | இவள், இந்த |
| எஸ்தெஷ் | (*estes*) | இவர்கள் (ஆண்), இந்த |
| எஸ்ஸெ | (*esse*) | உவன், உந்த |
| எஸ்ஸ | (*essa*) | உவள், உந்த |
| எஸ்ஸெஷ் | (*esses*) | உவர்கள், உந்த (ஆண்) |
| எஸ்ஸஷ் | (*essas*) | உவர்கள், உந்த (பெண்) |
| அக்கெல்லெ | (*aquelle*) | அவன், அந்த |
| அக்கெல்ல | (aquella) | அவள், அந்த |
| அக்கெல்லெஷ் | (aquelles) | அவர்கள், அந்த (ஆண்) |
| அக்கெல்லஷ் | (aquellas) | அவர்கள், அந்த (பெண்) |

இதன்கண் பெயரடைகளும், பால், எண் வேற்றுமை களைக் கொண்டு, முன்னால் வருகின்ற பெயர்கட் கேற்ப மாறி வருகின்றன. பெயர்கள் ஆண் பாலாயின், பெயரடைகள் ஆண்பால் ஒட்டினை ஏற்றும், பெண்பால் ஆயின் பெண்பால் ஒட்டினை ஏற்றும், ஒருமை, பன்மையாயின் அவற்றிற்கேற்ப எண் காட்டும் ஒட்டுக்களை ஏற்றும் வருதல் காணலாம். பொது வாகப் பெயரடைகள் பெயர்களின் பின்னால் வரினும் சில இடங்களில் முன்னால் வந்து வேறு பொருள் தருதல் உண்டு என்பர். 'பொப்ரெ ஹொமெம்' என்ற தொடர் 'இரங்குதற்குரி யவன்' என்ற பொருளையும் 'ஹொமெம் பொப்ரெ' என மாற் றும் போது 'ஏழை மனிதன்' என்ற பொருளையும் தருதல் காண லாம். இது போன்று, பல பெயரடைகள் இம்மொழியின்கண்

---

1. The demonstrative pronouns may be used either with or without their nouns. When used with them they precede the nouns, agreeing with them in gender and number. *ibid.* p. 63.

உள்ளன. பெயர்களைப் போன்றே, பெயரடைகளும், ஸகர வொற்றினை ஏற்றுப் பன்மை காட்டுவதும், ஒரு தொடரில் பல பெயர்கள் இருப்பின், பெயரடைகள் இறுதிப் பெயருக்கேற்ப பால், எண் காட்டுவதும், பெயர்கள் பல எண்களில் இருக்கும் போது, பொதுவாகப் பெயரடைகள் பன்மையில் அமைவதும் குறிப்பிடத்தக்கன.[1]

| | | |
|---|---|---|
| பொனிதெ | (*bonita*) | அழகான (ஆண்) |
| பொனித | (*bonito*) | அழகான (பெண்பால்) |
| பொனிதெஸ் | | அழகான (ஆண்பால், பன்மை) |
| பொனிதஸ் | | அழகான (பெண்பால், ப்ன்மை) |
| *mulher sensata* | | அறிவுள்ள பெண் |
| *homens velhos* | | வயதான மனிதர்கள் |

போர்ச்சுக்கீஸ் வினைச் சொற்கள் எண், பால், இடம், காலம் போன்ற பல இலக்கணக் கூறுகளைப் பல விகுதிகளாலும் இடை நிலைகளாலும் காட்டுகின்றன. தன்மை யொருமை, தன்மைப்பன்மை, முன்னிலையொருமை, முன்னிலைப்பன்மை, படர்க்கை ஆண்பால், பெண்பால் ஒருமை, பன்மைகளையும், நிகழ்வு, எதிர்வு, இறப்பு, இறப்பில் இறப்பு, இறப்பில் எதிர்வு போன்ற பல காலங்களையும், செயவென் எச்சம், செயின் எச்சம் போன்ற பிற பல இலக்கணக் கூறுகளையும் காட்டுகின்றன. லத்தீன் மொழியில் நான்குவகையான வினைமாற்றங்கள் (conjugation) இருக்க, போர்ச்சுக்கீஸில் மூன்றுவகையே

---

1. The adjectives have gender, number, and degree of comparison.

*ibid*. p. 43.

When there is more than one noun, the adjective usually agrees with the last one: desejos e virtudes puras, pure aims and (pure) virtues.

When the nouns have different numbers the adjective is generally plural: os soldasdos e o seu chefe cheios de coragem, the soldiers and their leader, full of courage.

*ibid*. p. 43.

உள்ளனவென்றும், லத்தீனில் இரண்டாவது, மூன்ருவது வினை மாற்றங்கள் இம்மொழியின்கண் ஒன்ருக இணைந்து ஒரு புதிய வினைமாற்றத்தைத் தந்துள்ளன என்றும் கூறுவர்[1]

| | |
|---|---|
| *fal–o* | பேசுகிறேன் |
| *fal–as* | பேசுகிருய் |
| *fal–a* | பேசுகிருன், பேசுகிருள், பேசுகிறது |
| *fala–mos* | பேசுகிரும் |
| *fal–ees* | பேசுகிறீர்கள் |
| *fal–am* | பேசுகிரும் |
| *fal–av–a* | பேசினேன் |
| *fal–av–as* | பேசினுய் |
| *fal–av–amos* | பேசினேம் |
| *fal–re–i* | பேசுவேன் |
| *fal–r–ás* | பேசுவாய் |
| *and–ar* | நடக்க |
| *receb–er* | ஏற்றுக்கொள்ள |
| *pun–ir* | தண்டிக்க |

1. Of the four conjugations of classical Latin, only three remain in Portuguese, because the second and third fused into a single new conjugation.

Williams, *ibid* p. *159*.

The verbs have three conjugations which are distinguished by the endings of the infinitives.

Branner, *ibid.* p. 69.

### 1.3.3 போர்ச்சுக்கீஸ் கிரியோல் (Portuguese Creole)

ஆப்பிரிக்க நாட்டில் போர்ச்சுக்கல் ஆதிக்கத்திலுள்ள கினியா (Guinea)[1] பகுதிகளிலும், வெர்த் தீவுகளிலும் (Cape Verde Islands) வாழும் 200,000 மக்களால் பேசப்படுவது.[2] போர்ச்சுக்கீஸ் மொழியின் தனித் தன்மையை இதன் கண் காண முடிவதில்லை.

ஒருவர் பேசும் மொழி மற்ருெருவருக்குத் தெரியாத நிலையில் ஒருவர் தன்னுடைய மொழியை 'மிக எளிதாகப் பேசுகிறேம்' என்ற எண்ணத்தில் முழு வாக்கியங்களில் பேசாமல் சொற்களை அங்கங்கே இணைத்துப் பேச மற்றவரும் அதைப் புரிந்துகொள்ள முயற்சித்து அதையே திரும்பவும் பேசுகின்ற நிலையில் சில செயற்கை மொழிகள் உலகின்கண் தோன்றியுள்ளன. ஆங்கிலேய வணிகர்களும் சீன வணிகர்களும் தொடர்பு கொண்டபோது இவ்வாறு தோன்றிய மொழியே சீன பிட்ஜின் ஆங்கிலம் (Chinese Pidgin English). இத்தகைய பிட்ஜின் மொழிகள் வயதான மக்களால் பேசப்படுவதால் இயற்கையான மொழிகளில் காணப்படும் குழந்தைச் சொற்களைக் காணமுடிவதில்லை. ஆனல் இத்தகைய மொழிகள் சில இடங்களில் நிலைக்கும்போது அவண் வளரும் பிற மொழிகளைப் பேசும் குழந்தைகள் பிட்ஜின் மொழியைப் பொது மொழியாகக் கொள்ளும்போது அது தனி ஒரு இயற்கை மொழியாக வளரத் தலைப்படுகிறது. இந்நிலையில் இவற்றைக் கிரியோல் (Creole) என்றழைப்பார்.[3] போர்ச்சுக்கீஸ் கிரியோல் இவ்வாறு தோன்றிய மொழியே.

---

1. இவண் போர்ச்சுக்கீஸ் கிரியோல் தவிர பிறமொழிகளும் வழங்குதல் காணலாம்.

   பூலா (Fula), 300,000; போர்க்சுக்கிஸ், 10,000.

2. வெர்த் தீவுகளில் 10,000 மக்கள் போர்ச்சுக்கீஸ் மொழி பேசுவோராகவும் உள்ளனர்.

3. Charles F. Hockett, A Gourse in Modern Linguistics, p. 423.

## 1.3.4 காட்டலன் (Catalan)

ஸ்பெயின் நாட்டிலுள்ள காட்டலோனியா (Catalonia), வாலன்சியா (Valencia) போன்ற இடங்களில் வாழும் 4,800,000 மக்களும் பிரஞ்சு நாட்டைச் சார்ந்த ரோசிலோன் (Roussillon) பகுதியில் வாழும் 200,000 மக்களும் இம்மொழி பேசுகின்றனர். ஸ்பெயின் நாட்டில் வாழும் காட்டலீனிய மக்களால் ஸ்பானிஷ் மொழியை நன்குப் புரிந்து கொள்ள முடியும் என்பர். 10,000 மக்கள் வாழும் அண்டோரா (Andorra) குடியரசின் அரசியல்மொழி இது. ஸ்பானிஷ் மொழிச் சொற்களை இதன்கண் ஏராளமாகக் காணலாம்.

ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் காட்டலோனியாவை அடுத்த பகுதிகளில் வழங்கிய பேச்சு லத்தீனிலிருந்து பிறந்த இம்மொழி, 15ஆவது நூற்றுண்டு வரையிலும் மிக முக்கியமான மொழிகளில் ஒன்ருகத் திகழ்ந்தது. ஆரகான் அரசின் (Aragon) பதிவு மன்ற (Chancery) மொழியாக விளங்கியது. இது இடைக்காலத்தில் மெடிட்டிரேனியன் பகுதிகள் வரையிலும் பரந்து நின்றது. 15ஆம் நூற்றுண்டில் ஆரகான் அரசும் காஸ்டீலியன் அரசும் ஒன்ருக இணைந்தபோது ஸ்பானிஷ் மொழியின் வளர்ச்சியில் தன் முக்கியத்துவத்தை இழந்து சாதாரண ஒரு பேச்சு மொழியாக மாறியது.

இன்றைய காட்டலோனியாவின் தோற்றத்தின் வரலாற்றை ஷார்லமென் (Charlemagne, 742-814) காலம் முதலே காணலாம். முஸ்லீம் தாக்குதலைத் தடுக்கும் முகத்தான் சிற்றரசர்கள் பலர் கூடி இணைந்து நின்று போரிட்டதைப் பற்றிக் கூறும் இத்தாலிய ஆசிரியர் ஒருவரின் (Lorenzo Vernes) லத்தீன் பாடல் ஒன்றில்தான் காட்டலன் என்றசொல் முதன் முதலாகக் காணப்படுகின்றது என்பர்.

இம் மொழியின் முதல் எழுத்துச்சான்று ஆர்கானியாவில் கண்டெடுக்கப்பட்ட ஆறு துதிப்பாடல்களே (Sermons). இது

கி. பி. 12ஆம் நூற்ருண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என எண்ணுகின்றனர். காட்டலோனியாவின் தலைநகரான பார்சிலோனுவிலுள்ள (Barcelona) நூலகத்தின் கண் இன்றும் உள்ளன இப்பாடல்கள்.

10,11, 12ஆம் நூற்ருண்டுகளில் பெரும் பேச்சு மொழியாக விளங்கிய இம் மொழி இந் நாட்டு மன்னனுன முதல் ஜேம்ஸ் (James the first) காலத்தில் பதிவுமன்ற (chancery) மொழியாக மாறினது. இது மட்டுமன்றி இம் மொழியின்கண் காணப்படும் முதல் நான்கு 'கிரானிக்கிள்'களும் (chronicle) தோன்றுவதற்கு இவனே காரணம் என்பர். இதுவே காட்டலன் மொழியில் ஏராளமான இலக்கியங்களைத் தோற்றுவித்த லுல் (Ramón Llull, 1233?–1315) என்பவரை ஊக்குவித்தது. இவர் எழுதிய நூற்களே ரொமான்ஸ் மொழிகளில் உள்ள முதல் இலக்கியங்கள் என்பர். இது போன்றே இவருக்குப் பின்னர் வந்த பல ஆசிரியர்களும் சிறந்த இலக்கியங்கள் பலவற்றை எழுதினர்.

பதினைந்தாம் நூற்ருண்டு இம் மொழியின் ஒரு பொற் காலம். பல இலக்கியங்கள் எழுந்தன. ஆனல் இந்நூற்ருண்டில் இவண் அரசு புரிந்த பெர்னுண்டோ (Fernando de Antequera) ஒரு காஸ்டிலியன். இதனல் காட்டலன் மொழி புறக்கணிக்கப்பட்டது. 1479 ல் காஸ்டிலியன் அரசி இசபெல்லாவின் மணமும் இம்மொழியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. இதனல் மக்களும் ஸ்பானிஷ் மொழியை ஆதரிக்கத் தலைப்பட்டனர். எவ்வித ஆதரவும் எழுச்சியும் இல்லாது இருந்த நிலையில் மறுமலர்ச்சி இயக்கமும் இம் மொழியின் வளர்ச்சிக்குத் துணைபுரிய முடியவில்லை[1].

அரசியல் நிலையில் வீழ்ச்சியுற்று, வளர்ச்சி குன்றிய போதிலும் இன்றும் பேச்சு மொழியாக இது வழங்கி வருதல் காணலாம். இன்று இதன்கண் இரு கிளைமொழிகள் உள்ளன என்பர்.

1814-ல் பேலட் (Pan Ballot) என்பவரால் எழுதப்பட்ட இலக்கணம் ஒன்று இம் மொழியின் வரலாறு, அமைப்பு போன்றவற்றை மிக விளக்கமாகக் கூறுதல் காணலாம்.

1. W. J. Entwistle, The Spanish Language, p. 103

### 1.3.5 பிரஞ்சு (French)

ஐரோப்பிய மொழிகளில் பிரஞ்சு, ஆங்கிலத்துக்கு அடுத்த படியாக முக்கியத்துவம் வாய்ந்த மொழியாகும். இது போன்றே ஐரோப்பிய மொழிகளில் ஆங்கிலத்திற்கு அடுத்துப் பிற நாட்டினர் அதிகமாகப் பயிலும் மொழியாகக் கருதப் படுவதும் பிரஞ்சு. முன்னால் லத்தீன், கிரேக்க மொழிகள் உலக மொழிகளாகக் கருதப்பட்டமை போன்று 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும் நடு-கிழக்காசிய நாடு களிலும் பிரஞ்சு மொழி கருதப்பட்டு வந்தமை காணலாம். ஐக்கிய நாடுகள் அவையின் ஐந்து மொழிகளில் இதுவும் ஒன்றாகும்.

இம்மொழி பேசுவோராக 65,000,000 மக்கள் உள்ளனர். இவர்களில் 44,000,000 மக்கள் பிரான்சிலும்[1], 4,000,000 பேர் பெல்ஜியத்திலும், 1,330,000 பேர் மேற்கு சுவிச்சர்லாந்திலும், 300,000 இத்தாலியிலும், 100,000 பிரிட்டிஷ் சானல் தீவு களிலும், 20,000 பேர் மொனக்காவிலும் வாழுகின்றனர். மேலும் அல்ஜீரியா (1,000,000), பிரஞ்சு சோமாலிலாந்து போன்ற ஆப்பிரிக்க நாடுகளிலும் இம்மொழி பேசப்படுகிறது. கானடாவில் வாழும் மக்களில் இருபத்தெட்டு விழுக்காடு பிரஞ்சுமொழியினர். பிரஞ்சு, பிரான்சில் மட்டுமன்றி ஹெயிட்டி போன்ற பல நாடுகளிலும் அரசியல் மொழியாக உள்ளது[2].

---

1. பிரஞ்சு நாட்டின்கண் பிரஞ்சு மொழி தவிர பிற மொழிகள் பலவும் வழங்குகின்றன.

    ஜெர்மன் (*German*) 1,800,000.
    பிரிட்டன் (*Breton*) 1,000,000.
    இத்தாலியன் (*Italian*) 1,000,000.
    பாஸ்க் (*Basque*) 200,000.
    அரபிக் (*Arabic*) 200,000.
    காட்டலன் (*Catalan*) 200,000.
    யிடிஷ் (*Yiddish*) 100,000.
    ஆர்மனியன் (*Armenian*) 30,000.
    பிளமிஷ் (*Flemish*) 20,000.

2. Aside from territories and dependencies, French is official language in twenty-one independent countries, France,

இன்றைய பிரான்சு அன்று கால் (Gaul) என அழைக்கப் பட்டது. கி. மு. மூன்ரும் நூற்ருண்டு முதலே ரோமப் பேர ரசின் செல்வாக்கு இங்கு நுழையத் தொடங்கியது எனக் கூறலாம். கி. மு. முதல் நூற்ருண்டில் (55 B.C) கால் முழு வதும் ரோமப் பேரரசுக்கு உட்பட்டது. அன்று முதல் ரோமர்களின் நாகரிகமும் செல்வாக்கும், குறிப்பாக அவர் களின் மொழியும் இந்நாட்டில் பரந்து வளரத் தொடங்கின. ரோமப் பேரரசின் உறுதியும் ரோமர்களின் நாகரிகப் பெரு மையும் லத்தீன் மொழியின் உயர்வும் காலில் வழங்கி வந்த கெல்ட் மொழியின் (Gaulish) அழிவுக்குத் துணை செய்தன. வரலாற்றுக் காலத்துக்கு முன்பே இவண் வழங்கி வந்த கெல்ட் மொழி எந்த விதமான எதிர்ப்புமின்றி லத்தீன் மொழிக்கு அடிபணிந்து அழிந்தொழிந்து மறைந்தது. எழுத் துருவமின்றிப் பலவேறு சின்னஞ்சிறு கிளை மொழிகளாகப் பெருமையற்று வழங்கி வந்த இம்மொழியால் லத்தீனின் சிறப்பான நிலையுடன் ஈடு கொடுத்து நிற்க முடியவில்லை. ஒரு சில கல்வெட்டுக்களே இம்மொழி பற்றிக் கிடைப்பதால் இதன் நிலை பற்றி எதுவும் திட்டவட்டமாகக் கூற முடிய வில்லை என்பர்.

---

Monacco, Haiti, and eighteen African nations, that emerged from former colonial status: Brundi, Cameroun, Central African Republic, Chad, the two Congos, Dahomey, Gaban, Guinea, Ivory Coast, Malagasy, Mali, Mauritania, Niger, Rwanda, Senegal, Togo, and Upper Volta. In addition, the language is co-official in seven nations: Algeria, Belgium, where it is known as Walloon; Cambodia; Canada where it is the mother tongue of 28 percent of the population; Laos, Luxemburg; and Switzerland where French speakers constitute 22 percent of the population; and on the British island of Jersey.

Siegfried H. Muller, The World's Living Languages, pp. 34-35.

Anthropological Linguistics, Vol. 7, No. 8, 1965, pp. 22-23.

ரோமர்களின் வருகைக்கு முன்பே கிரேக்கர்கள் இந் நாட்டுக்கு வந்திருந்தனர். கிரேக்க மொழியும் அக்குத் தேனியாவில் (இன்றைய Gasgone) ஐபீரிய மொழியும் (Iberian) லிகுரியனும் (Ligurian) வழக்கிலிருந்தபோதிலும் கெல்ட் மொழிக்கு ஏற்பட்ட நிலையே இம் மொழிகட்கும் ஏற்பட்டது. இம் மாற்றங்கள் தாமாகவே ஏற்பட்டன என்றும் ரோமர்கள் தங்கள் மொழியினை வெற்றி கொண்ட மக்களின்மீது திணிக்கவில்லை என்றும் கூறுவர் பலர்.

முதன் முதலாக ரோமப் பேரரசின் ஆட்சி நிலைத்தபோது பிற நாடுகளில் லத்தீன் நுழைந்து வளர்ந்தது போன்றே இந் நாட்டிலும் வளர்ந்தது. இக்காலத்தினைப் பேச்சு-லத்தீன் காலம் (500 வரை) என்பர். பின்னர் பிற நாடுகளில் வழங்கிய லத்தீன் மொழிக்கும் காலில் வழங்கியதற்குமிடையே பல வேற்றுமைகள் தோன்றி வளர்ந்தன. ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் மக்களிடையே இருந்த கட்டுக்கோப்பும் மொழியில் இருந்த கட்டுக்கோப்பும் குலைய, பல இடங்களிலும் பல மொழிக் கூறுகள் தோன்ற ஆரம்பித்தன. குறிப்பாகத், தென் காலில் பேசப்பட்ட மொழிக்கும் வடகாலில் பேசப் பட்ட மொழிக்குமிடையே வேற்றுமை வளரத் தொடங்கியது. இக்காலப் பகுதியை (500–842) காலோ–ரோமன் (Gallo–Roman) பகுதி என்பர். ரோமப் பேரரசின் வீழ்ச்சி முதல் 842-இல் நடந்த ஸ்ட்ராஸ்பர்க்கு (Strasburg oath) உடன் படிக்கை வரையுள்ள காலப்பகுதி இதனுள் அடங்கும். இவ்வாணையே பிரஞ்சு மொழியில் காணக்கிடக்கும் முதல் எழுத்துச் சான்று[1].

இதன் பின்னர் பிரஞ்சு, மக்களின் மொழியாக வளர்ந்தது. கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு முதல் பதின்மூன்ரும் நூற்ருண்டு வரையுள்ள காலப்பகுதியைப் பழைய பிரஞ்சுக்

---

1. இதுவே ரொமான்ஸ் மொழிகள் அனைத்திலும் உள்ள முதல் எழுத்துருவம்.

W. D. Elcock. *ibid.* p. 339.

காலம் என்றும், அதன் பின்னர் 16 ஆவது நூற்றுண்டு வரையுள்ள காலப்பகுதியை இடைக்காலம் என்றும், இதன் பின்னர் உள்ள பகுதியைத் தற்காலம் என்றும் கூறுவர்.

கி. பி. ஐந்தாவது நூற்றுண்டில் ரோமப் பேரரசு வீழ்ச்சி யடைந்தபோது காலில் ஜெர்மானியர்கள் தங்கள் ஆட்சியை நிலைநிறுத்தினர். பல வேறு சின்னஞ்சிறு அரசுகள் இங்கு நிலை பெற்றன. விசிகோதியர்கள் (Visigoths) தெற்கிலும், பர்கண்டியர்கள் (Burgandians) ரோன் பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் சாக்சன் (Saxon) மக்கள் அட்லாண்டிக் கரையோரங்களிலும் தங்கள் தங்கள் ஆட்சியை நிறுவினர். இதே போன்று 486இல் பிராங்கு மக்கள் (Franks) தங்கள் தலைவனுன கிளோவிஸ் (Clovis) தலைமையில் போரிட்டு ரோம் கவர்னரை வென்று (Syagrius) தங்கள் அரசினை நிறுவிப், பின்னர் தெற்கே வந்து விசிகோதியர்களையும் வென்றனர். விசிகோதியர்கள் இத்தோல்வியின் பின்னரே ஸ்பெயின் நாடு சென்று தங்கள் ஆட்சியை நிலை நிறுத்தினர்.

கி.பி. ஐந்தாம் நூற்றுண்டில் பிராங்கு மக்கள் ஏராளமாகப் பிரஞ்சு நாட்டில் வந்துறைந்தனர் என்றும், இதன்காரணமாக ஜெர்மானிய மக்கள் மீண்டும் மீண்டும் இவண் வரத்தலைப் பட்டனர் என்றும், இதனுல்தான் பிரஞ்சு மொழியில் அதிகமாக ஜெர்மானியச் சொற்கள் காணக்கிடக்கின்றன என்றும் கூறுவர். மேலும் பிராங்கு மன்னன் கிளோவிஸ் கிறித்தவ மதத்தைப் பின்பற்றியதுடன் கி. பி. 496இல் ரோமப் பேரரசினரின் நிர்வாக முறையினையே கைக் கொண்டதுடன் லத்தீன் மொழியையே அரசு மொழியாகவும் ஏற்றுக்கொண்டான். வெற்றி கொண்ட மக்கள் தோல்வி கண்ட மக்களின் கலாச்சாரத்தையும் மொழியையும் ஒப்புக் கொண்ட நிலையில் இரு மக்களிடையேயும் எவ்விதமான மனத்தாங்கலுமில்லாமல் அவர்களிடையே சுமுகமான உறவு நீடித்து நின்றது. ரோமப் பேரரசின் அழிவுக்குப் பின்னர் இவண் இவ்வாறு வந்துறைந்த பிராங்கு மக்களிடமிருந்தே பிரஞ்சு நாடு தன்னுடைய பெயரைப் பெற்றது.

விசிகோதியர்களின் கீழும் ஆஸ்ட்ரோகோதியர்களின் கீழும் இருந்த பிரஞ்சு நாட்டின் தென் பகுதியையும் போரில் வென்று தம் நாட்டுடன் இணைத்துக்கொண்டனர் பிராங்கு மக்கள். கிளோவிசின் இறப்புக்குப்பின்னர் 511இல் ஆஸ்ட்ரோ கோதியர்கள், பர்கண்டியர்கள், பைசாண்டின் பேரரசன் இவர்களுடன் நடந்த உடன்படிக்கையினுல் பிராவன்சல், தொபினி போன்ற இடங்கள் பிரஞ்சு நாட்டுடன் இணைந்தன. ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் பிரஞ்சு நாடு முழுவதும் ஒரு பேரரசின் கீழ் இணைந்த நிலையில் அவண் வழங்கிய பேச்சு-லத்தீன் மொழியும் பிற லத்தீன் கிளை மொழிகளிலிருந்து மாறுபட்டு வளரத் தொடங்கிற்று.

ஏழாம் நூற்றுண்டில் மார்த்தலின் (Charles Martel) மகன் பெபின் (Pepin the short) தன்னுடைய அரசினை நிறுவினுன். இவன் பரம்பரையே "Carolingian" பரம்பரை எனப்படுவது. இச்சந்ததியார்களில் முக்கியமானவன் ஷார்லமென் (Charlemagne) என்பவன். இவன் (768-814) இலக்கிய-லத்தீனை அரசியல் மொழியாக மீண்டும் கொண்டு வர முயன்றது வீணுயிற்று. கத்தோலிக்கக் கோயில்கள் பேச்சு-லத்தீன் மொழியைக் கோயில் மொழியாகக் கொண்டதும் பிரஞ்சு மொழியின் வளர்ச்சிக்குத் துணை செய்தது. 'கெல்டிக், ஜெர்மன் மொழிகளுடன் பேச்சு-லத்தீன் கலந்து புதிய மொழியாக உருவெடுத்து வளர்ந்ததே பிரஞ்சு', எனப் பலர் கூறினும் இப்புது மொழி லத்தீன் மொழியிலிருந்து பிறந்தது என்று கூறுதலே பொருந்தும்[1].

---

1. A number of men of letters, feeling unable to accept the possibility of strange a thing, have regarded French and Provencal as the outcome of a mixture of Gaulish and Latin together with a Germanic element introduced by invasion; and from this formless mixture they derive French. This view is mistaken. As we have already said, French is nothing else than the development, in the course of centuries, of Latin, before which Celtic language disappeared.

Arsene Darmesteter, A Historical French Grammar, pp. 11-12.

இத்தாலி, பிரான்சு, ஸ்பெயின் போன்ற நாடுகளை இணைத்து நின்ற ரோமப் பேரரசு வீழ்ச்சியுற, ஆங்காங்கே பல வேறு அரசுகள் தோன்றின. இந்நிலையில் இம்மக்களிடையே நிலவி வந்த ஒருமைப்பாடு நீங்க, இவர்களிடையே வழங்கி வந்த பேச்சு மொழியிலும் வேற்றுமைகள் தோன்றின. காலில் (பிரான்சு) இரு வேறு கிளை மொழிகள் வளர்ந்தன. வடபகுதியில் ஒரு கிளைமொழியும் (Langue d'oui) தென் பகுதியில் மற்றொரு கிளைமொழியும் (Langue d'oc) பலவேறு கிளைமொழிக் கூறுகளைக் கொண்டு பிரிந்து நின்றன. வட கிளைமொழி பிரஞ்சு மொழியாகவும் தென்கிளைமொழி பிராவன்சல் மொழியாகவும் பின்னர் மாறியமை காணலாம்.

வடகிளைமொழியும் பல கிளைமொழிகளைத் தன்னுட்கொண்டிருந்தது. வடகிழக்கே பிக்கார்டியைச் சுற்றி ஒரு வகைக்கிளை மொழியும் நடுப் பகுதியில் பாரிசு நகரைச் சுற்றி இன்னொரு கிளைமொழியும் (Ile de France) தென்கிழக்கே மற்றொரு கிளையுமெனப் பலவேறு கிளைமொழிகள் வழங்கின. பாரிசைச் சுற்றி வழங்கிய மொழியைப் பிரான்சியன் (Francien) என்றும் நடு-பிரஞ்சு (Central French) என்றும் அழைப்பர். இதுவே பின்னர்ப் பிரஞ்சு நாட்டின் அரசியல்மொழியாக வளர்ந்தது.

ஆனால் ஆரம்ப காலத்தில் எந்த மொழியும் மிக முக்கிய மொழியாகக் கருதப்படவில்லை. பிரஞ்சு மொழியின் முதல் எழுத்துருவமாகக் கருதப்படும் ஸ்டிராஸ்பர்க் ஆணை பேரரசன் ஷார்லமெனின் பேரர்களிடையே (Louis, Charles) நடந்த உடன்படிக்கையே. இது எக் கிளைமொழியில் எழுதப்பட்டுள்ளது எனத் திட்டவட்டமாகக் கூற முடியாது. இதை ஒட்டி 880இல் தோன்றிய நூலாகிய யூலலியா (Eulalia) பிக்கார்ட் கிளைமொழியில் உள்ளது என்பர். பத்தாம் நூற்றுண்டைச் சார்ந்த 'Passion', 'St Leger' போன்றவை வட, தென் கிளைமொழிகளில் கலந்து காணப்படுகின்றன.

பிராங்கு மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆங்காங்கே பல சிறு அரசுகள் தோன்றின. இவ்வரசர்கள் தங்கள்

அரசவைகளில் கவிஞர்கள் பலரைக் கொண்டிருந்தனர். இக் கவிஞர்கள் பல அரசவைகளிலும் சென்று பாடி வந்தனர். பல சிற்றரசர்களிடையே ஏற்பட்ட தொடர்பும் கவிஞர்களின் போக்கும் பொது மொழி ஒன்றின் இன்றியமையாமையை உணர்த்தின. இக்காலத்தில் பாரிசு முக்கிய இடமாகவும் பல கலைமன்றங்களின் இருப்பிடமாகவும் உருப்பெற்றது. 13ஆவது நூற்றாண்டில் இவண் தோன்றிய பாரிசுப் பல்கலைக் கழகமும் இதன் முக்கியத்துவத்தை அதிகரித்தது. 12ஆம் நூற்றாண்டில் பிக்கார்ட் கிளைமொழி பல இலக்கியங்களைக் கொண்டு முக்கியத்துவம் அடைந்திருந்த போதிலும் 13ஆம் நூற்றாண்டில் பாரிசு கிளைமொழி நிலை மொழியாக உருப் பெற்றுப் பிரஞ்சு மக்களின் மொழியாக வளரத் தலைப்பட்டது. எனினும், இக்காலப் பகுதியில் அரசவை ஏடுகளிலும் ஆணை களிலும் லத்தீன் மொழியே பயன்பட்டு வந்தது.

ஆனால் மக்களின் மொழியாக வளர்ந்து நின்ற பிரஞ்சு மொழியின் வளர்ச்சியை லத்தீனால் தடுத்து நிறுத்தமுடியாது போயிற்று. 14, 15ஆம் நூற்றாண்டுகளில் பிரஞ்சு மொழியின் வளர்ச்சி பிரஞ்சு நாட்டின் அரசியல் போக்கை அடிப்படை யாகக் கொண்டிருத்தல் காணலாம். அரச பரம்பரைகளின் வீழ்ச்சியும் சாதாரண மக்களின் எழுச்சியும் "நூற்றாண்டுப் போரும்" (Hundred Years War) இதன் வளர்ச்சிக்குக் காரணங் களாக அமைந்தன. இத்தகைய குழப்ப நிலையில் பழைய இலக்கியப் பாரம்பரியம் அழிய, மொழியில் பலவகையான மாற்றங்கள் ஏற்பட்டன.[1] பிணைப்பு நிலைமொழியாக இருந்த பிரஞ்சு (Old French) தனி நிலை (analytical) மொழியாக உருவாகியது. பதினைன்காம் நூற்றாண்டில் எழுந்த மறுமலர்ச்சி பல வேறு புதிய லத்தீன் மொழிச் சொற்களைக் கொண்டு வந்தது. இதனால் பிரஞ்சு மொழிச்சொற்களினமைப்பிலும் மாற் றங்கள் பல ஏற்பட்டன. இப்போது பிரான்சியன், பிறகிளை மொழிகளை அழித்து வேகமாக வளர்ந்து முக்கியத்துவம்

---

1. Darmester, *ibid.* p. 42.

பெற்ற நிலையில் இலக்கியங்களிலும் அரசவையிலும் இடம் பெற்றது. இத்திருப்பம் 1539இல் இயற்றப்பட்ட சட்டத்திற்குப் பின்பே (Ordonnances de Villers-Cotteret) ஏற்பட்டது.

எனினும் லத்தீன் மொழியின் செல்வாக்கு பிரஞ்சு நாட்டில் வேரூன்றி நின்றமை காணலாம். லத்தீனில் எழுதிவந்த அறிஞர்கள் சிசரோவின் நடையைப் பின்பற்றி ஒரு புதிய இலக்கியநடையை உருவாக்கிவந்தனர். அறிவியல் கட்டுரைகளும் நூல்களும் லத்தீனிலேயே எழுதப்பட்டன. ஆனால் சமயச் சார்பான நூல்களில் பிரஞ்சு மொழி புகுந்து வளர்ந்தது. கால்வின் (Calvin) எழுதிய சமய இலக்கியம் (Institution Chrétienne, 1541) பிரஞ்சு மொழியில் எழுதப் பட்டது. இந்நிலையில் இத்தாலியில் தோன்றிய இத்தாலிய மொழி எழுச்சி இம்மக்களிடையே ஒரு புது உணர்ச்சியை ஊட்டியது. டூ பெல்லே (Du Bellay) எழுதிய நூலொன்று (Defence et Illustration de la langue francoise, 1549) இத்தாலியின் எழுச்சியைக் காட்டிப் பிரஞ்சு மொழியும் அந்நிலையில் வளர வேண்டுமெனக் கூறுதல் காணலாம். அரசர்களும் அறிஞர்களும் இதன் வளர்ச்சியில் மிக்க ஆர்வம் காட்டினர். எட்டாவது சார்லஸ், 12ஆவது லூயிஸ் போன்றவர்கள் இத்தாலி மீது படை எடுத்த காரணத்தால் இத்தாலியச் சொற்கள் பல வந்து கலந்தன.

இக்காலப் பகுதியில் அறிஞர்களிடையே இரண்டு விதமான கருத்துக்கள் நிலவி வந்தன. கிரீக், லத்தீன் மொழிகளைப் போன்று பிரஞ்சு மொழியையும் பண்புறச் செய்தல் வேண்டும் என்றும் அதனால் பல கிரீக், லத்தீன் சொற்களையும் எண்ணங்களையும் பயன்படுத்தல் வேண்டும் என்றும் சிலர் எண்ணினர். இதனால் பல எழுத்தாளர்கள் கிரீக், லத்தீன் இலக்கியங்களைப் பின்பற்றி எழுத ஆரம்பித்தனர். ஆனால் 'இந்நிலை தவறு; மக்களால் பேசப்படும் மொழியிலேயே எழுதுதல் வேண்டும்' என வாதாடினர் சிலர். மால்கர்ப் (Malherb) இவர்களுள் முக்கியமானவர். பிரஞ்சுச் சொற்களைப் பற்றி யாராவது இவரிடம் கேட்டால் அவர்களைத் தெருவில்

சுமை தூக்கும் பணியாளர்களிடையே அனுப்பி அவர்கள் பேச்சினைக் கேட்குமாறு செய்தல் இவர் வழக்கமாம்.[1]

17ஆம் நூற்றுண்டு, பிரஞ்சு மொழி வரலாற்றில் சிறந்த ஒரு காலப்பகுதி.[2] பல வேறு குழப்பங்களிடையே வளர்ந்து வந்த பிரஞ்சு மொழியைச் சீர்திருத்தியாக வேண்டும் என்ற எண்ணம் அறிஞர்களிடையே தோன்றியது. இலக்கண, இலக்கிய ஆசிரியர்கள் பலர் இப்பணியில் ஈடுபட்டனர். இப் பணியில் பிரஞ்சுக் கழகமும் (French Academy) மிகப் பெரிய பணி புரிந்திருத்தல் காண்க. 1694இல் இதன் வாயிலாக வெளிவந்த பேரகராதி (The Dictionnaire de l' Académie) பிரஞ்சு மொழியின் ஆக்கத்திற்கு மிகவும் துணைபுரிந்தது. இக்காலப் பகுதியில் எழுதப்பட்ட சிறந்த நூல்கள் இக் கழகத்தின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டுத் திருத்தப் பட்டன என்பர். ரேசின் (Racine) போன்ற சிறந்த எழுத் தாளர்கள் கூடத் தங்கள் நூல்களை இக்கழகப் பார்வைக்கு அனுப்பத் தயங்கியதில்லை. உச்சரிப்பு, சொல்லியல், தொட ரியல் போன்ற பல நிலைகளில் இம்மொழி சீர்திருத்தம் பெற்றது. லத்தீனை அடிப்படையாகக் கொண்ட பல சொற்கள்

---

1. If any one asked his opinion about any French words, he always sent him to the street-porters at the Post au Foin, saying that they were his masters in language.

Augusto Brachet, A Historical Grammar of the French tongue, p. 36.

2. The middle French period is characterized by the decay of the classical usage of the twelfth century and general hesitation in pronunciation, flexions, and syntax. In spite of the efforts of grammarians and the formation of the literary school, this hesitation persists throughout the sixteenth century, and we may therefore conveniently take the Middle French period as embracing the fourteenth, fifteenth and sixteenth centuries and the Modern French period as dating from the seventeenth century.

Alfred Ewert, The French Language, p. 2.

பல கிளைமொழிச் சொற்கள், பழமைக் கூறுகள் போன்றவை அப்புறப்படுத்தப்பட்டன. சொல்ல வேண்டியதைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறவேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்த சீர்திருத்தங்கள் இம் மொழியைச் சிறந்த இலக்கிய மொழியாக மாற்றியமைத்து விட்டன.

பிரஞ்சு நாட்டில் தோன்றிய புரட்சிகளும் பிரஞ்சு மொழியின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. 17, 18ஆம் நூற்றுண்டுகளில் பிரஞ்சு மொழி வளர்ந்து வந்த போதிலும் பூரண வளர்ச்சியை அடைந்து விட்டது எனக் கூறமுடியாது. அறிவியல் நூல்களிலும் இதழ்களிலும் பின்னும் லத்தீன் மொழியே முக்கியமாகப் பயன்பட்டு வந்தது. ஆனல் பத்தொன்பதாம் நூற்றுண்டில் பிரஞ்சு எல்லாத் துறைகளிலும் புகுந்து நின்றமை காணலாம். இத்துடன் கல்வி நிலையங்களில், பாடங்களிலும் பிரஞ்சு புகுந்தமை காணலாம். கட்டாயக் கல்வியும் இம்மொழி பரந்து வளர்ந்தமைக்கு ஒரு முக்கிய காரணம் என்பர். இலக்கியம், அரசாங்க அலுவலகங்கள், கல்வி நிலையங்கள் போன்ற எல்லாத் துறைகளிலும் புகுந்து இன்னும் ஆங்காங்கே வழங்கிவந்த பலவேறு கிளை மொழிகளை அழித்து வளர்ந்த பிரஞ்சு மொழி இன்று அனைத்து உலக மொழிகளில் ஒன்ருக விளங்கக் காண்கிரும். கி.பி. 10, 11ஆம் நூற்றுண்டுகளில் பாரிசு நகரைச்சுற்றி மட்டும் வழங்கிய இம் மொழி பிரான்சு, கானடா, அல்ஜீரியா, பெல்ஜியம், சுவிச்சர்லாந்து போன்ற பல நாடுகளிலும் பரந்து வளர்ந்து நிற்கக் காணலாம். முன்னர்க் குறிப்பிட்டது போன்று ஐக்கியநாடுகள் அவையின் ஐந்து மொழிகளில் ஒன்ருக விளங்குவது பிரஞ்சு.

பிரஞ்சு பிற ரொமான்ஸ் மொழிகளைப் போன்றே ஆண், பெண் பால்களையும் ஒருமை, பன்மை எண்களையும் கொண்டுள்ளது. ஆண்களையும் பால்பகுப்பு காட்டும் பிற உயிரினங்களில் ஆணினம் காட்டுவனவற்றையும் குறிக்கும் சொற்கள் ஆண்பாலாகவும்,பெண்ணினம் காட்டுவன பெண்பாலாகவும்

இருக்க, பால் பகுப்பற்ற அஃறிணைச் சொற்களில் பல ஆண் பாலாகவும் பல பெண்பாலாகவும் இருத்தல் காணலாம்.

ஆங்கில மொழியினைப் போன்றே இதன் கண்ணும் பொதுச் சுட்டுக்களும் சிறப்புச் சுட்டுக்களும் காணப்படினும் இவற்றுடன் வரும் பெயர்களுக்கேற்ப ஆண், பெண் பால், ஒருமை, பன்மை எண் பகுப்பும் காட்டி நிற்பது ஆங்கிலத்தில் காணப்படாததொரு பண்பாம். இந்நிலையை இம்மொழிப் பெயரடைகளிலும் காணலாம்[1].

| ஆண் | பெண் |
|---|---|
| *un homme* | *une fille* |
| (ஒரு மனிதன்) | (ஒரு பெண்) |
| *un train* | *une cigarette* |
| *le mot* | *la capitale* |
| (the world) | (the capital) |
| *les mots* | *les capitales* |
| (the worlds) | (the capitals) |
| *bon* | *bonne* |
| நல்ல (ஆண்பால்) | நல்ல (பெண்பால்) |
| *bel* | *belle* |
| அழகிய (ஆண்பால்) | அழகிய (பெண்பால்) |

ஆங்கில வினைகளைப் போலல்லாமல் இவ்வினைச் சொற்கள் விகுதிகள் பலவற்றைக் கொண்டிருக்கக் காண்கிறோம்.

| | |
|---|---|
| *je parl–e* | நான் பேசுகிறேன் |
| *tu parl–es* | நீ பேசுகிறாய் |
| *il parl–e* | அவன் பேசுகிறான் |

---

1. Seymour Resnick, Essential French Grammar, pp. 21–23.
Alfred Ewert, The French Language. p. 144.

*nous parl–ons* நாம் பேசுகிறோம்
*vous parl–ez* நீங்கள் பேசுகிறீர்கள்
*ils parl–ent* அவர்கள் பேசுகிறார்கள்

நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள், குழந்தைகள் விலங்குகள் போன்றவற்றையே *tu* என்ற சொல்லால் குறிப்பர். அதிகப் பழக்கமில்லாதவர்கள், பயணிகள் போன்றோரிடத்து உரையாடும்போது *vous* (நீங்கள்) என்ற சொல்லையே பயன் படுத்துவர். தமிழில் உள்ளது போன்றே இப்பெயர் ஒருமை யையும் பன்மையையும் காட்டவல்லது.[1]

இம்மொழியின் வினைச் சொற்களை அவை ஏற்கும் செய வென் எச்ச விகுதிகளை அடிப்படையாக வைத்து நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்.

*–er: parl–er* பேச
*–ir: fin–ir* முடிக்க
*–re: vend–re* விற்க
*–oir: recev–oir* ஏற்க

இச்சொற்களே பெரும்பாலும் முன்னுருபுகளின் பின்னால் பயன்படுத்தப்படும் வினைச்சொற்கள்.

*pour parler* பேசுவதற்காக
*sans finir* முடிக்காமல்

இம்மொழியின்கண் காணப்படும் எதிர்மறைச் சொற்களில் பொதுவாக இரு சொற்கள் நின்று இப்பொருளைத் தருதல் காணலாம். *ne* என்ற சொல் பொதுவாக வர, பல வேறு சொற்கள் (*pas*; *point* 'at all'; *jamais* 'never'; *personne* 'nobody'; *rien* 'nothing') அதனுடன் வந்து எதிர்மறை காட்டுகின்றன.

*je ne parle pas* "I don't speak"
*je n'ai pas parlé* "I haven't spoken"
*je ne parle point* "I am not speaking at all"
*je ne l'ai jamais vu* "I have never seen him"

---

Resnick *ibid* p. 31.

*je ne n'ai rien vu* "I have seen nothing"

*je ne n'ai vu personne* "I have seen no one"

தமிழில் உள்ள வினைகளைப் போன்றே இதன்கண்ணுள்ள ஏவல் வினைகளும் ஒருமை, பன்மை காட்டி நிற்கின்றன.

*parl–e* பேசு

*parl–ez* பேசுங்கள்

*parl–ons* பேசுவோம்

இம்மொழியின்கண் கிரேக்க மொழிச் சொற்களும் கெல்டிக், ஜெர்மன், அரபு, இத்தாலி, ஸ்பானிஷ், போர்ச்சுக்கீஸ் மொழிகளின் சொற்களும் காணக்கிடக்கின்றன. இவற்றுள் கிரேக்கச் சொற்கள் லத்தீன் மொழியின் மூலமாக இதன்கண் புகுந்தன என்றும் அவற்றுள் பெரும்பாலானவை சமயத் தொடர்பான சொற்கள் என்றும் கூறுவர். இதுபோன்றே இதன்கண் காணப்படும் கெல்டிக் சொற்களில் பல லத்தீன் மொழியின் மூலம் புகுந்தவை என்றும் சில பழைய காலத்திலிருந்தே கால் பகுதியில் வழங்கி வந்தவை என்றும் கூறுவர்.

---

### 1.3.6 பிரஞ்சு கிரியோல் (French Creole)

ஹெய்ட்டியில் (Haiti) வழங்கும் பேச்சு மொழியையே இப்பெயரால் அழைக்கின்றனர்[1]. இவண் வாழும் மக்களில் 10 விழுக்காடே தூய பிரஞ்சு மொழியைப் பேசுகின்றனர், மக்களிடையே வழங்கும் பிரஞ்சு, ஆப்பிரிக்க மொழிகள் பல கலந்து காணப்படுவதால் இதனைப் பிரஞ்சு கிரியோல் எனக் கூறுவர். இம் மொழி பேசுவோராக இன்று 5,000.000 மக்கள் உள்ளனர்.

இத்தகைய கிரியோல் மொழிகள் பல உலகில் காணப் படுகின்றன[2]. முன்னர்க் குறிப்பிட்டது போன்று போர்ச்சுக் கீஸ் கிரியோல், ஜமாய்க்கா கிரியோல் போன்றவை தனி மொழிகளாகக் கருதப்படுகின்றன. இதன் ஒலியியலும் சொல்லி யலும் ரொமான்ஸ் மொழிக் கூறுகளைக் கொண்டிருக்க வாக்கிய அமைப்பு மட்டும் வேறுபட்டிருக்கக் காணலாம்.

இதன்கண் பத்து உயிர்களும் இருபத்திரண்டு மெய் களும் உள்ளன.

---

1. இவண் வாழும் மக்களில் 400,000 பேர் பிரஞ்சு மொழி பேசுகின்றனர்.

2. Anthropological Linguistics. Vol.6. No.1964, pp.39-71.

### 1.3.7 பிராவன்சல் (Provencal)

கால் நாட்டில் (பிரான்சு) லத்தீன் மொழியின் அழிவில் முக்கியமாக இரு கிளை மொழிகள் தோன்றி வளர்ந்தன. வடக்கே வளர்ந்த மொழி பிரஞ்சாகவும், தெற்கே தோன்றியது பிராவன்சலாகவும் வேரூன்றின. இவற்றை முறையே "langue d'oui" என்றும் "langue d'oc" என்றும் பெயரிட்டழைத்தனர். "yes" என்ற பொருளைத்தரும் 'oui' 'oc' என்ற இரு சொற்களையும் அடிப்படையாக வைத்தே இப்பெயர்கள் ஏற்பட்டன[1].

இவற்றுள் தென் மொழியான பிராவன்சல் 12, 13 ஆம் நூற்றுண்டுகளில் மிகச் சிறந்த வளர்ச்சியும் செல்வாக்கும் பெற்று விளங்கியது. மேனாட்டுக் கவிதைகளில் ஒன்றான உணர்ச்சிக் கவிதைகள் (Lyrics) இதன் கண் ஏராளமாகத் தோன்றியுள்ளமையைக் காணலாம். 'பிராவன்சல்' என்ற சொல்லே இவ்வுணர்ச்சிக் கவிதைகளுடன் ஒன்றி நிற்கிறது என்பர். "Guillaume" என்பாரால் எழுதப்பட்ட கவிதைகளே இம் மொழியின் கண் காணப்படும் முதற் கவிதைகள். மிகச் சீரும் சிறப்புமாக வாழ்ந்த இவருடைய கவிதைகள் மதிப்புடன் போற்றப்பட்டன. இத்தகைய கவிதைகளை இயற்றி அரசவைகளில் பாடுவதும் அரசர்கள் அவற்றை ஆதரித்து வளரச்செய்வதும் 12, 13 ஆம் நூற்றுண்டுகளில் இம் மொழியினரிடையே காணப்பட்ட ஒரு சிறந்த பழக்கம். இவண் தோன்றிய இக் கவிதைகளின் செல்வாக்கினை ஐரோப்பிய நாடு முழுவதிலும் அக்காலத்தில் காணலாம். பிரஞ்சு மொழியின்வாயிலாக இது ஜெர்மானிய மொழிகளிடையேயும் பரந்து நின்றது. இது போன்றே பைரீன் மலையின் தென் பகுதிகளில் இக் கவிதைகளின் செல்வாக்கு மிகப்

1. Siegfried H. Muller, The World's Living Languages, p. 37.

பரந்து நின்றமை காணலாம். இத்தாலி மொழிக் கவிஞர்களும் காட்டலன் மொழி அறிஞர்களும் இதன் வயப்பட்டுநின்றனர். குறிப்பாகக், காட்டலன் கவிஞர்கள் தங்கள் கவிதைகளையே பிராவன்சல் மொழியில் எழுதிவந்தனர் என்பர்.

எனினும் பிரஞ்சுமொழி உலகமொழியாக வளர்ந்ததைப் போன்று இம்மொழி வளரமுடியாது போயிற்று. காரணம், பிரஞ்சு அரசர்களில் பலர் பிராவன்சல் நாட்டினைத் தங்கள் நாட்டுடன் இணைக்க முயன்று வெற்றி கண்டமையே. 12, 13ஆம் நூற்றாண்டுகளில் மிக மதிப்புடன் வாழ்ந்த இம் மொழி இன்று ஒரு சில ஆயிரம் மக்களால் மட்டுமே பேசப் படுகிறது.

இம்மொழியை ஒரு சிறந்த இலக்கிய மொழியாக மீண்டும் கொணரும் முயற்சி இம்மக்களிடையே இருந்து வந்துள்ளது. 13, 14ஆம் நூற்றாண்டுகளில் இம்மக்களிடையே நிலவிய இலக்கியக் கழகங்களைப் போன்று பல கழகங்கள் அவ்வப் போது தோன்றியுள்ளன. 19ஆம் நூற்றாண்டில் மிஸ்டிரல் (*Frèdèric Mistral*) என்பார் இம்மக்களிடையே ஒரு புதிய எழுச்சியை ஊட்டியதுடன் இரு பகுதிகளைக் கொண்ட அகராதி ஒன்றையும் (Tresor dou felibres 1878–86) வெளி யிட்டுள்ளார். இவர் இத்துடன் சிறந்த பாடல்கள் பலவற்றை யும் பாடியுள்ளார். இதுபோன்றே இருபதாம் நூற்றாண்டில் சிமின்பாலே (Simin Palay) என்ற அறிஞரும் இம்மொழிக்குப் புத்துணர்ச்சியூட்டியுள்ளார். எனினும் அரசியல் துணை எதுவு மில்லாமல் இருக்கும் இம்மொழி முன்னர்க் குறிப்பிட்டது போன்று வெறும் பேச்சு மொழியாகவே இன்றும் தொடரக் காண்கிறோம்.

## 1.3.8 ரயட்டோ ரொமான்ஸ் (Rhaeto - Romance)

கி. மு. 15 ஆம் ஆண்டில் அகஸ்டஸ் (Augustus) காலத்தில் ரேசியா (Rhetia), விண்டேலிசியா (Vindelicia), நோரிகம் (Noricum) என்ற மூன்று மாநிலங்களும் (இன்றைய சுவிச்சர்லாந்து, பவேரியா, ஆஸ்டிரியா, பகுதிகளில் பெரும்பங்கு) ரோமப் பேரரசின் அங்கங்களாக இணைந்த போது லத்தீன் மொழியும் இவண் புகுந்தது. நான்கு அல்லது ஐந்து நூற்றுண்டுகள் வரையிலும் நீடித்திருந்த ரோமப் பேரரசு விழுந்தபோது இவண் வழங்கிய லத்தீனும் பிற இடங்களில் பேசப்பட்ட மொழியிலிருந்து மாறுபட்டு வேறுபட்டது. இடைக்காலத்தில் இத்தாலியன், ஜெர்மன் மொழிகள் இவண் புகுந்து வளர்ந்தநிலையில் அம் மொழிகள் பரந்து வளர, லத்தீனிலிருந்து பிறந்த ரயட்டோ ரொமான்ஸ் கூனிக் குறுகி ஒரு சில இடங்களில் பதுங்கி வளரத் தலைப்பட்டது.

இன்று இம்மொழிகள் சுவிச்சர்லாந்து[1], இத்தாலி நாடுகளில் வாழும் 600,000 மக்களால் பேசப்படுகின்றன. இம் மொழிகளைச் சிலர் ஒரு தனிப்பிரிவாகவும், இன்னும் சிலர் இத்தாலி மொழியின் ஒரு கிளைமொழியாகவும் கருதுவர். எனினும் இன்றைய நிலையில் இவற்றைத்தனி ஒரு பிரிவாகக் கருதுவதே நலம்.

இப்பிரிவில் நான்கு மொழிகள் உள்ளன. ரோமான்ஷ் (Romansh), எங்காடினிஷ் (Engadinish), லேடின் (Ladin), பிரியுலியன் (Friulian) என்ற நான்கு மொழிகளில் முதல் இரண்டுமே முக்கியம் வாய்ந்தன. ரோமான்ஷ், எங்காடினிஷ் மொழிகளை ஒன்றுகக் கருதுவாரும் உளர். ரைன் (Rhine),

---

1. இவண் ஜெர்மன் (4,000,000), பிரஞ்சு (1,330,000), இத்தாலியன் (400,000) மொழிகளும் பேசப்படுகின்றன. இம் மொழிகளும் ரோமான்ஷ் மொழியும் அரசியல் மொழிகளாகும்.

இன் (Inn) பள்ளத்தாக்குகளில் வழங்கும் இது கி. பி. 1938 முதல் சுவிச்சர்லாந்தின் நான்கு அரசியல் மொழிகளில் ஒன்ருக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ரைன் பள்ளத்தாக்கில் வழங்கும் ரோமான்ஷ் கத்தோலிக்க மக்களின் பேச்சு மொழியாகவும் இன் பள்ளத்தாக்கில் வழங்கும் எங்காடினிஷ் 'புராட்டஸ்டண்டு' மக்களின் பேச்சு மொழியாகவும் இருத்தல் காணலாம். இவற்றுள்ளும் இரு வேறு கிளை மொழிகள் (surselvan vs. subselvan; upper Engadinish vs. lower Engadinish) உள்ளன.

இவற்றில் காணப்படும் முதல் அச்சுப் புத்தகம் கி. பி. 16 ஆம் நூற்ருண்டைச் சார்ந்தது. ஜேக்கப் (Jacob Bifrun) என்பவரால் இயற்றப்பட்ட ஒரு தொழுகை நூலே (catechism, 1552) இது. 1560இல் இவரால் மொழி பெயர்க்கப்பட்ட வேதாகமம் இரண்டாவது நூல். இவை எங்காடினிஷ் மொழியில் உள்ளன. இம்மொழிக்கு அச்சுப்பொறி வசதியும் உள்ளது என்பர். முதல் அச்சுப் புத்தகம் 16ஆம் நூற்ருண்டைச் சார்ந்தது ஆயினும் கி. பி. 13ஆம் நூற்ருண்டு முதலே இதன்கண் எழுத்துச் சான்றுகள் உள்ளன என்பர்.

இத்தாலியில் வாழும் 12,000 மக்களால் லேடினும் (Ladin), 400,000 மக்களால் பிரிலியனும் பேசப்படுகின்றன.

### 1.3.9 இத்தாலியன் (Italian)

இன்று இம்மொழி பேசுவோர்களாக 55,000,000 மக்கள் உள்ளனர். இவர்களில் 49,000,000 மக்கள் இத்தாலியிலும் 1,000,000 மக்கள் பிரான்சிலும் 1,000,000 அர்ஜெண்டின விலும் 500,000 பிரேசில் நாட்டிலும் 300,000 யுகஸ்லாவியா விலும் 20,000 பேர் சான்மரினோவிலும் (San Marino) வாழு கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இம்மொழி பேசும் மக்கள் 35 லட்சதுக்கு அதிகமாக உள்ளனர். சுவிச்சர்லாந்தில் பேசப்படும் நான்கு முக்கிய மொழிகளில் இதுவும் ஒன்ருகும். இங்கு வாழும் 400,000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர்.

இத்தாலிய மொழியில் பல வேறு கிளைமொழிகள் உள்ளன. பிற நாடுகளைப் போலன்றி இந்நாட்டுக் கிளைமொழிகள் தம்முள் மிகுந்த வேற்றுமை உடையன வென்றும் இத்தாலி யின் வடபகுதியில் (Pied monte) வாழும் ஒருவனும் தென்பகு தியில் வாழும் மற்ருெருவனும் சந்தித்து அவர்கள் பேசும் மொழிகளிலேயே உரையாடினல் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல் கடினம் என்றும் கூறுவர். இதன்கண் காணப் படும் கிளை மொழிகளைச் சிலர் ஆறு வகையாகப் பிரிப்பர். இத்தாலிய கிளைமொழிகளில் தஸ்கன் (Tuscan) பகுதிகளில் வழங்கிய மொழியே இன்றைய நிலைமொழியாக உருவெடுத் துள்ளது. இதுவே இன்று இத்தாலியின் அரசியல் மொழி யாகவும், வானொலி, பள்ளிகள் போன்றவற்றில் பயன்படும் மொழியாகவும் விளங்குகிறது. ரோமன் எழுத்து முறையால் எழுதப்படினும் ஆங்கிலத்தைப் போலல்லாமல் உச்சரிப்புக் கேற்பவே இவ்வெழுத்து முறை அமைந்துள்ளது என்பர்.

---

1. இத்தாலியில் இத்தாலி தவிர சாரிடினியன் (Saridinian 1,000,000), ரயட்டோ – ரொமானிக் (Rhaeto - Romanic 520,000), ஜெர்மன் (450,000), பிரஞ்சு (300,000), அல் பேனியன் (Albanian 100,000), சிலாவெனியன் (Slovenian 20,000), என்ற மொழிகளும் வழங்குகின்றன.

13ஆவது நூற்றுண்டு முதல் இம்மொழி எந்தவிதமான முக்கிய மாற்றத்தையும் அடையாமல் இருப்பதால் லத்தீனுடன் மிகத் தொடர்பு கொண்டு காணப்படுகிறது என்று கூறுவர் மொழிநூல் அறிஞர்கள்.

பிற ரொமான்ஸ் மொழிகளைப் போலவே இதுவும் ரோமப் பேரரசு காலத்தில் ரோமானியாவில் வழக்கிலிருந்த லத்தீன்-பேச்சு மொழியிலிருந்து உருவாகியது. எப்போது பேச்சு லத்தீன் வழக்கிறந்தது, அதிலிருந்து இத்தாலியன் என்று உருவாயிற்று எனத் திட்ட வட்டமாகக் கூறமுடியாது என்ரு லும் கி. பி. பத்தாவது நூற்றுண்டிலேயே லத்தீன் எழுத்துக் களுடன் இம்மொழி கலந்து எழுதப்பட்டிருப்பது காணலாம். இம்மொழியில் காணக்கிடக்கும் முதல் எழுத்துச் சான்று "வெரொனிஸ் புதிர்" (Veronese riddle) எனச் சிலர் கருதினும் கி. பி. 960-963இல் நடைபெற்ற வழக்கொன்றில் சாட்சியம் அளித்த சாட்சி ஒருவனின் பேச்சே அது என்பது பலர் எண்ணமாக இருக்கக் காண்கிரேம். ஏதாவது சாட்சியம் அளிக்கும் போது எல்லோரும் புரிந்து கொள்ளும் மொழியில் கூறவேண்டும் என்பது வழக்கம் போலும்.[1]

---

1. They are the court records on a dispute over a real estate in which the scribe, or secretary, reports the proceedings in the best Latin he knew, which as usually is not very good, but where he inserts verbatim the deposition of a witness in the vernacular, probably to lend the authenticity of *procés verbal* to the document, and to give every one an opportunity to understand at least this crucial part of the testimony. This was, after all, also the intention of the authors and recorders of the oaths of Strassburg, of 883, the first properly French document in our possession, in which the oaths which the grandsons of Chalemagne pronounced in front of the assembled soldiers and people, were read and chronicled not only in Latin but also in German and French, so that every one ignorant of Latin, as no doubt the majority of the audience were, could understand what was happening, and would remember it.

Ernst Pulgram, The Tongues of Italy, pp. 409-410.

இக்காலத்திற்கு முன்பே இத்தாலி பேச்சு மொழியாகச் சிறிது காலமாவது இருந்துள்ளது எனக் கூறலாம். அன்று முதல் இம் மொழி படிப்படியாக வளர்ந்து தாந்தே (Dante) போன்ற சிறந்த அறிஞர்களை உலகிற்கு அளித்துள்ளது. பத்தாவது நூற்றுண்டிற்குப் பின்னும் இடையிடையே லத்தீன் மொழியில் இம்மக்கள் எழுதியிருப்பினும் மக்களிடையே பேச்சு மொழியாக இத்தாலி வளர்ந்து வந்துள்ளது

ரோமப் பேரரசு கி.பி. இரண்டாவது நூற்றுண்டிலேயே பார்பேரியர்களால் ஆட்டம் கண்டது. இப்பேரரசு நிலைபெற்று இருந்தபோதே ஜெர்மானியர்கள் கைதிகளாகவும் அடிமைகளாகவும் ஏவலாளர்களாகவும் ரோமானிய மக்களிடையே உறைந்திருந்தனர். பின்னர் இப்பேரரசு பல தாக்குதல்களுக்கு உட்பட்டபோது ஜெர்மானியர்கள் மெல்ல மெல்ல பரவத் தொடங்கினர். ஐந்தாவது நூற்றுண்டில் விசிகோதியர்களும் ஹூண் மக்களும் (Huns) ஆஸ்ட்ரோகோதியர்களும் (Ostrogoths) பின்னர் ஆறுவது நூற்றுண்டில் லாங்கோபார்ட் மக்களும் (Langobards) இத்தாலியின் மீது படையெடுத்துத் தங்கள் தங்கள் ஆட்சியை நிறுவினர். இவர்களில் லாங்கோபார்ட் மக்கள் ஜெர்மானியர்களே. பிற மக்கள் செய்யத்துணியாத அழிவுச் செயல்களை இவர்கள் செய்ததுடன் 200 ஆண்டுகள் தொடர்ச்சியாக அதிகாரம் செலுத்தியும் வந்தனர். பிரான்சில் ஆண்டு வந்த பிராங் (ஜெர்மானியர்கள்) மன்னனுன 'Piper' உதவியால்தான் ரோமர்கள் மீண்டும் தங்கள் நாட்டினை அடையமுடிந்தது. இத்தகைய அரசியல் மாற்றங்கள் இத்தாலி நாட்டின் மொழியையும் பாதித்தன எனக் கூறலாம். ஜெர்மன் மொழியினுல் லத்தீன் பெரும் மாற்றங்கள் அடையாவிடினும், ரோமர்களிடையே கட்டுக்கோப்பையும் பொது உணர்ச்சியையும் கொடுத்துவந்த ரோமப்பேரரசின் வீழ்ச்சி பல்வேறு இடங்களில் பேசப்பட்டு வந்த பேச்சு மொழியில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது எனக் கூறலாம். ஷார்லமென் ரோமப் பேரரசின் அரசனுன போது இலக்கிய லத்தீனை

மீண்டும் மக்களிடையே கொண்டு வருவதற்காகச் செய்த முயற்சியும் பயனற்றுப் போயிற்று. இந்த நிலையில்தான் இத்தாலி நாட்டில் பலவேறு கிளைமொழிகளாக இத்தாலி உருப்பெற்றது .ஜெர்மானியர்களும், அதன்பின்னர் அராபியர் களும், அதற்குப் பின் நார்மன் மக்களும் இத்தாலியில் (12ஆம் நூற்றாண்டு வரை) தங்கியிருந்தனர். இவர்கள் தங்கள் தங்கள் ஆட்சியை நிலைநிறுத்தி வாழ்ந்திருந்த போதிலும் லத்தீன் மொழியின் அமைப்பில் எந்த விதமான மாற்றத்தையும் இவர்களின் மொழிகளால் ஏற்படுத்த முடியவில்லை. ரோமர் களின் அரசியல் செல்வாக்கும் அவர்களின் கலைப்பெரு மையும் படையெடுத்து வென்ற அந்நியர்களைத் தங்கள் வயப் படுத்தி நின்றன. வென்ற நிலைமையிலும் அவர்கள் தங்கள் கீழ்மையையும் ரோமர்களின் பெருமையையும் எண்ணி அவர் களின் மொழியையும் கலையையும் அரசியல் அமைப்பையும் பின்பற்றினர்களேயன்றித் தங்கள் மொழிகளை ரோமர்களி டையே புகுத்த முடியாது போயிற்று. இன்று தென் இத்தாலி யிலும் சிசிலியிலும் சில இடப் பெயர்களும் மக்கள் பெயர்களும் அராபியச் சொற்களாக உள்ளன. லத்தீன் மொழி இத்தகைய சொற்கள் சிலவற்றைக் கடனாகப் பெற்றதேயன்றி எந்த விதமான மாற்றத்தையும் அடையவில்லை. எனவே இத்தாலி மொழியின் உருவிற்கு லத்தீனே தாயகமாக உள்ளது.[1]

---

1. The other outstanding features of the history of Italy between 800 and 1250 are renewed or continued domination of parts of Italy by foreigners (Germans, Moslems, Normans), and the permanent and ingrained political disunity of the peninsula. The first of these phenomena remains linguistically unproductive, that is, in spite of it there occurs no disturbance of the persistent integrity of Romanic speech in Italy, wherein foreign elements are only external borrowings lacking the strength to induce structural changes in the language. The second phenomenon is productive; it enhances the long established dialectal variation of the speech - ways of the Italy, with no central authority and prestige gathering in and reversing the centrifugal forces of linguistic separatism.

*ibid.* p. 411.

லத்தீன் மொழியினின்றும் இத்தாலி பல கிளைமொழி களாக உருவெடுத்தது. இத்தாலி நாட்டில் ஒவ்வொரு பகுதி யிலும் ஒவ்வொரு விதமான கிளைமொழி வழக்கிலிருந்தது. இந்த நிலையில்தான் தஸ்கன் பகுதியில், குறிப்பாக பிளாரன்ஸ் நகரில் வழங்கிய கிளைமொழி நிலைமொழியாக மாறியது. பலசம யங்களில் பலவேறு படையெடுப்புகளுக்கும் 1167இல் பிளேக் நோய்க்கும் 1230இல் பெரும் வெள்ளப் பெருக்கிற்கும் இலக் கான ரோம் தன்னுடைய சிறப்பை இழந்தது. மேலும் பாரிஸ் நகரைப்போன்று எந்தப் பல்கலைக்கழகத்தையும் (1303 வரை) கொண்டு விளங்கவில்லை ரோம். மக்கள் அமைதியுடனும் மகிழ்வுடனும் வாழத் தகுந்த நிலையில் அன்று இல்லை. ரோமில் வாழ்ந்த பாதிரி ஒருவர் ரோமுக்கு வர விரும்பிய தன்னுடைய நண்பர் ஒருவருக்கு 1241இல் எழுதிய கடிதம் அந்நகரின் நிலையை நன்கு படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது. 1305 முதல் 1378 வரை போப் ரோமை விட்டு அவின்யானில் (Avignon) தங்கியருந்தபோது அவரை ரோமில் வந்து தங்கியிருக்குமாறு எழுதிய கடிதம் ஒன்றில் (Pertrarch) ரோம் நகரத்தின் வீடுகள் இடிந்து விழுகின்ற நிலையிலும் கோயில்கள் கவனிப்பாரற்றுச் சுவர்கள் இடிந்த நிலையிலும் மகிழ்ச்சியற்ற மக்கள் அழுது புலம்பி அழிந்துகொண்டிருக் கின்ற நிலையிலும் நகரம் சீரழிந்து கிடப்பதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிளாரன்ஸ் வளர்ந்து நின்றது. கலை, வாணிபம், போன்ற பல துறைகள் இவண் வளர்ந்தன. இப் பகுதியில் வழங்கிய கிளைமொழியிலேயே தாந்தே (1265–1321) பித்ரார்க் (1304–1374) பக்காச்சியோ (1313–1375) (Dante, Petrarch, Baccaccio,) என்போர் எழுதினர். இவர்கள் மொழியை அடிப்படையாக வைத்தே பின்னர் வந்த எழுத் தாளர்களும் எழுதத் தொடங்கினர். 16ஆவது நூற்றுண்டில் இவண் ஆரம்பிக்கப்பட்ட இலக்கியக் கழகமும் (Accademia

della crusca, 1582)[1] இதற்குத் துணை செய்தது. 1612இல் இக்கழகம் இத்தாலியப் பேரகராதியை வெளியிட்டது. மேலும் அச்சுப்பொறி வர, இதனுல் நிலைமொழியின் தேவையும் அதிகரிக்க, பிளாரன்ஸ் கிளைமொழி நிலைமொழியாக வளர்ந்தது. 1470 முதலே அச்சுப் புத்தகங்கள் இம்மொழியின்கண் வர ஆரம்பித்த போதிலும் பதினறு, பதினேழாவது நூற்றுண்டுகளில் வாழ்ந்த கலீலியோதான் (Galileo 1567–1642) முதன் முதலில் அறிவியல் நூல்களில் இம்மொழியைப் பயன்படுத்தினர்.

இதன்கண் ஏழு உயிர்களும் இருபது மெய்களும் உள்ளன தமிழைப்போன்று இவ்வுயிர்கள் குறில், நெடில் வேற்றுமை காட்டுவதில்லை.

ஆங்கிலம் போன்ற மொழிகளைப் போலவே இத்தாலி மொழியிலும் பொது, சிறப்புச் சுட்டுக்கள் உள்ளன. ஆனுல் இம்மொழிச் சுட்டுக்கள் ஆண், பெண் பால்களுக்கேற்பவும் ஒருமை, பன்மை எண்களுக்கேற்பவும் மாறுந்தன்மையன. ஆண்பால் ஒருமையாயின் 'இல்' என்ற சுட்டினையும், பன்மையாயின் 'இ' என்ற சுட்டினையும், பெண்பால் சொற்கள் முறையே 'ல', 'லெ' சுட்டுக்களையும் ஏற்று வருகின்றன. இதே நிலையினைப் பொதுச் சுட்டுக்களிலும் காணலாம். லத்தீனில் ஆண்பால், பெண்பால், அஃறிணைப் பகுப்பு உள்ளமையும் இத்தாலி மொழியில் அஃறிணை அழிந்து லத்தீனிலுள்ள பெரும்பான்மையான அஃறிணைச் சொற்கள் ஆண்பாலாக மாறியுள்ளமையும் இவண் குறிப்பிடத் தகுந்தவையாகும். ஒரு சில சொற்களைத் தவிர பிற சொற்களனைத்தும் இயற்கைப் பால் பகுப்பிற்கு ஏற்பவே காணப்படுகின்றன என்பர். பழைய இலக்கண நூலோர் பால் காட்டும் விகுதிகள் பற்றிக்

---

1. Crusca என்ற சொல் தவிடு அல்லது சாவி எனப் பொருள்படும். நெல்லிலிருந்து சாவியைக் களைவது போன்று தூய மொழியினைத் தெரிந்தெடுக்கும் கழகம் என்பது இதன் பொருள்.

கூறினும் தொடரியல் அடிப்படையிலேயே இப்பால் பகுப் புள்ளது எனக் கூறுவதே பொருந்தும் எனக் கூறுவர் பலர்.[1]

| | | |
|---|---|---|
| இல் பாத்ரெ | (*il pádre*) | the father |
| ல மாத்ரெ | (*la mádre*) | the mother |
| இ பாத்ரி | (*i pádri*) | the fathers |
| உன் பாத்ரெ | (*un pádre*) | தந்தை |
| உன மாத்ரெ | (*úna mádre*) | தாய் |

பெயரடைகளும் பெயர்களைப்போலவே பால்,எண் காட்டுவன வாக உள்ளன. வாக்கியங்களில் பயனிலையாக இவை நிற்கும் போதும் பெயர்களின் முன்னால் அல்லது பின்னால் வந்து தழுவு தொடராக நிற்கும்போதும் பால், எண்காட்டும். பிறமொழி களைப் போலல்லாமல் இம்மொழியில் காணப்படும் சில பெயர டைகள் (அளவு, தன்மை குறிப்பன) பெயர்களுக்கு முன்னால் வருவதும், வேறு சில (உருவம், நாடு குறிப்பன)பின்னால் வரு வதும் இம்மொழியில் காணப்படும் ஒரு விசேடப் பண்பாகும்.[2]

| | | |
|---|---|---|
| ரிச்சொ | (*ricco*) | செல்வம் உள்ள (ஆண், ஒருமை) |
| ரிச்ச | (*ricca*) | செல்வம் உள்ள (பெண், ஒருமை) |
| வெர்தெ | (*verde*) | பச்சை (ஆண், ஒருமை) |
| வெர்தெ | (*verde*) | பச்சை (பெண், ஒருமை) |

---

1. Of the nouns denoting objeets without sex some are masculine some feminine. Their gender can often be determined by the final letter.

C. H. Grandgent, Italian Grammar, p. 16.

The gender morpheme (masculinc, feminine) is always morphologically zero, i. e. is determined by concordance of forms in larger combinations (phrases, clauses).

Robert A. Hall, Jr., Descriptive Italian Grammar, p. 19.

2. Numeral and pronominal adjectives, bêllo, brâvo, buôno, and the commonest adjectives of size and quantity, precede their nouns. Adjectives of nationality, shape, and material follow.

Grandgent, *ibid.* p. 20.

வெர்தி (*verdi*) பச்சை (ஆண், பன்மை)

வெர்தி (*verdi*) பச்சை (பெண், பன்மை)

பல ஆப்பிரிக்க, அமெரிக்க மொழிகளைப் போலவே இதன் கண்ணும் சிறு பொருள், பெரும்பொருள் காட்டும் ஒட்டுக்கள் உள்ளன. இம்மொழிகளில் இத்தன்மை காணப்படுமாயினும் பெயரடைகளிலும் வினையெச்சங்களிலும் இப்பண்பு இல்லை. ஆனால் இத்தாலி மொழியோ இவற்றிலும் இப்பண்பினைக் கொண்டுள்ளது. 'இஸ்ஸிமொ', 'இஸ்ஸிம' (பெண்பால்) 'இன', 'அச்சியா' போன்ற ஒட்டுக்கள் இப்பொருள் காட்டுவனவாக உள்ளன.

| | | |
|---|---|---|
| லார்கொ | (*lárgo*) | விரிவான |
| லார்ஜிஸ்ஸிமொ | (*lárgissimo*) | மிக விரிவான |
| கிராந்தெ | (*gránde*) | மிகப் பெரிய |
| கிராந்திஸ்ஸிமொ | (*grándissimo*) | மிகப் பெரிய |
| உன் லிப்ரொனெ | (*un libro-ne*) | பெரிய புத்தகம் |
| சொரெல்லின | (*sorell-ina*) | தங்கை (சிறிய சகோதரி) |
| ரொபச்சியா | (*rob·accia*) | பயனற்ற பொருள் |

இம்மொழியின்கண் இருவகையான மூவிடப் பெயர்கள் உள்ளன. ஒருவகை (disjunctive) எழுவாயாகவும் முன்னுருபுடன் செயப்படுபொருளாகவும் வர, மற்றொரு வகை (conjunctive) முன்னுருபின்றி 'கு' வேற்றுமைப் பொருளாகவும் செயப்படுபொருளாகவும் வருகின்றது. எடுத்துக்காட்டாக 'அவனைக்கண்டேன்' (*lo trovái*) என்று கூறும்போது *lo* எவ்வித உருபுமின்றி வினைச்சொல்லுடன் இணைந்து நின்று செயப்படுபொருளாகவும் 'அவளுக்கு எழுதுகிறான்' (le scrive) என்பதில் 'le' எவ்விதஉருபுமின்றி 'கு' வேற்றுமைப்பொருளாகவும் 'அவன் அவர்களிடம் பேசுகிறான்' (*ella parla con loro*) என்ற வாக்கியத்தில் '*ella*' எழுவாயாகவும் வருவது காண்க. மேலும் 'conjunctive' பெயர்கள் எப்போதும் வினையுடன் இணைந்து அண்மையில் வருவதும் 'disjunctive' வினையினின்று பிரிந்து

சேய்மையில் நிற்பதும் இவற்றிடையே காணும் வேற்றுமை யாகும்.[1]

இத்தகைய வேற்றுமைகளும் ஆண், பெண் பால் வேற்று மையும் எண் வேற்றுமையும் உள்ளமையால் இத்தாலி மொழி யில் ஏராளமான பெயர்கள் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| மி | (*mi*) | என்னை, எனக்கு |
| தி | (*ti*) | உன்னை, உனக்கு |
| லொ | (*lo*) | அவனை |
| க்லி | (*gli*) | அவனுக்கு |
| ல | (*la*) | அவளை |
| லெ | (*le*) | அவளுக்கு |
| சி | (*ci*) | நம்மை, நமக்கு |
| வி | (*vi*) | உங்களை உங்களுக்கு |
| லி | (*li*) | அவர்களை (ஆண்) |
| ல | (*la*) | அவர்களை (பெண்) |
| லோரொ | (*lóro*) | அவர்கட்கு (ஆண்) |
| லோரொ | (*lóro*) | அவர்கட்கு (பெண்) |
| ஈஒ | (*ìo*) | நான் |
| மெ | (*me*) | என்னை |
| து | (*tu*) | நீ |
| தெ | (*te*) | உன்னை |
| நோஇ | (*nói*) | நாம் |
| நோஇ | (*nói*) | நம்மை |

1. Personal pronouns are divided into two classes, conjunctive and disjunctive: the conjunctive forms are those used as direct object of a verb, and as indirect object without a preposition; the disjunctive forms are those used as subject of a verb, and as object of a preposition.

*ibid.* p. 35.

Conjunctive pronouns are *always unaccented* and cannot be separated from the verb, which sometimes follow but often precede, as will be explained in 48.

*ibid.* p. 35.

| | | |
|---|---|---|
| வோஇ | (*vói*) | நீங்கள் |
| வோஇ | (*vói*) | உங்கள் |
| ஏக்லி | (*égli*) | அவன் |
| லூஇ | (*bii*) | அவனை |
| ஏல்ல | (*élla*) | அவள் |
| லேஇ | (*léi*) | அவளை |
| ஏஸ்ஸி | (*èssi*) | அவர்கள் (ஆண்) |
| லோரொ | (*lóro*) | அவர்களை (ஆண்) |
| ஏஸ்ஸெ | (*èsse*) | அவர்கள் (பெண்) |
| லோரொ | (*lóro*) | அவர்களை (பெண்) |

ஆங்கிலத்தைப் போன்றே இம்மொழியில் பலஇலக்கணக் கூறுகள் முன்னுருபுகளால் உணர்த்தப்படுகின்றன.

திமெ (*ti me*) என்னுடைய

தமெ (*da me*) என்னால், என்னிடமிருந்து

இம்மொழி வினைச்சொற்கள். எண், பால், இடம், காலம் போன்ற பல இக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. ஒருமை, பன்மை எண்களையும் ஆண், பெண் பால்களையும், தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களையும், எதிர்காலம், நிகழ்காலம், இறந்த காலம் போன்ற காலங்களையும் இவை காட்டும். இவை அனைத்தும் ஒட்டுக்களாலும் உயிர் மாற்றத்தாலுந்தான் உணர்த்தப்படுகின்றன. வேர்ச்சொற்கள் முடிகின்ற எழுத்துகளுக்கேற்ப (*a, i, e, b*) நான்கு வகையான முக்கிய வினை மாற்றங்களைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பார்லொ | (*párl–ϕ–o*) | பேசுகிறேன் |
| பார்லி | (*párl–ϕ–i*) | பேசுகிறாய் |
| பார்லா | (*párl–ϕ–a*) | பேசுகிறான் |
| பர்லியாமொ | (*porl–ϕ-iámo*) | பேசுகிறோம் |
| பர்லாதெ | (*parl–ϕ–áte*) | பேசுகிறீர்கள் |
| பர்லானொ | (*parl–ϕ–ano*) | பேசுகிறார்கள் |
| பர்லாவ | (*parl–av–a*) | பேசினேன் |
| பர்லாவி | (*parl–av–i*) | பேசினாய் |
| பர்லெரொ | (*parl–er–o*) | பேசுவேன் |

## 1.3.10 சார்டினியன் (Sardinian)

இத்தாலியை அடுத்த சார்டினியா தீவில் வழங்கும் மொழி சார்டினியன். 1943இல் எழுதப்பட்ட நூலொன்று (La Lingua Italina, E. Bianchi) உள்ளது. இதனை இத்தாலிய மொழியின் ஒரு கிளைமொழி எனக்கூறினும் இதனைத் தனியொரு மொழியாகவே கருதுகின்றனர் பலர். இது தனிமொழி என்ற கொள்கை இடைக்காலம் தொட்டே இத்தாலிய மக்களிடம் இருந்துள்ளமை காணலாம்[1]. கி. பி. 13ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த இத்தாலிய அறிஞர்களிடம் இவ்வெண்ணம் இருந்து வந்தமை அவர்கள் நூற்கள் வாயிலாகக் காணக்கிடக்கிறது.

கி.மு.238இல் ரோமப் பேரரசின் கீழ்வந்த சார்டினியாவில் அக்காலம் முதலே லத்தீன் புகுந்து நின்றது. ஸ்பெயின், கால் போன்ற நாடுகளில் ரோமப் பேரரசின் அலுவலாளர்களும், படையினரும் புகுந்து பொதுமக்களிடையே கலந்து வாழ்ந்து நின்றமை போன்ற தொருநிலை இவண் ஏற்படவில்லை என்றும் இதனுல் இவண் வழங்கிய லத்தீன், இலக்கிய—லத்தீனுடன் மிகத் தொடர்பு கொண்டு காணப்பட்டது என்றும், அதனுல் அதிலிருந்து பிறந்த சார்டினியன் கி. பி. 13ஆம் நூற்றுண்டில் இத்தாலியில் வாழ்ந்த மக்களின் செவிகளுக்கு இலக்கிய லத்தீனைப் போன்று இருந்தது என்றும் கூறுவர். இதனையே தாந்தே (Dante) தம் நூலில் (De Vulgari Eloquentia) குறிப்பிடுகின்ருர்.

1332இல் ஆரகான் (Aragon) மன்னன் சார்டினியாவைத் தன் கீழ்க்கொண்டு வந்தபோது காட்டலன் (catalan) ஆட்சி மொழியாகவும், பின்னர் ஆரகான் ஆட்சியும் காஸ்டிலியன் (Spain) ஆட்சியும் இணைந்த நிலையில் ஸ்பானிஷ் சார்டினியாவின் ஆட்சி மொழியாகவும் இருந்தமை காணலாம். கி. பி 1714இல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி (Utrecht,

1. W. D. Elcock, *ibid* p. 473.

A. D. 1714) சார்டினியா மீண்டும் இத்தாலியின் அங்கமாக இணைய, இத்தாலி மொழியின் செல்வாக்கு இவண் பரவியது. இதனால் பல எழுத்தாளர்கள் இன்றும் இத்தாலிய மொழியிலேயே எழுதிவரினும், சார்டினியன் தன் தனிப்பண்பை இழக்காது வேகமும் வாழ்வும் கொண்ட ஒரு தனிமொழியாக இருந்து வருதல் குறிப்பிடத்தக்கது.

இன்று இம்மொழி பேசுவோராக 1,000,000 மக்கள் உள்ளனர். இதன்கண் பல கிளைமொழிகள் உள்ளன என்றும் அவற்றுள் தென்கார்சீயா, காம்பிடேனியன் (Southern Corsia, Compidanian) கிளைமொழிகள் இத்தாலி மொழியுடன் நெருங்கிக் காணப்படுகின்றன என்றும், மத்திய சார்டினியன் (Logodurese) பல தனிப்பண்புகளைக் கொண்டுள்ளது என்றும் கூறுவர்[1].

1. Anthropological Linguistics, Vol 7, No.8. (1965), p.36

### 1.3.11 ருமேனியன் (Rumanian)

20,000,000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர். இவர்களில் 17,000,000 பேர் ருமேனியாவிலும் 2,400,000 பேர் சோவியத் நாட்டிலும் 100,000 பேர் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் வாழுகின்றனர்.

பிற ரொமான்ஸ் மொழிகளைப்போல இதுவும் லத்தீன் மொழியிலிருந்தே பிறந்தது. பண்டு, ருமேனியர்கள் அவர்கள் வாழ்ந்த பகுதிகளின் இடப் பெயர்களுக் கேற்ப மோல்தாவியர்கள் (Moldovians), வாலச்சியர்கள் (Walacchians) எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் எந்தப் பேரரசின் கீழ் வாழ்ந்தார்களோ அப்பேரரசின் பெயரையே இன்று கொண்டுள்ளனர். ரொமான்ஸ் மொழிகளில் இது கிழக்குப் பிரிவைச் சார்ந்ததாகும். மேற்கு ரொமான்ஸ் மொழிகளுக்கும் இம்மொழிகளுக்குமிடையே பல வேற்றுமைகள் உள்ளன.

ருமேனியாவில் கி. பி. 7ஆவது நூற்றுண்டு முதல் சிலாவிக் (Slavic) மொழிகளின் செல்வாக்கினையும் 9ஆவது நூற்றுண்டுமுதல் ஹங்கேரியனின் செல்வாக்கினையும், அதன் பின்னர் துருக்கி மொழியின் செல்வாக்கினையும் காணலாம். இதுபோன்றே பால்கன் கரையோரங்களில் வழங்கும் அல்பேனியன், கிரீக் போன்ற மொழிக் கூறுகள் பலவும் இதன்கண் உள்ளன. சில அகராதிகளின் பட்டியலின்படி இம்மொழியில் ஐந்தில் ஒரு பகுதியே லத்தீன் சொற்கள் காணப்படினும் அமைப்பிலும் அன்றுட வாழ்க்கையில் பயன்படும் சொற்களின் எண்ணிக்

கையிலும் இது லத்தீன் மொழியிலிருந்து பிறந்த ரொமான்ஸ் மொழியாகவே உள்ளது.[1]

இன்று ருமேனியா எனவழைக்கப்படும் நாடு கி. மு. நூற்றுண்டுகளில் டாசியா (Dacia) என்ற பெயரைக் கொண்டிருந்தது. இந்நாட்டு மக்கள் மிக்க வீரம் பொருந்தியவர்களாக வாழ்ந்து வந்தனர். கிரேக்கப் பேரரசனுன அலக்சாந்தரும் கூட வெல்ல முடியாத அளவுக்கு வீரமும் படைபலமும் பொருந்திய இம்மக்கள் கி. பி. 105-106இல் ரோமப் பேரரசுக்கு அடிபணிய வேண்டியதாயிற்று. அன்றுமுதல் இத்தாலி, சிரியா, ஆசியா மைனர் போன்ற பல இடங்களிலிருந்தும் பலர் இந்நாட்டில் குடியேற்றப்பட்டனர். இதன் விளைவாலும் ரோமப் பேரரசின் அதிகாரத்தினுலும் லத்தீன் புகுந்து நன்கு வேரூன்றி வளர்ந்தது. இவ்வளர்ச்சி நன்கு வேர்விட்டிருந்த காரணத்தால்தான் கி. பி. 273இல் மன்னன் ஆரெலியன் (Aurelian) இப்பகுதியைப் புறக்கணித்து தெற்கே (Moesia) தன் கவனத்தைச் செலுத்திய போதிலும் லத்தீன் அழியாது வளர்ந்து இவண் காலூன்ற முடிந்தது. ரோமப் பேரரசின் படையினரும் அலுவலரும் இப்பகுதியை விட்டுப் போன போதிலும் லத்தீன் தொடர்ந்து வளர்ந்தது.

---

1. The importance of the foreign elements in the Rumanian language has been exaggerated. On the basis of dry statistics of the dictionaries these elements are numerous. According to the very imperfect etymological dictionary of Cihac (Dictionnaire d'etymologiea daco-roumaine, Frankfort, 1870–79) the proportion between different elements in Rumanian is thus: Latin elements 1165, i.e., one fifth; Slavonic elements 2361, i.e., two fifths; Turkish 965, New Greek 695, Hungarian 689, Albanian 50. But on the basis of their currency, the actual Rumanian language works with 85–90 per cent Latin elements in its composition you cannot express the simplest idea without Latin elements;........

Grigore Nandris, Colloquial Rumanian, p. XIV.

The grammar is almost purely Latin in origin.

Fred G. Ackerly, A Rumaniaa Manual, p. 1.

இம்மக்களைப் பிற இனத்தாரிடமிருந்து பாதுகாக்க ரோமப் படையோ, இப்பகுதியைக் கண்காணிக்க ரோம அரசியல் அதிகாரிகளோ இவண் இல்லாதிருந்த போதிலும் ரோமப் பேரரசின் கீழேயே இந்நாடு இயங்கியது. கி. பி. ஆருவது நூற்ருண்டு வரையிலும் இதே நிலைதான். ரோமன் கத்தோலிக்கக் குருக்கள் கோயில்களின் மூலம் லத்தீன் மொழியின் பாதுகாவலாளர்களாக விளங்கினர். இந்நிலையில் இம்மொழியை 'Daco Roman' என்றழைப்பர் மொழிநூலாளர்கள்.[1]

சிலர் "ரோமப் பேரரசு தெற்கே பெயர்ந்த உடன் இம்மக்களும் குடிபெயர்ந்து தெற்கே வந்தனர்" என்றும் "பின்னர் மீண்டும் 'Vlahi' (Wallachians) என்ற பெயருடன் டெனூப் நதியைக் கடந்து தங்கள் நாடு போயினர்" என்றும் கூறுவர். ஹங்கேரி மக்கள் 9ஆம் நூற்ருண்டில் பன்னோனியா வந்து தங்கிய பின்னரே இம்மக்கள் டாசியா வந்துறைந்தனர் எனக் கருதிகின்றனர் சிலர். ஆனால் இக்கொள்கை பொருத்தமற்றது என்பர் பலர்.

7 ஆவது நூற்ருண்டில் சிலாவிக் மக்களின் குடியேற்றமும் 9ஆம் நூற்ருண்டில் ஹங்கேரியர்களின் குடியேற்றமும் ருமேனியன் மொழியில் இம்மொழிகளின் சொற்கள் பல புகக் காரணமாயிருந்தன. மேலும் மேற்கு ரொமான்ஸ் மொழிகட்கும் இதற்குமிடையே எவ்விதத் தொடர்புமில்லாமல் போகவே அம்மொழிகளினின்றும் மாறுபட்ட ஒரு வளர்ச்சியைக் கண்டது இம்மொழி. பிரஞ்சு, போர்ச்சுக்கீஸ்

---

1. If no document exists giving evidence of a partial or complete evacuation of Dacia in 275, we have no proof, on the other hand, that Latin life continued after the departure of the legions and of the imperial officials. The Roman law long remined in force; Christianity spread from the 4th century on; and the Latin language was still being used by the native population when, somewhat later, the Rumanian language began to take shape.

Romulus Seisanu, Rumania, p. 25.

ஸ்பானிஷ் மொழிகள் இடைக்காலத்தில் லத்தீனிலிருந்து பல சொற்களைக் கடனாகக் கொண்டதுபோல இம்மொழிக்கு வாய்ப்பு எதுவும் ஏற்படவில்லை. இதனால்தான் ரொமான்ஸ் மொழிகளில் இது பழைமையான கூறுகள் பலவற்றைக் கொண்டுள்ளது என்பர்.[1] ஆனால் இதற்கு நேர்மாறாக, கிழக்கு ஐரோப்பிய மொழிகளின், குறிப்பாக சிலாவிக் மொழிகளின் செல்வாக்கினை இதன்கண் காணமுடியும். இது ஒரு ரொமான்ஸ் மொழியாயினும் பால்கன் பகுதியில் வழங்கும் அல்பேனியன், கிரீக், பல்கேரியன் போன்ற மொழிகளின் செல்வாக்கினைக் கொண்டு விளங்குகிறது.

பைசாண்டின் கால வரிசை ஒன்றில் (Byzantine Chronicle) ருமேனியப் பகுதியைச் சார்ந்த வீரன் ஒருவன் போரின் போது அஞ்சிக் கூறிய இரு ருமேனியச் சொற்களைக் குறித்துள்ளார் அதன் ஆசிரியர். எனினும் 1521இல் எழுதப் பட்ட கடிதம் ஒன்றில் காணப்படும் ருமேனியச் சொற்களே இம்மொழியின் முதல் எழுத்துச் சான்றாகக் கருதப்படு கின்றன.[2] ருமேனியர்கள் பதினான்காவது நூற்றாண்டில்

---

1. Because this evolution did not continue to be influenced by medieval Latin, like the evolution of the Western languages, the Rumanian language is in some ways more conservative than the Western Romance Languages, i.e. it is nearer to Latin.

Nandris, *ibid*. p. XIV.

2. If we, however, ignore these few words which are differentiated from Latin, and mention only that Latin and Slav documents of the twelfth to the fourteenth century contain Rumanian words which disclose the ancient aspect of the Rumanian language, we can say that the first written samples of the Rumanian are found in the glosses of the fifteenth century and in a Rumanian letter written in 1521 by a certain Neacsu of Campulung (Walachia) to his friend Hans Bengner of Brasov (Transylvania) to inform him about the approach of the Turks.

Nandris, *ibid*. p. XVII

தங்கள் கோயில்களில் பழைய கோயில் சிலாவானிக் மொழியினை ஒரு சில வட்டார மாற்றங்களுடன் பயன்படுத்தி வந்தனர். மேற்கு ஐரோப்பாவில் கோயில்களில் லத்தீன்மொழி எவ்வாறு பயன்பட்டதோ அவ்வாறே சிலாவானிக் மொழியும் கிழக்கு ஐரோப்பாவில் பயன்பட்டது. இதனால்தான் இம் மொழியில் எழுதப்பட்ட பல சமய நூல்களும் குறிப்புகளும் ருமேனியாவில் காணக்கிடக்கின்றன. கி.பி. 16ஆம் நூற்றுண்டு முதல் டிரான்சில்வேனியா பகுதிகளில் வேதாகமம் போன்ற சமயத் தொடர்பான பல நூல்களின் கையெழுத்துப் பிரதிகள் கிடைத்துள்ளன. ருமேனிய மொழியின் முதல் அச்சுப் புத்தக மாகக் கருதப்படுவது கி. பி. 1508இல் வெளிவந்த ஒரு சிலாவானிக் புத்தகமே; இதை ஒட்டி 1560-61இல் ருமேனிய மொழியில் வேதாகமம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. கி. பி. 19ஆம் நூற்றுண்டு வரையிலும் ருமேனிய மொழி சிரில்லிக் எழுத்து முறையிலேயே எழுதப்பட்டு வந்தமை காணலாம். ஆனல் இன்று ரோமன் எழுத்து முறையே பயன் படுத்தப்படுகிறது.

பிற ரொமான்ஸ் மொழிகளைப் போன்றே இதன்கண்ணும் சிறப்பு, பொதுச்சுட்டுக்களைக் காணலாம். அவற்றைப் போன்றே இச்சுட்டுகளும் எண், பால், வேற்றுமைகளைக் காட்டுகின்றன. எனினும் சிறப்புச் சுட்டு வேற்றுமைகட் கேற்ப மாறுவதும் பெயர்களுடன் இணைந்து பின்னொட்டாக வருவதும் பிற ரொமான்ஸ் மொழிகளில் காணமுடியாத பண்புகளாகும்.[1]

பொதுச் சுட்டுக்களாக 'உன்' (*un om* ஒரு மனிதன்) 'ஒ' (*o mamā* ஒரு தாய்) என்பனவும் சிறப்புச் சுட்டுக்களாக ஆண்பால் ஒருமையில் 'ல்' (*puil* the 'chicken') 'லெ' (*numela*

---

1. The definite Article is attached as a suffix to the word it makes definite. It varies for number and case as well as for gender, but its charecteristic letter is *l*.

Fred G. Ackerley, A Rumanian Manual, pp. 8-9.

'the name') என்பனவும் பன்மையில் 'இ'யும் (*lupii* 'the wolves,') பெண்பால் ஒருமையில் 'அ' வும் (*apa* 'the water') பன்மையில் 'லெ'யும் (*mesele* 'the tables') வருதல் காணலாம்.

ருமேனியப்பெயர்ச் சொற்களை ஆண்பால், பெண்பால் என இரு வகையாகப் பிரிப்பர். நாற்காலி, தோள், அடி போன்றவற்றைக் குறிக்கும் ஆண்பால் சொற்கள் பன்மையில் வரும்போது பெண்பால் பன்மையின் சிறப்புச் சுட்டிணை ஏற்றுப் பெண்பாலாக வருதல் காணலாம். ருமேனியன் பெயர்களை அவை ஏற்கும் சிறப்புச் சுட்டுக்களின் அடிப்படையிலேயே ஆண், பெண் பால்களாகப் பிரிக்கின்றனர்.[1]

எழுவாய், செயப்படுபொருள், கு, அது என்ற வேற்றுமை கள் இம் மொழியின்கண் உள்ளன. எழுவாய், ஐ வேற்றுமை கள் ஒரு சொல்லினுலும் பிற வேற்றுமைகள் இரண்டும் மற்றொரு சொல்லினுலும் உணர்த்தப்படுதல் காணலாம். எனவே இரண்டு சொற்களினுல் நான்கு வேற்றுமைகள் காட்டப்படுகின்றன. எனினும் இவற்றிடையே வேற்றுமை காட்டவேண்டிய கட்டாய நிலை ஏற்படின் சில இடைச் சொற்களைப் பயன்படுத்திப் பிரித்துக் கூறுவர்.[2] லத்தீன்

---

1. The noun can belong to either of two grammatical genders: masculine or feminine. A great many nouns are masculine in the singular and femine in the plural. These nouns form a class of mixed nouns, called in Rumanian: ambigene (adj.n.pl.), etrogene (adj.n.pl.) or neutre (adj.n.pl.). The gender of a noun is recognized by the definite article. The definite article is suffixed to the noun: the indefinite article precedes the noun.

Grigore Nandris, Colloquial Rumanian, p. 31.

2. Every noun has two different forms for the singular and two for the plural. One form is used for *Nominative* and *Accusative* and the second for *Genitive* and *Dative*. When it is necessary to make a distinction between the *Nominative* and *Accusative* or between the *Genitive* and *Dative* (see 14.5) Rumanian uses particles.

*ibid*. pp. 40-41.

மொழியின்கண் பல வேற்றுமைகள் இருப்பதும் ருமேனியன் தவிர பிற ரொமான்ஸ் மொழிகளில் வேற்றுமைகள் இல்லா திருப்பதும் இவண் ஒப்பு நோக்கத்தக்கன.

பெண்பால்

| | |
|---|---|
| *o casǎ* | ஒரு வீடு, (எழுவாய், ஐ) |
| *unei case* | வீட்டின், வீட்டுக்கு |
| *casa* | *the house* (எழுவாய், ஐ) |
| *casei* | *of the house, to the house* |

பன்மை

| | |
|---|---|
| *case* | வீடுகள் |
| *case* | வீடுகளின், வீடுகட்கு |
| *casele* | *the houses* |
| *caselor* | *of the houses, to the houses* |

ஆண்பால்

| | |
|---|---|
| *un copil* | ஒரு குழந்தை |
| *unui copil* | குழந்தையின், குழந்தைக்கு |
| *copilul* | *the child* |
| *copilului* | *of the child, to the child* |

பன்மை

| | |
|---|---|
| *copii* | குழந்தைகள் |
| *copii* | குழந்தைகளின், குழந்தை கட்கு |
| *copiii* | *the children* |
| *copiilor* | *of the children, to the children* |

ருமேனிய மொழியில் மூவிடப் பெயர்கள், பிற ரொமான்ஸ் பெயர்களைப் போன்றே காணப்படுகின்றன. படர்க்கைப் பன்மையிலும் ஆண், பெண் வேற்றுமை காணப்படுவதுடன்

பல உயர் சொற்கிளவிகளும் உள்ளன.[1] தமிழைப் போலவே இதன் சுட்டுப் பெயர்களும் அண்மை, சேய்மைப்பொருள் தருவதுடன் பெயரடைகளாக வரும்போது ஆண், பெண், பால்வேற்றுமை காட்டி நிற்கின்றன. மேலும் தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளைப் போலல்லாமல் பெயரடை களாக வரும் போது பெயர்களின் பின்னால் வருவதும் இவண் நோக்கத்தக்கதாம்.

| | |
|---|---|
| எவ் (*eu*) | நான் |
| து (*tu*) | நீ |
| எல் (*el*) | அவன் |
| எஅ (*ea*) | அவள் |
| நொய் (*noi*) | நாம், நாங்கள் |
| வொய் (*voi*) | நீங்கள் |
| எய் (*ei*) | அவர்கள் (ஆண்) |
| எலெ (*ele*) | அவர்கள் (பெண்) |
| அச்செஸ்த் (*acest*) | இது (ஆண்) |
| அச்செயஸ்த (*aceastá*) | இது (பெண்) |
| அச்செல் (*acel*) | அது (ஆண்) |
| அச்செஅ (*acea*) | அது (பெண்) |

இம் மொழியில் நான்கு வகையான பெயர்ச் சொற்கள் உள்ளன. லத்தீன் மொழியின்கண் காணப்படும் நான்கு வகை களும் இதன்கண் உள்ளனவெனினும் அதில் ஒரு வகையைச் சார்ந்தவை இதன்கண் வேறொரு வகையானவையாக இருக் கலாம்.

---

1. The second person singular is used when speaking to friends, to children, and in prayer.

The pronoun used in polite address is *dominia ta,* which in colloquial speech became *dumneta* (*dumeata*), followed by the verb in the second person singular.

*ibid*. p. 73.

**1·4 கெல்டிக் மொழிகள் (Celtic languages)**

இவை பண்டு பிரிட்டனி முதல் ஆசியா மைனர் வரையிலும் பரந்து வாழ்ந்து வந்த கெல்ட் மக்களின் மொழிகளாகும். இல்லிரியா, ஸ்பெயின் கால் (பிரான்சு) போன்ற நாடுகளில் எல்லாம் தங்கள் அரசினை நிறுவி வாழ்ந்த இம்மக்களின் மொழிகள் இன்று பிரிட்டனிலும் பிரான்சின் வடமேற்குப் பகுதிகளிலுமே வழங்கி வருதல் காணலாம். இவ்விடங்களிலும் ஆங்கில, பிரஞ்சு மொழிகளே செல்வாக்குடன் விளங்க, கெல்டிக் மொழிகள் இரண்டாந்தர நிலையிலேயே வழங்குகின்றன, ஆனால் ஐரோப்பாவின் பல பகுதிகளில் காணப்படும் இடப்பெயர்கள் இம்மொழிகளின் பண்டைச் சிறப்பினையும் முக்கியத்துவத்தையும் காட்டும்.

இம்மக்களின் வரலாறும் இம்மொழிகளின் வளர்ச்சியும் தேய்வும் அழிவும் வரலாற்று அடிப்படையில் மிகவும் முக்கியம் வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. இவர்களைப் பற்றிய பல்வேறு குறிப்புக்களைப் பண்டைக் கிரேக்க ஆசிரியர்களின் நூல்கள் பலவற்றில் காண முடியும். 'கெல்ட்' என்ற சொல் கி. மு. ஐந்தாம் நூற்றுண்டிற்குப் பின்னர்தான் கிரேக்க ஆசிரியர்களின் நூல்களில் காணப்பட்ட போதிலும் அதற்கு முன்னர் இம்மக்கள் வேறு பெயரால் குறிக்கப் பட்டுள்ளனர் என்பர்.[1] இதன் பின்னர் இம்மக்களைச் சிலர்

1. The Celts seem to have been first known to Greek–that is, to European history-under the semi-mytholgical name of the hyperboreans, an appellation which remained in force the sixth to the fourth century before Christ. The name Celt or Kelt first makes its appearance towards the year 500 B.C., in the geography of Hecatæus of Miletum, and is thereafter used successively by Herodotus, Xenphon, Plato, and Aristotle, and from that time forward it seems to have been employed by the Greek scholars and historians as a generic term whereby to designate to Celts of the Continent.

Douglas Hyde, A. Literary History of Ireland, p. 2.

'Galatian' எனவும் அழைத்துள்ளனர். பண்டைய ஆசிரியர்கள் பலர் ஜெர்மானியர்களையும் இவர்களையும் ஒரே இனத்தவர்களாகக் கருதி வந்துள்ளமை காணலாம். சீசர்தான் முதன் முதல் இவர்கட்கிடையே இருந்த வேற்றுமையைக் கண்டவர் என்பர்.[1] இவர்களை சீசர் 'Gallus' எனவும் ஜெர்மானியர்களை 'Germanus' எனவும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார் என்பர். எனினும் வரலாற்றாசிரியர்களிடையே மயக்கநிலை இருந்துள்ளமை காணலாம். டயோடொரஸ் (Diodorus Siculus) என்பார் சீசருடைய 'கேலஸ்' என்ற சொல்லினை (Celt) எனவும் 'ஜெர்மானஸ்' என்ற சொல்லினை 'Galatian' எனவும் மொழிபெயர்த்துள்ளாராம். ஆனால் வேறொரு கிரேக்க ஆசிரியரோ (Dion Cassus) நேர்மாறாக கெல்ட் மக்களை 'Galatians' எனவும் ஜெர்மன் மக்களை 'கெல்ட்' எனவும் அழைப்பதைக் காணலாம். இவையெல்லாம் இவ்வாசிரியர்களிடையே இம்மக்களைப் பற்றி இருந்த மயக்க நிலையைக் காட்டும்.[2]

'கெல்ட்' என்ற சொல் எழுத்தில் கி. மு. ஐந்தாம் நூற்றுண்டுமுதல்தான் காணப்படுகிறது. எனினும், நடைமுறையில் கி. மு. 800 அல்லது 1000 ஆண்டுகட்கு முன்பே வழங்கியிருக்கலாம் எனப் பலர் கருதுகின்றனர். சிலர் (Jubainville) 'கெல்ட்' என்ற சொல் பழைய ஐரிஷ் வினைச்சொல் ஒன்றிலிருந்தும் (ar-Chellāim நான் கொள்ளையிடுகிறேன்), 'காலேஷியன்' என்ற சொல் gal (வீரம் 'bravery') என்ற சொல்லிலிருந்தும் வந்தவை என்பர். எனினும் கெல்ட் அரசின் வீழ்ச்சியின்பின்னர் காலில் வாழ்ந்துவந்தோரை

---

1. *ibid*. pp. 2-3.

2. The examples thus set, however, were the result of ignorance and were never followed. Plutarch treats the two words identical, as do Strabo, Pausanias and all other Greek writers.

*ibid*. p. 3.

'Celtæ' எனவும், ஸ்பெயினில் வாழ்ந்தோரை 'Celtici' அல்லது 'Caltiberi' எனவும், ஜெர்மானியர்கள் அழைத்து வந்தனர். ரோமர்கள் இவர்களை 'Galli' எனக் குறிப்பிட்டு வந்தனர். மேலும் தங்கள் அருகில் வாழ்ந்த கெல்ட் மக்களை ஜெர்மானியர்கள் 'Volcæ' எனவும் குறிப்பிட்டுள்ளனர். இச்சொல்லிருந்தே ஆங்கிலோ–சாக்சனில் 'Welt' என்ற சொல்லும் ஆங்கில மொழியில் 'Welsh' என்ற சொல்லும் உருவாயின என்பர். பல காலமாக ஜெர்மானியர்கட்கும் இவர்கட்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளமை காணலாம். கெல்ட் மக்களின் கீழ் ஜெர்மானியர்கள் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வந்தனர் எனவும். அரசியல் துறையில் ஜெர்மானியர்கள் கெல்ட் மக்கட்கு அடங்கியே வாழ்ந்து வந்தனர் எனவும் கூறுவர். கி. மு. மூன்றும் நூற்றுண்டுக் காலப்பகுதியில் கெல்ட் மக்கள் வலிமை குறைந்த போதுதான் ஜெர்மானியர்கள் மெதுவாக வன்மை பெற்றனர். கி.மு. ஆறும் நூற்றுண்டுக் கிரேக்க வரலாற்றுசிரியர்கள் கெல்ட் மக்கள் பற்றிப் பலவாறு புகழ்ந்துரைக்க, ஜெர்மானியர்கள் பற்றி எதுவும் குறிப்பிடாமல் இருப்பது கவனிக்கத்தக்கது.

மொழித்துறையிலும் இவ்விரு இன மக்களிடையே சில தொடர்பினைக் காணலாம். ஜெர்மானிக் மொழிகளில் காணப்பட்ட முதல் மெய்மாற்றம் (First Germanic sound shift) கெல்ட் மொழிகளிலும் உள்ளன.[1] இதனுல் இவ்விரு மக்களும் பல காலம் ஒரே இடத்தில் தொடர்ந்து வாழ்ந்துவந்திருக்கலாம் எனப் பலர் எண்ணுவர்.[2] பன்னெடுங்காலமாக இவ்விரு மக்களும் ஒரே ஆட்சி முறையில் வாழ்ந்து வந்தமையால்

---

1. We find some parallels to some of these shifts in other Indo-European languages, such as Armenian and Celtic, but in their entirety they constitute the chief distinguishing mark of Germanic.

R. Priebsch, The German Language, p. 58.

2. *ibid*. p. 13.

பலசொற்கள் இவ்விரு மொழிகளுக்கும் பொதுவாகக் காணப் படுகின்றன. கெல்டிக் ஆட்சியின்கீழ் ஜெர்மானியர்கள் உறைந் திருந்தபோதிலும் தங்கள் மொழியினையோ, கலாச் சாரத் தையோ, பண்பாட்டினையோ இழந்துவிடாமல் பாதுகாத்துக் கொண்டனர்.[1]

கெல்ட் மக்கள் கி. மு. 400 ஐ ஒட்டிய காலப்பகுதியில் இத்தாலியைப் பிடித்து அடக்கினர். பொதுவாக இவர்கள் கி.மு. 500 முதல் கி.மு. 300 வரையிலும் வலிமை பெற்று விளங்கினர். இவர்கள் மூன்று போர்களில் கார்தேஜினியன் பேரரசினை வென்று ஸ்பெயினையும், எத்துருஸ்கன் மக்களை வென்று இத்தாலியின் வடபகுதியினையும் இல்லிரியன் மக்களை வென்று டெனூப் பகுதிகளையும், தங்களின்கீழ்க் கொணர்ந்தனர். இவர்கள் கிரேக்க நாட்டினருடன் மிகவும் நட்புரிமை பாராட்டி வந்ததுடன், அவர்கட்குப் பல வகைகளில் உதவி புரிந்தும் வந்துள்ளனர். அலெக்சாந்தரின் தந்தையான பிலிப்பு மன்னனுடன் மிக உறவு கொண்டு வாழ்ந்து வந்தனர். இது போன்றே அலெக்சாந்தரும் இவர்களுடன் மிக நட்புடன் இருந்தான்; எனினும் அவனுக்குப் பின்னர் இந்நட்பு முறியவே கெல்ட் மக்கள் மாசிடோனிய அரசனை தாலமியைப் (Ptolemy keraunos) போரில் வென்று (கி. மு. 280) கொன்றனர் என்பர். 4ஆம் நூற்றாண்டு கிரேக்க ஆசிரியர் கள் இவர்களைப் புகழ்ந்து கூறியுள்ளமை காணலாம்.[2]

இவ்வாறு வெற்றியுடன் வாழ்ந்த இவர்கள் கி. மு. மூன்றா வது நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்தனர். இது வரையிலும் இவர்களுக்கு அஞ்சி ஒடுங்கியிருந்த ஜெர்மானியர்கள் வன்மை பெற்றனர். கி. மு. 278இல் கெல்ட் மக்கள் ஆசியா மைனரில் தங்கள் ஆட்சியை நிறுவிய போதிலும் மிகவும் பலம் குன்றியவர்களாகவே இருந்தனர்.

---

1. Douglas Hyde, *ibid*. p. 11.
2. *ibid*. p. 6.

கெல்ட் மொழிகளுடன் இத்தாலிய மொழிகள் தொடர்புடையவைகளாகக் காணப்படுகின்றன. பலமொழியியல் அறிஞர்கள் இந்நிலையில் இத்தாலோ கெல்டிக் எனும் பிரிவினையைக் காணுவர்.[1] ஒலியியலும் இலக்கண அடிப்படையிலும் இப்பிரிவினை பொருந்துவதாகவே உள்ளது. எனக் கூறுவர் பலர்.[2] இதனல் சிலர், பண்டு இத்தாலியர்களும் ஜெர்மானியர்களும் கெல்ட் மக்களும் டெனூப் பகுதியில் ஒன்ருக வாழ்ந்திருக்கலாம் என எண்ணுகின்றனர்.[3] கி. மு. 1200 க்கு முன்னர் இத்தாலியர்கள் இத்தாலியில் குடியேறும் முன்னர் இவர்கள் ஒன்ருக வாழ்ந்திருந்திருக்கலாம் என எண்ணுகின்றனர் பல மொழியியல் அறிஞர்கள்.

இத்தாலிய மொழிகளில் லத்தீன், ஆஸ்கோ-உம்பிரியன் மொழிகளில் காணப்படும் சில பண்புகள் கெல்டிக் மொழிகளிலும் உள்ளன. குறிப்பாக, லத்தீன், இந்தோ ஐரோப்பிய மொழியில் காணப்பட்ட $q^w$ ஒலியிலிருந்து *q* ஒலியினைப் பெற்றதுபோன்று கெல்ட் மொழியின் ஒரு பிரிவான கேயலிக்- (Gaelic) மொழிகள் *q* ஒலியைக் கொண்டிருப்பதும், ஆஸ்கோ உம்பிரியன் மொழிகள் *p* ஒலியினைப் பெற்றதுபோன்று கெல்டிக்கில் மற்ருெரு பிரிவான பிரிட்டானிக் (Brittanic) மொழி

---

1. The Celtic language is in a manner allied to that of Italy, as is shown by its *grammar*, and out of all the circle of Indo-European languages the Latin comes nearest to it, and it and the Latin possess certain grammatical characteristics in common which are absent from the others. To account for these we may assume what may be called an Italo-Celtic period, prior, probably, to the establishment of the Italian races in Italy, perhaps some twelve hundred years before Christ.

Douglas Hyde, *ibid* pp. 11-12.

2. J. Morris Jones, A Welsh Grammar, p. 2.

3. R. Priesbsch, The German Language, p. 13.

கள் *p* ஒலியினைக் கொண்டுள்ளதும் காணத்தக்கதாம்.[1] இவ்வடிப்படையில் மொழிநூலோர் கெல்ட் மொழிகளை '*q*' பிரிவு, '*p*' பிரிவு என இருவகைகளாகப் பிரிப்பர். முதல் பிரிவில் ஐரிஷ், ஸ்காட்டிஷ், கேயலிக், மேங்ஸ் மொழிகளும் *p* பிரிவில் வெல்ஷ், கார்னிஷ், பிரிட்டன் மொழிகளும் அடங்கும்.

| இத்தாலிக் | | கெல்டிக் | |
|---|---|---|---|
| லத்தீன் | ஆஸ்கோ-உம்பிரியன் | கேயலிக் | பிரிட்டானிக் |
| $Q^w \to q$ | $Q^w \to p$ | $Q^w \to q$ [*k*] | $Q^w \to p$ |
| *quattuor* | *petora* (ஆஸ்) | *ceithre*(ஐரிஷ்) *kiare*(மேங்ஸ்) *ceithear* (கேயலிக்) | *petor* (காலிஷ்) *pedwar* (வெல்ஷ்) *peswar* (கார்னிஷ்) *peswar* (பிரிட்டன்) |
| *quingue* | | *cūig* (ஐரிஷ்) *queig*(மேங்ஸ்) | *pump* (வெல்ஷ்) |

கி. பி. மூன்றும் நூற்றுண்டில் காலில் (பிரான்சு) இம் மக்கள் ரோமர்கட்குக்கீழ் அடங்கி வாழ்ந்தனர். இதை ஒட்டி

1. Now the original Indo-European tongue possessed a peculiar *q* sound which was treated differently by the various groups. In the Italic group, for instance, Latin retained the *q*, whilst Oscan and Umbrian changed it to *p*. A similar dualism is found in Celtic. Most of the Celts appear to have substituted the labial for the gutteral and it seems likely that at the beginning of our era *p* was pronounced nearly everywhere in Gaul and Great Britain. The gutteral was retained in Ireland, where later on possilbly in the fifth century, it became a simple *k* written *c*. We may therefore speak of p-Celts and q-Celts, the former being also known, as our islands are concerned, as Brythons, the latter as Goidels.

J. J. Kneen, A Grammar of the Manx language, p. 2.

லத்தீன் மொழியினைக் சற்று வரவே இவண் வழங்கிய காலிஷ் மெதுவாக வழக்கிறந்து மறைந்தது. கி. பி ஆரும் நூற்ருண்டு வரையிலும் நாட்டுப் புறங்களில் ஆங்காங்கே வழங்கிவந்த இம்மொழி இதன் பின்னர் ஒரு சில (50) கல்வெட்டுக்களை விட்டு விட்டு மறைந்தொழிந்தது. கெல்ட் மொழிகளில் இதன் கண்ணேயே பழைய எழுத்துச் சான்றுகள் உள்ளன என்பர். பிரான்சு, வட இத்தாலி போன்ற இடங்களில் கிடைக்கும் இக்கல்வெட்டுக்கள் தவிர இதன்கண் ஒருசில மக்கள் பெயர் களும் இடப்பெயர்களுமே கிடைத்துள்ளன. இதுவும் பிரிட் டானிக் மொழிகளைப் போன்று *p* பிரிவினுள் அடங்கு வதாகும்.

கி. மு. 1000க்கு முன்பே பிரிட்டிஷ் தீவுகளில் கெல்ட் மக்கள் குடியேற ஆரம்பித்து விட்டனர் எனக் கூறுவர். இம்மக்களின் குடியேற்றம் பற்றிப் பல்வேறு கொள்கைகள் உள்ளன. முதன் முதலில் ஐரிஷ் மக்கள் அயர்லாந்தில் குடியேறினர் என்றும், பின்னர்ப் பல்வேறு காலங்களில் பல வேறு கூட்டமாகக் குடியேறிய வண்ணமாக இருந் தனர் எனவும் கூறுவர். ஒரு பிரிவினர் சித்தியாவிலிருந்து ஆப்பிரிக்கா சென்று, பின்னர் ஸ்பெயின் வந்து, அங்கிருந்து கால் சென்று அவண் இருபிரிவினராகப் பிரிந்து, ஒரு பிரிவினர் பிரிட்டன், அயர்லாந்து சென்றுறைந்தனர் என்றும் இன்னெரு குழுவினர் இத்தாலி போன்ற இடங்களில் குடியேறி, டெனுப் பகுதிகளிலெல்லாம் சென்றுறைந்தனர் என்றும், மற்ருெரு பிரிவினர் சித்தியாவிலிருந்து ஐரோப்பா வில் ஸ்கேண்டிநேவியா வந்து, பின்னர் ஜெர்மன் சென்று அங்கிருந்து பிரிட்டன் போன்ற இடங்களில் வந்துறைந்தனர் என்றும் கருதுகின்றனர்.[1] கால வரையறைகளிலும், இவண் வந்துறைத்த குழுக்களின் எண்ணிக்கையிலும் அறிஞர்களி

1. Charles Meyer, in Three Linguistic Dissertations read at the meeting of the British Association in Oxford.
(by Chevalier Bunsen, Dr. Charles Meyer and Dr. Max Muller) pp. 301–304.

டையே சில கருத்து வேற்றுமைகள் இருந்தபோதிலும் பல வேறு கூட்டமாகவே இம்மக்கள் பிரிட்டனில் வந்துறைந்த னர் என்பதில் அறிஞர்களிடையே கருத்து ஒற்றுமையைக் காணலாம்.

முன்னர்க் குறிப்பிட்டது போன்று இம்மொழிகளை இரண்டு பெரும்பிரிவுகளாகப் பிரிப்பர். *q* பிரிவினைக் கேயலிக் (Gaelic) எனவும், *p* பிரிவினைப் பிரிட்டானிக் (Brittanic) எனவும் மொழி நூலோர் அழைப்பர்.[1] இவற்றுள் கேயலிக்

(1) ஐரிஷ் (*Irish*)
(2) ஸ்காட்டிஷ் கேயலிக் (*Scottish Gaelic*)
(3) மேங்ஸ் (*Manx*)

என மூன்று மொழிகளையும் பிரிட்டானிக்

(1) வெல்ஷ் (*Welsh*)
(2) கார்னிஷ் *Cornish*
(3) பிரிட்டன் (*Britton*)

என மூன்று மொழிகளையும் கொண்டுள்ளன.

இன்றைய ஐரிஷ், ஸ்காட்டிஷ் கேயலிக், மேங்ஸ் என்ற மூன்று மொழிகளும் பொதுவான ஒரு மொழியினின்றும் உருவானவை. இத்தாய்மொழியைப் பொது கேயலிக் என அழைப்பர். இதற்குத் தாயாக அமைந்திருந்த பழம் மொழியை கோயடலிக் (Goedelic) என அழைப்பர் மொழி நூலார். இது ஒரு உருவக மொழியேயன்றி உண்மை யாகவே மக்களால் பேசப்பட்டதன்று.

---

1. Until fairly recently, the term *Brythonic*, coined by Rhys, was regularly used to describe the language brought to Britain by the bearers of that variety of primitive Celtic speech known as p-Celtic, spoken there all through the Roman period, and subsequently divided into the Welsh, Cornish, and Breton of mediaeval and modern times. Of late there has been an increasing tendency to use *Brittonic* instead.

Kenneth Jackson, Language and History in Early Britain, p. 3.




கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் அயர்லாந்திலிருந்து பலர் ஸ்காட்லாந்தில் குடியேறியபோது கேயலிக் மொழியும் அவண் காலூன்றியது. சிலர் ‘கெல்ட் மக்கள் பிரிட்டிஷ் தீவுகளில் குடியேறியபோது ஸ்காட்லாந்தில் குடியேறிய மக்களின் மொழியும் அவண் வழக்கிலிருந்த பிக்டிஷ் மொழியும் கலந்த கலப்பினால் ஸ்காட்டிஷ் கேயலிக் உருவாகி வளர்த்தது’ எனக் கூறுவர். ஆனால் இக்கொள்கை பொருந்தாது என்பார் ஜாக்சன்.[1] கி. பி. ஐந்தாவது நூற்றாண்டிலேயே அயர்லாந்து மக்கள் ஸ்காட்லாந்தில் குடியேறியபோதிலும் இவ்விருநாட்டு மொழிகளும் பல நூற்றாண்டுகள் ஒன்றாகவே வளர்ந்தன. இவ்விரு நாடுகட்குமிடையே இருந்து வந்த பலவிதமான தொடர்புகளால் கி. பி. 10 அல்லது 13 ஆவது நூற்றாண்டு

---

1. Kenneth Jockson, Common Gaelic, (in the Proceedings of the British Academy Vol. XXXVII, 1951) p. 72.

வரையிலும் வேறு வேறு மொழிகளாகப் பிரிந்து விடவில்லை என்றும், இக்காலப் பகுதிக்குப் பின்னர்தான் வேற்றுமைக் கூறுகள் வளர்ந்து இருமொழிகளாகப் பிரிந்தன என்றும் கூறுவர் பலர்.

12ஆவது நூற்றுண்டு வரையிலும் ஸ்காட்டிஷ் கேயலிக்கில் எந்தவிதமான எழுத்துச் சான்றும் உருவாக வில்லை. 12ஆம் நூற்றுண்டில் எழுதப்பட்ட நூலொன்றில் தான் (Book of Deer) இம்மொழிக் சொற்களையும் கூறுகளை யும் காணமுடியும். முன்னர்க் குறிப்பிட்டதுபோன்று இவ் விரு மொழிகளிடையே 10–12ஆம் நூற்றுண்டுகளில் வேற்று மைகள் வளரத் தொடங்கி இரு வெவ்வேறு மொழிகளாகப் பிரிய ஆரம்பித்த நிலையிலும், இலக்கிய மொழி ஒன்ருகவே இருந்து வந்தது. இந்நிலை 16அல்லது 17ஆம் நூற்றுண்டு வரையிலும் நீடித்தது. ஸ்காட்லாந்து மக்கள் அயர்லாந்தில் வழங்கி வந்த மொழியினைச் சிறந்தது என எண்ணி, அதனையே தங்கள் இலக்கியங்களிலும் பயன்படுத்தி வந்தனர். இதனுல்தான் 1690-இல் ஸ்காட்லாந்தில் வெளி யான முதல்வேதாகமம் 1685இல் அயர்லாந்தில் வெளிவந்த வேதாகமத்தை ஒத்திருக்கக் காண்கிறேம். பேச்சுமொழி யினின்றும் இம்மொழி மிக மாறுபட்டிருந்ததால் ஸ்காட்லாந்து மக்கள் இவ் வேதாகமத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை எனப் பாதிரிகள் கூறியுள்ளனர் என்பர். ஸ்காட்லாந்து எழுத்தாளர்கள் அயர்லாந்து மொழியினைப் பின்பற்றி அம் மொழியில் எழுதினமையாலும் பெரும்பான்மையான இலக்கியங்கள் அயர்லாந்தில் எழுந்தமையாலும் இவ் விலக்கிய மொழியினை மக்கள் ஐரிஷ் எனவே அழைத்து வந்தனர். எனினும் இது இவ்விரு நாடுகட்கும் பொதுவானது என்பதை நாம் மறந்துவிடுதலாகாது. இவ் விலக்கிய மொழியினைச் சிலர் 'Classial Common Gaelic' என்பர். இவ்விரு நாடுகளின் பேச்சுமொழிகளின் கூறுகள் இதனுடன் கலந்து வளர்ந்தபோது ஐரிஷ், ஸ்காட்டிஷ் கேயலிக் மொழிகள் தனித்தனியாக உருப்பெற்றன.

ஸ்காட்டிஷ் கேயலிக் கூறுகளைப் பன்னிரண்டாம் நூற்றுண்டு முதலே காணலாமெனினும், இலக்கிய மொழியைப் பொறுத்த மட்டில் 16ஆம் நூற்றுண்டில் தோன்றிய நூலொன்றுதான் இதன் பழைமையான இலக்கியச் சான்ருக இருத்தல் காண் கிறேம்.[1] இவ்வாறு பல நூற்றுண்டுகள் ஒரே இலக்கிய மொழி யினைக் கொண்டிருக்கக் காரணம் இவ்விரு நாட்டு மக்களி டையே நிலவி வந்த பலவிதமான தொடர்புகள் தான் என்பர். 17ஆம் நூற்றுண்டில் இத்தொடர்பு அற்றபோது, இவை களுக்கிடையே முன்னரே தோன்றியிருந்த வேற்றுமைக் கூறுகள் பல்கிப் பெருகித் தனித்தனி மொழிகளாக வளர்ந்தன.

இது போன்றே மேங்ஸ் மொழியின் கண்ணும் பழைமை யான எழுத்துச் சான்றுகள் எதுவும் கிடையாது. 1624இல் பிஷப் பிலிப் எழுதிய தொழுகை நூலே (Prayer Book) இதன் முதல்நூலாகக் காணப்படுகின்றது. அயர்லாந்திலிருந்து கி.பி. 4ஆவது நூற்றுண்டில் மேன்தீவில் குடியேறிய மக்களின் வாயிலாக வந்த கேயலிக் மொழியே மேங்ஸ் மொழியாக மாறி வளர்ந்துள்ளது. இதே காலப் பகுதியில்தான் அயர் லாந்து மக்கள் ஸ்காட்லாந்து சென்றுறைந்தனர் என்பதும் இவண் நினைவு கூரத்தக்கது. ஸ்கேண்டிநேவிய ஆட்சியின் போது இவ்விரு மக்களும் மிகத் தொடர்புடன் வாழ்ந்து வந்த தால் இவ்விரு மொழிகளினிடையே பல ஒற்றுமைக் கூறு களைக் காணமுடியும். இடைக்காலத்தில் மேங்ஸ், ஸ்காட் லாந்து கேயலிக்குடன் மிகத் தொடர்புடன் விளங்கியதால் ஐரிஷ் மொழியினை மேற்கு கேயலிக் எனவும் இவ்விரண்டையும் இணைத்துக் கிழக்கு கேயலிக் எனவும்

---

1. The earliest certain examples of popular Scottish Gaelic are contained among the poems in the Book of the Dean of Lismore[2] which dates from the first quarter of the sixteenth century, but written material in it does not begin to become common until the seventeenth and especially the eighteenth century.

*Ibid*. p. 76.

பெயரிட்டழைக்கும் வழக்கத்தினைக் காணலாம். கி. பி. 15 அல்லது 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே இவற்றினிடையே வேற்றுமைகள் வளர்ந்து தனி மொழிகளாக உருவெடுத்தன.[1]

கேயலிக்




கேயலிக் மொழிகளின் வரலாற்றில் கி. பி. 10,13ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதி மிகவும் முக்கியம் வாய்ந்த பகுதியாகும். இக்காலப் பகுதியில்தான் கேயலிக் கிழக்கு, மேற்கு மொழிகளாகப் பிரிந்தன. எழுத்து மொழியில் ஐரிஷ் (பொது

---

1. We may reasonably suppose that these linguistic features which are common to Eastern Gaelic but not found in Western came into existence after the divergence of West and East, but before Manx and Scottish Gaelic had become markedly differentiated following on their political severence: that is before say the fifteenth century. Also that these charecteristics of the earliest Manx which are clearly innovations and are not found in Scottish Gaelic or Irish are presumably later than the thirteenth or fourteenth century but earlier than about 1625; just as analogous in the oldest certain body of popular Scottish Gaelic, contained in the Book of Dean of Lismore, are likewise later than the thirteenth or fourteenth century but older than the first quarter of the sixteenth.

Kenneth Jackson, *ibid.* pp. 78–79.

கேயலிக்) பல நூற்றுண்டுகள் ஸ்காட்லாந்தில் பயன்பட்டு வந்த போதிலும் பேச்சு மொழியில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வளர்ந்தது. கி. பி. 5ஆம் நூற்றுண்டு முதல் 10ஆம் நூற்றுண்டு வரையிலும் ஏற்பட்ட மாறுதல்கள் அனைத்தும் எல்லா மொழிகளிலும் காணப்படும். கி. பி. 12ஆம் நூற்றுண்டில் ஸ்காட்லாந்து கேயலிக்கில் ஒருசில மாற்றங்கள் ஏற்பட்டாலும் கி. பி. 13ஆம் நூற்றுண்டில்தான் தனிமொழிகளாகப் (கிழக்கு-மேற்கு மொழிகள்) பிரிந்தன. 13, 14ஆம் நூற்றுண்டுகளில் ஒரே மொழிக் கூறுகளைக் கொண்டு விளங்கிய மேங்ஸ், ஸ்காட்லாந்து மொழிகள் 15, 16ஆம் நூற்றுண்டுகளில் தனித்தனியாகப் பிரிந்தன.[1]

---

1. The conclusion of the whole argument this evening may be now summed up. First there is absolutely nothing to suggest that the Gaelic of Ireland, Scotland, and Man differed in any respect before the tenth century; and on the contrary, there is a body of decisive positive evidence tending to show that so far as we can tell they were identical. Second, Eastern and Western Gaelic continued to be one language, sharing many new developments in common, from the tenth until the thirteenth century; but at the same time there are one or two significant indications, the oldest belonging to the tenth century, which point to the beginnings of the divergence between them. Third, the final break between East and West in the spoken tongue came in the thirteenth century, after which neither shared new creations with the other except by independent coincidence[1]. Fourth, in the thirteenth and fourteenth centuries, and possibly later, Scottish Gaelic and Manx continued for the most part to grow as one single language; but probably by the fifteenth century and demonstrably by the sixteenth they had at last become separated.

*ibid*, pp. 91–92.

### 1.4. 1 ஐரிஷ் (Irish)

இன்று இம்மொழி பேசுவோராக 500,000க்கும் அதிகமான மக்கள் உள்ளனர். அயர்லாந்தில் வாழும் இவர்கள் ஆங்கில மொழியையும் நன்கு பேசுகின்றனர். அயர்லாந்தின் அரசியல் மொழியாக விளங்குவது இம்மொழி. ஐரிஷ் மொழிக்கும் ஸ்காட்டிஷ் மொழிக்குமிடையே வேறுபாடு மிகக் குறைவு என்பர் பலர்.

ரோமன் எழுத்து முறையினுல் எழுதப்படும் இம் மொழியின்கண் ஐந்து உயிர்களும் பதின்மூன்று மெய்களும் உள்ளன. தமிழைப் போன்றே இவ்வுயிர்கள் குறில், நெடில் வேற்றுமையைக் காட்டும்.

இதன்கண் ஒருமை, பன்மையைக் குறிக்கும் சிறப்புச் சுட்டுக்கள் உள்ளன. *'an'* ஒருமையையும் *'na'* பன்மையையும் குறிக்கும்.

ஐரிஷ் பெயர்கள் ஆண், பெண், பால்களையும் ஒருமை, பன்மை எண்களையும் கொண்டுள்ளன. ஆண்களைக் குறிப்பன ஆண்பாலாகவும் பெண்களைக் குறிப்பன பெண் பாலாகவும் காணப்படுகின்றன. எனினும் பிற மொழிகளிலுள்ள அஃறிணைச் சொற்கள் அவற்றின் இறுதிக்கேற்ப ஆண் பெண்பாலாக உள்ளன.[1] எடுத்துக் காட்டாக *-e,-aeht,-az*

---

1. In a general way, every noun meaning a male person or animal is masculine, and every noun meaning a female person or an animal is feminnine. But whereas in English things are generally neuter, there is no neuter gender in Irish. In this respect Irish is like French, and you have to learn the rules. The endings of words have much to do with gender, and we cannot depend on the meaning.

Myles Dillon and Donnacha O Croinin, Teach Yourself Irish, p. 71.

போன்ற இறுதிகளால் முடியும் வெண்மை, கூர்மை, இனிமை போன்ற நுண்பொருள் காட்டும் சொற்கள் பெண்பாலாக உள்ளன. பொதுவாக இம்மொழிப் பெயர்களில் ஒருமை, பன்மைகளே உள்ளன எனினும் கண், காது, கை போன்று இணையாக இருக்கும் பொருள்களைக் குறிக்கும் சொற்களில் இருமைக்கூறு காணப்படுகின்றது என்பர் இலக்கண நூலோர்.[1]

எழுவாய், செயப்படுபொருள், அது, கு, விளி என்ற வேற்றுமைகள் உள்ளன. பிற வேற்றுமைப் பொருள்கள் பல் வேறு முன்னுருபுகளால் உணர்த்தப்படுகின்றன. வேற்றுமை உருபுகள் பெயர்களின் பால், எண்களுக்கேற்ப மாறும் தன்மையன. செயப்படுபொருளுக்கெனத் தனி வேற்றுமை உருபு எதுவும் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| எழுவாய் | *an* | *bád* | *the boat* (ஆண்பால்) |
| ஐ | *an* | *bád* | *the boat* |
| அது | *an* | *bháid* | *of the boat* |
| கு | *den* | *bhád* | *to the boat* |
| விளி | *a* | *bháid* | |

பன்மை

| | | |
|---|---|---|
| எழுவாய் | *na* | *báid* |
| ஐ | *na* | *báid* |
| அது | *na* | *mbád* |
| கு | *dosna* | *badáibh* |
| விளி | *a* | *bháda* |

இம்மொழி வினைச்சொற்கள் காலம், எண், இடம் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டும். வேர்ச் சொற்களுடன் விகுதிகள் இணைந்து காலம், எண் காட்டுகின்றன. இவ்விகுதிகள் கால இடைநிலைகட்கேற்ப மாறும் தன்மையன.

ஐரிஷ் மொழியின் வரலாற்றை அறிஞர்கள் பழைய ஐரிஷ் காலம், (600 A. D. – 900 A. D.), இடைக்காலம்

1. *ibid*, p. 72.

(900—1200 A. D.), தற்காலம் (1200 A.D.) என மூன்று பிரிவு களாகப் பிரிப்பர். இக்காலப் பகுதியில்தான் (1600 A.D.) ஸ்காட்டிஷ் கி. பி. ஐந்தாவது நூற்றுண்டில் ஸ்காட்லாந்தில் குடியேறிய ஐரிஷ் மொழியினர் பேசி வந்த மொழியினின்றும் பிறந்ததே ஸ்காட்டிஷ் கேயலிக். இன்றைய ஐரிஷ் மொழியில் நான்கு முக்கிய கிளைமொழிகள் உள்ளன என்பர்.[1]

கி.பி. ஐந்தாம் நூற்றுண்டிலும் ஆரும் நூற்றுண்டிலும் எழுதப்பட்ட பல கல்வெட்டுக்கள் அயர்லாந்திலும் பிரிட்டனிலும் கிடைத்துள்ளன. இவை ஓகம் (Ogam) எழுத்தில் எழுதப்பட்டவை. இவை தவிர எட்டாம் நூற்றுண்டு முதல் பதினென்றும் நூற்றுண்டு வரையுள்ள காலப்பகுதிகளில் எழுதப்பட்ட 'பேகன்' (Pagan) இலக்கியங்களும் இம்மொழியின்கண் காணக் கிடக்கின்றன. கெல்டிக் மொழிகளில் ஏராளமான இலககியங்களைக் கொண்டு விளங்குவது இம் மொழியே.

---

1. Anthropological Linguistics, Vol. 7, No. 8, (1965), pp. 94–95.

Of early dialects we have little knowledge; but the modern language has four great dialectic divisions : Munster, Leinster, Connacht and Ulster, of which Munster has been chosen by the Government of Eire to serve as the basis of the standard dialect.

Louis H. Gray, Foundations of Language, p. 342.

## 1. 4. 2 மேங்ஸ் (Manx)

கெல்டிக் மொழிகளில் கோடலிக் (Goidelic) பிரிவினைச் சார்ந்த இது இன்று மேன் தீவில் (Isle of Man) வழக்கற்று விட்ட நிலையில் உள்ளது. 19ஆவது நூற்றுண்டு முதலே பள்ளி களிலும் கோயில்களிலும் வழக்கற்றுவிட்ட இம்மொழி பழைய ஐரிஷ் மொழியினின்றும் பிறந்ததாகும்.[1] நான்காம் நூற்றுண்டில் அயர்லாந்திலிருந்து மேன் தீவில் குடியேறிய மக்கள் தங்களுடன் அவர்கள் மொழியான பழைய ஐரிஷையும் உடன் கொண்டு சென்றனர்.[2] இந்நிலையில் இது ஐரிஷினின்றும் வேறுபட்டுத் தனி மொழியாக வளரத் தலைப்பட்டது.

கி. பி. ஐந்தாம், ஆறும் நூற்றுண்டுகளில் ஐரிஷ் பாதிரிமார்களால் கிறிஸ்தவ மதம் இவண் புகுந்தபோது ஏராளமான லத்தீன் சொற்கள் இம்மொழிச் சொற்களுடன் கலந்தன.

---

1. Writing in 1859 the Rev. William Gill, vicar of Malew, says: The decline of the spoken Manx, within the memory of the present generation has been marked. The language is no longer heard in our courts of law, either from the bench or the bar, and seldom from witness box. The courts are indeed still fenced[1] in Manx, according to ancient traditionary form; and the Island laws are still promulgated in that language on the Tynward Mount, where the last lingering accents of the Gaelic accent in Manx-once the language of the Europe, the universal language of the British Isles-will probably be heard.......... It is rarely now heard in conversation, except among the peasantry. It is a doomed language-an iceberg floating into southern latitudes!

J. J. Kneen A Grammar of the Manx Language, pp. 14–15

2. Kenneth Jackson, Common Gaelic, (in Proceedings of the British Academy, Vol. XXXVII, 1951, pp. 77–78.

இது போன்றே 9, 10, 11ஆம் நூற்றுண்டுகளில் இந்நாடு வைக்கிங் ஆட்சிக்குக் கீழ்ப்பட்ட நிலையில் அதிகமான ஸ்கேண்டிநேவியச் சொற்கள் கலந்ததுடன் பல ரூனிக் கல் வெட்டுக்களும் ஆங்காங்கே எழுதப்பட்டன. வைக்கிங் மக்கள் கடல் வாணிபத்திலும் பிற துறைகளிலும் சிறந்து விளங்கிய தால் ஓடம், கப்பல் போன்ற பல சொற்களைப் பழைய நோர்ஸ் அல்லது ஸ்கேண்டிநேவியனிலிருந்து பெற்றுள் ளமை காணலாம். இன்று பழங்காலத்துக் கல்வெட்டுக்களாக இவண் கிடைப்பனவற்றில் பெரும்பாலன ரூனிக் கல் வெட்டுக்களே என்பர்.[1] எனினும் இம்மொழியின்கண் ஆங்கில மொழியின் செல்வாக்கினையே அதிகமாகக் காணமுடியும். பலவேறு காலங்களில் பலவேறு சொற்களை ஆங்கிலத்தினின் றும் பெற்றுள்ளது இம்மொழி.

பதினேழாவது நூற்றுண்டுமுதல்தான் இம்மொழியின் கண் கையெழுத்துப் பிரதிகள் உருவாக ஆரம்பித்தன. ஜாண் பிலிப்ஸ் என்ற பிஷப் ஒருவரால் மொழி பெயர்க்கப் பட்ட தொழுகை நூல்தான் (Prayer Book) இதன்கண் தோன் றிய முதல் நூல்.[2] இது கி. பி. 1624ஆம் ஆண்டிலேயே எழுதப்பட்டிருந்த போதிலும் 1895இல் தான் அச்சிடப் பட்டது. எனினும் பதினேழாம் நூற்றுண்டு முதல் பலவேறு சமயச் சார்பான நூல்களும் சட்ட திட்டங்களும் இதன்கண் தோன்ற ஆரம்பித்தன. 1775இல் மொழி பெயர்க்கப்பட்டு வெளியான வேதாகமமே இம்மொழியில் வந்த முதல் முழு

1. J. J. Kneen, *ibid*. p. 7.

2. The earliest book known to have been written in Manx is a translation of the Book of Common Prayer.

It was written by or for John Phillips, bishop of Sodor and Man, between 1625 and 1630, but the manuscript remained unprinted until 1895, when it was published by Manx Society.

J. J. Kneen, *ibid*. pp. 9–10.

வேதாகமம். 1804இல் ஜாண் கெல்லி இம்மொழியின் முதல் இலக்கண நூலொன்றை வெளியிட்டார். லத்தீன், கிரேக்க இலக்கணங்களுக்கேற்ப இது எழுதப்பட்டிருப்பினும் சிறந்த பண்புகள் பல நிறைந்து காணப்படுகிறது என்பர் அறிஞர்கள்.[1]

பல நூற்றாண்டுகளாக மக்களின் பேச்சுமொழியாக விளங்கிவந்த மேங்ஸ் பத்தொன்பதாவது நூற்றாண்டில் வழக்கிறந்து அழிய முற்பட்டது. எல்லாப் பள்ளிகளிலும் கோயில்களிலும் வழங்கி வந்த இம்மொழி படிப்படியாகத் தன் நிலையில் குன்றியது. மாதம் மூன்று ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரமே இம்மொழியில் சமயச் சொற்பொழிவுகளும் ஆராதனைகளும் நடைபெற்றன. பின்னர் இவை மாதம் இரண்டு நாட்களாகவும் சிறிது காலத்திற்குப் பின்னர் ஒன்றாகவும் குறைக்கப்பட்டதுடன் 1871இல் கல்வி நிலையங்களினின்றும் மறைந்தது. இன்று இம்மொழி பேசுவோராக ஒரு சிலரே உள்ளனர்.[2]

ஐரிஷ், ஸ்காட்டிஷ் மொழிகளுடன் மிகத் தொடர்புடையது இம்மொழி. கேயலிக் (Gaelic) என்ற சொல் பொதுவாக இம்மூன்று மொழிகளையும் குறிக்கும். இவற்றுள் மேங்ஸ் வட ஐரிஷ் மொழியுடனும் ஸ்காட்டிஷ் மொழியுடனும் நெருங்கிய தொடர்புடன் காணப்படுகிறது என்றும் அயர்லாந்தின் தென்பகுதியில் பேசப்படும் கிளை மொழி பழமைக் கூறுகள் பல கொண்டுள்ளது என்றும் கூறுவர் மொழிநூலோர்.[3]

ரோமன் எழுத்து முறையைப் பயன்படுத்தியே இம்மொழியை எழுதி வந்தனர். ஆனால் இந்நாட்டில் கிடைக்கும் பழைய எழுத்துச் சான்றுகள் லத்தீன் எழுத்து முறையில் மட்டுமின்றிப் பிற எழுத்துக்களாலும் எழுதப்பட்டுள்ளமை காணலாம். முன்னர்க் குறிப்பிட்டது போன்று ஸ்கேண்டி

1. *ibid*. p. 15.
2. Louis H. Gray, Foundations of Language, p. 342.
3. J. J. Kneen, *ibid*. p. 24.

நேவிய ஆட்சிக் காலத்தில் தோன்றிய ரூனிக் கல்வட்டுக்கள் மட்டுமின்றி ஐரிஷ் நாட்டினின்று இவண் புகுந்த ஓகம் முறையில் எழுதப்பட்ட ஐந்து சிறிய கல்லறைக் கல்வெட்டுக் களும் காணப்படுகின்றன. இவ் வெழுத்துமுறை அயர்லாந்தின் தென்பகுதி அல்லது தென் மேற்குப் பகுதியில் தோன்றியிருக் கலாம் என எண்ணுகின்றனர்.[1] சில நேர்கோடுகளால் ஆன இவ்வெழுத்து முறையில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் அயர்லாந்து, வேல்ஸ் போன்ற பிற இடங்களிலும் காணப்படு கின்றன.

ரோமன் எழுத்து முறையினுல் எழுதப்படும் இம்மொழி யின்கண் மூக்கொலி உயிர்களும் (nasal vowels) குறில், நெடில் வேற்றுமைகளும் காணப்படுகின்றன.

இம்மொழிப் பெயர்கள் ஆண், பெண் பால்களையும்[2] ஒருமை, பன்மை எண் பகுப்பினையும்[3] எழுவாய், ஐ, அது, கு, விளி என்று நான்கு வேற்றுமைகளையும் கொண்டுள்ளன[4] ஆண், பெண் பகுப்பினை கொண்ட பொருள்களைக் குறிக்கும் சொற்கள் முறையே ஆண், பெண்பால் சொற்களாக உள்ளன. இயற்கைப் பால் பகுப்பற்ற பொருளைக் குறிக்கும் சொற்கள் அவைகள் கொண்டு முடியும் ஒலிகளுக்கேற்ப ஆண், பெண் பாலாக உள்ளன. நாடு, நகரம், ஆறு போன்ற வற்றின் பெயர்கள் பெரும்பாலும் பெண்பாலாகக் காணப்படு கின்றன. பெயர்கள் அவை ஏற்கும் உருபுகளுக்கேற்ப பல வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.[5]

---

1. The pagan Irish introduced into Man a curious method of writing called Ogham which they employed on the edges of stones they set up to commomerate their dead. The alphabet was probably developed in the south and south-west of Ireland, and is also found in Wales, Devon and Man.
   *ibid.* p. 5.
2. J. J. Kneen, *ibid.* p. 49.
3. *ibid.* p. 51.
4. *ibid.* p. 52.
5. *ibid.* pp. 53–61.

| | | |
|---|---|---|
| எழு. | கியர்க் | (*kiark*) பெட்டைக்கோழி |
| ஐ | கியர்க் | (*kiark*) |
| அது | கிர்க்கே | (*kirkey*) |
| கு | கிர்க் | (*kirk*) |
| விளி | (க்) கியர்க் | (*chiark*) |

பன்மை

| | | |
|---|---|---|
| எழு. | கியர்க்கேன் | (*kiarkeyn*) |
| ஐ | கியர்க்கேர் | (*kiarkeyr*) |
| அது | கியர்க் | (*kiark*) |
| கு | கியர்க்கேன் | (*kiarkeyn*) |
| விளி | (க்) கியர்க்கேன் | (*kiarkeyen*) |

பெயர்களைப் போன்றே பெயரடைகளும் முன்னால் பால் எண் வேற்றுமைகளுக்கேற்ப மாறி வந்தன என்பர் இலக்கண ஆசிரியர்கள். இன்றைய மேங்ஸ் மொழியில் வேற்றுமைகள் அதிகமாகக் காணப்படுவதில்லை.[1]

ஒருமை

| | ஆண் | பெண் | |
|---|---|---|---|
| எழு, ஐ | கியல் (*gial*) | (க்) கியல் | (*ghial*) |
| அது | கில் (*gil*) | (க்) கில்லே | (*ghilley*) |
| கு | கியல் | (க்) கில் | |
| விளி | கில் | (க்) கியல் | (*ghial*) |

பன்மை

ஆண், பெண்

| | |
|---|---|
| கியல்லே | (*gialley*) |
| கியல் | (*gial*) |
| கியல்லே | |
| கியல்லே | |

ஒளியான (*bright*)

1. Formerly in Manx the adjectives would agree with the noun which it qualified in gender, number and case.
*ibid*. p. 62.

இம்மொழி வினைச்சொற்கள் காலம், இடம், எண் போன்ற இலக்கணக்கூறுகளைக் காட்டும். இதன்கண் ஆங்கிலத்தைப் போன்று பால் காட்டாத வினைமுற்றுக்களை யும் தமிழ் போன்று பால் காட்டும் வினைமுற்றுக்களையும் காண லாம். இறந்த காலம் காட்டும் வினைமுற்றுக்கள் ஆங்கிலம் போன்று விகுதியின்றி வருவதும் நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும் காட்டுவன விகுதி பெற்றும் பெருமலும் வருவ தும் இம்மொழியின் ஒரு விசேடப் பண்பாக உள்ளது.[1]

| | | | |
|---|---|---|---|
| வோல் மீ | (*voyll mee*) | புகழ்ந்தேன் | |
| வோல் ஓ | (*voyll oo*) | புகழ்ந்தாய் | |
| வோல் ஏ | (*voyll eh*) | புகழ்ந்தான் | |
| வோல் ஈ | (*voyll ee*) | புகழ்ந்தாள் | |
| வோல் ஷின் | (*voyll shin*) | புகழ்ந்தோம் | |
| வோல் ஷியு | (*voyll shiu*) | புகழ்ந்தீர்கள் | |
| வோல் அத் | (*voyll ad*) | புகழ்ந்தார்கள் | |
| மோலிம் | (*moyllym*) | புகழ்கிறேன்/புகழ்வேன் | |
| மோலீ ஓ | (*moyllee oo*) | புகழ்கிருய்/புகழ்வாய் | |
| மோலீ ஏ | (*moyllee eh*) | புகழ்கிருன் | ,, |
| மோலீ ஈ | (*moyll ee*) | புகழ்கிருள் | ,, |
| மோல் மேத் | (*moyllnayd*) | புகழ்கிருேம் | ,, |
| மோலீ ஷியு | (*moyllee shiu*) | புகழ்கிறீர்கள் | ,, |
| மோலீ அத் | (*moyllee ad*) | புகழ்கிருர்கள் | ,, |

---

1. In the past tense there is only one form of conjugation, the ANALYTIC, as *voyll mee*, *oo*, & c., I, Thou & c., praised. In the present and future tenses there are two forms. The Ist person, sing. and plur., has a SYNTHETIC form, as *moyllym*, I praise, I shall praise; *moyllmayd*, we praise, we shall praise. The 2nd and 3nd have only the analytical forms: *moyllee oo*, thow paisest, thou will praise. The imperfect tense has a synthetic form in the Ist person singular only, as *voyllyin*, I used to praise.

*ibid*. p. 73.

### 1.4.3 ஸ்காட்டிஷ் கேயலிக் (Scottish Gaelic)

முன்னர் குறிப்பிட்டது போன்று ஐரிஷ் மொழியினின்றும் பிறந்த இம்மொழி அமைப்பு, பண்பு போன்றவற்றில் ஐரிஷைப் போன்றே காணப்படுகின்றது. எனினும் இதற்கும் ஐரிஷ் மொழிகளுக்குமிடையே பல வேற்றுமைகள் உள்ளன.

ஸ்காட்லாந்தில் வாழும் 5,178,490 மக்களில் இம்மொழி பேசுவோராக 75,508 பேர் உள்ளனர். இவர்களில் பெரும் பாலோர் ஆங்கில மொழியையும் பேசுதல் காணலாம். ஸ்காட்டிஷ் வீட்டு மொழியாகவும் ஆங்கிலம் பள்ளி மொழி யாகவும் உள்ளன.[1]

### 1.4.4 பிக்டிஷ் (Pictish)

ஸ்காட்லாந்தில் மிகப்பழங்காலத்தில் பேசப்பட்ட மொழி பிக்டிஷ் என முன்னர்க் குறிப்பிட்டோம். இன்று அழிந்து விட்ட இம்மொழியைப்பற்றி அதிகமாக எதுவும் தெரிவ தில்லை.

---

1. Anthropological Linguistics, Vol. 7, No. 8. pp. 97-98.

### பிரிட்டானிக் மொழிகள் (Brittonic languages)

வெல்ஷ், கார்னிஷ், பிரிட்டன் என்ற மூன்று மொழிகள் அடங்கிய *p* கெல்டிக் பிரிவினையே இப்பெயரால் அழைப்பர். கி. பி. ஆரும் நூற்ருண்டு வரையிலும் கால், ஸ்பெயின் போன்ற நாடுகளில் வழக்கிலிருந்த காலிஷ் மொழியும் இப் பிரிவினுள் அடங்கும். கி. பி. முதல் நூற்ருண்டு முதல் 5 ஆம் நூற்ருண்டு வரையிலும் ரோமர்களின் ஆட்சியில் பிரிட்டன் அடங்கியிருந்த நிலையில் ஒரே மொழியாக இருந்துவந்த பிரிட்டிஷ் மொழியினின்றும் பிரிந்து வளர்ந்த மொழிகளே இவை.

பிரிட்டானிக் (*p* கெல்டிக்) மொழிகளைப் பேசிவந்த கெல்டிக் மக்கள் வரலாற்றுக் காலத்திற்கு முன்னுல் ஐரோப்பா கண்டத்தில் வாழ்ந்துவந்தனர் என்றும் அவர் களில் ஒரு பிரிவினர் இரும்புக் காலப் பகுதியில் பிரிட்டிஷ் தீவுகளில் குடியேற, மற்ருெரு பிரிவினர் ஐரோப்பியப் பகுதி களிலேயே தங்கி நின்றனர் என்றும் அறிஞர்கள் கூறுவர். ஐரோப்பா கண்டத்தில் தங்கிய மக்களையே ரோமர்கள் காலியர் (Galli) என அழைத்தனர். இவர்களுடைய மொழியே காலிஷ் (Gaulish) என்ற பெயரால் வழங்கப்படுவது. பொதுவாக ஐரோப்பாக் கண்டம் முழுவதும் வழங்கிய *p* கெல்ட் மொழியினையே காலிஷ் என அழைத்த போதிலும் ஸ்பெயின், பிரான்சு, வட இத்தாலி போன்ற பகுதிகளில் வழங்கிய மொழி பற்றியே செய்திகள் கிடைத்துள்ளன. முன்னர்க் குறிப்பிட்டது போன்று கி.பி. ஐந்து அல்லது ஆரும் நூற்ருண்டு வரையிலும் ஐரோப்பா கண்டத்தில் வழங்கிய காலிஷ் மொழிக்கும் பிரிட்டிஷ் தீவுகளில் வழங்கிய பிரிட்டிஷ் மொழிகட்கும் இடையே வேற்றுமை அதிகம் இருந்ததில்லை.

பிரிட்டன் கி. பி. 43இல் ரோமர்களின் ஆட்சியில் வந்த போது லத்தீன் மொழி இம்மக்களிடையே புகுந்தது. ரோமர்

களின் அரசியல், மொழியாகவும் வாணிப மொழியாகவும் இருந்த லத்தீன் மிகச் செல்வாக்குடன் விளங்கிய நிலையில் படித்தோரும் அரசியல் பணியில் ஈடுபட்டோரும் செல்வந் தரும் இதனையே தங்கள் மொழியாகக் கொண்டனர். எனினும் வடபகுதியில் வாழ்ந்த மக்களிடையே லத்தீன் புகுந்து வளரவில்லை என்றும் ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரே அப்பகுதியில் தென்பகுதி மக்களால் அம்மொழி புகுந்தது என்றும் கூறுவர். எவ்வாருயினும் பிரான்சு, ஸ்பெயின், ருமேனியா போன்ற இடங்களில் காலூன்றி ரொமான்ஸ் மொழிகளைத் தோற்றுவித்த லத்தீன் பிரிட்டனில் வழங்கிய மொழிகளில் பல சொற்களைத் புகுத்த முடிந்ததே தவிர, அவண் வழங்கிய மொழியினை அழித்துவிட முடியாத நிலையிலேயே இருந்திருக்கக் காண்கிறோம். இன்று பிரிட்டன் மொழிகளில் (வெல்ஷ், கார்னிஷ், பிரிட்டன்) எண்ணூறுக்கும் அதிகமான லத்தீன் சொற்கள் உள்ளன என்பர் மொழியியல் அறிஞர்கள்.[1]

கி.பி. 7ஆம் நூற்ருண்டில் இது மேற்கு, தென்மேற்கு மொழி களாகப் பிரிந்த போதிலும் கி.பி. முதல் நூற்ருண்டுமுதலே இவ்விரு கிளை மொழிகளிடையேயும் வேற்றுமைகள் தோன்றி விட்டன என்றும், எனினும் கி.பி. 600 வரையிலும் ஒரே மொழியாகவே இருந்து வந்தது என்றும் கூறுவர்.[2] வேல்ஸ் பகுதியில் வழங்கிய கிளை மொழியே (மேற்கு) பின்னர் வெல்ஷ்

---

1. Kenneth Jackson, Language and History in Early Britain, p. 76.

2. It is clear, therefore, that on the one hand the period of the Language when we speak of a commmon Brittonic tongue as existing comes to an end roughly about A D. 600 while on the other hand a division into West and South-West Brittonic sub dialects, faintly beginning very early indeed, was going on at an increasing rate from the late fifth century.

*ibid*. p. 25.

ஆகவும் கார்ண்வாலில் தெவொன் (Devon) பகுதியில் வழங்கிய கிளைமொழி தென்மேற்கு மொழியாகப் பிரிந்து பின்னர் கார்னிஷ், பிரிட்டன் மொழிகளாகத் தோற்றம் எடுத்தன.




சாக்சன் மக்களுக்கு அஞ்சி, கி. பி. 450–70இல் தங்கள் நாட்டினை விட்டுப் பிரிட்டானி பகுதியில் குடியேறினர் பிரிட்டிஷ் மக்கள். இவர்களின் முதல் குடியேற்றம் 5 ஆம் நூற்றுண்டில்தொடங்கியபோதிலும் ஏழாம் நூற்றுண்டு வரையிலும் நீடித்த நிலையில் பிரிட்டனில் வழக்கிலிருந்த மொழி மாற்றம் ஆர்மோரிக்காவிலும் காணப்பட்டது என்றும் கார்ண்வால் தெவொன் பகுதிகளினின்றும் வந்த மக்கள் பெரும்பான்மையினராக இருந்ததால் அவண் வழங்கிய கிளைமொழியே பிரிட்டானியிலும் வளர்ந்தது என்றும் மொழி இயலாளர்கள்

கூறுவர். பிரிட்டானி மொழி கார்னிஷுடன் மிகத் தொடர்பு கொண்டது. இவ்விரு மக்களுக்கும் இடையே இருந்த தொடர்பினுல் இம்மொழியில் எவ்வித மாற்றமும் உடனே ஏற்படவில்லை. கி.பி. 10, 11ஆம் நூற்றுண்டு வரையிலும் ஒரே மொழியாக வளர்ந்த தென்மேற்குக் கிளை பின்னர் கார்னிஷ், பிரிட்டன் என இரண்டாகப் பிரிய நேரிட்டது.[1]

பிரிட்டானிக் மொழியின் எழுத்துச் சான்றுகள் கி. மு. மூன்றுவது நூற்றுண்டுமுதல் கிடைக்கின்றன. பண்டு பிரான்சு நாட்டில் பேசப்பட்ட காலிஷ் (Gaulish) மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களும் (50) பல இடப்பெயர்களும் மக்கட்பெயர்களும் இதில் உள்ளன. இவையனைத்தும் ரோமன் அல்லது கிரீக் எழுத்துக்களால் எழுதப்பட்டவை. ரோமர்கள் கால் நாட்டின்கண் வந்து அரசு செலுத்தியபோது லத்தீன் மொழியின் பெருமையில் இது மங்கி மறைந்தது.

---

1. A close and interesting Celtic parallel is to be found in the history of Cornish and Breton; the chief waves of migration from Cornwall to Brittany took place in the sixth century, yet separated by the sea as they now became the two peoples remained in close cultural touch and their languages did not begin to diverge significantly, until the tenth or eleventh century !

Kenneth Jackson, Common Gaelic, p. 80.

Kenneth Jackson, Language and History in Early Britain, p. 25.

*ibid.* p. 27.

## 1.4.5 வெல்ஷ் (Welsh)

பிரிட்டனில் ஆங்கிலத்திற்கு அடுத்த முக்கிய மொழியாகக் கருதப்படுவது வெல்ஷ் ஆகும். பிரிட்டிஷ் வானொலியிலும் வேல்ஸ் பகுதிகளில் ஆரம்பப்பள்ளிகளிலும் இம்மொழி பயன்படுதல் காணலாம். இன்று இம்மொழி பேசுவோராக சுமார் 1,000,000 மக்கள் உள்ளனர். இவர்களுள் பலர் ஆங்கிலமும் இம்மொழியும் பேசுகின்றனர்.

இம்மக்கள் தங்களைக் கிம்ரி (Cymry) என்றழைப்பர். இது * *kom-borgi* (fellow contrymen) என்ற சொல்லிலிருந்து வந்தது என்பர். எனினும் இவர்கள் இன்று வெளியுலகில் வெல்ஷ் மக்கள் எனவே அறியப்படுகின்றனர்.

இம்மொழியின் காலப்பகுதியை மிகப் பழங்காலம், பழங்காலம் அல்லது முற்காலம், இடைக்காலம், தற்காலம் என நான்கு பிரிவுகளாகப் பிரிப்பர். பிரிட்டன் மொழியினின்றும் பிரிந்து வெல்ஷ் மொழியாக மாறிய காலம் முதல் கி. பி. எட்டாம் நூற்றுண்டு வரையுள்ள பகுதியை மிகப் பழங்காலம் என்பர். இக்காலப் பகுதியில் எழுதியதாக ஒருசில பெயர்களே கிடைத்துள்ளன. இக்காலத்தில் இம்மொழி ஒருசில மாற்றங்களைக் கண்டன. கி. பி. எட்டாம் நூற்றுண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் இம்மொழியின் பழைமையான கையெழுத்துப் பிரதிகளில் காணப்படும் சில சொற்களிலிருந்து இத்தன்மை தெரியவரும்.[1] இக்காலப் பகுதியில் எழுதப்பட்ட 'Ogam' கல்வெட்டுக்கள் இவண் கிடைத்த போதிலும் அவை கேயலிக் மொழியினைச் சார்ந்தவையாதாதலின் இம்மொழி

---

1. In the oldest MS. of the Bede A.D. 737, the stem-vowels and terminations are completely lost, as in *Dar-legicb*, *Ban-cor*, *Dinoot*. The reduction was there an established fact in the early 8th cent.

J. Morris Jones, A Welsh Grammar, p. 191.

பற்றி அறிவதற்கு எவ்விதத்திலும் துணை புரிவதில்லை. இது போன்றே லத்தீன் எழுத்துமுறையில் காணப்படும் கல்வெட்டுக்களும் தெளிவு தருவதில்லை என்பர்.

9ஆம் நூற்றுண்டு முதல் 11ஆம் நூற்றுண்டுவரை உள்ள காலப்பகுதியைப் பழங்காலம் அல்லது முற்காலம் என்பர். இப்பகுதியில் பொருள் கருதி எழுதிய சில சொற்களும் (glosses) உரைநடையின் சில பகுதிகளும் சில கவிதைகளும் கிடைக்கின்றன. இடைக்காலத்தில் (12–15ஆம் நூற்றுண்டு) இம்மொழியின் எழுத்துமுறையில் பல மாற்றங்கள் உண்டாயின. முற்பகுதியில் உறுதியான நிலை இல்லையாயினும் பின்னர் மொழி நிலையின்கண் உறுதி ஏற்பட்டது. கிவிலிம் (Dafydd ap Gwilym) என்ற கவிஞர் இன்றைய வெல்ஷ் மொழியின் தந்தையாகக் கருதப்படுகிருர். இவரை ஒட்டி இவர் எழுதிய நடையைப் பின்பற்றி 15, 16ஆம் நூற்றுண்டுக் கவிஞர்கள் பல கவிதைகள் எழுதியுள்ளனர். இக்காலத்தில் அச்சுப் பொறியின் வரவால் பலநூல்கள் வெளிவந்தன. இவற்றுள் 1567இல் வெளிவத்ந சாலிஸ்பரியின் (Wm. Salesbury) வேதாகமமும் 1588இல் மார்கனுல் (Dr. Morgan) வெளியிடப்பட்ட வேதாகமமும் இம்மொழி வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை. சாலிஸ்பரி ஒரு புதிய இலக்கிய நடையை உருவாக்கினுர். ஆனுல் மார்கனே பழைய புலவர்களின் நடையைப் பின்பற்றியதுடன் சாலிஸ்பரியின் புதிய பண்புகள் சிலவற்றையும் கையாண்டார். இதுவே பின்னர் வெளிவந்த நூல்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தது

அன்று முதல் இன்று வரையிலும் லத்தீன் எழுத்துமுறையில் எழுதப்பட்டுவரும் இம்மொழியில் 14 உயிர்களும் 23 மெய்களும் காணப்படுகின்றன. வேல்ஸ் பகுதியில் கிடைக்கும் பழைய கல்வெட்டுக்களில் பல 'ஓகம்' கல்வெட்டுக்களாம். இம்மொழி எழுத்துமுறை கி.பி. 12ஆம் நூற்றுண்டிலும் பின்னர் 16ஆம் நூற்றுண்டிலும் பல மாற்றங்களைக் கண்டன. இன்று காணப்படும் வெல்ஷ் எழுத்துக்கள் ஓரளவு ஒலியியல் (phonetic) அடிப்படையில் அமைந்துள்ளன.

இம்மொழிப் பெயர்களில் ஒருமை, பன்மை எண்களும் ஆண், பெண் பால்களும் உள்ளன கன்னம், கை போன்ற சொற்களில் பழைய இருமை எண்ணின் பண்பு காணப்படினும் வெல்ஷ் இருமை எண்ணை இழந்துவிட்ட நிலையினையே காட்டி நிற்கிறது. இன்று, சொற்களில் காணப்படும் உயிர்களின் மாற்றம், சில ஒலிகள் குறைதல், சில ஒட்டுக்கள் இணைதல் ஆகிய பல முறைகளில் பன்மை காட்டப்படுகிறது.

இதை அடிப்படையாக வைத்து இப்பெயர்களை ஏழு வகைகளாகப் பிரிப்பர்.[1]

| | | | |
|---|---|---|---|
| 1. | கிம்ரோ | (*cymro*) | வெலஷ் மகன் |
| | கிம்ரி | (*cymry*) | வெல்ஷ் மக்கள் (ஆண்) |
| 2. | அவல் | (*afal*) | ஆப்பிள் |
| | அவலௌ | (*afalau*) | ஆப்பிள்கள் |
| 3. | பிரௌத் | (*brawd*) | சகோதரன் |
| | பிரோதிர் | (*brodyr*) | சகோதரர்கள் |
| 4. | மொச்சின் | (*mochyn*) | பன்றி |
| | மொச் | (*moch*) | பன்றிகள் |
| 5. | ப்லென்றின் | (*plentyn*) | குழந்தை |
| | ப்லன்ற் | (*plant*) | குழந்தைகள் |
| 6. | திவெறின் | (*diferyn*) | துளி |
| | திவெறியொன் | (*diferion*) | துளிகள் |
| 7. | கெர்பின் | (*cerpyn*) | கந்தைத் துணி |
| | கெர்பியௌ | (*cerpiau*) | கந்தைத் துணிகள் |

ஆங்கில மொழியைப் போல் அல்லாமல் சிறுமைப் பொருள் காட்டும் ஒட்டுக்கள் இதன்கண் உள்ளன.

---

1. Plurals of nouns are formed by (a) Vowel changing (b) Dropping an ending, (c) Adding, an ending (d) Combining all or some of these methods. Plural nouns can be divided into *seven* groups, according to the way in which they are found.

Urien William, A Short Welsh Grammar, p. 15.

| | | |
|---|---|---|
| மப் | (*mab*) | மகன் |
| மபன் | (*maban*) | சிறு பையன் |
| ப்லன்ற் | (*plant*) | குழந்தைகள் |
| ப்லன்றெஸ் | (*plantos*) | சிறு குழந்தைகள் |

பெயர்களைப் போன்றே பெயரடைகளும் பொதுவாகப் பால், எண் வேற்றுமையுடன் வருவது ஆங்கில மொழியில் காணப்படாத பண்பாகும்[1]. பெயர்களைப் போன்றே இவை பல முறைகளில் பால், எண் வேற்றுமைகளைக் காட்டும்.

| | | | |
|---|---|---|---|
| பச் | (*bach*) | சிறிய | (ஆண்) |
| பச் | (*bach*) | சிறிய | (பெண்) |
| க்வின் | (*gwyn*) | வெள்ளை | (ஆண்) |
| க்வென் | (*gwen*) | வெள்ளை | (பெண்) |
| பிர் | (*byr*) | கட்டை | (ஆண்) |
| பிரியொன் | (*byrion*) | கட்டை | (ஆண், பன்மை) |
| பெர் | (*ber*) | கட்டை | (பெண்) |
| பிரியொன் | (*byrion*) | கட்டை | (பெண், பன்மை) |

ஆங்கில மொழியைப் போன்று இதண்கன் மூவிடப் பெயர்களில் ஆண், பெண் பன்மையென இரு பெயர்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| மி | (*mi*) | நான் |
| தி | (*ti*) | நீ |
| எவ் | (*ef*) | அவன் |
| ஹி | (*hi*) | அவள் |
| நி | (*ni*) | நாம், நாங்கள் |
| ஹ்வி | (*hwy*) | அவர்கள் (ஆண்) |
| ந்ஹி | (*nhw*) | அவர்கள் (பெண்) |

வினைச்சொற்கள் காலம், எண், இடம் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. கால இடைநிலைகள் இட, எண்களுக்கேற்ப மாறுவதால் விகுதிகள் இன்றியே

1. *ibid*. p. 21.

இடம், எண் கூறுகளை அறிய முடியும்; எனினும் சில நேரங்களில் விகுதிகள் இணைந்து வருதலும் உண்டு.[1]

| | | | |
|---|---|---|---|
| 1. | கெர்தவ் | (*cerdd-af-(cci)* | நடக்கிறேன், நடப்பேன் |
| 2. | கெர்தி | (*cerdd-i-(di)* | நடக்கிறாய் |
| 3. ஆண் | கெர்த | (*cerdd-a-(ef)* | நடக்கிறான் |
| 3. பெண் | கெர்த | (*cerdd-a-(hi)* | நடக்கிறாள் |

**பன்மை**

| | | | |
|---|---|---|---|
| 1. | கெர்தூன் | (*cerdd-un-(ni)* | நடக்கிறோம் |
| 2. | கெர்தூச் | (*cerdd-wch-(chwi)* | நடக்கிறீர்கள் |
| 3. ஆண்/பெண் | கெர்தன்ற் | (*cerdd-ant-(hwy)* | நடக்கிறார்கள் |

**இறந்த காலம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | கெர்தஸீன் | (*cerdd-azwor-(i)* | நடந்தேன் |
| 2. | கெர்தஸித் | (*cerdd-asit-(ti)* | நடந்தாய் |
| 3. ஆண் | கெர்தொத் | (*cerdd-odd-(eb)* | நடந்தான் |
| 3. பெண் | கெர்தொத் | (*cerdd-odd-(hi)* | நடந்தாள் |

**பன்மை**

| | | | |
|---|---|---|---|
| 1. | கெர்தஸொம் | (*cerdd-asom-(ni)* | நடந்தோம் |
| 2. | கெர்தஸொச் | (*cerdd-asoch-(chui)* | நடந்தீர்கள் |
| 3. | கெர்தஸன்ற் | (*cerdd-asant-(hwy)* | நடந்தார்கள் |

---

1. The endings of an inflected verb are sufficient to show the person and number but the Affixed Pronouns can be added for clarity; this is customary in spoken Welsh (except after Imperatives), e. g. Gwelais y ci (literary), mi welais i'r ci (spoken), "I saw the dog".

*ibid.* p. 54.

### 1.4.6 கார்னிஷ் (Cornish)

பிரிட்டனில் கார்ண்வால் பகுதியில் கி.பி. 19ஆம் நூற்றுண்டு வரையிலும் வழக்கிலிருந்த மொழி இது.கி.பி. 10ஆவது நூற்றுண்டிலிருந்தே கார்னிஷ் பெயர்கள்பல கிடைக்கின்றன[1]. இது பேசப்பட்ட நிலப்பரப்பினைப் போன்றே இம்மொழியும் வெல்ஷ், பிரிட்டன், மொழிகளுக்கு இடைப்பட்ட நிலையில் உள்ளது. வெல்ஷ், வடபகுதியில் பேசப்பட்ட பிரிட்டானிக் மொழியிலிருந்தும் பிரிட்டன், கார்னிஷ் தென்பகுதி கிளை மொழியிலிருந்தும் உருவானவை (p. 184) என எண்ணலாம்[2].

இம்மொழியின் வரலாற்றுப் பகுதியை முற்காலம், இடைக்காலம், தற்காலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். முற்காலப்பகுதியைச் சார்ந்த இலக்கியங்களாக ஓரிரு கையெழுத்துப் பிரதிகளே உள்ளன. 12ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கையெழுத்துப் பிரதிகளில் கார்னிஷ், வெல்ஷ், பாதிரிகளின் வாழ்க்கை வரலாறுகளும் நாட்குறிப்பும் (Calender) காணப்படுகின்றன. இவை 12ஆம் நூற்றுண்டில் எழுதப்பட்ட போதிலும் 10ஆம் நூற்றுண்டுக் காலப் பகுதியில் எழுதப்பட்டிருந்த மூலத்தின் படிவமாகும் எனக் கருதுகின்றனர் சிலர்.[3] இது போன்றே இடைக்காலத்தைச் சார்ந்தனவாக ஓரிரு கவிதைகளும் சில உரைநடைப் பகுதிகளும் உள்ளன. இக்கவிதைகள் அனைத்தும் சமயச் சார்பானவைகளே. இது போன்றே இக்காலத்தில் தோன்றிய நாடகங்களும் (Ordinalia)

---

1. Henry Jenner, Hand book of the Cornish Language, p. 24.

2. Probably Cornish and Breton are both derived from the language of the more southern, while Welsh represents that of the more northern Bretons.[1]

*ibid.* p. 6.

3. *ibid.* p. 49.

உலகின் தோற்றம், மனிதனின் வீழ்ச்சி போன்ற பல சமயச் சார்பான செய்திகளை மையமாகக் கொண்டவைதான்.

16-ஆம் நூற்றாண்டு முதல் உள்ள பகுதியையே தற்காலம் என்றழைக்கின்றனர். இக்காலத்தில் வேதாகாமம், கார்ண் வால் பற்றிய செய்திகள் போன்ற பல துறைகளைப் பற்றி எழுதிய நூற்களைக் காணலாம். இக்காலத்தில் எழுதப்பட்ட 'Book of the Introduction of knowledge' (1542) என்ற நூலே முதல் அச்சு நூல். இப்போது கார்ண்வாலில் ஆங்கில மொழியின் செல்வாக்கு மிகப் பரந்து நின்றது. "ஆங்கில மொழி தெரியாது கார்னிஷ் ஒன்றையே பேசிவரும் மக்கள் அதிகமாக உள்ளனர்" என்று கூறும் இதன் ஆசிரியர் கார்னிஷ் எண்ணுப் பெயர்கள் எனத் தரும் சொற்களில் ஆங்கிலச் சொற்கள் உள்ளன என்பர்.

ஐரோப்பிய மொழிகள் பலவற்றிற்கு வாழ்வளித்த சமய மறுமலர்ச்சி (Reformation) இதற்கு வாழ்வளிக்கத் தவறியது டன் இதன் அழிவுக்கும் துணையாயிருந்தது. இக்காலத்தில் பைபிள் இம்மொழியின்கண் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் இன்று இம்மொழி நம்மிடையே வாழ்ந்திருக்கும் என்பர். கி.பி. 17ஆவது நூற்றாண்டு முதலே இது வழக்கறுகின்ற நிலையில் காணப்பட்டது. எனினும் பத்தொன்பதாவது நூற்றாண்டு வரையிலும் ஆங்காங்கே வழங்கி வந்து பின்னர் 19ஆம் நூற்றாண்டில் பேச்சுவழக்கற்று விட்டது.[1]

இதன்கண் பதினன்கு சாதாரண எளிய உயிர்களும் பல சந்தியக்கரங்களும் உள்ளன. தமிழ் உயிர்களைப் போன்று இம்மொழி உயிர்களும் குறில் நெடில் வேற்றுமை காட்டும்.[2]

---

1. Then it is considered that Cornish, as a spoken language, died out. The process was gradual, though perhaps rapid at the last, and, as far as is generally known the old tongue finally disappeared in the earlier half of the nineteenth century.

Henry Jenner, *ibid.* p. 22.

2. *ibid.* p. 54.

ஆங்கில மொழியைப் போன்று சிறப்புச்சுட்டு காணப்படினும் பொதுச் சுட்டு இதில் இல்லாதிருப்பது ஆங்கிலத்திற்கும் இதற்குமிடையே காணப்படும் ஒரு வேற்றுமையாகும்.[1]

அன் ஜென் (*an dėn*) *the man*

அன் வெனென் (*an venen*) *the woman*

கார்னிஷ் ஆண், பெண் பால்களையும் ஒருமை, பன்மை எண்களையும் கொண்டுள்ளன.[2] கண், காது கைபோன்று இணையாக வரும் பெயர்கள் 'இரு' என்ற எண்ணுப் பெயருடன் இணைந்து வருதல் காணலாம். இதனைச் சிலர் இருமை எண் எனக் குறிப்பர்.[3] 'ஒ' போன்ற பின்னுருபுகளை ஏற்று இம்மொழிப் பெயர்கள் பன்மையை காட்டும்.

| | | |
|---|---|---|
| (*dew*) | ஜெவ் | கடவுள் |
| (*dewow*) | ஜெவொ(வ்) | கடவுள்கள் |
| லகஸ் | (*lagas*) | கை |
| டியுலகஸ் | (*deulagas*) | இருகைகள் |

1. The definite article '*the*' is *an* for all numbers and genders.

*ibid.* p. 37.

2. Nouns are of two genders, masculine and feminine, There is no neuter.

There is no rule whereby to tell the gender of a word except in the case of animate objects, where the gender simply follows the sex.

*ibid.* p. 78.

3. Parts of the body which are double (ears, eyes, hands, arms, shoulders, knees, etc.), when mentioned in reference to the two ears, eyes, etc., of the same person, are expressed by a compound with the numeral *deu*, two prefixed to the singular. The Welsh and Breton grammarians call this dual.

*ibid.* p. 89.

| | | |
|---|---|---|
| லகஸொ | (*lagasow*) | கைகள் |
| பெனென் | (*benen*) | பெண் |
| பெனெனெஸ் | (*benenes*) | பெண்கள் |

வினைச் சொற்கள் காலம், இடம், எண் போன்ற இலக்கணக் கூறுகளைக் காட்டும். தமிழ் மொழியைப் போலவே இம்மொழி வேர்ச் சொற்கள் ஏவல் வினைகளாக வருதல் காண லாம். ஆங்கில மொழியைப் போலல்லாமல் படர்க்கை ஒருமை எந்தவிதமான ஒட்டினையும் ஏற்காது இருத்தல் இதில் ஒரு விசேடப் பண்பாகும்.[1]

| | | | |
|---|---|---|---|
| –அவ் | கரவ் | (*carav*) | காதலிக்கிறேன் |
| –எஸ் | கெரஸ் | (*kerez*) | காதலிக்கிருய் |
| — | கர் | (*car*) | காதலிக்கிருன் |
| –ஒன் | கரொன் | (*caron*) | காதலிக்கிருேம் |
| –ஒஹ் | கரொஹ் | (*corough*) | காதலிக்கிறீர்கள் |
| –ஒன்ஸ் | கரொன்ஸ் | (*carons*) | காதலிக்கிருர்கள் |
| –ஐஸ் | கெரைஸ் | (*kerys*) | காதலித்தேன் |
| –ஸெஸ் | கெர்ஸெஸ் | (*kerses*) | காதலித்தாய் |
| –அஸ் | கரஸ் | (*caraz*) | காதலித்தான் |
| –ஸொன் | கர்ஸொன் | (*carson*) | காதலித்தோம் |
| –ஸொஹ் | கர்ஸொஹ் | (*carsough*) | காதலித்தீர்கள் |
| –ஸொன்ஸ் | கர்ஸொன்ஸ் | (*carsons*) | காதலித்தார்கள் |

### 1.4.7 பிரிட்டன் (Breton)

பிரான்சில் பிரிட்டானி பகுதிகளில் வாழும் 900,00 மக்களால் பேசப்படுவது இம்மொழி. ஐரோப்பிய நாட்டில் வழங்கிய போதிலும் இது பிரிட்டானிக் (*Brittonic* அல்லது *Brythonic*) பிரிவினைச் சார்ந்தது என்பதை மறத்தலாகாது. பிரிட்டன் தீவுகளினின்றும் இவண் குடியேறிய மக்களால் கொண்டு வரப்பட்ட இம்மொழி இன்று வாழும் தன்மையிலுள்ளது. பிரஞ்சு மொழியின் செல்வாக்கு இதண்கண் ஏராளமாகக் காணப்படினும் முன்பு இப்பகுதிகளில் வழங்கிய காலிஷ் மொழியின் செல்வாக்கு எதையும் இதன்கன் காணமுடிவதில்லை.

### 1.4.8 காலிஷ் (Gaulish)

பண்டைய பிரஞ்சு நாட்டிலும் (Gaul) பண்டைய ஸ்பெயின் போன்ற இடங்களிலும் வழங்கிய மொழி இது. கெல்டிக் மொழிகளில் இம்மொழியில்தான் பழமையான எழுத்துச் சான்றுகள் உள்ளன. லத்தீன் எழுத்துக்களாலும் கிரேக்க எழுத்துக்களாலும் எழுதப்பட்ட பல கல்வெட்டுக்கள் இம்மொழியில் உள்ளன. இவற்றிலிருந்து இம்மொழியின் அமைப்பு முறையை நன்கு தெரிந்துகொள்ள முடியாவிடினும் பெயரமைப்பு போன்ற ஒரு சில இலக்கணக் கூறுகளைப் புரிந்து கொள்ள முடியும். ரோமப் பேரரசு காலில் புகுந்த போது லத்தீன் மொழியின் பெருமையில் காலிஷ் மறைந்து அழிந்தது.

## 1.5 ஜெர்மானிய மொழிகள் (Germanic language)

'ஜெர்மானிக்' என்ற சொல் ஆங்கிலம், பிரிசியன் ஜெர்மன், டச்சு, பிளிமிஷ், கோதிக், சுவீடிஷ், டேனிஷ், நார்வேஜியன், ஐஸ்லாண்டிக் போன்ற மொழிகளைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகிறது. இப்பெயர் ரோமர்களால் சூட்டப்பட்டதாகும்.[1] ஜெர்மன் மொழியில் வழங்கும் 'germanisch' என்ற சொல்லுடனும் பிரஞ்சு மொழியில் காணப்படும் "germanique" என்ற செல்லுடனும் ஒப்ப வைத்து எண்ணப் படும் சொல் இது. ஜெஸ்பர்சன் போன்றோர் 'Gothonic' என்ற சொல்லால் இம்மொழிகளைக் குறித்துள்ளனர். இன்னும் சிலர் "Teutonic" என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளமையும் இவண் கருதத் தக்கது. எனினும் இன்றைய மொழியியல் உலகில் ஜெர்மானிக் என்ற சொல்லே நின்று நிலவக் காண் கிறோம்.[2]

ஜெர்மானி என்ற சொல் முதன்முதலாக சீசரது காலிக் போர் (Gallic war *52-50 B.C.*) என்ற நூலின் கண்ணும் டேஸிட்டஸ் (Tacituz) எழுதிய ஜெர்மானியா (98 *A.D.*) என்ற நூலின்கண்ணும் பயன்படுத்தப்பட்டிருத்தல் காணலாம். பிரஞ்சு நாட்டின் வடபகுதியில் (Ardennez) வாழ்ந்துவந்த மக்களைக் குறிக்கும் சொல்லாகவே முதன்முதல் இது வழங்கப் பட்டது. இச்சொல் 'ஈட்டியைக்கொண்ட (*gēr* 'ஈட்டி') மக்கள்'

---

1. The group of languages to which our own belongs is best called Germanic. This is the designation the Romans used for all the tribes included in the group.

Holger Pedersen, The Discovery of Language, p. 30.
Louis H. Gray, Foundations of Language, p. 344.

2. R. Priebsch and W. E. Collinson, The German Language, p. 33.

என்று பொருள்படும்' எனச் சிலர் கருதி வந்த போதிலும் இப் பொருள் பொருந்தாது எனக் கூறுவர் பலர். ஜெர்மன் என்ற அடியைக் கொண்டு பல சொற்கள் காணப்படினும் இதன் பொருள் பற்றி அறிஞர்களிடையே கருத்து ஒருமைப்பாடு இல்லை என்றே கூறலாம்.[1]

மிகப் பழங்காலந் தொட்டே ஜெர்மானிய மக்கள் வீரம் உடையவர்களாக வாழ்ந்துவந்துள்ளனர். ஜெர்மனி, டென்மார்க், ஸ்கேண்டிநேவியா போன்ற பல பகுதிகளில் வாழ்ந்துவந்த இவர்கள் கி.மு. முதல் நூற்றுண்டில் போலந்து போன்ற இடங்களில் எல்லாம் சென்றுறைந்தனர். பல வேறு ஜெர்மானிய மக்கள் கூட்டத்தினர் தென்பகுதி நோக்கிப் பரவ முற்பட்டனர். இவர்களின் போக்கையும் எழுச்சியையும் தடுத்து நிறுத்தும் பொருட்டே சீசர் கி.பி. 56 இல் (Alsace) இவர்களை எதிர்த்துப் போரிட்டார். எனினும் ரோமப் பேரரசினரால் ஜெர்மனி முழுவதையும் தங்கள் கீழ்க் கொண்டு வர முடியாது போயிற்று. கி.பி. முதல் நூற்றுண்டில் ஜெர்மனியின் நடுப் பகுதி முதல் ஸ்கேண்டிநேவியா வரை யிலும், மேற்கே கீழ் ரைன் முதல் விஸ்துலா முகத்துவாரம் வரையிலுட் உள்ள இடங்களில் இம்மக்கள் உறைந்து வந்தனர். கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றுண்டில் இவர்கள் பின்னிஷ் மக்களுடனும் லாப்பிஷ் மக்களுடனும் தொடர்பு கொண்டு வாழ்ந்துவந்ததால் பல ஜெர்மானியச் சொற்கள் அம்மொழிகளில் புகுந்திருத்தல் காணலாம். பின்னர்ப் படிப்படியாக ஜெர்மானிக் பலப்பல மாற்றங்களைக் கொண்டு பலவேறு மொழிகளாகப் பிரிந்தது.

டேஸிட்டஸ் இவர்களைப் பற்றிய சில விளக்கமான செய்திகளைத் தம்முடைய நூலின்கண் தந்துள்ளார். சேறு நிறைந்த காட்டுப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்த இம்மக்கள் சின்னஞ்சிறு குழுவினர்களாக ஆங்காங்கே வாழ்ந்தனர்

---

1. R. Priebsch and W. E. Collinson, The German Language, p. 21.

என்றும் பெரிய நகரங்களை வெறுத்து அவற்றினின்று ஒதுங்கி வாழ்ந்துவந்தனர் என்றும் இவர் கூறுவார். இவர்கள் ஆட்டு மந்தைகளைக் கொண்டு வேளாண்மையில் ஈடுபட்டிருந்த போதிலும் இத்தொழிலில் மிகப் பழைமையான நிலையிலேயே இருந்தனர். நிலங்களின் வளத்திற்கேற்ப இவர்கள் வேறு வேறு நிலங்களில் பயிரிட்டு வாழ்ந்தனர்.

இச்சமுதாயத்தில் ஒரு மனிதனின் பெருமை அவனுடைய உறவினரின் எண்ணிக்கையைப் பொறுத்திருந்தது. இவர்களிடையே அரசர்களும் தலைவர்களும் இருந்த போதிலும் முக்கியமான பிரச்சினைகளை மக்களுடன் கூடி ஆலோசித்தே முடிவு செய்தனர். இவர்களின் இத்தகைய ஒருவகையான குடியரசுத் தன்மையும் சுதந்திரப் பண்பும் ரோமர்கட்கு எப்போதும் அச்சத்தையும் அபாயத்தையும் கொடுத்து வந்தனவாம். தலைவர்கள் எப்போதும் வீரர்கள் புடைசூழவே செல்வர். வீரர்களை விடத் தலைவர்கள் எப்போதும் பலம் பொருந்தியவர்கள். போர்களில் அவர்கள் வீரர்களைவிடச் சிறந்து விளங்க வேண்டும் என்பதும் இந்நிலையில் ஊறுவரின் அது தலைவர்களின் பெருமையைப் பாதிப்பதாக அமையும் என்பதும் இவர்களிடையே பரவியிருந்த எண்ணங்களாகும். போரில் தலைவர்கள் இறக்க, போர் வீரர்கள் தங்கள் வீடுகட்குத் திரும்பிச் செல்லலாகாது என்பது இவ்வீரர்களிடையே காணப்பட்ட ஒரு ஒழுங்காம்.

போர்க்காலங்களில் போர் செய்தல் வீரர்களின் தொழில். பிற நேரங்களில் குடித்து மகிழ்வதும், உண்டு பொழுது போக்குவதுமே இவர்கள் வழக்கம். இந்நிலையில் பெண்களே வீட்டு வேலைகளையும் வயல் வேலைகளையும் கவனித்து வந்தனர். பெண்களுக்கு எப்போதும் சிறப்பும் பெருமையும் உண்டு.

கி.மு. மூன்றும் நூற்றுண்டுக் காலப் பகுதியில் இவர்கள் எங்கணும் பரந்து வாழத் தலைப்பட்டனர். ஸ்கேண்டிநேவியப் பகுதியில் இவர்கள் பின்னியர்களுடன் (Finnish) கலந்து

வாழ்ந்தனர். இது போன்றே தெற்கே பொகிமியா, தெற்கு ஜெர்மனி போன்ற இடங்களில் சென்று உறைந்ததுடன் ரோமப் பேரரசு அச்சமுறும் வகையில் வீரம் காட்டி வாழ்ந்து வந்தனர்.

இந்தோ ஐரோப்பிய மொழியினின்றும் பிரிந்துநின்ற பழம் ஜெர்மானிக் மொழி (Proto Germanic) பல பண்புகளில் மாறியமைந்துள்ளமை காணலாம். இவற்றுள் மிக முக்கிய மாகக் கருதப்படுவது சில மெய்யெழுத்துக்களில் கண்ட ஒலி மாற்றமாகும்.[1] இம்மெய் மாற்றத்தை மொழிநூலோர் முதல் ஜெர்மானிக் மெய்மாற்றம் (First Germanic consonant shift) என்பர். இம்மாற்றங்களைக் கண்டு மொழியியல் உல கிற்குத் தந்த பெருமை ஜேக்கப் கிரிம் என்ற பேரறிஞரைச் சாரும். எனவே இதனைக் குறிக்கும் விதியினை 'கிரிம் விதி' (Grimm's law) என்றழைப்பர். பல்வேறு இ. ஐ. மொழி களின் மெய்யெழுத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் கீழ்க் காணும் அட்டவணை காட்டும்.

| இ. ஐ. | | ஜெர்மானிக் | இ. ஐ. | | ஜெர்மானிக் |
|---|---|---|---|---|---|
| *p* | → | *f* | *g* | → | *k* |
| *t* | → | θ | *bh* | → | *b* |
| *k* | → | *h* | *dh* | → | *d* |
| *b* | → | *p* | *gh* | → | *g* |
| *d* | → | *t* | | | |

1. Indo-European (hence Latin and Sanskrit) *p*, *t*, *k*, shift to Germanic *f*, θ, *h*, while Indo-European *b*, *d*, *g*, shift to Germanic *p*, *t*, *k*, and Indo-European *bh*, *dh*, *gh*, shift to Germanic *b*, *d*, *g*, The circle resolves only once; Germanic *b*, *d*, *g*, derived from Indo-European *bh*, *dh*, *gh*, do not subsequently shift to *p*, *t*, *k*, and so on.

John P. Hughes, The Science of Language, p. 54.

| | லத்தீன் | கிரீக் | வடமொழி | கோதிக் | ஆங்கில்ம் |
|---|---|---|---|---|---|
| *p→f* | *pedem* | *poda* | *padam* | *fotuz* | *foot* |
| | *pecus* | | *pacu* | *faihu* | *fee* |
| | *piscis* | | | *fisks* | *fish* |
| | லத்தீன் | கிரீக் | வடமொழி | ப.நோர்ஸ் | ஆங்கிலம் |
| *t→th* | *trez* | *treiz* | *trayas* | *thrir* | *three* |
| | *tenuis* | *tanaos* | *tanu* | *thunnr* | *thin* |
| | *tu* | *tu* | *tvam* | *thu* | *thou* |
| | லத்தீன் | கிரீக் | வெல்ஷ் | கோதிக் | ஆங்கிலம் |
| *k→h* | *cordum* | *kardia* | *craidd* | *hairto* | *heart* |
| | *centum* | *katon* | *cant* | *hunt* | *hundred* |
| | லத்தீன் | ஜெர்மன் | | | |
| *b→p* | *boletus* | *pilz* | | | |
| | லத்தீன் | கிரீக் | வடமொழி | கோதிக் | ஆங்கிலம் |
| *d→t* | { *edo* | *edo* | *admi* | *itam* | *eat* |
| | { *decem* | *deka* | *daca* | *taihum* | *ten* |
| | லத்தீன் | கிரீக் | | கோதிக் | ஆங்கிலம் |
| *g→h* | *gelidus* | | | *kaldz* | *cold* |
| | *genuz* | *genos* | | *kuni* | *kin* |
| *bh→b* | | | *bharati* | | *bear* |
| *dh→d* | | | *rudhiras* | | *red* |
| *gh→g* | | | *hansaz* (*gh→h*) | | *grose* |

இதுபோன்றே இந்தோ ஐரோப்பிய மொழியின் கண்ணுள்ள சொற்களில் சொல்லழுத்தம் (accent) சொற்களில் எல்லாப் பகுதிகளிலும் காணப்பட ஜெர்மானிய மொழிகளில் சொற்களின் முதல் அசைகளில் (syllable) மட்டுமே இவ் வழுத்தம் காணப்படுகிறது.[1]

இந்தோ ஐரோப்பிய மொழியில் ஒருமை, இருமை பன்மை எண்கள் இருந்தன. ஆனல் ஜெர்மானிய மொழி களிலோ ஒரு சில இடங்களைத் தவிர இருமை எண் அழிந்து விட்ட நிலையே உள்ளது. இது போன்றே மூல மொழியில் காணப்பட்ட எட்டு வேற்றுமைகளில் (எழுவாய், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி) நான்கு வேற்றுமைகளே (எழுவாய், ஐ, அது, விளி) ஜெர்மானிய மொழிகளில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய பல வேற்றுமைகளை ஜெர்மானிய மொழிகளில் காண முடியும். ஒரு சில கூறுகளைப் பிற இ. ஐ. மொழிகளும் கொண்டிருந்த போதிலும் எல்லா வேற்றுமைக் கூறுகளையும் எல்லா மொழிகளும் கொண்டிருக்கவில்லை.[2]

இத்தகைய வேற்றுமைகள் மிகப் பழங்காலத்தே தோன்றிவிட்டன. எனினும் கி.பி. 500க்குப் பிறகே ஜெர்மானிய மொழிகள் பிரிந்து பல வேறு மொழிகளாக வளரத் தலைப்பட்டன என அறிஞர்கள் கூறுவர்.[3]

ஜெர்மானிய மொழிகளை மொழியியலாளர்கள் வடக்கு மொழிகள், கிழக்கு மொழிகள், மேற்கு மொழிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். வடக்கு மொழிகளில் ஐஸ்லாண்டிக் டேனிஷ், சுவீடிஷ், நார்வேஜியன், பெரோயிஸ், (Faroeish) போன்ற மொழிகள் அடங்கும். இம்மொழிகளின் பிறப்புக்குக் காரணமாக இருந்த பழைய நோர்ஸ் மொழி (Old Norse)

---

1. R. Priebsch and W. E. Collinson, *ibid* p. 58.
   C. F. Hockett, *ibid*, pp. 514-515.
2. R. Priebsch and W. E. Collinson, *ibid*, pp. 58-106.
3. *ibid*, p. 109.


ஜெர்மானிய மொழிகள்
கிழக்கு
மேற்கு
பர்கண்டியன்
வாண்டல்
கோதிக்
விசிகோதிக்
ஆஸ்ட்ரோ கோதிக்
வடக்கு
ஜெர்மன்
பழைய சாக்சன்
லங்கோ பார்டிக்
பழைய நோர்ஸ்
மேற்கு ஸ்கேண்டிநேவியன்
கிழக்கு ஸ்கேண்டிநேவியன்
டச்சு
பிளமிஷ்
ஐஸ்லாண்டிக்
நார்வேஜியன்
பெரோயிஸ்
டேனிஷ்
சுவீடிஷ்
குத்னிஷ்
ஆங்கிலம்
பிரிசியன்

ஜெர்மானியப் பொதுமொழியினின்றும் கி.பி. முதல் நூற்றுண்டில் பிரிந்து தனிமொழியாக வழங்க ஆரம்பித்தது. கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் கிடைக்கும் ரூனிக் (Runic) கல்வெட்டுக்களில் காணப்படும் மொழி ஜெர்மானிய மொழியினின்றும் மாறுபட்டுள்ளது என்பதை விம்மர் (F.W. Wimmer) என்பார் முதன் முதல் கூறினர். இது ஒரு விதமான வடக்குக் (Nordic) கூறிணைக் கொண்டு காணப்படுகிறது என்றும் இது பிற ஜெர்மானிய மொழிகளினின்றும் மாறுபட்டுள்ளது என்றும் இவர் விளக்கியுள்ளார். சிலர் ரூனிக் கல்வெட்டுக் காலத்தில் கிழக்கு ஜெர்மானிய மொழியான கோதிக், நோர்ஸ் மொழியினின்றும் மாறுபட்டிருக்கவில்லை எனக் கருதினும் இக்கொள்கை தவறு என்பர் பலர்.[1]

வட ஜெர்மானிய மொழிகளையும் மேற்கு, கிழக்கு மொழிகள் என இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். கி.பி. பத்தாம் நூற்றுண்டுக் காலப்பகுதியில் இம்மொழிகளிடையே ஏற்பட்ட மாற்றங்களால் டேனிஷ், சுவீடிஷ் மொழிகள் கிழக்குப் பிரிவாகவும் நார்வேஜியன், ஐஸ்லாண்டிக் மொழிகள் மேற்கு மொழிகளாகவும் பிரிந்தன.[2] சிலர் இவற்றை, மேற்கு, கிழக்கு 'நார்டிக்' (West, East Nordic) என்றும் இன்னுஞ் சிலர் கிழக்கு, மேற்கு நோர்ஸ் எனவும் அழைப்பர்.[3] இப்பெயர்

---

1. However, one thing is certain-that even at the time of the earlier runic communications Gothic and North Germanic diverged on vital points of linguistic structures.

H. Melberg, Origin of the Scandinavian Nations and Languages, p. 768.

2. *ibid.* p. 812.

3. The terminology is not fixed. Scandinavian scholars frequently speak of "West Nordic" (vestnordisk) and "East Nordic" (østnordisk). Occassionally, Norwegian, Icelandic, Faroe-ish, Orkneyan, and Shetlandish are taken as "Norn" (norrønt), or as "West Norse" (Icelandic vesturnorræna) over against "East Norse" (austurnorræna), which in this usage is reserved, rather perplexingly, for Danish and Swedish.

*ibid.* p. 812.

களால் இவை அழைக்கப்படினும் முன்னால் இவற்றை இணைத்து டேனிஷ் மொழி எனச் சிலர் அழைத்து வந்ததை யும் காணலாம். காலம் போகப் போகவே இப்பெயர் மறைந்து இன்று வழங்கும் பெயர்கள் வழக்கில் வந்தன.[1]

கிழக்கு ஜெர்மானிய மொழிகள் அனைத்தும் இன்று பேச்சு வழக்கில் இல்லாமல் அழிந்துவிட்டன. இவற்றுள் மிக முக்கிய மானது கோதிக் மொழியாகும். இதன்கண் கி.பி. நான்காம் நூற்றாண்டு முதலே எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் உள்ளன. உல்பிலா (Ulfila) என்ற பாதிரியால் தோற்றுவிக் கப்பட்ட கோதிக் எழுத்து முறையில் அமைந்தவை இவை. கிழக்கு ஜெர்மானியப் பிரிவில் கோதிக், வாண்டல், பர்கண்டியன் போன்ற மொழிகள் அடங்கும். இவற்றைப் பேசிய மக்களைப் பற்றிய சில செய்திகளைப் பிளினியின் நூலிலிருந்து அறிய முடியும்.[2] இம்மக்களில் ஆஸ்ட்ரோ கோதியர்களும், விசிகோதியர்களும் வாண்டல் பிரிவினரும் ரோம் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்த வர்கள். இம்மக்களை ரோமர்கள் காட்டுமிராண்டிகள் (Barbarians) என அழைத்தமை இவண் நினைவு கூரத்தக்கது. கி.பி. முதல் நூற்றாண்டில் விஸ்துலா பகுதியினின்றும் தெற்கே குடிபெயர்ந்த இம்மக்கள் மூன்றாவது நூற்றாண்டில்

---

1. "Danish Tongue" appears to have been the trunk from which sprang a many-branched growth of language names; "Danish" (as applying to the speech of Denmark exclusively), "Swedish" (applying to a North Germanic variety of speech), "Northern", "Norn", "Iclelandic", and "Faroeish".

*ibid.* p. 845.

2. The term East Germanic includes Goths, Burgandians, Vandals, Gepidae and Rugii. Pliny apparently brings them all under the common term Vandili, and the Byzantine historian Procopius of the sixth century alludes to their mutual resemblances.

R. Priebsch, *ibid.* p. 32.

கருங்கடல் பகுதிகளில (Don–Dacia) வந்து தங்கி ஆஸ்ட்ரோ கோதியர்கள், விசிகோதியர்கள் எனப் பிரிந்து வாழத் தலைப் பட்டனர். இவர்களுள் ஆஸ்ட்ரோகோதியர்கள் கி.பி. ஐந்தாம் நூற்ருண்டில் தியோடரிக் தலைமையில் (Theoderic–the Great) இத்தாலியில் பேரரசு ஒன்றை நிறுவி அவண் வாழ்ந்து பின்னர் அழிந்தனர். விசிகோதியர்களும் ஐந்தாம் நூற்ருண்டுப் பகுதியில் பிரான்சின் பெரும்பகுதியைத் தங்கள் கீழ்க் கொண்டுவந்ததுடன் பின்னர் ஸ்பெயினிலும் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தி அராபியர்களின் வரவால் பலம் குன்றி வாழ்ந்தனர். வாண்டல் மக்கள் ஹங்கேரி, கால் போன்ற இடங்களில் எல்லாம் தங்கள் வன்மையைக் காட்டிய துடன் ஆப்பிரிக்காவிலும் சில காலம் தங்கள் ஆட்சியை நிறுவி வாழ்ந்தனர். கி.பி. ஐந்தாம் நூற்ருண்டில் (கி.பி. 455) இவர்கள், சிசிலி, சார்டினியா, போன்ற பகுதிகளைத் தங்கள் ஆட்சியின் கீழ் வைத்திருந்த போதிலும் பின்னர் வளர்ந்து வந்த பைசாண்டின் பேரரசுக்கு அடிபணிந்ததுடன் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட இவர்களால் தங்கள் மொழியினைப் பாதுகாக்க முடியாமல் போயிற்று.

மேற்கு ஜெர்மானிய மொழிகளை ஆங்கிலம்–பிரிஷியன், தாழ் ஜெர்மன் (Low German) தாழ் பிராங்கோனியன், உயர் ஜெர்மன் (High German) லங்கோபார்டிக் என நான்கு பிரிவாகப் பிரிக்கலாம். இவற்றுள் பிரிஷியன் இன்று ஹாலண்டின் வட பகுதியிலும் அதை ஒட்டிக் கிடக்கும் சில தீவுகளிலும் வழங்கி வருகிறது. இதற்கும் ஆங்கிலத்திற்கும் மிகுந்த ஒற்றுமை காணப்படுவதால்தான் இவை இரண்டையும் இணைத்து ஒரே பிரிவாகக் கருதுகின்றனர் மொழி நூலோர். கி. பி. முதல் நூற்ருண்டுப் பகுதியில் ‘ஆங்கிள்ஸ்’ மக்களின் மொழிக்கும் இதற்கும் அதிக வேற்றுமை இல்லா திருந்தது என்றும் பின்னர்ப் படிப்படியாகப் பல வேற்றுமைகள் தோன்றி இவை ஒன்றிலிருந்து ஒன்று மாறிச் சென்றது என்றும் கூறுவர்.

ஆங்கிள்ஸ் (Angles) பற்றிய செய்திகளை டேஸிட்டஸ் தாலமி போன்ற வரலாற்றாசிரியர்களின் நூல்களில் காண லாம். இவர்கள் எல்ப் (Elbe) ஆற்றின் அடிப்பகுதியில் வாழ்ந்து வந்தனர் என்பார் தாலமி. இம்மக்கள் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் இங்கிலாந்தின் வட பகுதியில் குடியேறி வாழத் தலைப்பட்டனர். அதே நேரத்தில் இவர்கள் வாழ்ந்து வந்த வட ஜுட்லாண்டில் டேனிஷ் மக்கள் வந் துறைந்தனர்.

இது போன்று ஜுட்லாண்டில் வாழ்ந்து வந்த ஜுட் மக்களும் வடமேற்கு ஜெர்மானியில் குடிபெயர்ந்து பின்னர் இங்கிலாந்தில் கெண்ட், ஹேம்ஷெயர் போன்ற இடங்களில் குடியேறினர். இப்பகுதியில் கிடைக்கும் சில பழைய பானை களிலிருந்தும் ஆபரணங்களிலிருந்தும் இவர்கள் ஜெர்மனி யின் தாழ்ந்த பகுதிகளிலிருந்து இவண் வந்திருக்க வேண்டும் என எண்ண இடமேற்படுகிறது என்பர் புதை பொருள் ஆராய்ச்சி வல்லுநர்கள்.

சாக்சன் மக்கள் “சிறிய வாள் எனப் பொருள்படும் சொல்லிலிருந்து (*Bahza) தங்கள் பெயரினைப் பெற்றிருக்க லாம்” என்று அறிஞர்கள் கருதுவர். இவர்கள் எல்ப் நதியின் அடிப்பகுதியில் வாழ்ந்துவந்தனர் எனத் தாலமி குறிப்பிடு வார். இவர்கள் இங்கிருந்து பிரிஷியன் மக்களுடன் பிரான்சு நாட்டின் வடகரைப் பக்கம் சென்றுறைந்து பின்னர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஹம்பர் நதியின் தென்பகுதியில் குடியேறினர். இதனை ஒட்டிப் பிற சாக்சன் மக்களும் எல்ப் நதி தீரத்தினின்று இவண் வந்துறையத் தலைப்பட்டனர்.

ஸ்காண்டிநேவியன் மொழியில் காணப்படும் ரூனிக் கல்வெட்டுக்களே ஜெர்மானிய மொழிகளில் உள்ள பழைமை யான எழுத்துச் சான்றுகள். கி.பி. மூன்றும் நூற்றாண்டு முதல் கி.பி. எட்டாம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுக்கள் ஸ்காண்டிநேவியா, டென்மார்க்கு போன்ற நாடுகளில்

கிடைத்துள்ளன. நார்வேயிலும் ஐஸ்லாந்திலும் கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் இலக்கியங்கள் தோன்றின. இதை யடுத்து கி. பி. 13ஆம் நூற்றாண்டில் டென்மார்க்கு, சுவீடன் நாடுகளிலும் கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் கோட்லாண்டிலும் இலக்கியங்கள் உருவாயின.[1] மேற்கு ஜெர்மானிய மொழிகளில் பழைமையான கல்வெட்டுக்கள் இல்லையாயினும் ஆங்கில இலக்கியங்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதலே தோன்றியுள்ளன.

கி.பி. ஆறும் நூற்றாண்டில் நெதர்லாந்து ஜெர்மானியினின்றும் பிரிய இவண் வழங்கிய மொழிக்கும் ஜெர்மானியில் வழங்கிய மொழிக்குமிடையே வேற்றுமைகள் வளர்ந்தன. இவண் வாழ்ந்து வந்த பிராங்கோனியன் மக்களின் மொழியினின்று பிறந்ததே இன்றைய டச்சு அல்லது நெதர்லாண்டிக். எனினும் இவண் வழக்கிலிருந்த சாக்சன், பிரிஷியன் மொழிக் கூறுகளையும் இதன்கண் காணமுடியும். பெல்ஜியத்தில் பேசப்படும் பிளமிஷ் மொழியும் டச்சு மொழியும் ஒரே மொழியாகவே உள்ளன.

சிறந்த மொழி நூலறிஞரான ராமஸ் ராஸ்க் (Ramas Rask) பழைய நோர்ஸ் மொழிக்கும் (1811) பழைய ஆங்கில மொழிக்கும் (1817) இலக்கணங்கள் எழுதியுள்ளார். ஜெர்மானிய அறிஞரான கிரிம் (Jacob Grimm) என்பாரே ஒப்பிலக்கண வளர்ச்சிக்கு (Comparative Grammar) வித்திட்டவர். 1819இல் வெளியான இவருடைய நூலின்கண்

---

1. The oldest traces of Teutonic are proper names recorded by classical writers, words borrowed by Finnish and about a hundred archaic Runic inscriptions, found especially in Scandinavia and Denmark ranging in date from the third century to the eighth, and consisting chiefly of proper names, with relatively few common nouns or verbs.

Louis H. Gray, Foundations of Language, p.

பதினைந்து மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்து எழுதியுள்ளார். இந்நூலின் முதல் பதிப்பில் ஒலியியல் இடம் பெறவில்லையாயினும் 1822இல் இந்நூலின் முதல் பகுதியின் இரண்டாவது பதிப்பும் 1831இல் மூன்ருவது பகுதியும் 1837இல் நான்காவது பகுதியும் வெளிவந்தபோது ஒலியியலைப் பற்றிய இவரது சிறந்த கோட்பாடுகளும் ஒப்பிலக்கண விதிகளும் வெளியாயின.

தேம்ஸ் நதிக்கும் ஹம்பர் நதிக்குமிடைப்பட்ட பகுதிகளில் (Mereia, Eeast Anglia Eessex, Middlesex) ஆங்கிள்ஸ் மக்களும் சாக்சன் மக்களும் தனித்தனியாகக் குடியேறவே, பின்னர் இம்மக்களை இணைத்து ஆங்கிலோ—சாக்சன் என அழைக்க ஆரம்பித்தனர். இச் சொல் கி.பி. 8ஆம் நூற்ருண்டு முதலே இலக்கியங்களில் பயன்படுத்தப் பட்டிருத்தல் காணலாம். "இம்மூன்று மக்களின் மொழிகளே இன்று ஆங்கிலமாக உருவெடுத்துள்ளன" என ஆங்கில வரலாற்ருசிரியர்கள் கூறுவர்.[1]

---

1. Anglian and Saxo-Frisian coalesced into the English language, which in the course of centuries absorbed a multitude of Scandinavian, Norman French and cosmopolitan words, but the fundamental of the language is almost exclusively West Germanic.

E. Prokosch, A Compararive Germanic Grammar, pp. 31-32.

## கிழக்கு ஜெர்மானிய மொழிகள் (East Germanic)

ஓடர் (Oder) நதியின் கிழக்கு முதல் பால்டிக் கடற்கரை யோரங்கள் வரையிலும் வழக்கிலிருந்தவை கிழக்கு ஜெர்மானிக் மொழிகளாகும். முன்னர்க் குறிப்பிட்டதுபோன்று இன்று இவை வழக்கில் இல்லை.

கோதியர்கள், பர்கண்டியர்கள், வாண்டல் மக்கள் போன்ற பல பிரிவினர் பேசி வந்த மொழிகளையே இப்பெய ரால் அழைக்கின்றனர். பண்டைக் காலத்தில் ஐரோப்பிய நாட்டில் பல பகுதிகளில் மிக வன்மையுடன் வாழ்ந்த இம் மக்களும் இவர்கள் பேசி வந்த மொழிகளும் கால வெள்ளத் தில் அழிந்துவிட்ட நிலையினையே காண்கிறோம். பிளினி பிரகோபியஸ் போன்ற வரலாற்றாசிரியர்கள் இவர்கள் பற்றி யும் குறிப்பிட்டுள்ளனர்.



### 1.5.1 கோதிக் (Gothic)

இன்று இம்மொழி வழக்கில் இல்லையாயினும் ஜெர்மானிய மொழிகளில் இது மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. ஜெர்மானிய மொழிகளில் இதன்கண்தான் மிகப்பழமையான கையெழுத்துப் பிரதிகள் கிடைக்கின்றன. மேலும், இதுவே பழைய ஜெர்மானிக் மொழிநிலை பற்றித் தெரிந்து கொள்வதற்குப் பயன்படும் மொழியாகவும் உள்ளது. ஜெர்மானிய மொழிகளின் பழைமையான கூறுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு முற்கால ஜெர்மானிய மொழி நிலையை உணர உதவுவதுடன் பிற்காலத்தில் ஜெர்மானிய மொழிகளில் ஏற்பட்ட மாற்றத்தையும் காட்டுவதாக உள்ளது இது.

கோதிக் என்ற சொல் பொதுவாக கோதிக் மக்களின் மொழியினையும், குறிப்பாக உல்பிலா (Wulfila) என்ற பாதிரியாரால் கி.பி. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்டுப் பின்னர் இத்தாலியில் வாழ்ந்த விசிகோதியர்களால் படியெடுக்கப்பட்டுப் பலவேறு எழுத்துருவங்களில் காணப்படும் மொழியினையும் குறிக்கும். இவரால் எழுதப்பட்டவற்றுள் மிக முக்கியமானது வேதாகம மொழிபெயர்ப்பாகும். இதனைப் பிறமொழியினின்று பிரித்தறியும் பொருட்டுச் சிலர் (Hickes) மோசோ கோதிக் (Moeso Gothic) என்றும், சிலர் (Kluge) பைபிள் கோதிக் (Bible gotisch) என்றும், இன்னும் சிலர் (Fulda) உல்பிலியன் கோதிக் (Wulfilian Gothic) என்றும் பலவேறு பெயர்களால் அழைப்பர். எனினும் உல்பிலியன் கோதிக் என்ற பெயரே இன்று அதிகமாக வழங்குகிறது.

கோதிக் மொழி பற்றிப் பிற மூலங்களினின்றும் ஓரளவு தெரிந்து கொள்ள முடியும். பிளினி (Pilny, Natural History 37, 35) தம்முடைய நூலில் 'Gutones' என்ற சொல்லால் இம்மக்களைக் குறிப்பிடுகிறார். கிரேக்க ஆசிரியர்களின் நூல்

களிலோ பழைய இலத்தீன் இலக்கியங்களிலோ, இம்மக்களைப் பற்றியோ இவர்களின் மொழியைப் பற்றியோ அதிகமாகக் காணப்படாவிடினும் இவர்கள் ரோமப் பேரரசுடன் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் இவர்களைப் பற்றிய செய்திகள் சில கி.பி. 235க்குப் பின்னர் உள்ள நூல்களில் காணப்படு கின்றன. இவர்களில் ஒரு பிரிவினரான ஆஸ்ட்ரோ கோதியர் களைப்பற்றி இத்தாலியக் கல்வெட்டுக்களிலும் (493-555) மற் றொருபிரிவினரான விசிகோதியர்களைப்பற்றி ஸ்பானிஷ், போர்ச்சுக்கீஸ், பிரஞ்சு, பிராவன்சல், மொழிகளிலும் சில செய்திகள் காணப்படுகின்றன. ரொமான்ஸ் மொழிகளில் சில கோதிக் சொற்கள் புகுந்துள்ளன. சில ரூனிக் கல்வெட்டுக் களில் இம்மொழிபற்றிக் காணப்படுகிறது. மார்ஸ்டிராண்டர் என்பார் பல ரூனிக் கல்வெட்டுக்களைக் கோதிக் மொழிக் கல் வெட்டுக்கள் எனக் கூறினும் அறிஞர்களிடையே இது பற்றிக் கருத்து வேறுபாடு இல்லாமலில்லை.

கோதிக் மக்களின் பிறப்பிடம் ஸ்கேண்டிநேவியா என்றே அறிஞர்கள் கருதுகின்றனர். கி.பி. முதல் நூற்றாண்டுக் காலப்பகுதியில் இம்மக்கள் பால்டிக் கரையில் விஸ்துலா (Vistula) நதி தீரத்தின் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். பின்னர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தெற்கே குடிபெயர்ந்து கருங்கடல் பக்கம் வந்து டெனுப் முகத்துவா ரத்தைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தனர். இன்றும் சுவீடன் நாட்டின் தென்பகுதி கோத்லண்டு (Gothland) என்ற பெயரால் வழங்குகிறது. இங்கிருந்துதான் இம்மக்கள் ரோமப் பேரரசை டேஸியா, மோசியா (Moecia) முதலிய இடங்களில் தாக்கினர். கி.பி. 252இல் ரோமப் பேரரசரான டேசியசைத் (Dacius) தோற்கடித்துக்கொன்ற துடன் பின்னர் ஆசியாமைனர் (253, 267), கீரீஸ் (268) முதலிய இடங்களையும் தாக்கினர். மன்னன் ஆரூலியன் (270–275) இவர்கட்கு அஞ்சி டேசியாவை விட்டுத் தெற்கே சென்று தன்னுடைய படையினையும் அரசினையும் நிலைநிறுத் தியதாகவும் அறிகிறோம்.

இவர்களில் ஒரு பிரிவினரான விசிகோதியர்கள் பிரான்சு நாட்டில் புகுந்து தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்திப் பின்னர்ப் பிராங்கு மக்களால் துரத்தப்பட்டபோது ஸ்பெயின் நாட்டின் வடமேற்குப் பகுதியில் உறைந்து தங்கள் ஆட்சியை நிலைநிறுத்தினர். எனினும் அராபியர்களின் வரவால் இவர்கள் நலிவுற இவர்களுடைய மொழியும் அழிவுற்றது. ஸ்பெயின் நாட்டில் இவர்கள் மொழி எவ்வளவு காலம் வழங்கி வந்தது எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாவிடினும் பத்து, அல்லது பதினொன்றும் நூற்றாண்டு வரையிலும் பேச்சு மொழியாக இருந்திருக்கலாம் எனக் கருதுவர் மொழியியல் அறிஞர்கள். இக்காலப் பகுதியில்தான் சில இலக்கிய ஆசிரிர்கள் இம்மொழிச் சொற்கள் சிலவற்றைத் தங்கள் நூலில் எடுத்தாண்டுள்ளனர். உல்பிலா எழுதிய மொழியும் விசிகோதிக் என்பதை நாம் மறந்து விடுதலாகாது.

மற்றொரு பிரிவினரான ஆஸ்ட்ரோ கோதியர்கள் ரோமப் பேரரசின் வீழ்ச்சியின்போது இத்தாலியில் தங்கள் அரசினை நிறுவினர். இவர்கள் இத்தாலியில் ஆட்சியிலிருந்த காலத்தின்தான் (493-555) உல்பிலா எழுதிய வேதாகமங்களைப் படிவம் எடுத்தனர். இவர்கள் இத்தாலியில் செல்வாக்குப் பெற்றிருந்த காரணத்தால் அரசாங்க எழுத்துக்களில் கோதிக் பெயர்களும் சொற்களும் புகுந்துள்ளன. ஆனால் பேரரசன் தியோடெரிக்கின் (Theodoirc, 489–526) வீழ்ச்சியின் பின்னர் இவ்வரசு ஆட்டம் கண்டதுடன் படிப்படியாக இம்மொழியும் பேச்சு வழக்கற்று மறைந்தது.

கோதிக் மொழிகளில் கிரிமியன் கோதிக் (Crimean Gothic) 16ஆவது நூற்றாண்டு வரையிலும் பேச்சுவழக்கிலிருந்தது என்று எண்ண இடம் உண்டு. இது பற்றியும் அதிகமாகத் தெரியவில்லை. கிரிமியா (சோவியத்) பகுதிகளில் ஒரு வகையான ஜெர்மன் மொழி வழங்குகிறது என அறிந்து அதில் அக்கரை கொண்ட பிளமிஷ் அரசியல் அதிகாரி ஒருவர் (Ogier Ghiselin de Busbecq) 1560–62இல் இருவரின் பேச்சைக்

குறித்துவைத்துள்ள குறிப்புகளிலிருந்தே இது பற்றி அறிய முடிகிறது. சிலர் இது ஒருவகையான விசிகோதிக் என்பர்.[1] சிலர் (Loewe) இது மேற்கு ஜெர்மானிய மொழி என்றும் இன்னும் சிலர் (Uvause) மேற்கு, கிழக்கு, மொழிகளின் கலப் பால் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

உல்பிலியன் கோதிக் எழுத்துக்களாகப் பல கிடைத் துள்ளன. லத்தீனில் எழுதப்பட்ட இரண்டு விற்பனை உடன்படிக்கைகளில் காணும் கோதிக் கையெழுத்துக்கள், அரைகுறையாகக் கிடைத்துள்ள ஒரு வருடக்குறிப்பு (calender), "சால்ஸ்பர்க் வியன்ஞ" கையெழுத்துப் பிரதி போல்வன பல உள்ளன.[2] "Codex Argenteus" என்பது வெள்ளி, தங்க எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ள 336 இதழ் களைக் (leaves) கொண்டது. இவற்றுள் இன்று 187 பக்கங்களே கிடைத்துள்ளன. மாத்யூஸ், ஜாண், லூக், மார்க் வேதாகமங்களின் பகுதிகளைக் கொண்டுள்ள இவ்விதழ் கள் இன்று உப்சலா (Uppasala) நூல் நிலையத்திலுள்ளன. இது போன்றே மிலான் நூல் நிலையத்திலும் (The Ambrosian Codices) கோதிக் மொழியில் எழுதப்பட்ட சில கையெழுத்துப் பிரதிகள் இருக்கின்றன. 'Ambrosiamus A', 'Ambros B' என்பன முறையே 190, 154 பக்கங்களைக் கொண்ட கடிதங் கள் (Pauline Eipistles). இவையெல்லாம் கி. பி. 5,6ஆம் நூற்றுண்டுகளில் படியெடுக்கப்பட்டிருக்கலாம் என எண்ணு கின்றனர் அறிஞர்கள். இவற்றுள் பெரும்பாலன கோதிக் எழுத்தினுல் எழுதப்பட்டிருந்தவற்றை அழித்து அதன்மேல் லத்தீன் எழுத்தினுல் எழுதப்பட்டவை.

---

1. James M. Marchand, The Gothic Language, in Orbis, vol. 7 (1958), p. 496.

2. The Codex Argenteus, The Codex Carolinus, The Ambrosian Codices, Ambrosianus A, Ambros B, Ambr. 6 Ambr. D, Ambros. E, The Giessen fragment, The Verosnese marginal notes.

இவற்றை உல்பிலியன் கோதிக் மொழி என்பர். கோதிக் மொழியின் எழுத்துருவை உருவாக்கியவர் உல்பிலா (Wulfila 311-383) என்ற பாதிரியாவார். இவர் ஒரு விசிகோதியர். இவருடைய வாழ்க்கையைப் பற்றி இவருடைய வளர்ப்பு மகனும் (Auxentius) பழைய கோயில் வரலாற்றாசிரியர்கள் சிலரும் (Sokrates, Sozomenos, Theodoret) எழுதி வைத்த சில குறிப்புக்களினின்றும் அறிய முடிகிறது. கிரேக்க நாட்டிலுள்ள கப்படோசியாவைச் சார்ந்தவர்கள் இவருடைய மூதாதையர்கள். விசிகோதியர்களால் கைதியாக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டவர்களின் பரம்பரையில் பிறந்த இவர் சின்னஞ் சிறு பிராயத்திலேயே கோதிக் கோயிலின் பாதிரியாகப் பணியாற்றி வந்தார். இவர் கான்ஸ்டாண்டிநோபிளில் வாழ்ந்த போது கோதிக் மன்னனால் துன்பம் விளையவே டெனுப் நதியைக் கடந்து மோசியாப் பகுதியில் சென்று தங்கினார் என்றும் கோதிக் தலைவனான "Fritigern"க்கு அரசியலில் உதவி புரிந்து அவனைக் கிறிஸ்தவனாக மாற்றினார் என்றும் அதன்பின் அத்தனரிக்சென்று (Athanarich) தன்னுடைய பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்என்றும் 383இல் வைதீகக் கட்சியுடன் (orthodox) நடந்த கலகம் ஒன்றில் இறந்தார் என்றும் அறிகிறோம்.

இவர் பெயர் பல மாதிரியாக (Wulfilas, Uulfila, Gulfila) எழுதப்படுவதைக் காணலாம்.

கோதிக் எழுத்தின் பிறப்புப்பற்றிப் பல கருத்துக்கள் உள்ளன. கிரேக்க எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்டு உருவானது எனப் பலர் எண்ணுகின்றார். இவற்றின் வரிசை முறையும் உச்சரிப்பு முறையும் ஒத்திருப்பதால் இவ்வாறு நினைக்கின்றனர். எனினும் பினீசியன், ஆர்மெனியன், ரூன் முறைகளினின்றும் எழுந்திருக்கலாம் என நினைத்தாரும் உண்டு. சிலர் (P. Akinian) மெஸ்ரோப் (St Mesrob) என்பாரே கோதிக் எழுத்து முறையினைக் கண்டவர் என்றும் கருதுவர். எனினும் இன்று கிரேக்க எழுத்து முறையினையடிப்

படையாக வைத்தே கோதிக் எழுத்துருவங்கள் உருவாக்கப் பட்டுள்ளன என்றும். சில எழுத்துக்கள் லத்தீன், ரூன் எழுத்துக்களினின்றும் வந்திருக்கலாம் என்றும் எண்ணுகின்றனர். லத்தீன், ரூன் எழுத்துக்களின் செல்வாக்கினை இதில் நன்கு காணலாம். எனினும், சிலர் (von Friesen) இதில் லத்தீனின் செல்வாக்கு இல்லை என்றும் வேறு சிலர் (Luft) ரூனின் செல்வாக்கு இல்லை என்றும் கூறுவர்.

கிடைத்திருக்கும் ஏடுகளில் இரண்டு விதமான எழுத்துக்கள் காணப்படுகின்றன. சிலவற்றில் (Deeds, Ambr. B.D. Salzburg–vienna Ms.) ஒரு முறையும் (Type I) மற்றவற்றில் இன்னொரு முறையான (Type II) எழுத்தும் காணப்படும். இவற்றுள் எது உல்பிலாவின் எழுத்துடன் மிகுந்த தொடர்புடையது என்பதிலும் கருத்து வேற்றுமை உண்டு. முதல் முறையிலிருந்துதான் இரண்டாவது முறை தோன்றியிருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர் பலர். இரண்டாவது முறையில் காணப்படும் s, m, லத்தீனுடன் மிக ஒத்துக் காணப்படுவதால் இததாலி நாட்டில் படிவம் எடுத்தபோது இந்நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணுகின்றனர். எனினும் திட்டவட்டமாக எதுவும் கூறுவதற்கில்லை.[1]

---

1. T. Le Marchant Douse, An Introduction to the Gothic of Ulfilas, pp. 5-6.

Since we thus have two types, each of which may diffeɪ from the Wulfilian, it has been suggested that the only sensible approach is to attempt a reconstruction before discussing 'Wulfilians' alphabet (Marchand). It is, of course quite possible that the Gothic alphabet has been modified in the post–Wulfilian period, and that we cannot discover the Wulfilian form of the alphabet.

J. M. Marchand, ibid. p. 503.

இதில் எட்டு உயிர்களும் பதினூன்கு மெய்களும் ஒலிக் கோள்களாக உள்ளன. உயிர்களில் குறில் நெடில் வேற்றுமை உண்டு எனச் சிலரும் இல்லை எனச் சிலரும் கூறுகின்றனர்.[1]

ஜெர்மானிய மொழிகளில் இது மிகப் பழைமையான கூறுகள் பலவற்றைக் கொண்டுள்ளதால் பல பெயர்மாற்றங் களையும் வினைமாற்றங்களையும் இதன்கண் காணலாம். மொழியியல் அறிஞர்கள் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இம்மொழியை ஆராய்கின்றனரேயன்றி இதன் இலக்கண அமைப்பைப் காணும் முறையில் அதிகமான ஆராய்ச்சி நூல் கள் இல்லை. எனினும் கிடைக்கின்ற பழைய நூல்களிலிருந்து தான் இம்மொழியின் அமைப்பை ஓரளவு தெரிந்துகொள்ள முடிகிறது. ஜெர்மானிய மொழிகளின் பண்டைய ஒலிக் கோளியல், சொல்லியல், தொடரியல் போன்றவற்றை நன்கு தெரிந்து கொள்ள இம்மொழியின் அமைப்பு நன்கு உதவும்.

இம்மொழிப் பெயர்கள் ஆண், பெண், அஃறிணைப் பால் களையும், ஒருமை, பன்மை, எண்களையும், எழுவாய் ஐ, கு, அது, விளி வேற்றுமைகளையும் காட்டவல்லன.[2] வேற்றுமை

---

1. There is some question as to whether Wulfila's signs indicate only quality (Streitberg, Gaebeler) or only quantity (Jellinek). Most authorities take a middle ground between these two extremes, but the general consensus is that length was significant (phonemic) in Gothic. It has been pointed out that this is difficult to prove (Penzl), and a recent discussion attempts to demonstrate that the opposite is actually true, i. e. that length is not phonemic in Wulfila's Gothic (Marchand).

*ibid.* p. 509.

2. The Gothic noun possesses three genders, two numbers singular and plural, and five cases, nominative, vocative, genitive, and detive accusative.

*ibid.* p. 509.

உருபுகள் நோர்ஸ் மொழியினைப் போலவே பால், எண்கட்கேற்ப மாறுவன. பெயர்களின் உருவங்கட்கேற்ப இம்மொழிப் பெயர்களைப் பதினான்கு வகைகளாகப் பிரிப்பர். வேற்றுமை உருபுகளை ஏற்கும் நிலையில் இரண்டு வகையாகப் (weak, strong) பிரிக்கலாம்.

**ஆண்பால்**

**ஒருமை**

| | | |
|---|---|---|
| கும | (*guma*) | மனிதன் |
| குமின்ஸ் | (*gumins*) | மனிதனுடைய |
| குமின் | (*gumin*) | மனிதனுக்கு |
| குமன் | (*guman*) | மனிதனை |

**பன்மை**

| | | |
|---|---|---|
| குமன்ஸ் | (*gumans*) | மனிதர்கள் |
| குமனெ | (*gumane*) | மனிதர்களுடைய |
| குமம் | (*gumam*) | மனிதர்களுக்கு |
| குமன்ஸ் | (*gumans*) | மனிதர்களை |

**பெண்பால்**

**ஒருமை**

| | | |
|---|---|---|
| *giba* | (*giba*) | பரிசு |
| கிபொஸ் | (*gibôs*) | பரிசின் |
| கிபை | (*gibai*) | பரிசுக்கு |
| கிப | (*giba*) | பரிசை |

**பன்மை**

| | | |
|---|---|---|
| கிபொஸ் | (*gibôs*) | பரிசுகள் |
| கிபொ | (*gibô*) | பரிசுகளின் |
| கிபொம் | (*gibôm*) | பரிசுகளுக்கு |
| கிபொஸ் | (*gibôs*) | பரிசுகளை |

**அஃறிணை**

**ஒருமை**

| | | |
|---|---|---|
| ற்ற்ரியு | *(triu)* | மரம் |
| ற்ற்ரிவிஸ் | *(triiws)* | மரத்தின் |
| ற்ற்ரிவ | *(triwa)* | மரத்திற்கு |
| ற்ற்ரியு | *(triu)* | மரத்தை |

**பன்மை**

| | | |
|---|---|---|
| ற்ற்ரிவ | *(triwa)* | மரங்கள் |
| ற்ற்ரிவெ | *(trivê)* | மரங்களின் |
| ற்ற்ரிவம் | *(triwam)* | மரங்களுக்கு |
| ற்ற்ரிவ | *(triwa)* | மரங்களை |

சாதாரணப் பெயர்களில் இருமை காணப்படாவிடினும் கோதிக் மூவிடப் பெயர்களில் ஒருமை, இருமை, பன்மை என்ற எண் பாகுபாடு உள்ளது. தன்மை, முன்னிலைப் பெயர்கள் தமிழைப் போலவே எந்தவிதமான பால்பகுப் பினையும் காட்டுவதில்லை. ஆனால் ஒருமை, இருமை, பன்மை எண்களைக் காட்டுகின்றன. இதற்கு நேர்மாருகப் படர்க்கைப் பெயர்கள், ஆண், பெண், அஃறிணை காட்டும். ஆனால் இருமை காட்டுவதில்லை. மேலும் சில வேற்றுமைகளில் ஆண் பாலுக்கும் அஃறிணைக்கும் பொதுவான சொற்கள் சிலவற்றைக் காணலாம்.

**தன்மை**

**ஒருமை**

| | | |
|---|---|---|
| இக் | *(ik)* | நான் |
| மெய்ன | *(meina)* | என் |
| மிஸ் | *(mis)* | எனக்கு |
| மிக் | *(mik)* | என்னை |

இருமை

| | | |
|---|---|---|
| விற்ற் | (*wit*) | நாங்கள்/நாம் இருவர் |
| உக்கர | (*ughara*) | எங்கள்/நம் இருவருடைய |
| உக்கிஸ் | (*ugkis*) | எங்கள்/நம் இருவருக்கு |
| உக்க் | (*ugk*) | எங்கள்/நம் இருவரை |

பன்மை

| | | |
|---|---|---|
| வெய்ஸ் | (*weiz*) | நாம்/நாங்கள் |
| உன்ஸர | (*unsara*) | நம்/எங்கள் |
| உன்ஸ் | (*uns*) | நமக்கு/எங்களுக்கு |
| உன்ஸ் | (*uns*) | நம்மை/எங்களை |

முன்னிலை

ஒருமை

| | | |
|---|---|---|
| து | (*thu*) | நீ |
| தெய்ன | (*theina*) | உன் |
| துஸ் | (*thus*) | உனக்கு |
| துக் | (*thuk*) | உன்னை |

இருமை

| | | |
|---|---|---|
| இக்கர | (*iggara*) | உங்கள் இருவருடைய |
| இக்கிஸ் | (*iggis*) | உங்கள் இருவருக்கு |
| இக்கிஸ் | (*iggis*) | உங்கள் இருவரை |

பன்மை

| | | |
|---|---|---|
| யுஸ் | (*yus*) | நீங்கள் |
| இஸ்வர | (*iswara*) | உங்களுடைய |
| இஸ்விஸ் | (*iswiz*) | உங்களுக்கு |
| இஸ்விஸ் | (*iswiz*) | உங்களை |

## படர்க்கை

**ஆண்**

| | | |
|---|---|---|
| இஸ் | *(is)* | அவன் |
| இஸ் | *(is)* | அவனுடைய |
| இம்ம | *(imma)* | அவனுக்கு |
| இன | *(ina)* | அவனை |

**அஃறிணை**

| | | |
|---|---|---|
| இற்ற | *(ita)* | அது |
| இஸ் | *(is)* | அதனுடைய |
| இம்ம | *(imma)* | அதற்கு |
| இற்ற | *(ita)* | அதனை |

**பெண்**

| | | |
|---|---|---|
| ஸி | *(si)* | அவள் |
| இஸோஸ் | *(izôs)* | அவளுடைய |
| இஸெ | *(izai)* | அவளுக்கு |
| இய | *(iya)* | அவளை |

**பன்மை**

| | | |
|---|---|---|
| எய்ஸ் | *(eiz)* | அவர்கள் (ஆண்) |
| இஸெ | *(izê)* | அவர்களுடைய (ஆண்) |
| இம் | *(im)* | அவர்களுக்கு ( ,, ) |
| இன்ஸ் | *(ins)* | அவர்களை ( ,, ) |
| இய | *(ija)* | அவை |
| இஸெ | *(izê)* | அவைகளுடைய |

| | | | |
|---|---|---|---|
| இம் | *(im)* | அவைகளுக்கு | |
| இய | *(iga)* | அவைகளை | |
| இயொஸ் | *(ijôs)* | அவர்கள் | (பெண்) |
| இஸொ | *(izô)* | அவர்களுடைய | ( ,, ) |
| இம் | *(im)* | அவர்களுக்கு | ( ,, ) |
| இயொஸ் | *(ijôs)* | அவர்களை | ( ,, ) |

ஆங்கிலத்தைப் போலல்லாமல் இதன்கண் ஆண், பெண், அஃறிணை காட்டவெனத் தனித்தனியான சுட்டுப் பெயர்கள் இருப்பதும் (*sa, sô, thata*) அண்மை, சேய்மை என்ற வேற்றுமை இல்லாமல் போனதும், இவையே சில நேரங்களில் சிறப்புச் சுட்டாகப் (article) பயன்படுவதும் காணத்தக்கன.

இம்மொழி வினைச்சொற்கள் காலம், எண், எழுவாய் போன்ற இலக்கணக்கூறுகள் பலவற்றைக் காட்டும். பிற ஜெர்மானிய மொழிகளில் காணப்படாத இருமை எண் இம் மொழி வினைச்சொற்களில் உள்ளது. தன்மை, முன்னிலை, வினைகளில் மட்டுமே எடுத்துக்காட்டுக்கள் காணப்படினும் படர்க்கையிலும் வரும் எனக் கூறலாம். பிற ஜெர்மானிய மொழிகளின் வினைகளைப் போலவே இம்மொழி வினைச்சொற்களையும் இரண்டு பிரிவுகளாகப் (strong and week) பிரிப்பர்.[1] இறப்பு, நிகழ்வு என்ற இரு காலங்களையே காட்டும் இவ்வினைகள் ஆங்கில மொழியைப் போலவே சில நேரங்களில் துணை வினைகளால் எதிர்காலத்தைக் காட்டினும் இந்நிலை மிக அரிதாகவே காணப்படுகிறது.[2]

---

1. Gothic is the only Germanic language to possess a dual in the verb. The dual is found in all tenses and moods, but is not found in the passive. Only a first and second person dual are attested. It does not offer any difficulties of derivation.

   *ibid.* p. 511.

2. Wlihelm Braune, A Gothic Grammar, p. 66.

ஒருமை

| | | |
|---|---|---|
| நிம | (*nima*) | எடுக்கிறேன் |
| நிமிஸ் | (*nimis*) | எடுக்கிறுய் |
| நிமித் | (*nimith*) | எடுக்கிறுன், எடுக்கிறுள், எடுக்கிறது |

இருமை

| | | |
|---|---|---|
| நிமொஸ் | (*nimôs*) | நாம் இருவர் எடுக்கிறேம் |
| நிமத்ஸ் | (*nimats*) | நீங்கள் இருவர் எடுக்கிறீர்கள் |

பன்மை

| | | |
|---|---|---|
| நிமம் | (*nimam*) | நாம், நாங்கள் எடுக்கிறேம் |
| நிமித் | (*nimith*) | நீங்கள் எடுக்கிறீர்கள் |
| நிமந்த் | (*nimand*) | அவர்கள் எடுக்கிறுர்கள் |

ஒருமை

| | | |
|---|---|---|
| நம் | (*nam*) | எடுத்தேன் |
| நம்ற்ற் | (*namt*) | எடுத்தாய் |
| நம் | (*nam*) | எடுத்தான் |

இருமை

| | | |
|---|---|---|
| நெமு | (*nêmu*) | நாம், நாங்கள் இருவர் எடுத்தோம் |
| நெமுற்ற்ஸ் | (*nemuts*) | நீங்கள் இருவர் எடுத்தீர்கள் |

பன்மை

| | | |
|---|---|---|
| நெமும் | (*nêmum*) | நாம், நாங்கள் எடுத்தோம் |
| நெமுத் | (*nemuth*) | நீங்கள் எடுத்தீர்கள் |
| நெமும் | (*nemum*) | அவர்கள் எடுத்தார்கள் |

## வட ஜெர்மானிய மொழிகள் (North Germanic)

நார்வே, சுவீடன், டென்மார்க்கு போன்ற நாடுகளில் வழங்கும் ஆறு மொழிகள் இதனுள் அடங்கும். இவை. அனைத்தும் பழைய நோர்ஸ் மொழியினின்றும் உருவானவை இவற்றை முன்னால் டேனிஷ் மொழி (donsk tunga) என்றே அழைத்து வந்தனர். காலம் செல்லச் செல்ல இவை தனித் தனிப் பெயர்களால் அழைக்கப்பட்டன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே பிற ஜெர்மானிக் மொழிகளினின்றும் பிரிந்து விட்ட பழைய ஸ்கேண்டிநேவியன் மொழி கி. பி. 10ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் பல்வேறு மொழிகளாகப் பிரிந்து வளர்ந்தது.[1] பழைய ஸ்கேண்டிநேவியன் மொழியில் எழுதப்பட்ட பல (ரூனிக்) கல்வெட்டுக்கள் ஸ்கேண்டி நேவியன் நாடெங்கும் காணக்கிடைக்கின்றன. கி. பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கும் கல்வெட்டுக்கள் ஜெர்மானிய மொழிகளின் பழைய நிலையினைப் பற்றி நன்கு அறிய உதவுகின்றன.

கி.பி. 100 வரையிலும் ஒரே மொழியாக இருந்த பழைய நோர்ஸ் மொழியிலிருந்தும் பிறந்த மொழிகளே இவை. அதன் பின்னர் நடந்த பலவேறு குடியேற்றங்களும் போர் களும் பலமொழிகளாக மாறி வளருவதற்குத் துணை புரிந்தன.

---

1. This experience suggests the historical inference that the first dialectal cleavage of the North Germanic language, into West Scandinavian, was the replica of an earlier division of the whole area of North Germanic speech into two cultural provinces. A further deduction is that these two cultural provinces must have existed down to a time not very remote from the 10th century A. D.

Melberg, Origin of the Scandinavian Nations and Languages, p. 813.

கி.பி. 870 ஐ எட்டிய காலப் பகுதியில் ஐஸ்லாண்டு நாட்டில் இம்மக்கள் குடியேறினர். நார்மண்டி, கிரீன்லண்டு போன்ற அண்டைய இடங்களில் இம்மக்கள் குடியேறி வாழ்ந்தனர். இதுபோன்றே கி. பி. 11ஆம் நூற்றாண்டுல் எரிக்ஸன் (Leif Ericson) தலைமையில் நார்வேஜியர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குடியேறி வாழ்ந்தனர். சுவீடிஷ் மக்கள் கிழக்கு நோக்கிச் சென்று ரஷ்யாவிலும் பால்கன் கரையோரங்களிலும் உறைந்தனர். மினசோட்டாவில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்று (Kensington) இம்மக்கள் கி.பி. 14ஆம் நூற்றாண்டு முதலே அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியேறினதாக ஊகிக்க இடம் தருகிறது.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மீண்டும் நார்வேஜியன்களும் சுவீடிஷ் மக்களும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கானடாவிலும் குடியேறினர். சில இடங்களில் இம்மொழிகள் அவண் வழங்கிய மொழிகளுக்கு இடம் கொடுத்து நின்றது. இன்னும் சில இடங்களில் வட்டார மொழிகளை அழித்து வளர்ந்து நின்றது. பின்லாந்து குடாப் பகுதிகளில் இதன் செல்வாக்கு அதிகமாக இருந்துள்ளது.

கி. பி. 10ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் ஏற்பட்ட மாற்றங்களை அடிப்படையாக வைத்து இம்மொழிகளை மேற்கு கிழக்கு மொழிகள் என இரு பெரும்பிரிவுகளாகப் பிரிப்பர்.[1]

---

1. The period following this is known as the Viking age or Old Norse, variously dated from 700 or 800 to 1050, 1250 or even 1350. During this time there developed enough dialectal divergence to permit a division of Old Norse into Eastern Old Norse (from which developed Danish and Swedish) and Western Old Norse (from which we have Norwegian, Icelandic and Faroese).

Anthropological Linguistics, Vol. 7, No. 8, 1965, p. 80.

Melberg, *ibid.* p. 812.

இவற்றுள் டென்மார்க்கு, சுவீடன் நாடுகளில் பேசப்பட்டவை கிழக்கு மொழிகள் எனவும், நார்வே, ஐஸ்லாந்து என்ற இடங்களில் பயிலப்பட்டவை மேற்குமொழிகள் எனவும் அழைக்கப்படும். இவற்றை முறையே "கிழக்கு நார்டிக்" என்றும் "மேற்கு நார்டிக்" (East Nordic, West Nordic) என்றும் சிலர் பெயரிட்டனர்.



## 1.5.2 பழைய நோர்ஸ் (Old Norse)

ஸ்கேண்டிநேவிய மக்களின் வரலாற்றில் கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டு ஒரு சிறந்த இடத்தைப் பெறும். இந்நூற்றுண்டில்தான் (கி. பி. 860) ஐஸ்லாண்டு கண்டு பிடிக்கப்பட்டது. நான்காவது நூற்றுண்டிலேயே கடல் வணிகர்களிடையே இது பற்றிய எண்ணம் இருந்து வந்தபோதிலும் கடல் கொந்தளிப்பினுல் அலைக்கப்பட்டு எதிர்பாராதவிதமாக இவண் வந்து சேர்ந்த நத்தோத் (Naddod) என்ற நார்வே நாட்டினனையே இந்நாட்டினைக் கண்டு பிடித்த பெருமை சாரும். இதற்குப் பின் பலரும் இவண் வந்து குடியேறினர்.[1] முதன் முதல் இந்நாட்டில் குடியேற வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்தவர் (874) ஆர்னர்சன் என்ற நார்வே நாட்டுச் செல்வந்தராவார். இவ்வாறு ஸ்கேண்டிநேவிய மக்கள்

---

1. Naddod, an otherwise unknown Norse Viking, is generally credited with priority in this discovery. It is supposed that he was accidentally driven upon the coast by storms while on his way from Norway to Faroes, about 860. The second man said to have come to the island, whether by accident or design, was Gardar Svafarson, a Swede, who spent a winter there and named it Gardarsholm, after himself. About 865 a third man, Rafn-Floki, undertook the same voyage with the purpose of exploring the country; and evidently with the idea of possibly settling there, since he brought with him livestock. He called the country Iceland as the result of having seen a quantity of drift-ice in some of the firths on the north-western coast, and also, perhaps, because, through lack of foresight, he had suffered unnecessary hardship while wintering there.

Georgia Dunham Kelchner, Dreams in Old Norse Literature and affinities in Folklore.

E.V. Gornon, An Introduction to Old Norse, p. XXIII (Introduction).

குடியேறிய ஐஸ்லாண்டு நாடே ஸ்கேண்டிநேவிய இலக்கியத்தின் பாதுகாவலாகவும் சிறந்த இலக்கியங்களின் பிறப்பிடமாகவும் திகழ்ந்துள்ளது. பழைய நோர்ஸ் இலக்கியங்களில் சிறந்தவையும், பெரும்பான்மையான பகுதிகளும் இங்கே தான் காப்பாற்றப்பட்டுள்ளன.[1]

வட ஜெர்மானிய மொழியைப் பல பெயர்களால் அழைப்பர். இதனைச் சிலர் டேனிஷ் மொழி (Danish tunga) என்றும் இன்னும் சிலர் ஸ்கேண்டிநேவிய மொழி என்றும் அழைப்பர். இம்மொழியே இன்றைய ஸ்கேண்டிநேவிய மொழிகள் பிறப்பதற்குக் காரணமான தாயக மொழி. இன்றைய ஸ்கேண்டிநேவிய நாடுகளிலும் ஐஸ்லாண்டிலும் வழக்கிலிருந்தது இதுவே. கி. பி. 100ஐ ஒட்டிய காலப்பகுதியில் இது ஜெர்மானிய மொழியினின்றும் பிரிந்தது என்றும் கி. பி. 1500 வரை வழக்கிலிருந்தது என்றும் அறிஞர்கள் கூறுவர்.[2] கி.பி. 1000இலிருந்தே ஸ்கேண்டிநேவிய மொழிகள் பிரிய ஆரம்பித்து விட்ட போதிலும் ஐஸ்லாண்டில் இம்மொழி இலக்கியங்கள் வாய்மொழியாகக் காப்பாற்றப்பட்டு வந்ததுடன் இலக்கியத்தில் 1500 வரை பயன்பட்டும் வந்துள்ளது எனக் கருதலாம்.

இம்மொழியின் வரலாற்று அடிப்படையில் இதனை மூன்று காலப் பகுதியாகப் பிரிப்பர்.

பழங்கால நோர்ஸ் (Primitive Norse) 100–700 A.D.

வைக்கிங் நோர்ஸ் (Viking norse) 700–1100 A. D.

இலக்கிய் நோர்ஸ் (Literary Norse) 1100-1500 A.D.

---

1. *ibid*. p. XXXII (Introduction)

2. Old Norse was the language spoken by the North Germanic peoples (Scandinavians) from the time when Norse first became differentiated from the speech of other Germanic peoples, that is, roughly, from about 100, until about 1500.

*ibid*. p. 245.

R. Priebsch, and Collinson, *idid*. p. 35.

கி.பி. 10அல்லது 11ஆம் நூற்ருண்டிலேயே நோர்ஸ் மொழியினின்றும் தற்கால மொழிகள் கிளேக்க ஆரம்பித்து விட்ட போதிலும் இரண்டு மூன்று நூற்ருண்டுகள் வரையிலும் இவற்றிடையே உள்ள வேற்றுமைகள் பல்கிப் பெருகவில்லே. இக்காலப் பகுதியிலேயே வாய்வழியாக வந்த பல இலக்கியங்கள் எழுதப்பட்டன. புதிய இலக்கியங்கள் பல தோன்றின. இக்கால இலக்கியங்களில் "சாகா" (Saga) இலக்கியங்களும் 'எத்தா' (Edda) இலக்கியங்களும் 'ஸ்கால்டிக்' கவிதைகளும் அடங்கும்.[1]

இவற்றுள் எத்தா இலக்கியங்களின் தொகுப்பு ஒன்று உள்ளது. இவற்றைப் பாடியவர்கள் யார் என்றும் எக்காலத்தில் பாடப்பட்டன என்றும் தெரியவில்லே. எனினும் இவை கி. பி. 1000க்கும் 1050க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இயற்றப் பட்டிருக்கலாம் என்று நம்புகின்றனர் பலர். இதனைத் தொகுத்தவர் 1133இல் இறந்த விசெ (Soemund de Vise) என்ற பாதிரியாவார்.[2] நார்வேயினின்றும் இவண் குடியேறும் போதே சில பாடல்களைத் தம்முடன் கொண்டு வந்தனர் இம்மக்கள் என்றும் இக்கவிதைகளில் பல நார்வேயில் உண்டாயின என்றும் பின்னர் ஐஸ்லாண்டில் தழைத்து வளர்ந்தன என்றும் சிலர் கூறுவர்.[3] இக்கவிதைகள் பண்டைத் தமிழ்க் கவிதைகளைப் போன்று வீரர்களின் வீரச் செயல்களைப் பற்றிக் குறிப்பிடுவதுடன் கடவுளரின் கதைகள், பரம்பரையான அறிவுக் கூர்மை, இயற்கைக்

---

1. The term Old Norse literature covers the Elder and Younger Eddas, the Prose Saga and Skaldic poetry.

Kelchner, *ibid.* p. 1.

2. The oldest Scandinavian songs and legends that are known, were collected in a book called the Edda, it is suppo sed by Soemund de Vise, a priest in Iceland; he died in 1133.

A. May practical Grammar of the Swedish Language, p.4.

3. Stefan Einarsson, History of Icelandic Literature, p.4.

காட்சிகள் முதலியவற்றைப் பற்றியும் பேசுகின்றன. இவையே ஸ்கேண்டிநேவிய இலக்கியங்களில் பழைமை யானவை.

'ஸ்கால்ட்' இலக்கியங்களும் கவிதைகளாலானவையே. ஸ்கால்ட் என்ற சொல் பழைய நோர்ஸ் மொழியில் 'கவிஞன்' 'புலவன்' எனப் பொருள்படும். இக்கவிதைகள் எத்தா கவிதைகளினின்றும் அமைப்பில் மாறுபட்டவை. உவமை உருவகங்கள் நிறைந்து விளங்கும் இக்கவிதைகள் பதின் மூன்ரும் நூற்ருண்டில் எத்தா இலக்கியங்களை மறைத்து வளர்ந்தன என்பர். இவையும் வாய்வழி வந்து பின்னர் எழுத்துருவத்தைப் பெற்றன. இவற்றைப் போன்றே சாகா (Sagas) இலக்கியங்களும் பரம்பரை பரம்பரையாக வாய்வழி வந்து பின்னர் அச்சேறி உரைநடை நூல்களாக உள்ளன.[1] நேரத்தைப் போக்கும்பொருட்டுப் பண்டை மக்கள் கூடி யிருந்து கதை கேட்கக் கதை கூறுவோன் பழைய நிகழ்ச்சி களைக் கோவைப்படுத்திக் கூறிக் கூட்டத்தினரை மகிழ்விப்பது வழக்கமாம்.[2] இதன் அடிப்படையிலேயே இவ்விலக்கியங் கள் தோன்றின. இதனைப் பிந்திய எத்தா (younger Edda) என்றும் அழைப்பர்.

---

1. The Sagas are prose stories of various types for which Icelanders, most of them anonymous, are almost exclusively responsible; they rest for the most part on historical or romantic tradition, plus a proportion of contempoarary history on the one hand and of fiction on the other.

Kelchner, *ibid* p. 2.

A SAGA was originally an oral prose story; the name means 'something said or told', and had its origin in a time when all stories were oral.

E. V. Gordon, *ibid.* p. XIIV

2. *ibid.* p. XIV

ஐஸ்லாண்டில் கி.பி. 1000 ஐ ஒட்டிய காலப் பகுதியில் கிறிஸ்தவமதம் அரசியல் மதமாக மாறியது. இதன் விளைவாக 1100இல் ரோம எழுத்து முறையும் புகுந்தது. இந்நாட்டில் முதன்முதலில் ரோம எழுத்து முறையில் (1118) வெளி வந்த கையெழுத்துநூல் சட்டம் பற்றியதாகும். இதன் பின்னர் மேற்கூறிய இலக்கியங்கள் கி.பி. 1150 முதல் எழுதப்பட்டன. இந்நூல்களை அடிப்படையாக வைத்தே பழைய நோர்ஸ் மொழியின் இலக்கணங்கள் பல எழுதப்பட்டன. இதற்கு முன்னர் உள்ள நோர்ஸ் மொழி பல்வேறு கல்வெட்டுக்களில் காணக்கிடக்கின்றன.

டேனிஷ், சுவீடிஷ், நார்வேஜிய மொழிகளைப் போலல்லாமல் இம்மொழியின்கண்ணுள்ள பெயர்ச்சொற்கள் ஆண்பால், பெண்பால், அஃறிணை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.[1] தற்கால ஸ்கேண்டிநேவிய மொழிகளில் ஆண்பாற் சொற்களும் பெண்பாற் சொற்களும் இணைந்து பொதுப் பாலாகக் காணப்படுகின்றன. இதே போலத்தான் இதன்கண் பழைய ஆங்கிலமொழியைப் போல எழுவாய், செயப்படு பொருள், கு, அது, வேற்றுமைகளும் இருக்கக் காண்கிறோம்.[2] இவ்வேற்றுமை உருபுகளும் ஆண், பெண், அஃறிணைப் பால்கட்கேற்பவும், ஒருமை, பன்மைக் கேற்பவும் மாறுகின்றன. இதன்கண்ணுள்ள பால்வேற்றுமை தமிழ்மொழி போல் இயற்கைப் பால்பகுப்புடன் பொருந்திக் காணப்படுகிறது எனக் கூறமுடியாது. தமிழில் அஃறிணையாகக் கருதப்

1. There were three genders in ON. : masculine, feminine, neuter. Gender was partly natural, partly grammatical agreeing generally with gender in OE. Compound nouns followed the gender of their final element.

E. V. Gordon, An Introduction to Old Norse, p 262.

2. There were four cases, as in OE. : nominative, accusative, dative and genitive.

*ibid.* p. 262.

படும், 'ஆறு', 'புண்', 'உறுதி' போன்ற சொற்கள் பெண் பாலாகவும், 'தோல்', 'படகு', போன்ற சொற்கள் ஆண்பாலாகவும் கருதப்படுகின்றன.

**ஆண்பால்**

| | | |
|---|---|---|
| ஹர்ம்ர் | *(harmr)* | துயரம் |
| ஹர்ம் | *(harm)* | துயரத்தை |
| ஹர்ம்ஸ் | *(harms)* | துயரத்தினுடைய |
| ஹர்மி | *(harmi)* | துயரத்துக்கு |

**பன்மை**

| | | |
|---|---|---|
| ஹர்மர் | *(harmar)* | துயரங்கள் |
| ஹர்ம | *(harma)* | துயரங்களை |
| ஹர்ம | *(harma)* | துயரங்களின் |
| ஹர்மும் | *(harmum)* | துயரங்களுக்கு |

**பெண்பால்**

| | | |
|---|---|---|
| பென் | *(ben)* | புண் |
| பென் | *(ben)* | புண்ணை |
| பென்யர் | *(benjar)* | புண்ணினுடைய |
| பென் | *(ben)* | புண்ணுக்கு |

**பன்மை**

| | | |
|---|---|---|
| பென்யர் | *(benjer)* | புண்கள் |
| பென்யர் | *(benjar)* | புண்களை |
| பென்ய | *(benja)* | புண்களின் |
| பென்யும் | *(benjum)* | புண்களுக்கு |

**அஃறிணை**

| | | |
|---|---|---|
| பர்ன் | *(barn)* | குழந்தை |
| பர்ன் | *(barn)* | குழந்தையை |
| பர்ன்ஸ் | *(barns)* | குழந்தையினுடைய |
| பர்னி | *(barni)* | குழந்தைக்கு |

பன்மை

| | | |
|---|---|---|
| பார்ன் | (*bọrn*) | குழந்தைகள் |
| பார்ன் | (*bọrn*) | குழந்தைகளை |
| பர்ன | (*barna*) | குழந்தைகளின் |
| பார்மும் | (*bọrmum*) | குழந்தைகளுக்கு |

தனிப் பெயரடைகளும், சிறப்புச் சுட்டுக்களும் (definite article) பெயர்களைப் போன்று எண், பால் வேற்றுமை காட்டுவதுடன் வேற்றுமை உருபுகளையும் ஏற்பது இம்மொழியிற் காணும் மற்றொரு தனிப்பண்பாகும். பெயரடைகளையும் சிறப்புச் சுட்டுக்களையும் ஆண்பால், பெண் பால், அஃறிணை, ஒருமை, பன்மை எனப் பிரிக்கமுடியும். பெயர்களைப் போலவே இவையும் வேற்றுமை உருபுகளை ஏற்றுப் பெயர்களுடன் வருகின்றன. எனவே "நீளமான" என்ற பொருளைத் தரும் பெயரடை இம்மொழியில் இருபத்து நான்கு உருவங்களைக் கொண்டு (2×4×3, ஒருமை, பன்மை நான்கு வேற்றுமைகள் × மூன்று பால்கள்) வருகிறது.

ஒருமை

| | ஆண் | பெண் | அஃறிணை |
|---|---|---|---|
| எழுவாய் | *langr* | *lang* | *langt* |
| ஐ | *langan* | *langa* | *langt* |
| அது | *langs* | *langrar* | *langs* |
| கு | *longnm* | *langri* | *longu* |

பன்மை

| | | | |
|---|---|---|---|
| எழு. | *langir* | *langar* | *long* |
| ஐ | *langa* | *langar* | *long* |
| அது | *langra* | *langra* | *longra* |
| கு | *longum* | *langum* | *longum* |

பழைய நோர்ஸ் மொழியில் பொதுச் சுட்டுக்கள் (indefinite article) காணப்படினும் இவை பொதுவாக அதிகமாகப் பயன்படுவதில்லை.[1] ஆனால் இதன்கண்ணுள்ள சிறப்புச் சுட்டுக்கள் மூன்று பால்களுக்கேற்ப மாறுவதும் வேற்றுமை உருபுகளை ஏற்று வருவதும் காணத்தக்கன. சுவீடிஷ் போன்ற மொழிகளில் சிறப்புச் சுட்டுக்கள் பின்னொட்டாக (பெயரடைகளின்றிப் பெயர்கள் வரும்போது) வருவதும் இதன்கண் தனிச் சொற்களாக நிற்பதும் ஒப்பு நோக்கத்தக்கன. இம்மொழியிலும் ஆண்பால் ஒருமை, எழுவாய்ச் சுட்டு அவ்வாறு வருதல் உண்டு என்பர்.[2]

| | ஒருமை | | பன்மை | |
|---|---|---|---|---|
| **ஆண்பால்** | | | | |
| எழு | இன்ன் | (*inn*) | இனிர் | (*inir*) |
| ஐ | இன்ன் | (*inn*) | இன | (*ina*) |
| அது | இன்ஸ் | (*ins*) | இன்ன | (*inna*) |
| கு | இனும் | (*inum*) | இனும் | (*inum*) |
| **பெண்பால்** | | | | |
| எழு. | இன் | (*in*) | இனர் | (*inar*) |
| ஐ | இன | (*ina*) | இனர் | (*inar*) |
| அது | இன்னர் | (*innar*) | இன்ன | (*inna*) |
| கு | இன்னி | (*inni*) | இனும் | (*inum*) |
| **அஃறிணை** | | | | |
| எழு. | இத் | (*it*) | இன் | (*in*) |
| ஐ | இத் | (*it*) | இன்ன | (*in*) |
| அது | இன்ஸ் | (*ins*) | இன்ன | (*inna*) |
| கு | இனும் | (*inum*) | இனும் | (*inum*) |

---

1. Gordon, *ibid*. p. 290.
2. The definite article *inn* was normally suffixed to its noun, unless an adj. preceded the noun.
   *ibid*. p. 290.

பழைய நோர்ஸ் மொழியில் ஏழு வகையான வினை மாற்றங்கள் (conjugations) உள்ளன. இவ்வினைச் சொற்கள் காலம்; எழுவாய் போன்ற இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. எதிர்காலம் துணைவினையினாலோ அல்லது நிகழ்கால இடைநிலையினாலோதான் காட்டப்படும்.[1]

| | | |
|---|---|---|
| கல்ல | (*kalla*) | அழைக்கிறேன் |
| கல்லர் | (*kallar*) | அழைக்கிறாய் |
| கல்லர் | (*kallar*) | அழைக்கிறான் |
| கால்லும் | (*kallum*) | அழைக்கிறோம் |
| கல்லித் | (*kalliδ*) | அழைக்கிறீர்கள் |
| கல்ல | (*kalla*) | அழைக்கிறார்கள் |
| கல்லத | (*kallaδa*) | அழைத்தேன் |
| கல்லதிர் | (*kallaδir*) | அழைத்தாய் |
| கல்லதி | (*kallaδi*) | அழைத்தான் |

1. There is no future tense in ON., and the future was expressed either by the present tense or by means of auxiliaries ( 175).

The chief auxiliary verbs were *vera* 'be', *haia* 'have' *munu* 'will' *skulu* 'shall'.

*ibid.* p. 291.

## 1.5.3 ஐஸ்லாண்டிக் (Icelandic)

ஐஸ்லாண்டுத் தீவின் அரசியல் மொழியாக இருக்கும் இம் மொழி இன்று சுமார் 184,000 மக்களால் பேசப்படுகின்றது.[1] அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஐஸ்லாண்டிக் பேசும் மக்கள் 20,000 பேர் உள்ளனர். முன்னர்க் குறிப்பிட்டது போன்று ஸ்கேண்டிநேவிய மொழிகளில் இது ஒரு பழைமைவிரும்பியாக இருப்பதால் பழைய நோர்ஸ் அல்லது ஸ்கேண்டிநேவியன் மொழியின் இலககணக் கூறுகள் பலவற்றைக் கொண்டிருக்கக் காண்கிறோம். கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டில் நார்வே மக்களும் பிரிட்டிஷ் தீவுகளில் வாழ்ந்த ஸ்கேண்டிநேவிய மக்களில் ஒரு சிலரும் இவண் குடியேறிய போது தங்களுடன் நார்வே மொழியினையும் உடன் கொண்டு வந்தனர். இவ்வாறு ஐஸ்லாண்டில் புகுந்த நார்வே மொழி நாளடைவில் பல மாற்றங்களைக் கண்ட போதிலும் சுவீடன், நார்வே போன்ற இடங்களில் அடைந்த மாற்றங்களுடன் இவற்றை ஒப்பிடும் போது இந்த மாற்றங்கள் மிக்க குறைவாகவே காணப்படுகின்றன. நார்வே மன்னன் ஹெரால்டு (Herald Farharir)என்பான் கிய்தா (Gyða) என்ற இளவரசியை மணக்கும் பொருட்டு 864இல் தொடங்கிய நார்வே நாட்டுப் போர்களும் அவற்றில் அவன் கண்ட வெற்றிகளுமே அவண் சுதந்திரத்துடன் வாழ்ந்த சிற்றரசர்களையும் செல்வந்தர்களையும் ஐஸ்லாண்டில் குடியேறச் செய்தன என்றும், இத்தகைய சிறந்த சமுதாயத்தினுல் ஆக்கப்பட்ட காரணத்தாலேயே ஐஸ்லாண்டு இலக்கியப் பணியிலும் அறிவுத் துறையிலும் முன்னின்றது என்றும் கருதுவர் பலர். பிற ஸ்கேண்டிநேவிய நாடுகளை விட இந்நாடே பழைய இலக்கியங்களைக் கட்டிக் காத்ததுடன்

1. ஐஸ்லாண்டில் வாழும் 20, 000 மக்கள் டேனிஷ் மொழி பேசுகின்றனர்.

புதிய இலக்கியங்களுக்கும் வழி வகுத்துள்ளது.[1] கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் காணப்பட்ட மொழிநிலைக்கும் இன்றைய மொழிநிலைக்குமிடையே காணப்படும் மாற்றங்கள் ஒரு சிலவேயானதால் இன்றும் இம்மக்களால் பழைய 'எத்தா' இலக்கியங்களைப் புரிந்து கொள்ள முடியும்.[2]

நார்வே மக்கள் இவண் வந்தபோது ஒரு சில ஐரிஷ் மக்களே வாழ்ந்திருந்தனர். அவர்களும் "ஹீதன்" (heathen) மக்களுடன் வாழ விரும்பாமல் தங்கள் நாடு திரும்பிவிட்டனர் இதனால் இங்குள்ள மொழி எந்தவிதமான கலப்புமின்றி வளர முடிந்தது. பின்னர்ப் பல மாற்றங்கள் உண்டான போதிலும் இம்மாற்றங்கள் வளரப் பல காலம் வேண்டியிருந்தது.

11ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதம் வேரூன்றவே புதிய சொற்கள் உண்டாயின. லத்தீன் எழுத்து முறையும் பாதிரிகளின் செல்வாக்கும் பல லத்தீன் சொற்கள் இம்மொழியின்கண் வரக் காரணமாக அமைந்தன. ரோம எழுத்து முறை பற்றியும் அவற்றை எவ்வாறு உச்சரிப்பது-ஐஸ்லாண்டிக் மொழியில் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பன பற்றியும் பாதிரி ஒருவர் 12ஆம் நூற்றாண்டில்

---

1. Old Icelandic records are much more plentiful than those of any other Norse dialect, and of greater interest; almost all Old Norse literature of any value is written in Icelandic.

Gordon, *ibid*. p. 245.

2. Icelandic today is much as it was when Iceland was first colonized, mainly from Norway, in and after A. D. 874. It has in large measure marked time for a thousand years. The great store of literature of the early periods is readily understandable to all speakers of present-day Icelandic.

P. J. R. Glendenning, Icelandic, p. V.

இலக்கண நூலொன்று எழுதினர்.[1] இக்காலத்தில் இம்மொழி பிற ஸ்கேண்டிநேவிய மொழிகளைப் போன்று டேனிஷ் மொழி (dansk tunga) என்றே அழைக்கப்பட்டு வந்தது. இப்பெயர் முதன் முதலில் போர்தர்சன் என்பாரால் 1015இல் எழுதப் பட்ட கவிதை ஒன்றில் பயன் பட்டிருக்கக் காண்கிறோம். 13ஆவது நூற்றாண்டில் மேற்கு ஸ்கேண்டிநேவியன் மொழி களின் பெயராக "norroena" என்ற சொல்லே காணப்படு கிறது. எத்தனையோ மாற்றங்கள் இம்மொழியில் வந்த போதி லும் 15ஆம் நூற்றாண்டில்தான் தனக்கென ஒரு பெயரை ஐஸ்லாண்டிக் மொழி (islengka) வகுத்துக்கொண்டது.[2]

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இம்மொழியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பெயர்மாற்றங்கள் (declensions) ஏற்பட்டதோடு, உயிர் எழுத்துக்களிலும் பல மாற்றங்கள் உண்டாயின. 'சகா' (sagas) இலக்கியங்களைப் பதின்மூன்றும் நூற்றாண்டில் எழுத முற்பட்டபோதும் பிற இலக்கியங்களைத் தழுவி சில கவிதைகள் தோன்றியபோதும் பல பிறமொழிச் சொற்கள் இம்மொழியில் வந்து கலந்தன. கி.பி. 1350வரை யுள்ள காலப்பகுதியை இவர்கள் பழைய ஐஸ்லாண்டிக் காலம் என்றும் 16ஆம் நூற்றாண்டு வரையுள்ள பகுதியை இடைக்கால ஐஸ்லாண்டிக் என்றும் அதன்பின்னர் உள்ள பகுதியைத் தற்கால ஐஸ்லாண்டிக் காலம் என்றும் கூறுவர். இக்காலத்தில் ஜெர்மன், டேனிஷ், ஆங்கிலச் சொற்கள் பல வந்து கலந்தன.

---

1. Christianity brought with it the Latin writing and before long it was applied to the native tongue. In the earlier half of the twelfth century an ecclesiastic wrote a grammatical treatise with the purpose of adapting the Latin alphabet to the Icelandic langugae.

Halldor Hermannsson, Modern Icelandic, (in Icelandica, vol. XII.) p. 2.

2. *ibid*. p. 2.

H. Melberg, Origin of the Scandinavian Nation and Languages, g. 946.

கி.பி. 13ஆம் நூற்றூண்டில் (1262-64) ஐஸ்லாண்டு டேனிஷ் அரசுக்குக் கீழ்ப்பட்டபோது டேனிஷ் மொழியின் செல்வாக்கு இவண் வர ஆரம்பித்தது. முதன் முதலில் இந் நிலை தெளிவாகத் தெரியாவிடினும் படிப்படியாக அதிகரித் தது. 1380இல் நார்வேயும் ஐஸ்லாண்டும் டென்மார்க்குடன் இணைந்தபோது டேனிஷ் மொழி பெருமை வாய்ந்த மொழி யாகக் கருதப்பட்டது. எனினும் நார்வேயில் நடந்தது போன்று ஐஸ்லாண்டிக் அழிகின்ற நிலையில் இல்லை. ஐரோப்பாவில் நடந்த சமயச் சீர்த்திருத்த இயக்கத்தினுல் மக்களிடையே ஒரு புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இதனுல் பல நூல்கள் தோன்றின. ஐஸ்லாண்டிக் மொழியில் விவிலிய நூல் (1254இல்) அச்சிடப்பட்டதைத் தொடர்ந்து பல நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன.

பல அறிஞர்கள் இம்மொழியின் சீர்த்திருத்தத்திற்காக உழைத்த போதிலும் பத்தொன்பதாவது நூற்றூண்டு வரை யிலும் எந்த மாற்றமும் இல்லாது ஆங்கிலம், டேனிஷ், ஜெர்மன் மொழிகளின் செல்வாக்குக்குட்பட்டு இருந்து வந்தது. ஆனுல் பத்தொன்பதாம் நூற்றூண்டில் டேனிஷ் அறிஞரான ராஸ்க் ஐஸ்லாண்டு இலக்கியத்தில் அக்கரை கொண்டு படிக்க முற்பட்டபோது ஒரு பெரிய மாற்றமும் எழுச்சியும் உண்டாயின. தன்னுடைய இருபத்திரண்டாவது வயதில் இவர் எழுதிய இலக்கணம் (Vegledning til det islandske eller gamle nordiske sprog) ஐஸ்லாண்டிக், ஜெர்மானிய மொழிப் படிப்பில் ஒரு திருப்புமையத்தை ஏற்படுத்தியது.

1811இல் கோப்பன்ஹேகனில் வெளியான இவ்விலக்கண நூலில், உச்சரிப்பு, எழுத்து, பெயர், வேற்றுமை போன்ற பல இலக்கணக் கூறுகள் பற்றி இவர் எழுதியுள்ளார். ஐஸ்லாண்டிக் மொழியில் காணப்படும் இரண்டு வகையான பெயர்மாற்றங்களைப் (declensions) பற்றி முதன் முதலாகத் தெளிவாகக் குறிப்பிட்ட பெருமை இவரையே சாரும். மேலும் வினைச்சொல், அவற்றின் மாற்றங்கள், தொடரியல், சொற்

களின் ஆக்கம், யாப்பு போன்ற துறைகளில் திட்டவட்டமாக அறிவியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து எழுதியுள்ளார் இவர். இதேபோன்று ஹால்டோர்சனின் (Bjorn or Halldorsson) ஐஸ்லாண்டிக்-லத்தீன் அகராதியைத் தணிக்கை செய்து டேனிஷ் மொழிபெயர்ப்புடன் வெளியிட்டார். 1814இல் வெளியான இந்நூல் (Lexicon Islandico-Latino-Danicum) ஐஸ்லாண்டிக் மொழியியல் துறைக்கு வழி வகுத்ததுடன் தற்கால மொழிப் படிப்புக்கும் உதவியது.

1813இல் டேனிஷ் கலைக்கழகம் (Royal Academy) ஸ்கேண்டிநேவியன் மொழிகளின் தோற்றம் பற்றியும் அவற்றின் பண்புகள் பற்றியும் இவற்றிற்கும் ஜெர்மானிய மொழிகளுக்கும் உள்ள தொடர்பு பற்றியும், எந்த அடிப்படையில் இம்மொழிகளை ஒரு பொது மொழியினின்றும் வருவிக்க முடியும் என்பது பற்றியும் ஆராய்ந்து எழுதும் பொருட்டுப் பரிசு ஒன்றினை அறிவித்தபோது அதில் கலந்துகொண்டு எழுதிய ராஸ்கின் நூல் இன்றைய ஒப்புமொழியியலுக்கு வழி வகுத்துள்ளது. 1814ஆம் ஆண்டிலேயே முடிக்கப்பட்ட போதிலும் 1818இல் தான் இந்நூல் (Undersögeles om det gamle nordiske eller islanttske sprogs oprindelse) வெளியானது இதன்கண் இவர் ஒழுங்கான ஒலிமாற்றங்கள் மொழி களிடையே காணப்படுவதைப்பற்றி விளக்கியுள்ளார்.[1] தவருக

---

1. In this work Rask pointed out that the proofs for the relationship of languages were not to be produced through a comparison of single words, but were to be sought in the conformity of grammatical structure; he showed, for the first time, that certain phonetic laws governed the transition from one language to another, and clearly defined the sound changes which had taken place between the Scandinavian and the other Germanic languages on the one side and Greek and Latin on the other, thus discovering what is generally known as Grimm's law, but which consequently more properly should be called Rask's law, as Grimm did not discover but only extended its application.[2]

Hermannsson, *ibid*. p. 30.

ஐஸ்லாண்டிக் மொழியும் பழைய ஸ்கேண்டிநேவியன் மொழியும் ஒன்று என இவர் எண்ணியிருந்தார். ஆனால் 1813இல் ஐஸ்லாண்டு வந்து அவண் வழங்கிய மொழியின் நிலையை அறிந்தபோது தன்னுடைய கருத்து தவறென்று உணர்ந்தார். மேலும் ஐஸ்லாண்டிக் மொழியின் வளர்ச்சியின் பொருட்டு ஐஸ்லாண்டிக் நண்பர்களுடன் இணைந்து இலக்கியக் கழகம் (Icelandic Literary society) ஒன்றைத் தோற்றுவித்தார் ராஸ்க்.

இம்மொழியில் பத்தொன்பது மெய்களும் பன்னிரு உயிர்களும் உள்ளன. தமிழ் மொழியைப் போன்றே இம்மொழியின் உயிர்களில் குறில், நெடில் வேற்றுமையினையும் மெய்களில் உடனிலை மெய்ம்மயக்கத்தினையும் காணமுடியும்.

பிற ஸ்கேண்டிநேவிய மொழிகளில் பொதுச் சுட்டுக்களும் சிறப்புச் சுட்டுக்களும் காணப்பட, இதன்கண் சிறப்புச் சுட்டுக்கள் மட்டுமே உள்ளன. மேலும் இச்சுட்டுக்களும் மூன்று பால்கள், இரு எண்கள், நான்கு வேற்றுமைகள், இருவகைப் பெயர்கள் (strong, weak)என்பவற்றிற்கேற்ப மாறிவருவதால் சிறப்புச் சுட்டுக்களாக ($3 \times 2 \times 4 \times 2$) நாற்பத்தெட்டு பின்னொட்டுக்கள் உள்ளன.[1] இந்நிலையில் ஐஸ்லாண்டிக் பழைய நோர்ஸ் மொழியை ஒத்துப் பிற ஸ்கேண்டிநேவிய மொழிகளினின்றும் வேறுபட்டிருக்கிறது.

ஆனால் பெயர்கள் பெயரடைகளுடன் வரின் இச்சிறப்புச் சுட்டுக்கள் ஒட்டாக இல்லாமல் தனிச்சொற்களாகப் பெயர்

---

1. This is the only article used in Icelandic. If you wish to say, for example, ":the boy has a little sister", the Icelandic is literally "boy-the has little sister". Here you see also that the usual way of employing the definite article in Icelandic is to suffix it to the noun after the noun. This is known technically as having a post-positive article, and is one of the distinguishing features of the Scandinavian languages.

P. J. T. Glendenning, Teach Youself Icelandic, p. 6.

களின் முன்னுல் வருவதும் பெயர்களின் பால், எண், வேற்றுமைகளுக்கேற்ப மாறி நிற்பதும் காணத்தக்கன.[1]

ஐஸ்லாண்டிக் மொழியில் முன்னர்க் குறிப்பிட்டது போல ஆண், பெண், அஃறிணை என மூன்று பால்களும் எழுவாய் ஐ, கு, அது வேற்றுமைகளும், ஒருமை, இருமை, பன்மை எண்களும் உள்ளன. இருமை எண் மூவிடப் பெயர்களில் மட்டுமே காணப்படுகிறது. மக்களினத்தைக் குறிக்கும் பெயர்களும், விலங்குகளின் பெயர்களும் இயற்கைப் பாலுக் கேற்பப் பிரிக்கப்பட்டிருப்பினும் பிறபெயர்கள் அவை முடி கின்ற தன்மைக் கேற்ப ஆண், பெண் அஃறிணையாகப் பகுக் கப்பட்டிருக்கின்றன. வேற்றுமை உருபுகள் பெயர்களின் வகைக்கேற்பவும் (weak, strong) எண்களுக்கேற்பவும் மாறுவ தால் இம்மொழியில் பல உருபுகள் இருக்கக் காண்கிறோம். கீழே காணும் பெயர் மாற்றங்கள் (strong declensions) இத் தன்மையைக் காட்டும்.

ஆண்பால்

| ஒருமை | | பன்மை | |
|---|---|---|---|
| *heimur* | உலகம் | *heimar* | உலகங்கள் |
| *heim* | உலகத்தை | *heima* | உலகங்களை |
| *heimi* | உலகத்துக்கு | *heimum* | உலகங்களுக்கு |
| *heims* | உலகத்தின் | *heima* | உலகங்களின் |

---

1. There is only one article in Icelandic, the definite article. When used with an adjective employed as a noun, or with a noun further defined by an adjective or an ordinal number, it stands before the adjective and is then declined as follows.

S. Jónsson, A Primer of Modern Icelandic, P. 12.

பெண்பால்

| ஒருமை | | பன்மை | |
|---|---|---|---|
| *borg* | நகரம் | *borgir* | நகரங்கள் |
| *bôrg* | நகரத்தை | *borgir* | நகரங்களை |
| *borg* | நகரத்துக்கு | *borgum* | நகரங்களுக்கு |
| *borgar* | நகரத்தின் | *borga* | நகரங்களின் |

அஃறிணை

| ஒருமை | | பன்மை | |
|---|---|---|---|
| *skip* | கப்பல் | *skip* | கப்பல்கள் |
| *skip* | கப்பலை | *skip* | கப்பல்களை |
| *skipi* | கப்பலுக்கு | *skipum* | கப்பல்களுக்கு |
| *skips* | கப்பலின் | *skipa* | கப்பல்களின் |

இவை தவிர, பிற உருபுகளும் (weak declension) உள்ளன.

பிற ஸ்கேண்டிநேவிய மொழிகளைப் போலவே இம் மொழியின் பெயரடைகளும் ஒருமை, பன்மை எண்களுக்கேற்பவும் பால்களுக்கேற்பவும் மாறுபடுவதுடன் வேற்றுமை உருபுகளையும் ஏற்று வருகிறது.[1] இதன் கண்ணும் பெயரில் காணப்படும் வன்மை, மென்மை (weak, strong) வேற்றுமை இருப்பதால் ஒரே பொருளைத் தரும் பெயரடையாகப் பல காணப்படுதல் ஆங்கிலம் போன்ற மொழிகளில் இல்லாத ஒரு முக்கியப் பண்பாகும். எடுத்துக் காட்டாக, செல்வமுடைய

1. Adjectives agree in gender and number and cases with the noun they qualify.

*ibid.* p. 21.

(rich) என்ற பொருளில் வரும் பெயரடை நாற்பத்தெட்டு உருவங்களில் உள்ளது.[1]

ஐஸ்லாண்டிக் மொழியின் மூவிடப் பெயர்களில் சாதாரணப் பெயர்கள்போலல்லாமல் இருமை எண்ணையும் காணலாம். படர்க்கைப் பெயர்கள் ஆண், பெண், அஃறிணைப் பால்களையும், ஒருமை, பன்மை எண்களையும் காட்ட, தன்மை, முன்னிலைப் பெயர்கள் ஒருமை, இருமை, பன்மை எண்களைக் காட்டுகின்றன. எனினும் இன்றைய பேச்சுவழக்கில் சாதாரணமாகப் பன்மைக்குப் பதில் இருமையே பயன்படுத்தப் படுகிறது.[2] இந்த மூவிடப் பெயர்

| 1. *strong* | ஒருமை | | | பன்மை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | அஃறிணை | ஆண் | பெண் | அஃறிணை |
| எழு. | *ríkur* | *rík* | *ríkt* | *ríkir* | *ríkar* | *rík* |
| ஐ | *ríkan* | *ríka* | *ríkt* | *ríka* | *ríkar* | *rík* |
| கு | *ríkum* | *ríkri* | *ríku* | *ríkum* | *ríkum* | *ríkum* |
| அது | *ríks* | *ríkrar* | *ríks* | *ríkra* | *ríkra* | *ríkra* |
| *weak* | | | | | | |
| எழு. | *ríki* | *ríka* | *ríka* | *ríku* | *ríku* | *ríku* |
| ஐ | *ríka* | *ríku* | *ríka* | *ríku* | *ríku* | *ríku* |
| கு | *ríka* | *ríku* | *ríka* | *ríku* | *ríku* | *ríku* |
| அது | *ríka* | *ríku* | *ríka* | *ríku* | *ríku* | *ríku* |

ADJECTIVES are of two declensions, the strong and the weak. The strong declension is used when an article or pronoun is employed. The weak declension always terminates in a vowel, the plural all genders and cases ending in –u.

P. J. T. Glendenning, *ibid.* p. 52.

2. Strictly speaking, the dual forms refer to two only; in ordinary conversation they are, however, always used nowadays, irrespective of the number of persons addressed or spoken of. In the same way they are very commonly used in writing without any distinction of number.

Jónsson, *ibid.* pp. 32–33.

களும் பிற பெயர்களைப் போலவே வேற்றுமை உருபுகளை ஏற்று வரும். சுட்டுப் பெயர்களில் அண்மைச் சுட்டும் சேய்மைச் சுட்டும் பிற பெயர்களைப் போலவே வேற்றுமை உருபுகளை ஏற்று நிற்க, "மற்றையது" (the other) என்ற பொருளில் வரும் சுட்டு (*hinn*) சிறப்புச் சுட்டுக்களைப் போன்று நிற்கும்.[1]

வினைச் சொற்கள் காலம், இடம், எழுவாய் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டும். ஆங்கிலம் போன்ற மொழிகள் வினைச் சொற்களில் எழுவாய் காட்டுவதில்லை. ஆனால் ஐஸ்லாண்டிக் மொழியோ தமிழைப் போன்று விகுதிகள் ஏற்று எழுவாய் காட்டும். எழுவாயும், காலமும் ஒரே ஒட்டினால் காட்டப்படுகின்றன எனக் கூறுதல் பொருந்தும். ஆங்கிலத்தைப்போல் பல துணைவினைகள் (*haba*, *skulu*) இம்மொழியிலும் காணக்கிடக்கின்றன.

| | | |
|---|---|---|
| கல்ல | (*kalla*) | எடுக்கிறேன் |
| கல்லர் | (*kallar*) | எடுக்கிறாய் |
| கல்லர் | (*kallar*) | எடுக்கிறாள், எடுக்கிறான், எடுக்கிறது |
| க்யொல்லும் | (*köllum*) | எடுக்கிறோம் |
| கல்லித் | (*kallið*) | எடுக்கிறீர்கள் |
| கல்ல | (*kalla*) | எடுக்கிறார்கள் |
| கல்லதி | (*kallði*) | எடுத்தான் |
| கல்லதிர் | (*kallaðir*) | எடுத்தாய் |

1. There are three of these in Icelandic: *sá* (that), *þessi* (this) and *hinn* (the other), *hinn* is declined in the same way as the article, except that the nominative singular neuter is *hitt* (instead of hi) *sá* and *þessi* are declined thus:....

P. J. T. Glendenning, *ibid*. p. 74.

| | | |
|---|---|---|
| க்யொல்லுதும் | (*kölluδum*) | எடுத்தோம் |
| க்யொல்லுதுத் | (*kölluδuδ*) | எடுத்திர்கள் |
| க்யொல்லுது | (*kölluδu*) | எடுத்தார்கள் |
| முன் கல்ல | (*mun kalla*) | எடுப்பேன் |
| கல்லி | (*kalli*) | எடு |
| க்யொல்லும் | (*köllum*) | எடுங்கள் |

### 1.5.4 நார்வேஜியன் (Norwegian)

நார்வே நாட்டில் வழங்கும் மொழி இது. இன்று இம் மொழி பேசுவோராக நார்வே நாட்டில் 3, 500,000 மக்களும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 700,000 மக்களும் உள்ளனர்.[1] இது ஒரே மொழியாகக் கருதப்படினும் புத்தக மொழி (bokmál) நியுநொர்ஸ்க் (nynorsk) என இரு பிரிவுகள் இதில் உள்ளன. இவ்விரண்டு மொழிகளையும் பேசுவோர் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியுமாயினும், இவற்றிடையே சில வேற்றுமைகள் உண்டு. இன்று நார்வே நாட்டின் அரசியல் மொழிகளாக இவ்விரண்டும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டிற்கும் பொதுவான ஒரு மொழியை (Samnersk, பொது நார்வேஜியன்) உருவாக்க இன்றைய அரசாங்கம் முயன்று வருகிறது.

நார்வேஜியன் பழைய ஸ்கேண்டிநேவியன் அல்லது நோர்ஸ் மொழியினின்றும் பிறந்ததாகும். கி.பி. 11ஆம் நூற்றுண்டில் கிழக்கு மேற்கு மொழிகளாகப் பிரிந்த பிரிவு களில் மேற்குப் பிரிவினைச் சார்ந்த மற்றொரு மொழியான ஐஸ்லாண்டிக், டேனிஷ் மொழியின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த போதிலும் பழைய இலக்கியங்களைப் பேணிக் காத்து நின்றதுடன் புதிய இலக்கியங்களையும் படைத்திருக்க, நார்வேஜியனே டேனிஷின் செல்வாக்கினால் தன் தனித் தன்மையைக்கூட இழந்துவிட்ட நிலையினைக் காண்கிறோம்.

பதினான்காம் நூற்றுண்டு முதல் நான்கு நூற்றுண்டுகள் (கி பி. 1814இல் டென்மார்க்கின் பிடியிலிருந்து விடுதலை பெறுவது வரை) நார்வே மொழி நார்வேஜியனாக

---

1. நார்வேஜியில் நார்வேஜியன் மொழி தவிர லாப் மொழி யும் (Lapp) வழங்குகிறது. 25,000 மக்கள் இம்மொழி பேசு கின்றனர்.

இல்லாமல் டேனோ நார்வேஜியனாக (Dano Norwegion) மாறியிருந்தது. இந்நான்கு நூற்றுண்டுகளில் பிற ஐரோப்பிய நாடுகள் அவற்றின் தலை நகரங்களில் வழங்கி வந்த கிளை மொழிகளின் அடிப்படையில் ஒரு பொதுமொழியை உருவாக்கிச் சிறந்த மொழிநிலையை எட்டிப் பிடிக்க, நார்வேஜியன் எவ்வித முன்னேற்றமுமின்றி டேனிஷ் மொழியின் செல்வாக்குக்குட்பட்டு ஒரு பொதுமொழியைக்கூட உருவாக்கும் சக்தியின்றி இருந்தது. டென்மார்க்கு அதன் தலைநகரான கோப்பன்ஹேகனில் பேசப்பட்ட மொழியின் அடிப்படையில் தனது மொழியை உருவாக்கும் போது நார்வேயில் அந்நிலைக்கு ஈடு கொடுத்து முன்னேற எந்த நகரமோ மக்களோ இல்லாமல் போகவே நார்வே மக்களில் பலர் (படித்தவர்களும் அரசாங்க அலுவலாளர்களும்) டேனிஷிலேயே எழுதவும் பேசவும் ஆரம்பித்த நிலையில் இருந்தனர். டேனிஷ் மக்களுக்கோ அன்றி நார்வே மக்களுக்கோ நார்வே தனக்கென ஒரு தனி மொழியை வளரச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏனோ இல்லாமல் போயிற்று.

19ஆம் நூற்றுண்டு வரையிலும் இதே நிலைதான் இவ்வாறு டேனிஷ் மொழியின் செல்வாக்கு பெருகியகாரணத்தால் நார்வேயில் குறிப்பாக ஆஸ்லோவை (Oslo) ஒட்டிய பகுதிகளில் இரு மொழிகளும் கலந்த ஒரு கலவை மொழி உருவானது. 1814இல் நாடு விடுதலை பெற்றபோது அந்நாட்டின் மொழிநிலையைக் கண்ட அறிஞர்கள் இந்நிலையை மாற்ற எண்ணம் கொண்டனர். 1845இல் ஹெண்டிரிக் (Henrik Wergeland 1808—1845) என்ற கவிஞரின் தலைமையில் ஒரு போராட்டமே உருவாயிற்று எனக் கூறலாம். அன்று முதல் பல கிளர்ச்சிகளும் போராட்டங்களும் முயற்சிகளும் நடந்ததன் காரணமாக நார்வேய்க்கு எனத் தனியான மொழி ஒன்று வேண்டும் என்பதில் மக்களிடையே கருத்து ஒற்றுமை உண்டானது. எனினும் அதனை எவ்வாறு

பெறுவது என்பதில் அறிஞர்களிடையே ஒற்றுமை ஏற்பட வில்லை.

நார்வேயின் தலைநகரான ஆஸ்லோவில் படித்த மக்களிடையே வழங்கிய கிளைமொழி பொதுமொழியாக மாறத் தலைப்பட்டது. டேனிஷ் எழுத்து மொழிக்கும் இதற்குமிடையே ஒற்றுமை காணப்பட்டதாலும் நார்வே மக்கள் முன்பு எழுதிய கலப்பினின்றும் இது உருவானதாலும் இதனை டேனோ நார் வேஜியன் என்றழைத்தனர் பலர். நார்வேஜியன் என அழைப்பினும் "அரசு மொழி" "புத்தக மொழி" (Riksmål, Bokmål) எனப் பல பெயர்களால் இது வழங்கக் காண்கிறோம். நாட்டுப் புறங்களில் வாழும் மக்களின் மொழிக்கும் இதற்குமிடையே வேற்றுமை பல காணப்படினும் ஒருவர் பேச்சை மற்றொருவர் நன்கு புரிந்துகொள்ள முடியும் என்பர். நார்வேயின் நாட்டுப் புறங்களின் உள்ளே செல்லச் செல்லத் தூய்மையான நார்வே சொற்களைக் காணலாம். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆசன் என்பார் (Ivar Aasen 2813—1896) நாட்டுப் புறங்களில் வழங்கிய மொழியைப் பயன்படுத்திப் புதியமொழி ஒன்றை உருவாக்கியதுடன் மக்களிடையே வெற்றிகரமாக அதைப் பரப்பியும் வந்தார்.[1] அதுவே இன்று புதிய நோர்ஸ் அல்லது புதிய நார்வேஜியன் அல்லது நாட்டுமொழி (New Norse, New Norwegian, Landsmål) என்ற பெயரால் வழங்கி வருவது.

---

1. And a great linguistic genius, Ivar Aasen (1813-1896) conceived the idea that if one studied the most "genuine" native dialects, those which were most like Old Norse, one might create a form of Norwegian equivalent to what the national language would have been had Norway never been united with Denmark. He proceeded to carry his idea into execution and in 1853 published his first specimen of this new language. He called in *landmål*, a name by which it is still commonly known (though *nynorsk* is now official); in English it may be called "New Norse".

Einar I. Haugen, Beginning Norwegian, p. 5

கி.பி. பத்தொன்பதாம் நூற்றுண்டில் நார்வே நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் பேசப்பட்ட கிளை மொழியை அடிப் படையாகக் கொண்ட நார்வேஜியன் மொழி முக்கியத்துவம் அடைந்தது. இதற்குக் காரணமாக இருந்த அறிஞர்கள் பலரில் பியர்ஸ்ஸன் (Biørson) என்பாரும் ஒருவர். இவர் இதனை "*Rikmål*" என்றழைத்தார். இது இன்று "Bookmål" (the book language) என்றழைக்கப்படுகிறது. "நாட்டு மொழியும்" "புத்தக மொழியும்" (*Landsmål*, Bookmål) இன்று நார்வேஜியன் நாட்டில் ஒத்த செல்வாக்குடன் விளங்குகின்றன என்பர். பள்ளிகளிலும் வானொலிகளிலும் இவ்விரு கிளைமொழிகளும் பயன்படுகின்றன. எனினும் புத்தக மொழியே இன்று சிறப்படைந்து நிலைமொழியாக உருவாகிறது என்பர் சிலர்.[1]

நார்வேஜியன் எழுத்து முறையில் இருபத்தொன்பது எழுத்துக்கள் உள்ளன. ஆங்கில உயிர்களைப் போலன்றி இவ்வுயிர்களில் குறில், நெடில் வேற்றுமை காணப்படுவதுடன் இம்மொழி எழுத்துக்கள் ஓரளவுக்கு உச்சரிப்பை ஒட்டியே அமைந்துள்ளன.[2]

---

1. The spoken language of the south-east exercises a powerful influence all over the country though it has not got the same social prestige as Southern English or Parsian French. It is the language of the capital and the richest and most populous part of the country. All the main papers use the *Riksmål* and through the radio it penetrates everywhere, though the Landsmål is, of course, also broadcast.

I. Marm and Alf Sommerfelt, Teach yourself Norwegian, p. x.

2. All Norwegian vowels are either long or short. There is a long *a* and short *a*, which must be clearly distinguished; long and short vowels have about the same tongue and lip position, but the long one is held about twice as long as the short. In English there is much difference in length between vowels; what are commonly called "long" and "short" are usually different vowels. The Norwegian short vowels are shorter and snappier than anything in English, while the long vowels are more nearly like most English vowels.

*ibid*. p. 11.

சுவீடிஷ், டேனிஷ் மொழிகளைப் போலவே இதன்கண்ணும் பொது, சிறப்புச் சுட்டுக்கள் காணப்படுகின்றன. இச் சுட்டுக்கள் ஆண், பெண், அஃறிணைகளுக்கேற்ப மாறும் தன்மையன. இவற்றுள் ஆண்பால் சொற்களும் பெண்பால் சொற்களும் பொதுச் சுட்டாக 'என்' (*en*) என்ற தனிச்சொல்லையும், அஃறிணைச் சொற்கள் எத் '(*et*)' என்ற தனிச்சொல்லையும் கொண்டு வருதல் காணலாம். ஆனல் பெண்பாற் சொல் 'என்' என்பதுடன் 'எய்' (*ei*) என்பதையும் பெற்று வரும்.[1] சில இலக்கண ஆசிரியர்கள் ஆண், பெண் பால் சொற்களை இணைத்துப் பொதுப்பால் எனக்கூற, சிலர் இரண்டையும் வேறுபடுத்திக் கூறுகிருர்கள்.[2] இதே போன்று சிறப்புச் சுட்டுக்களாக முறையே -என், –அ, –எத், (*–en, –a, –et*) ஒருமையிலும் -எனெ (*–ene*) பன்மையிலும் வருதல் காணலாம்.

ஆண்பால்

*en stein* ஒரு கல்

*en hare* ஒரு முயல்

பெண்பால்

*ei mark* ஒரு வயல்

*ei ku* ஒரு பசு

அஃறிணை

*et dyr* ஒரு விலங்கு

*et eple* ஒரு ஆப்பிள்

1. There are three genders in Norwegian. Bjarne Berulfsen, Norwegian Grammar, p. 11.
2. Einar I. Haugen, *ibid* p. 24.

சிறப்புச் சுட்டுடன்

| | |
|---|---|
| *stein–en* | *the stone* |
| *kake-n* | *the hare* |
| *mark–a* | *the field* |
| *ku–a* | *the cow* |
| *dyr–et* | *the animal* |
| *eple–t* | *the apple* |

சுவீடிஷ், டேனிஷ் மொழிகளின் மூவிடப் பெயர்களைப் போலவே இம்மொழியின் மூவிடப் பெயர்களும் உள்ளன. தன்மை முன்னிலையில் ஒருமை, பன்மை வேற்றுமைகளையும் படர்க்கையில் ஒருமை, பன்மை, ஆண், பெண், அஃறிணை வேற்றுமைகளையும் கொண்டு காணப்படுவதுடன் ஆங்கில மொழியினைப் போன்று செயப்படு பொருள் போன்ற வேற்றுமைக் கூறுகளைக் காட்டத் தனியான சொற்களையும் (*meg, deg, ham, henne, den, det*) கொண்டுள்ளது இது. மேலும் உடைமைப் பொருள் தரும் மூவிடப் பெயர்களாயின் அதனைக் காட்டும் வேறு வேறு சொற்றையும் பொது, அஃறிணைப் பால்கட்கேற்ப மாறிவரும் சொற்களையும் உடையது இம்மொழி.

| | | |
|---|---|---|
| யெக் | (*jeg*) | நான் |
| து | (*du*) | நீ |
| ஹன் | (*han*) | அவன் |
| ஹுன் | (*hun*) | அவள் |
| தென் | (*den*) | அது (*en* ஏற்பவை) |
| தெத் | (*det*) | அது (*et* ஏற்பவை) |
| வி | (*vi*) | நாம் |
| தெரெ | (*dere*) | நீங்கள் |

தெ (*de*) அவர்கள், அவைகள்

மின் பில் (*min bil*) என்னுடைய கார்

மித் ஹீஸ் (*milt hus*) என்னுடைய வீடு

மினெ பிலெர் (*mine biler*) என் கார்கள்

பழந்தமிழ்போன்று இதன்கண்ணும் மூன்று விதமான சுட்டுப் பெயர்கள் உள்ளன. எனினும் இரண்டே அதிகமாகப் பயன்படுபவை. இவையும் பிற பெயர்களைப் போன்றே எண், பால் வேற்றுமை காட்டும் தன்மையன.[1]

பெயரடைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பெயரடைகளின் முன்னால் பொதுச்சுட்டு வரும்போதோ அல்லது எந்தவிதமான சுட்டுமின்றித் தனியாக வரும் போதோ பெயரடைகள் பால் காட்டும் ஒட்டினை ஏற்று வரும். பெயர்கள் பெயரடைகளை ஏற்று வரும்போது எப்போதும் சிறப்புச் சுட்டுக்களாகப் பின்னொட்டு வராது தனிச் சொல் லாகப் பெயரடைகளின் முன்னால் வருவதால் அந்நிலையில் பெயரடைகள் பன்மையாக வருவது காணத்தக்கது.[2]

**தனியாக வரும் போது**

ஸ்தொர் பியு (*stor by*) பெரிய நகரம்

**பொதுச் சுட்டுடன் வரும் போது**

என் ஸ்தொர் பியு (*en stor by*) ஒரு பெரிய நகரம்

---

1. The chief demonstrative pronouns are *den* (that, that one), *denne* (this, this one), *hin* (that, that yonder). They are all inflected in gender and number.

B. Berulfsen, *ibid*, p. 46.

2. The definite form of the adjective is identical with the plural form.

*ibid*. p. 29.

**பொதுச்சுட்டு அஃறிணை**

எத் ஸ்தொர்த் ஹூ (*et stort hu*) ஒரு பெரிய வீடு

**தனியாக, பன்மை**

ஸ்தொரெ பியெர் (*store byer*) பெரிய நகரங்கள்

**சிறப்புச்சுட்டு, பன்மை**

தெ கம்லெ மென் (*de gamle menn*) the old man

**சிறப்பு, பொதுப்பால்**

தென் கொதெ யொர்த் (*den gode jord*) the good earth

**சிறப்பு, அஃறிணை**

தெ நொர்ஸ்கெ பிளேக் (*det norske flagg*) the Norwegian flag

**சிறப்புச்சுட்டு பன்மை**

தெ கம்லெ மென் (*de gamle menn*) the old man

## 1.5.5 பெரோயிஸ் (Faroeish)

இதனைப் பெரோஸ் (Faroese) என்றும் அழைப்பர். ஐஸ்லாந்துக்கும் ஷெத்லாந்து தீவுகளுக்கும் (Shetland) இடையிலுள்ள பெரோ (Faroe) தீவுகளில் வாழும் 30,000 மக்களால் பேசப்படுவது இம்மொழி. இவண் பதினேழு தீவுகள் உள்ளன என்றும் ஒவ்வொன்றிலும் பேசப்படும் கிளைமொழிகளும் தம்முள் சில வேற்றுமைக் கூறுகளைக் கொண்டுள்ளன என்றும் கூறுவர்.

## 1.5.6 டேனிஷ் (Danish)

5,200,00 மக்களால் பேசப்படுவது இம்மொழி.[1] ஸ்கேண்டிநேவிய மொழிகளில் (டேனிஷ், நார்வேஜியன், சுவீடிஷ் ஐஸ்லாண்டிக் போன்றவை) அரசியல் அடிப்படையில் இதுவே மிக முக்கியமான மொழி. கி.பி. 1814இல் நார்வே நாடு விடுதலை அடைவது வரையிலும் இம்மொழியே அந்நாட்டின் அரசியல் மொழியாக இருந்து வந்தது. இம்மொழிக்கும் நார்வேஜியன் மொழிக்கும் அதிக வேற்றுமை இல்லாவிடினும். இரண்டும் வெவ்வேறு மொழிகளாகும். எனினும் நார்வே மக்கள் இம்மொழியையும் நன்கு பயின்று வந்ததுடன் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தி வந்துள்ளனர். இதனால் டேனிஷ் மொழியின் செல்வாக்கு நார்வேஜியன் மொழியில் அதிகமாகக் காணப்படுகிறது. இதனால்தான் நார்வேயில் வழங்கும் கிளைமொழி ஒன்றை "டேனோ-நார்வேஜியன்" (Dano–Norwegion) என அழைக்கின்றனர். இதனைத் தனி ஒரு மொழியாகக் கருதுவாரும் உளர்.[2] இம்மொழி பேசுவோராக டென்மார்க்கில் 4,700,000 மக்களும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 400,000 மக்களும் ஜெர்மானியில் 10,000 மக்களும் உள்ளனர்.

சுவீடிஷ் மொழியைப் போலவே இம்மொழியின்கண்ணும் பெயர்ச் சொற்கள், பொதுப்பால், அஃறிணை என இரு பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றன.[3] மககளின் பெயர்கள், விலங்குகளின் பெயர்கள், மரங்கள், செடிகள், ஆறுகள், மாதங்கள்,

---

1. டென்மார்க்கில் டேனிஷ் தவிர ஜெர்மன் மொழியுஃ (10,000) பேசப்படுகிறது.

2. Anthropological Linguistics Vol.7.No.8,(1965), p. 85.

3. The Dano-Norwegian language has two genders, common gender and neuter gender. The former comprises both the masculine and feminine of the old language.

நோய்கள் போன்றவற்றின் பெயர்கள் பொதுப்பாலாகவும், நாடு, நகரம், மொழி போன்றவற்றின் பெயர்கள் அஃறிணைப் பாலாகவும் கருதப்படினும் பல விதிவிலக்குகளை இதன்கண் காணலாம். எனவே பெயர்கள் ஏற்கும் சிறப்புச் சுட்டுக்களை யும், பொதுச் சுட்டுக்களையும் வைத்தே பெயர்கள் எப்பாலைச் சார்ந்தன எனக் கூறமுடியும். பொதுப்பால் காட்டும் சொற் கள் எல்லாம் "என்" (*en*) என்ற சொல்லைப் பொதுச்சுட்டா கவும், அஃறிணைப் பால் காட்டும் சொற்கள் எல்லாம் "எத்" (*ed*) என்ற சொல்லைப் பொதுச்சுட்டாகவும் கொண்டு வருகின் றன. ஆங்கில மொழியைப் போன்றே டேனிஷ் மொழியும் சிறப்புச் சுட்டினைக் கொண்டிருப்பினும் இவை பின்னொட்டுக் களாகவும், எண், பால், காட்டுவனவாகவும், இருக்கின்றன. பன்மையில் சிறப்புச்சுட்டு பால் காட்டுதல் இல்லை. இரு வகைச் சொற்களும் ஒரே சுட்டினை ஏற்று வருகின்றன.

| | | |
|---|---|---|
| என் மேன்(க்) | (*en mand*) | ஒரு மனிதன் |
| எத் ஹுஸ்(க்) | (*et hus*) | ஒரு வீடு |
| மேன்(க்)ன் | (*manden*) | *the man* |
| ஹுஸெத் | (*huset*) | *the house* |
| ஹுஸெனெ | (*husene*) | *the houses* |

இம்மொழிப் பெயரடைகள் வருகின்ற பெயர்களின் பால் எண்களுக்கேற்ப மாறுபடுகின்றன. பெயர்கள் பெயரடை களுடன் வரின் முன்னர்க் கூறியது போன்று சிறப்புச் சுட்டு பின்னொட்டாக இராமல் தனிச் சொல்லாக (*den, det, de*) இருக்கின்றது.[1] சுவீடிஷ் மொழியின்கண் பெயரும் பெயர

1. The Dano-Norwegian language has a definite and an indefinite article. The definite article has two forms, one employed in connection with a noun alone, the other used with a noun qualified by an adjective or with an adjective alone. The former is called the post-positive article (also the definite article of the substantives.) The latter is called the prepositive article (also called the definite article of the adjectives).

P. Groth, Danish Grammar, p. 67.

டையும் இணைந்து வரும்போது இரண்டும் சிறப்புச் சுட்டுக்களை ஏற்று வருவதும் (*den varma sommaren*) இவண் ஒரே சிறப்புச் சுட்டு (*de store huse* "the big houses") பெயரடைகளின் முன்னால் வருவதும் காணத் தக்கன. பெயர்கள் சிறப்புச் சுட்டின்றி வரும்போது பெயரடைகள் அஃறிணை ஒருமையில் தகர வொற்றினை (*–t*) ஏற்றும் பன்மையில் எகரம் ஏற்றும் (*–e*) வருதல் காணலாம். பன்மையில் பால் வேற்றுமை இல்லை.[1]

ஒருமை

| | | | |
|---|---|---|---|
| *en* | *lang* | *gade* | (ஒரு) நீளத் தெரு |
| *et* | *langt* | *brev* | (ஒரு) நீளக் கடிதம் |
| *den* | *lange* | *gade* | *the long street* |
| *det* | *lange* | *brev* | *the long letter* |

பன்மை

| | |
|---|---|
| *lange gader* | நீளத் தெருக்கள் |
| *lange breve* | நீளக் கடிதங்கள் |
| *de lange breve* | *the long streets* |
| *de lange gader* | *the long letters* |

சுவீடிஷ் மொழியைப் போலவே இதன்கண்ணுள்ள மூவிடப் பெயர்களும் சுட்டுப் பெயர்களும் காணப்படுகின்றன.

---

1. Adjectives, which must agree in gender and number with the noun which they qualify, generally from the neuter by adding *t*, and their plural by adding *e* to the abstract singular form; as *en god Mand*, a good man'; *et godt Barn*, 'a good child'; *gode Drenge*, 'good boy's.

When the adjective is preceded by the independent demonstrative article, *den*, *det*, *de*, it generally takes an *e*, as *den gode Mand, det gode Barn, de Drenge*.

E. C. Otte, The Danish Language, p. 19.

பெயர்களில் ஆண், பெண், பால் வேற்றுமை காணப்படா விடினும் மூவிடப் பெயர்களைப்பொறுத்தமட்டில் இப்பாகு பாடு உள்ளது. எழுத்துமொழியில் இரண்டு சுட்டுப் பெயர் களே காணப்படினும் (*den*, "அது" *denne* இது) பேச்சுமொழி யில் இவற்றுடன் ஹெர், தெர்(*her*, *der*) என்ற சொற்களை இணைத்து மிகத் தொலைவிலுள்ளவற்றையும் அண்மையிலுள்ள வற்றையும் குறிப்பிடலாம்.

மூவிடப் பெயர்கள்

| | |
|---|---|
| *jeg* | நான் |
| *vi* | நாம்/நாங்கள் |
| *du* | நீ |
| *I* | நீங்கள் |
| *han* | அவன் |
| *hun* | அவள் |
| *den/det* | அது |
| *de* | அவைகள்/அவர்கள் |

சுட்டுப்பெயர்கள்

| | |
|---|---|
| *denne/dette* | இது |
| *disse* | இவை |
| *den/det* | அது |
| *de* | அவை |

## 1.5.7. சுவீடிஷ் (Swedish)

சுமார் 9,000,000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர் இவர்களுள் 7,500,000 பேர் சுவீடனிலும் 1,000,000 மக்கள் அமெரிக்காவிலும் கானடாவிலும் 500,000 பேர் பின்லாந்திலும் எஸ்தோனியாவிலும் வாழுகின்றனர்.[1] இது சுவீடன் நாட்டு அரசியல் மொழியாகும். பின்லாந்தில் பின்னிஷ் மொழியுடன் இதுவும் அரசியல் மொழியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

இது ஒரு வடஜெர்மானிய மொழி. இம்மொழி கி.பி. இரண்டாம் நூற்றுண்டு முதல் ஸ்கேண்டிநேவியப் பகுதிகளில் வழங்கிய பொதுமொழியான முது பழம் ஸ்கேண்டிநேவிய மொழி (அல்லது பழைய நோர்ஸ்)யிலிருந்து பிறந்ததாகும். இம்மொழி பற்றிய செய்திகளைப் பழைய ரூனிக் கல்வெட்டுக் களிலிருந்து அறியலாம். சிலர் நோர்ஸ் மொழியினை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர்.[2] கி.பி. இரண்டு அல்லது மூன்றும் நூற்றுண்டு முதலே ரூனிக் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. இவை வட ஜெர்மானிய மொழியின் வரலாற்றை அறிய மிகவும் பயன்படுகின்றன. கி.பி. ஆறு, ஏழாம் நூற்றுண்டு களில் இம்மொழியில் பெரிய மாற்றங்கள் உண்டாயின என்றும் அம்மாற்றங்களுக்குப் பின் உண்டான மொழிநிலை

---

1. சுவீடன் நாட்டில் 30,000 மக்கள் பின்னிஷ் மொழியையும் 10,000 மக்கள் லாப் (Lapp) மொழியையும் பேசி வருகின்றனர்.

2. Primitive Norse 100–700, Viking Norse, 700–1100, Old Norse 1100-1500 ;

E. V. Gordon, An Introduction to Old Norse, p. 245.

அதற்கு முன்னர் உள்ள நிலையிலிருந்து மிக மாறுபட்டிருந்தது என்றும் கருதுவர் பலர்.[1]

சுவீடனில் பல ரூனிக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இரண்டாயிரத்து ஐந்நூறுக்கதிகமான இக்கல்வெட்டுக்களில் மிக முக்கியமானது ரியோக்ஸ்டன் (Röksten) என்ற இடத்தில் கிடைத்த 9ஆவது நூற்றாண்டைச் சார்ந்த ஒன்று. இது ஏழு வகையான எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. இந்நாட்டில் தோன்றிய முதல்நூல் 1220இல் லத்தின் எழுத்தில் எழுதப் பட்ட ஒரு சட்ட நூலாகும் (Vestogotha law). இதன்கண் சில ரூனிக் எழுத்துக்களும் பயன்பட்டுள்ளமை காணலாம். எனவே கிறித்தவ மதமும் லத்தீன் எழுத்துமுறையும் சுவீடன் மொழி வரலாற்றிலும் மொழிநிலையிலும் ஒரு சிறந்த இடம் பெறுதல் கண்கூடு.[2]

---

1. Before A. D. 750 or 800, the beginning of the so called Viking Age, the North Germanic language over the whole of its domain underwent a sweeping transformation. "Primitive Scandinavian" evolved into "Old Scandinavian". This is the most radical change that has befallen North Germanic. The event is aptly illustrated by a comparison : the language of the Sagas, incomprehensible as it is to uninitiated modern Danes, Swedes and Norwegians, is yet nearer to their 20th century forms of speech than to Primitive Scandinavian.

H. Melberg, Origin of the Scandinavian Nations and Languages, p. 794.

Elias Wessên, De nordika Språken, p. 23.

2. From the low state of civilization at this period, the language was necessarily poor in expressions, and the sound was harsh and repulsive to the ear. By degrees, however, these faults were modified, and the introduction and gradual spread of the Christian religion, was one of the most powerful means.

A. May, Practical Grammar of The Swedish Language, p. 5.

இக்காலத்தில் பிறமொழிச் செல்வாக்கு இம்மொழியின் கண் அதிகமாக இல்லை; ஒரு சில லத்தீன் சொற்களும் கிரேக்கச் சொற்களுமே உள்ளன. பெயர்கள் பழைய ஸ்கேண்டிநேவியன் மொழியிலுள்ளது போன்றே நான்கு வேற்றுமைகளைக் கொண்டும் வினைகள் பல வினைமாற்றங் களைக் கொண்டும் காணப்படுகின்றன.

ஆனால் கிறிஸ்த்தவ மதம் வேரூன்றி வளர்ந்த போது பல பழைய நார்டிக் பெயர்களுக்குப் (Nordic) பதிலாகக் கிறிஸ்த்தவப் பெயர்கள் நுழைந்தன. ஜெர்மன் நாட்டுத் தொடர்பினால் பல ஜெர்மானியச் சொற்களும் இம்மொழியில் வந்து புகுந்தன. எனினும் அக்காலத்தில் டேனிஷ் மொழி யிலிருந்து சுவீடிஷ் மொழியைப் பிரித்தறிவது கடின மாகவே இருந்தது. இது முதல்தான் (1300) இவ்விரு மொழி களுக்கிடையே உள்ள வேற்றுமைகள் வளர ஆரம்பித்தன.[1] சிலர் 1220—1350 வரையிலுள்ள காலப்பகுதியைப் பழைய சுவீடன் மொழிக்காலம் என்றும் இதன் கண்ணேயே பழைய ஸ்கேண்டிநேவியன் மொழிக்காலமும் பொருந்தியுள்ளது என்றும் கூறுவர். இக்காலப்பகுதியிலேயே பழைய ஐஸ்லாண்டிக், நார்வேஜியன், காலங்களும் அடங்கும். இது வரையிலும் "டேனிஷ்" என்றழைக்கப்பட்ட இம்மொழி 1330 முதல் சுவீடிஷ் மொழி என்ற புதுப் பெயருடன் வழங்க ஆரம்பித்தது.[2]

---

1. Upto 1300 it is hardly possible to distinguish Swedish from Danish, but from that time steadily increasing number of well - defined differences appear. This, again, tallies with the emergence of a special Swedish language-name, found in Swedish manuscripts from about 1330 and onwards : pa swensko, a swenska tungo, ij swænska tungæ, a suensko, swenst maal.

Melberg, *ibid.* p. 75.

2. Melberg, *ibid.* p. 846.

1365இல் போக்குங் ஆட்சி (Fokung dynasty) வீழ்ச்சி யடைந்தபோது ஜெர்மானியர்களின் செல்வாக்கு சுவீடனில் அதிகப்பட, பல ஜெர்மன் சொற்கள் வந்து புகுந்தன. பாரிசில் ஏற்பட்ட பல்கலைக் கழகத்துடன் இந்நாட்டினர் கொண்ட தொடர்பினுல் பல பிரஞ்சுச் சொற்களும் பழக்கவழக்கங்களும் சுவீடனில் புகுந்தன. இக்காலத்தில்தான் நான்கு வேற்றுமை கள் இருந்த சுவீடிஷ் மொழியில் இரண்டு வேற்றுமைகள் அழிந்தன. லத்தீன் மொழியினுல் இதன் தொடரியலும் மாறியது. மேலும் 1389 முதல் 1521 வரையிலும் டென் மார்க்கின் அதிகாரத்தின்கீழ் ஸ்கேண்டிநேவியன் நாடுகள் அனைத்தும் இருந்தபோது டேனிஷ் மொழி பொது அரசு மொழியாக இருக்கவே சுவீடிஷ் மொழி உறுதியான நிலை யற்றுப் பகுதிக்குப் பகுதி பல மாற்றங்களைக் கொண்டு கட்டுக் கோப்பின்றிக் குழப்பநிலையில் இருந்தது. இந்நிலையில் டென்மார்க்கின் அதிகாரத்தினின்று சுவீடன் விடுதலை யடைந்த போது சுவீடிஷ் மொழியில் ஒரு பொதுநிலையைக் கொண்டு வர, பல முயற்சிகள் நடந்தன. 1483 முதல் 1537 வரையிலும் ஸ்டாக்ஹோமில் பல அச்சுப் பொறிகள் நிறுவப் பட்டபோதிலும் இவற்ருல் மொழிநிலையில் எவ்வித மாற்றத் தையும் ஏற்படுத்தமுடியவில்லை. இதுபோன்றே 1476இல் உப்சலா பல்கலைக்கழகம் தோன்றியபோதிலும் பாரிசு பல்கலைக்கழகம் பிரஞ்சு மொழியின் பொதுப் பண்புக்கு உதவியது போன்று, இதனுல் உதவ முடியாமல் போயிற்று. இறுதியில் 16ஆவது நூற்றுண்டில்தான் பலர் முயற்சியினுல் சுவீடன் மொழி கட்டுக்கோப்புடன் ஒரு பொதுமொழியாக உருவானது.

பத்தாவது நூற்றுண்டில் ஸ்கேண்டிநேவியப் பகுதிகளில் பேசப்பட்ட மொழி (பழைய நோர்ஸ் அல்லது பழைய ஸ்கேண்டிநேவியன்) கிழக்கு, மேற்கு ஸ்கேண்டிநேவிய

மொழிகளாகப் பிரிந்து வளர ஆரம்பித்தது.[1] இப்பிரிவினை பத்தாவது நூற்றுண்டில்தான் தெளிவாகக் காணப்பட்டதா யினும் அதற்கு முன்பே வைக்கிங் காலப்பகுதியிலேயே (Viking Age 800—1000) பல வேற்றுமைகள் பல பகுதிகளில் தோன்ற ஆரம்பித்து விட்டன. இவ்வேற்றுமைகள் முன்னரே இருந்த போதிலும் கிறிஸ்தவ மதமும் லத்தீன் எழுத்து முறை யும் இவண் நிலைபெற்றபோது இந்நிலை நன்கு தெளிவாகத் தெரியவந்தது. வைக்கிங் காலக் கல்வெட்டுக்களாக சுவீடன் நாட்டில் கிடைப்பன கிழக்கு மொழிகளில் ஒன்றுன பழைய சுவீடிஷ் மொழியைப் பற்றி அறிந்துகொள்ளப் பயன்படு கின்றன.

பதினென்ருவது நூற்றுண்டின் தொடக்கத்தில்தான் கிறிஸ்தவ மதம் சுவீடன் நாட்டில் வேரூன்ற முடிந்த, தெனினும் கி.பி. ஒன்பதாவது நூற்றுண்டு முதலே இதற் குரிய பணிகள் ஆரம்பித்துவிட்டன எனக் கூறலாம். கி.பி. 829இல் அன்சாரியஸ் (Anscharius) என்ற ஜெர்மானியப் பாதிரி ஒருவர் சுவீடன் நாடு வந்ததாகவும் தம்முடைய பணி யில் வெற்றி காணுததால் அவர் ஹம்பர்கர் (Ham burger) சென்றதாகவும், மீண்டும் 853இல் சுவீடன் வந்து அங்கு சமயப்பணி புரிந்ததாகவும், இவரை அடுத்து ரிம்பெர்ட் (Rimbert)என்பார் கிறிஸ்தவ மதக் குருவாக இருந்ததாகவும் கூறுவர். எனினும் கி.பி. 1000ஐ ஒட்டிய காலப் பகுதியில்

---

1. The first cleavage of the North Germanic language into the two dialects labelled "West Scandinavian" and "East Scandinavian",-a division accomplished in the 10th century A. D. and quite different from that of the national languages.

The fact is that these first North Germanic dialects, "West Scandinavian" and "East Scandinavian" developed out of a linguistic unity persisting down to A. D. 750 or 800.

*ibid.* p. 895.

சிக்பிரிட் (Sigfrid) என்ற ஆங்கிலப் பாதிரியார் சுவீடன் நாட்டு மன்னனைக் (Olaf skötkonung, 993—1022) கிறிஸ்த வனுக்கிய பின்னர்தான் இம்மதம் செழித்து வளர ஆரம் பித்தது. இவண் வாழ்ந்துவந்த மதக்குருக்கள் லத்தீனில் எழுதி வரவே வழக்கிலிருந்த ரூனிக் எழுத்து முறை அழிந்து லத்தீன் முறை நிலைபெற்றது. இக்கால நாணயங்கள் பல வற்றிலும் லத்தீன் எழுத்துக்களே காணப்படுகின்றன என்பர். 17வது நூற்றுண்டில் இதன் முதல் இலக்கண நூல் (N. Fäjllman 1696) வெளிவந்தது. ஸ்பேகல் (T. Spegel) என்பார் இந்நூற்றுண்டில் அகராதி ஒன்றையும் வெளியிட் டார். இம்மொழி பல துறைகளில் வளர்ந்துநின்றபோதிலும் அறிவியல் நூல்கள் லத்தீனிலேயே எழுதப்பட்டன. பதினெட்டாம் நூற்றுண்டு இம்மொழியின் வரலாற்றில் மிக முக்கியம் வாய்ந்த காலமாகும். 1739இல் ஸ்டாக்ஹோம் அறிவியல் கழகமும் (The Academy of Sciences in stolkhom) 1735இல் சுவீடிஷ் கழகமும் (Swedish Academy) தோன்றின. மூன்ருவது குஸ்தவாஸ் (Gustavus)ஆதரவால் பல துறைகளில் இம்மொழி வளர்ந்தது. இவனே நாடகங்கள் மூலமாகவும் பேச்சு, எழுத்து மூலமாகவும் இம்மொழியை வளர்த்தான் என்பர். சுருங்கக் கூறின் இக்காலத்தில் வளர்ச்சி பெருத துறையே இல்லை என்று கூறலாம். இக்காலத்திலும் இதன் பின்னரும் பிரஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளின் செல் வாக்கு இதன்கண் இருப்பினும் இலக்கணத்தைப் பொறுத்த மட்டில் 18ஆவது நூற்றுண்டிலிருந்து எந்தவிதமான மாற்ற மும் ஏற்படவில்லை என்பர்.

---

மினசோட்டாவில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு ரூனிக் எழுத்து முறையில் எழுதப்பட்டுள்ளது. இதனுல் சுவீடிஷ் மக்கள் பதினன்காம் நூற்றுண்டிலேயே வட அமெரிக்கா வந்து விட்டனர் எனச் சிலர் கருதுகின்றனர்.

எனினும் இதனை நம்ப மறுக்கின்றனர் பலர்.[1]

ஆங்கில மொழியைப் போலவே இதன்கண்ணும் பொது, சிறப்புச் சுட்டுக்கள் உள்ளன. ஆனால் ஆங்கிலத்தைப் போலல்லாமல் சிறப்புச் சுட்டுக்கள் பின்னொட்டுக்களாகவும் பெயர்களின் பால் எண்கட்கேற்ப மாறி வருபவையாகவும் உள்ளன.[2] மூவிடப் பெயர்களில் ஆண், பெண் பால்களும் அஃறிணையும் காணப்படுமாயினும் பொதுவாக இம்மொழிப் பெயர்களை அஃறிணை, பொதுப்பால் என இரண்டு பெரும் பிரிவுகளாகவே பிரிப்பர் பலர்.[3] எனினும் சில இலக்கண ஆசிரியர்கள் மூவிடப் பெயர்களின் அடிப்படையில் பிரிப்

---

1. If the inscription on the Kensington Stones (named after the place in Minnesota where it was found) is authenic, Swedes where in America as early as 1360. However, general opinion now considers this writing a hoax.

Siegfried H. Muller, The World's Living Languages, p.32.

But despite much learned and often heated discussion the conclusion is inescapable that the Yarnouth stone is Nova Scotia is definitely not runic, and that the notorious Kensington stone (Minnesota) is a modern forgery.[3]

Ralph W. V. Elliot, Runes, An Introduction, p. 26.

2. The definite article is not a separate word as in English, but is an ending added to the noun; as, *stol* chair, *stolen* the chair; *hus* house, *huset* the house.

A. Louis Elmquist, Elementary Swedish Grammar, p. 22.

3. As in most European languages other than English nouns in Swedish must be classified in two groupings, usually called genders, though the distinction has nothing to do with sex.

Allan Lake Rice, Swedish, A Practical Grammar, p. 18.

பதும் உண்டு.[1] பொதுச் சுட்டுக்களாக 'என்' 'எத்' (*en, et*) என்ற தனிச்சொற்களும் சிறப்புச் சுட்டுக்களாக ஒருமையில் 'என், எத்' (*–en, –et, –n, –t*) என்பனவும் பன்மையில் இரு பால்கட்கும் பொதுவாக—'ன' கரமும் (*–na,–en*) வருதல் காணலாம்.

| | | |
|---|---|---|
| என் சொன் | (*en son*) | ஒரு மகன் |
| எத் ஹுஸ் | *elt hus*) | ஒரு வீடு |
| சொனென் | (*sonen*) | *the son* |
| ஹுஸெத் | (*huset*) | *the house* |
| ஹுஸென் | (*husen*) | *the houses* |

பொதுவாக ஆண்களையும் ஆண் விலங்குகளையும் குறிக்கும் சொற்கள் ஆண்பாலாகவும், பெண்களையும், பெண் விலங்குகளையும் குறிப்பன பெண்பாலாகவும் மாதம், காலம், விழா, மரம், ஆறு, குளம் போன்றவற்றைக் குறிப்பன பொதுப் பாலாகவும், நாடு, மலை, நகரம் எழுத்துக்களின் பெயர்கள் போன்றவை பொதுப்பாலாகவும் வரினும் பல விதி விலக்கு கள் இருத்தல் காணலாம். எனவே இம்மொழியின் பால் பகுப்புப்பெயர்ச் சொற்கள் ஏற்கும் சிறப்புச் சுட்டினை அடிப் படையாகக் கொண்டுள்ளது என்பதே பொருந்தும்.[2]

இம்மொழியின் தாய் மொழியான பழைய நோர்ஸ் எழுவாய், ஐ, கு, அது வேற்றுமைகளைக் கொண்டிருந்த

---

1. The Swedish language has four genders : masculine, feminine, neuter, and common (=non neuter).

IM. Bjorkhagen, Modern Swedish Grammar, p. 44.

2. The best criterion of gender is the definite article *the*. In Swedish the definite is not a word but a suffix, –n for non-neuter nouns and –et for neuter.

**Rice**, *ibid*. p. 18.

போதிலும் இதன்கண் எழுவாய், அது வேற்றுமைகளே உள்ளன.[1] ஆங்கிலத்தைப் போன்று அது வேற்றுமை உருபாக ஸகரமும் (*s*), "*of*" என்ற பொருளில் "*vid*" என்ற சொல்லும் பயன்படுகின்றன. ஆனல்—*s* சிறப்புச் சுட்டுக்குப் பின்னல் நின்று இப்பொருள் தருதல் ஆங்கில மொழியில் இல்லாத பண்பாம்.

| | | |
|---|---|---|
| என் ஸ்கோலான்ஸ் | (*en skolans*) | பள்ளியின் |
| ஸ்கோலான்ஸ் | (*skolans*) | *of the school* |
| ஸ்கோலொர்ஸ் | (*skolors*) | பள்ளிகளின் |
| ஸ்கோலொர்னஸ் | (*holornas*) | *of the schools* |
| எரிக்ஸ்மொர் | (*Eriksmor*) | ஏரிக்கின் தாய் |

சுவீடிஷ் மொழியில் ஐந்து வகையான பெயர்கள் உள்ளன. இவற்றிற்கேற்ப ஐந்து வகைப் பெயர்மாற்றங்கள் (declensions) உள்ளன. இவை முறையே —ஒர் (skol–or பள்ளிகள்)—அர் (prins-ar "இளவரசர்கள்")—எர் (ark–er பூந்தோட்டங்கள்)-ன் (apple–n)—$\phi$ (hus "வீடுகள்',) என ஐந்து ஒட்டுக்களால் பன்மை காட்டுதல் உணரத்தக்கது.

சுவீடிஷ் பெயரடைகள் அவற்றின் பின்னல் வரும் பெயர் களின் ஒருமை. பன்மை எண்களுக்கேற்பவும், பால்களுக் கேற்பவும், மாறும் தன்மையன. அஃறிணேயாயின் ஒருமை யில் தகரவெற்றினே ஏற்று அஃறிணையைக் காட்டும்: பன்மை யாயின் அகரத்தை ஏற்றுப் பன்மையைக் காட்டுமேயன்றிப் பால் காட்டுதல் இல்லே.[2] வருகின்ற பெயர்கள் சிறப்புச்

---

1. A. Louis Elmquist, *ibid.* p. 28.

2. In Swedish, adjectives must invariably agree in gender and number with the noun they qualify, regardless of how far apart the two may be in the sentence. Adjectives show gender and number by their endings ; –t for neutcr and –a for plural (there being no gender distinction in the plural).
Rice, *ibid.* p. 35.

சுட்டினை ஏற்கின் பெயரடைகள் 'தென்' 'தெத்' 'தெ' (*den*, *det*, *de*) என்ற சிறப்புச் சுட்டுக்களை ஏற்று வருதலும் கவனிக்கத் தக்கதாம்.

ஒருமை

| | | |
|---|---|---|
| வர்ம் | (*warm*) | சூடான |
| வர்ம்த் | (*warmt*) | ,, |

பன்மை

| | | |
|---|---|---|
| வர்ம | (*warma*) | ,, |

அஃறிணை

| | |
|---|---|
| *det varma badet* | சூடான குளிப்பு (*bath*) |
| *den varma semmoren* | சூடான வேனல் காலம் |

பன்மை

| | |
|---|---|
| *de varma samrana* | சூடான வேனல் காலங்கள் |

பொதுவாக ஆங்கில மூவிடப் பெயர்களைப் போன்றே இம்மொழிப் பெயர்களும் காணப்படுகின்றன. எனினும் ஆங்கிலத்தில் காணப்படாத இரண்டு அஃறிணை ஒருமை காணப்படுகின்றது. இவற்றுள் ஒன்று பொதுப்பாலைக் குறிக்கவும் மற்றொன்று அஃறிணையைக் குறிக்கவும் பயன் படுகின்றன. இதே போன்று முன்னிலை ஒருமையிலும் நீ, து (*ni-du*) என இரு பெயர்கள் இருக்கக் காணலாம். இவற்றுள் "து" நெருங்கிய நண்பர்களிடமும் வீட்டு அங்கத்தினர் களிடமும் பயன்படுவது என்றும் "நீ" தாழ்ந்தோரிடம் பேசும் போது பயன்படுவது என்றும் கூறுவர். சுவீடிஷ் மொழியில் உத்தியோகப் பெயரை அழைப்புப் பெயராகப் பயன் படுத்

துவதே சிறந்த பண்பாகக் கருதப் படுகிறது.[1] படர்க்கைப் பன்மையில் எவ்விதப் பால் வேற்றுமையும் இல்லை.[2]

| | |
|---|---|
| யா(க்) | நான் |
| நீ | நீங்கள் (ஒருமை) |
| ஹன் | அவன் |
| ஹொன் | அவள் |
| தே(த்) | அது |
| தென் | அது |
| வி | நாம், நாங்கள் |
| நீ | நீங்கள் |
| தெ | அவர்கள் |

ஆங்கில மொழியைப் போலல்லாமல் இம்மொழியின் கண்ணுள்ள உடைமை காட்டும் மூவிடப் பெயர்களும் பால் காட்டுவனவாக உள்ளன. ஆங்கிலத்தில் "*my*" என்ற ஒரே சொல் தன்மை, ஒருமை, உடைமைச் சொல்லாக இருக்க, இதன்கண் இப்பொருளைத் தரும் சொற்களாக மூன்று உள்ளன. (*min*), பொதுப்பால் (*non-neuter*) ஒருமைச் சொல்லாகவும், மித் (*mitt*), அஃறிணை ஒருமைச் சொல்லாக வும், மீன (*mina*) இரண்டிற்கும் பொதுவான பன்மைச் சொல் லாகவும் இருத்தல் காணலாம். வருகின்ற பெயர்கட்கேற்ப இச்சொற்கள் முன்னால் நின்று உடைமைப் பொருளைத் தரும். இது போன்று முன்னிலையிலும் (*dior' ditt' dina*) படர்க்கை

---

1. *Du* is used between intimate friends and members of the family (like French *tu* and German *du*). The use *du*, however is spreading among young people of the same class (students, workmen etc.).

*Ni* (in the singular) is not generally accepted as a form of address like 'yau' in English. It is always correct when speaking to a stranger or to one's inferiors. If you know the title, profession or the name of the individual addressed, it is considered more polite to use the title (in the definite form) or name, as if speaking of the person instead of *to* him.

IM. Bjorkhagen, p. 85.

2. Rice, *ibid.* p. 20.

யிலும் (*sior, sitt, sina*) வெவ்வேறு உடைமைச் சொற்கள் இருத்தல் காணலாம். படர்க்கையில் ஆங்கிலத்தைப் போலவே *hans, his hannes her dess, it* என்ற சொற்கள் பயன்படுதலும் உண்டு. 'சின், சித், சின' தற்சுட்டாகவே வர, பிற படர்க்கை உடைமைப் பெயர்கள் அப்பொருளுடன் சாதாரண உடைமைப் பொருளையும் தரும்.

| | |
|---|---|
| மின் பொக் | என்னுடைய புத்தகம் |
| தின் பொக் | உன்னுடைய புத்தகம் |
| மித் க்ளாஸ் | என் கண்ணுடி |
| தித் க்ளாஸ் | உன் கண்ணுடி |

சுவீடிஷ் வினைச் சொற்கள் ஆங்கில வினைச் சொற்களைப் போலவே காணப்படுகின்றன. இதில் நான்கு வகையான வினைச் சொற்கள் உள்ளன. ஆங்கிலத்தைப் போலல்லாமல் இதன்கண் "supine" வினையெச்சமும் காணப்படுகிறது. ஆங்கிலத்தில் இறந்தகால வினையெச்சம் (Past Participle) துணைவினையுடன் நின்று பல காலவேறுபாடுகளைக் காட்டுதல் போல இம்மொழியின்கண் "supine" வினையெச்சம் பயன் படுகிறது. ஆனல் சுவீடிஷ் இறந்த கால வினையெச்சம் ஒரு சில துணைவினைகளுடன் வந்து காலம் காட்டுவதுடன் பெயரின் அடையாகவும் வருகின்றது. எனவே ஆங்கிலத்தில் இறந்தகால வினையெச்சம் மட்டும் இருக்க, இம்மொழியில் அதன் இடத்தில் இரண்டு இலக்கணக் கூறுகள் நின்று அதன் பணியைச் செய்கின்றன எனக் கூறலாம்.

| | | |
|---|---|---|
| யாக் கல்லர் | (*jag kallar*) | நான் அழைக்கிறேன் |
| யா(க்) கல்லதெ | (*jag kallade*) | நான் அழைத்தேன் |
| கல்ல | (*kalla*) | அழை |
| கல்லத் | (*kallat*) | *supine* |
| அத் கல்ல | (*att kalla*) | அழைக்க |
| கல்த் | (*kalld*) | *past participle* |

சுவீடிஷ் மொழியில் உள்ள செயவென் வினையெச்சத்திற்கும் ஆங்கில வினையெச்சத்திற்கும் சில வேற்றுமைகள் உள்ளன. ஆங்கிலத்தில் "*to*" இன்றி வினையெச்சம் வராதிருக்க, பல சுவீடிஷ் வினைகள் "*att*" இன்றியே அகர வீற்றை ஏற்று வினையெச்சமாக வருதல் உண்டு.[1]

*dansa* ஆட

*bada* குளிக்க

1. Elmquist *ibid.* pp. 183–186.

## ரூனிக் எழுத்து முறை (Runic Writing)

ஜெர்மானிய மக்களின் பழைய எழுத்து முறையையே ரூனிக் எழுத்துமுறை என்பர். ஜெர்மானிய இலக்கியங்களில் பழைமையான இலக்கியங்கள் இவ்வித எழுத்துக்களாலேயே (பழைய நோர்ஸ், பழைய ஆங்கிலோ சாக்ஸன் மொழிகள்) எழுதப்பட்டிருக்கக் காண்கிறோம். ஜெர்மானிய மக்களின் பண்டைக் காலத்திய பழக்க வழக்கங்கள், நம்பிக்கை போன்றவற்றை அறியும் கருவியாக இது விளங்குவதுடன் அவர்களின் பழைய வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்ளவும் இவ்வெழுத்துக்கள் ஓரளவு பயன்படுதல் காணலாம். கிறித்தவ மதம் இம்மக்களிடையே பரவும் முன் இவர்களிடையே நிலை பெற்றிருந்த இவ்வெழுத்து முறை மந்திரசக்தி நிறைந்ததாக வும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியொன்றைக் கொண் டிருந்ததாகவும் கருதப்பட்டது.[1]

இக்கல்வெட்டுக்கள் மேற்கு ஐரோப்பா முழுவதும் பரந் திருந்தமை காணலாம். யூகஸ்லாவியா முதல் ஆர்க்கினி (Orkney) வரையிலும் கிரீன்லண்டு முதல் கிரீஸ் வரையிலும் இவ்வெழுத்து முறை காணப்படுகிறது. பழைய போர்க்கருவிகள், கற்கள், மரக்கருவிகள் போன்ற பல

---

1. The word 'rune' suggests not merely a form of writing, the angular characters of the Old Germanic script long since discarded, but a whole world of mystery and magic strange symbols scratched into ancient show-case; names of warriors, secret spells, even snatches of songs, appearing on objects as diverse as minute silver coins, scattered in the unlikeliest places from Yougoslavia to Orkney, from Greenland to Greece. The word itself means 'mystery' 'secret' in early English and its related languages.

Ralph W. V. Elliot, Runes, An Introduction, p. 1.

பொருள்களில் இது எழுதப்பட்டுள்ளது. இவற்றுள் மிக முக்கியமானவை சுவீடன் நாட்டில் காணப்படுகின்றன. கோத்லண்டில் (Gotland, Sweden) கண்டெடுக்கப்பட்ட கில்வெர் (kylver) கல்வெட்டும் "Vadstena" வில் கண்டெடுக்கப்பட்ட "bracteates" எழுத்துக்களும் குறிப்பிடத்தக்கவை. கில்வெர் கல்வெட்டில் காணப்படும் முதல் ஆறு எழுத்துக்களை இணைத்து வரும் சொல்லாகிய புதார்க் (Buthark, fupark) என்பதே ஜெர்மானிய ரூனிக் முறையின் பெயராகவும் அமைந்திருக்கக் காணலாம்.[1]

இம்முறையில் எழுதப்பட்ட எழுத்துக்களைக் கி.பி. மூன்றும் நூற்றுண்டு முதல் காணமுடியும். டென்மார்க்கில் பாக்லாண்டிலும் (Bogland) பின் (Fyn) பகுதியில் விமோஸிலும்(Vi-mos) செல்ஷ்விக்கிலும் (Schleswig) கண்டெடுக்கப்பட்டவை கி.பி. மூன்றும நூற்றுண்டைச் சார்ந்தவை என்று கருதுகின்றனர்.[2] இதே போன்று சுவீடன் நாட்டில் கோத்லாண்டில் மோஸில் (Mos) கிடைத்த ஈட்டியில் எழுதப்பட்ட எழுத்து வடிவமும் மூன்றும் நூற்றுண்டைச் சார்ந்தது என்பர். இவ்வெழுத்து முறை சிறிது காலத்திற்கு முன்பு வரையிலும் சுவீடனில் நாட்டுப் புறங்களில் சில பகுதிகளில் வழக்கில் இருந்து வந்துள்ளது. கி.பி. ஐந்தாம் ஆறும், ஏழாம் நூற்றுண்டைச் சார்ந்த கல்வெட்டுக்களில் பல ஸ்கேண்டிநேவிய நாடுகளில்

---

1. *ibid*. p. 2.

2. The oldest known inscription from Sweden is found on a spearhead, recovered from a grave at Mos in thc parish of Stenkyrka in Gotland. The inscription, consistingof only five runes, might be dated to the end of the third ce tury of our era. Its appearance on a weapon is typical, for it is on objects such as shield-mouths, spearheads, personal ornaments and household articles that the oldest inscriptions occur.

Sven B. F. Jansson, The Runes of Sweden, pp. 5-6.

கிடைத்துள்ளன. எனினும் டென்மார்க் நாட்டின் தென் மேற்குப் பகுதியே (Fyn schleswig) இவ்வெழுத்துமுறை பிறந்த இடம் என்பது சிலர் கருத்து. மேற்கூறிய கல்வெட்டுக் கள் மிகவும் சுருங்கியன. ஓரிரு மக்களின் பெயர்களே இவற்றுள் காணப்படுகின்றன.

டென்மார்க்கில் இவை பிறந்தன எனக் கூறின், இவை இங்கேயே தோன்றியனவா, அன்றி வேறு ஏதாவது எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்டு அமைந்தனவா என்று ஆராய்ந்துள்ளனர் அறிஞர்கள் பலர். இவ்வாராய்ச்சி யின் பலனாக மூன்று விதமான கருத்துக்கள் ஏற்பட்டுள்ளன. பலர் லத்தீன் எழுத்து முறையினின்றும் தோன்றியது என்றும் சிலர் கிரேக்க முறையினின்றும் இது பிறந்திருக்கலாம் என்றும் கருதியுள்ளனர்.

இம்முறையில் காணப்படும் சில எழுக்துக்கள் (F, R, H, S, C,) லத்தீன் எழுத்து முறையுடன் ஒத்துக் காணப்படு கின்றன என்றும், வேறு பல எழுத்துக்களும் லத்தீன் எழுத்துக்களிலிருந்தே வந்தவை என்றும் கருதுவர் பலர். இக்கருத்தினைக் கொண்டிருந்தவர்களில் முக்கியமானவர் டேனிஷ் அறிஞரான விம்மர் (L. F. A. Wimmer) ஆவார். மேலும் இவர் இம்முறை நாளாவட்டத்தில் படிப்படியாக உருப்பெற்றது எனக்கருதாமல் கோதிக் எழுத்து முறையினைப் போன்று தனி ஒரு மனிதனால் ஆக்கப்பட்டது என்றும் கருதி னர். கி.பி. முதல் நூற்றாண்டை ஒட்டிய காலப் பகுதியில் இம்முறை தோன்றியிருக்கலாம் என எண்ணினர் இவ்வறிஞர். லத்தீன் எழுத்து முறைக்கும் இம்முறைக்குமிடையே காணப் படும் வேற்றுமைகளில் சில, இவர் காட்டும் காரணங்களால் தெளிவு பெறாமல் போவதும் லத்தீன் இடமிருந்து வலமாக எழுதப்பட இம்முறை சில நேரங்களில் வலமிருந்து இடமாக வும் மேலிருந்து கீழாகவும் எழுதப்பட்டிருப்பதும் இவருடைய

கருத்து பொருத்தமற்றது என்பதைக் காட்டும்.[1] இவரைப் போன்றே பல அறிஞர்கள் இக்கருத்தினைக் கொண்டிருந் தனர்.[2]

கீரீக் முறையினின்றும் வந்தது இது எனக் கருதியவர் களில் முக்கியமானவர் ஸ்கேண்டிநேவிய அறிஞர் பிரிசென் (O.V. Friesen) என்பாராகும். இவருடைய கருத்து ஆங்கில மொழியாளர்களிடையே நன்கு வேரூன்றியிருந்தது. இவருடைய கருத்துப்படி புதார்க் எழுத்துமுறை கருங்கடல் பக்கம் கி.பி. மூன்ரும் நூற்ருண்டை ஒட்டிய காலப் பகுதியில் தோன்றியது ஆகும். புக்கே (Sophus Bugge) ஆஸ்கெபெர்க் (F. Askeberg) போன்ரேரும் இதே கொள்கையைக் கொண்டி ருந்தனர்.

ஆனல் இன்று இவ்வெழுத்து முறையின் தோற்றம் பற்றி வேறு கருத்து இருப்பதைக் காணலாம். இதன் தோற்றத் திற்குக் காரணம் லத்தீன் அல்லது கிரேக்க எழுத்துக்களல்ல என்பதும் வட இத்தாலியில் வழக்கிலிருந்த எழுத்துமுறை (Subalpine) இதற்குத் தாயகம் என்றும் இன்றைய அறிஞர் கள் கருதுகின்றனர். ரூனிக் எழுத்துக்களைப் போன்றே, (ஆனல் சில பழைமையான கூறுகளைக் கொண்ட கல்வெட் டுக்கள்) பல ரூமேனியா, பிராண்டன்பர்க் (Brandenbwrg) வோல்கினியா (Volhynia) போன்ற இடங்களில் காணப்படு வதால் இவ்வெழுத்து முறை மேற்கினின்று வந்திருக்கமுடியா தென்றும் கருங்கடலின் வடபக்கத்தில் கார்தோனியாவில்

---

1. As with most early alphabetic scripts runic normally recognises no division between words. Inscriptions could, as has been mentioned, read from right to left or from left to right or *boustrophedon*, that is in the manner in which a field is ploughed. Sometimes an inscription of two or more lines is to be read from bottom to upwards.

Elliot, *ibid*, p. 19.

2. S. Agrell, Die Herkunft der Runescript, (1938)
H. Pedersen, L' origine des runes (1923).

டெனூப் நதியின் கீழ்ப் பாகத்தில் காணப்படும் கல்வெட்டுக் களும் இத்தாலியில் காணப்படும் கல்வெட்டுக்களும் தம்முள் ஒட்டியிருப்பதால் இவை அங்கு நின்றே தோன்றியிருக்க வேண்டும் என்றும் கருதுவர். இந்தக் கருத்தினைக் கூறியவர் (1928) மார்ஸ்டிராண்டர் என்பார் ஆவார்.[3]

மேலும் 'Negau' என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்று இக்கருத்தினை வலியுறுத்துவதாக உள்ளது. இதன்கண் ஜெர்மானியச் சொற்கள் இத்தாலிய எழுத்து முறையில் எழுதப்பட்டுள்ளன. எனவே ஜெர்மானிய மக்கள் இத்தாலிய முறையினைத் தெரித்து வைத்திருந்தனர் என்று எண்ண இடமேற்படுகிறது. கி. மு. மூன்றும் நூற்றுண்டின தாகக் கருதப்படும் இக்கல்வெட்டின் காலத்திற்கும் ரூனிக் கல்வெட்டுக்கள் தோன்றிய காலத்திற்குமிடையே உள்ள காலப்பகுதி புதிய எழுத்து முறை தோன்றப் போதிய கால அளவையும் தந்து நிற்கக் காணலாம். இதன் அடிப்படையில் எழுந்த ரூனிக் முறையில் லத்தீனின் செல்வாக்கும் இணையவே சில எழுத்துக்களில் மாற்றம் உண்டாகி இன்று காணப்படும் ருனிக் எழுத்துக்கள் உருவாயின எனக் கருத லாம். இவ்வாறு தெற்கே எழுந்த முறையே 'Cimbri' மக்களா லும் ஹெரூலி (Heruli) மக்களாலும் ஸ்கேண்டிநேவியப் பகுதி கட்கும் வடகடல் பகுதிகட்கும் (Frisland) கொண்டு செல்லப் பட்டது. இம்முறையின் தோற்றக் காலமாகக் கருதப்படுவது கி. மு. மூன்றும் நூற்றுண்டுக்கும் முதல் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியாகும்.

---

3. The thesis of North Italic origin was elaborated almost simultaneously by C. J. S. Marstrander[3] and M. Hammarström[4], and has since been accepted by many runologists in principle at least if not in every detail.

Elliot, *ibid.* p. 6.

4. *ibid.* p 9.

மார்ஸ்டிராண்டர் இக்கருத்தினைத் தெளிவாகக் கூறியபோதிலும் இவருக்கு முன்பே பல அறிஞர்கள் இக்கருத்தினைக் கொண்டிருந்தனர். அறிஞர் விம்மரும் இந்த எண்ணத்தைக் கொண்டிருந்தார்.

டென்மார்க் இக்காலத்தில் சிறந்த வாணிப இடமாக இருந்ததால் இவ்வெழுத்து முறை இவண் முதலில் வந்தது என்றும் முன்னர்த் தங்கள் நாட்டினின்றும் துரத்தப்பட்ட ஹெரூலி மக்கள் மீண்டும் தங்கள் நாடு திரும்பியபோது இவ்வெழுத்து முறையுடன் வந்தனர் என்றும் சிலர் கருதுவர். இங்கிருந்து இது கி.பி. 3ஆம் நூற்றாண்டில், நார்வே, சுவீடன் சென்றது என்றும் இவண் கற்களில் செதுக்கும் முறை ஆரம்பமானது என்றும் பின்னர் பால்டிக் பகுதிகளில் பரவி, கோத்லண்டு தீவுகளிலும் நடைமுறையில் வந்தது என்றும் கூறுவர். நார்வே நாட்டில் ஐம்பதுக்கும் அதிகமான (250–800) கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

ஸ்கேண்டிநேவிய நாடுகளில் ரூனிக் எழுத்து செழித்து வளர்ந்தது. கி. பி. எட்டாம் நூற்றாணடு வரையிலும் கல்வெட்டுக்களில் பயன்பட்டதுடன் பின்னர் ஒரு சில கையெழுத்துப் பிரதிகளிலும் இவை பயன்பட்டுள்ளன. இந்நாடுகளில் இவ்வெழுத்துமுறை பல மாற்றங்களைக் கண்டது. இருபத்து நான்கு எழுத்துக்களில் தொடங்கி இது பின்னர் பதினாறு எழுத்துக்களில் முடிந்தது. பழைய நோர்ஸ் மொழி அடைந்த மாற்றத்தினால் இவ்வெழுத்து முறையும் மாறியது.

ஹெரூலி மக்களால் கொண்டு வரப்பட்ட இவ்வெழுத்து முறை டென்மார்க் நாட்டில் முதன்முதலில் தோன்றியதாயினும் சுவீடன் நாட்டில்தான் ஏராளமான ரூனிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. மூவாயிரத்துக்கு மேற்

---

Elliot, *ibid* p. 3.

பட்ட கல்வெட்டுக்கள் இவண் உள்ளன.[1] இவண் நின்றும் ஸ்கேண்டிநேவிய மக்கள் பிற நாடுகட்குச் சென்ற காலப் பகுதியைச் (Migration period) சார்ந்தனவாக இருபது கல் வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

வைக்கிங் காலப் பகுதியைச் சார்ந்த கல்வெட்டுக்கள் ஏராளமாக உள்ளன. கி.பி. ஏழாம் நூற்றுண்டிலிருந்து தொடர்ச்சியாகக் கிடைக்கும் இவற்றிலிருந்து இவற்றின் வளர்ச்சியையும் மாற்றத்தையும் அறிவதோடு ஸ்கேண்டி நேவிய மொழி அடைந்த மாற்றத்தையும் அறிந்து கொள்ள இயலும். முதன் முதலில் ஜெர்மானிய மொழிகளின் ரூனிக் எழுத்து முறையில் இருபத்து நான்கு எழுத்துக்கள் (ரூன்) இருந்தன. ஸ்கேண்டிநேவியாவில் மொழி அடைந்த மாற் றத்தால் சில எழுத்துக்கள் பின்னர் பயன்படாத நிலை ஏற் பட்டது. புதிய சில ஒலிகள் தோன்றவே அவற்றிற்குப் புதிய எழுத்துக்களைக் கண்டு பயன்படுத்துவதா, அன்றிப் பழைய எழுத்துக்களையே வேறு வேறு ஒலிகட்கும் உபயோகிப்பதா என்ற நிலை ஏற்பட்டது. இறுதியில் ஒரே எழுத்தினைப் பல ஒலிகட்கும் பயன்படுத்தத் தொடங்கினர். இதனால் சில எழுத்துக்கள் ஆறு ஒலிகளைத் தருவதைக் காணலாம். இந்த நிலையில் முன்னர் இருபத்து நான்கு எழுத்துக்களைக் கொண்ட ரூன் முறை பதினாறு எழுத்துக்களாகச் சுருங்கியது. இந்நிலை யிலும் டென்மார்க்கில் ஒரு போக்கும் நார்வே-சுவீடனில் மற்றொரு போக்கும் ஏற்பட இரு முறையில் இவ்வெழுத்துத் துறை பிரிந்தது. முன்னதை டேனிஷ், ரூனிக் என்றும் பின்னதை சுவீடிஷ்-நார்வேஜியன் என்றும் அழைத்தனர். இவை இரண்டும் ஒரே முறையினின்றும் வந்தவை என்பதை மறத்தல் கூடாது.

---

1. More than 3000 runic inscriptions are known from Sweden–nearly four times as many as are known from the rest of the Germanic world put together.

Jansson, *ibid*. p. 5.

டேனிஷ் முறையில் (Danish Futhark) எழுதப்பட்டிருக்கும் கியொர்லெவ் கல்வெட்டும் (Gørlev) ஸ்வீடிஷ் முறையில் (Swedish-Norwegian Tuthark) எழுதப்பட்ட ரியோக் கல்வெட்டும்[1] (Rök stone) பதினறு ரூன் எழுத்துக்களைக் கொண்டிருப்பது கவனித்தற்குரியது. இந்நிலைக்குக் காரணம் முன்னர்க் குறிப்பிட்டது போன்று மொழியில் கண்ட மாற்றமும் எழுத்து முறையில் எளிமை வேண்டும் என்ற நோக்கமுமே.

ஆனல் பதின்மூன்ரும் நூற்ருண்டில் ஒரே எழுத்து முறை பயன்பட ஆரம்பித்தது. சுவீடனில் டேனிஷ் முறை பின்பற்றப்பட, நார்வேயில் இருமுறை கலந்த ஒரு கலப்பு ஏற்பட்டது. இதன்கண் புள்ளிகளைப் பயன்படுத்தி ஒலி வேறுபாடுகளைக் காட்ட ஆரம்பித்தனர். இந்நிலைக்கு லத்தீன் எழுத்து வழி வகுத்திருக்கலாம். 1228இல் சுவீடனில் கண்டெடுக்கப்பட்ட சால்பி (Saleby) கல்வெட்டும் இம்முறையில் எழுதப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கதாம்.[2]

ஸ்கேண்டிநேவிய நாடுகளில் இக்கல்வெட்டுக்கள் ஏராளமாகக் காணப்படுவதுடன் ஐரோப்பாவின் பல பாகங்களிலும் அங்கங்கே ரூனிக் கல்வெட்டுக்கள் காணக்கிடக்கின்றன. இதற்குக் காரணம் வைக்கிங் மக்கள் தாங்கள் சென்ற நாடுகளிலெல்லாம் தங்களின் வீரச் செயல்களைப் பொறித்து வைத்ததுடன் தங்கள் நாட்டிலும்கூடப் பிற நாட்டில் உயிர் துறந்த வீரர்கட்காகக் கட்டப்பட்ட கல்லறைகளில் அவர்களைப் பற்றிப் புகழ்ந்து எழுதி வைத்துள்ளதேயாம்.[3] கிரேக்க நாடு இவர்களுடைய கல்லறைக் கல்வெட்டுக்களில் அடிக்கடி குறிப்

---

1. சுவீடனில் öster götland என்னுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இக்கல்வெட்டு கி.பி. 9ஆம் நூற்ருண்டின் நடுப் பகுதியைச் சார்ந்தது.

2. Ralph W. V. Elliot, *ibid.* p. 25.

3. Jannsson, *ibid.* pp. 1961.

பிடப்படும் இடமாகும். பிராயுசில் (Piraeus) கிடைத்துள்ள கல்வெட்டும் இதனை வலியுறுத்தும்.[1]

ரூனிக் கல்வெட்டுக்களை இங்கிலாந்திலும் காண முடியும். முன்னர்க் குறிப்பிட்டது போன்று இவ்வெழுத்துமுறை ஜெர்மானியர்களின் முறையாகும். தென் பகுதியினின்றும் ஹெரூலி மக்கள் டென்மார்க்கு வந்தபோது வடகடல் பகுதியினரும் (Friesland) இம்முறையை அறிந்து வைத்திருந்தனர் எனக் கண்டோம். இதனால் ஆங்கிலோ-சாக்சன் மக்கள் பிரிட்டனில் குடியேறியகாலை, தங்களுடன் இவ்வெழுத்து முறையையும் கொண்டு சென்றனர். ஸ்கேண்டிநேவியப் பகுதிகளில் கிடைப்பது போல் ஏராளமான கல்வெட்டுக்கள் இவண் கிடைக்கவில்லையாயினும் நாணயங்கள், போர்க்கருவிகள், கற்கள், பெட்டிகள், சிலுவைகள், போன்றவற்றில் ரூனிக் எழுத்துக்கள் பொறித்திருக்கக் காணலாம்.[2] மேலும் ஸ்கேண்டிநேவியாவில் இருபத்து நான்கு "ரூன்"கள் பின்னர் பதினாறாகக் குறைந்திருக்க, இவண் முப்பத்துமூன்றாகப் பெருகியிருக்கக் காண்கிறோம்.

ஆங்கிலோ சாக்சன் மக்கள் இங்கிலாந்து வரும் முன்பே இருபத்து நான்காக இருந்த ரூன் இருபத்தெட்டாக வளர்ந்து விட்டது, ஐந்தாவது நூற்றாண்டைச் சார்ந்த சில பிரிசியன் (Old Frisian) கல்வெட்டுக்கள் புதிய சில ரூன் எழுத்துக்களைக்

---

1. Turning from the extreme north-west to the south-west we find a most picturesque runic visiting-card on the marble lions that used to card the entrance to the piraeus in Greece.

Elliot, *ibid.* p. 26.

2. Although English runic remains offer considerable variety and include unique works of art like the Ruthwell Cross or the Franks casket, they cannot rival the numbers and in most cases the antiquity of those of other, especially in the Scandinavian countries.

Elliot, *ibid.* p. 76.

கொண்டிருப்பதும் இம்மொழியும் பழைய ஆங்கிலமும் சில கூறுகளைப் பொதுவாகக் கொண்டிருப்பதும் இந்நிலையை விளக்கும். 550-650க்கு இடைப்பட்ட காலத்தினதாகக் கருதப்படும். ஒரு மர வாள் புதிய எழுத்துக்கள் இரண்டினைக் கொண்டுள்ளது.[1] எனினும் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கிடைக்கும் பழைய ஆங்கில ரூனிக் எழுத்துக் களில்தான் இருபத்தெட்டு ரூன் எழுத்துக்கள் காணக் கிடக்கின்றன. தேம்ஸ் நதிக்கரையில் எடுத்த (1857) வாளொன்றில் இருபத்தெட்டு "ரூன்"கள் உள்ளன. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில்தான் இது முப்பத்து மூன்றாக வளர்ந்தது. இம்மாற்றமும் 'Northumbria' பகுதிகளி லேயே ஏற்பட்டது. ரூத்வெல் கல்வெட்டில் முப்பத்தொரு "ரூன்"கள் உள்ளன. எட்டாவது நூற்றாண்டின் முற்பகுதி யைச் சார்ந்ததாகக் கருதப்படும் இக்கல்வெட்டே ஆங்கில நாட்டில் காணப்படும் ரூனிக் கல்வெட்டில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது. 1731இல் தீயினால் அழிந்து போன கையெழுத்துப் பிரதியொன்று முப்பத்து மூன்று ரூன்களைக் கொண்டிருந்தது.

வைக்கிங் காலத்தில் இங்கிலாந்தும் ஸ்கேண்டிநேவிய மக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டதால், ஸ்கேண்டிநேவிய ரூனிக் முறையும் இவண் பரவியது. இதைப் பயன்படுத்தி எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் Orkneyயிலும் Isle of Monயிலும் காணப்படுகின்றன.

கி. பி. ஆறாம் நூற்றாண்டில் (597 A.D.) கென்டில் (Kent) ஆகஸ்டின் (St. Augustine) சில மதக்குருக்களுடன் வந்து ஆங்கில மக்களைக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுமாறு செய்த போதிலும் சில நூற்றாண்டுகள் வரையிலும் பழைய மதக் கோட்பாடுகளும் (Pagan) நம்பிக்கைகளும் மாறவில்லை. இதுபோன்றே பழக்கத்திலிருந்த ரூன் எழுத்துமுறையும்

---

1. பிரிஸ்லாண்டில் Arum என்னுமிடத்தில் 1895இல் கண்டெடுக்கப்பட்டது.

ஸ்கேண்டிநேவிய நாட்டினைப் போன்று இங்கும் சில காலம் வாழ்ந்தது. கிறிஸ்தவ மதம் வேரூன்றிய போதுங்கூட நாட்டு மொழியினை எழுதப் பயன்பட்டதோடு ஆராய்ச்சிப் பொருளாகவும் இது பல நாள் பயன்பட்டது. எப்போது ரூனிக் முறை பழக்கத்திலிருந்து மாறியது எனத் திட்டவட்டமாகக் கூற முடியாவிடினும், ஆங்கிலோ - சாக்சன் மக்களைப் பொறுத்த மட்டில் 10ஆம் நூற்றுண்டில் மாறிவிட்டது எனக் கூறலாம். எனினும் மேலும் ஓரிரு நூற்றுண்டுக் காலம் இவண் வாழ்ந்த ஸ்கேண்டிநேவிய மக்கள் இதைப் பயன் படுத்தி வந்தனர்[1].

ஆனுல் சுவீடனில் நிலைமை வேருக இருந்தது. வைக்கிங் காலத்திற்குப் பின்னர் ரூனிக் கல்வெட்டுக்கள் குறைந்த போதிலும் வெகு காலம் மக்களிடையே வாழ்ந்து வந்தது. பதினென்ரும் நூற்றுண்டில் கிறித்தவ மதம் இவண் நிலை நின்ற போதிலும் ரூனிக் எழுத்துமுறை வேரூன்றி நின்றது. கோயில் மணிகளிலும், சுவர்களிலும், அழகிய தூண்களிலும் இரும்பு உத்திரங்களிலும் இவ்வெழுத்துக்களைப் பொறித்திருக்கக் காணலாம். 19ஆவது நூற்றுண்டில் லத்தீன் எழுத்துக்குப் பதிலாகப் பள்ளிகளிலும் பாடப்புத்தகங்களிலும் ரூனிக் எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறியவர்களும் உண்டு[2]. மேலும் அண்மைக் காலம் வரையிலும் இம் முறை பழக்கத்தில் இருந்து வந்துள்ளது.[3]

---

1. Elliot, *ibid.* p. 44.

2. It is against this back ground that we must considh the origin of the idea — fantastic as it seems to us — that tde Latin alphabet should be replaced by runes. This happenee when Sweden was well into modern times, for it was 1611 that Johannes Bureus published his runic ABC, intended for use in schools. It was also planned to use runes instead of Latin characters in printed books. In this way we should make good the harm done to us when, "as a result of the Pope's power over Christ's tender flock", the Latin script ousted the Swedes' honourable and worthy runes.

Jansson, *ibid.* p. 165.

3. *ibid.* pp. 165–166.

பிற்சேர்க்கை 2

| மொழிகள் | நாடுகள் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1. அல்பேனியன் | அல்பேனியா | 3,000,000 |
| 2. ஆர்மேனியன் | சோவியத் ரஷ்யா | 4,000,000 |
| 3. இத்தாலியன் | இத்தாலி | 55,000,000 |
| 4. ஐரிஷ் | அயர்லாந்து | 500,000 |
| 5. காட்டலன் | ஸ்பெயின் | 5,000,000 |
| 6. கிரீக் | கிரீஸ், சைப்பிரஸ், துருக்கி | 10,000,000 |
| 7. சார்டினியன் | இத்தாலி (சார்டினியா) | 1,000,000 |
| 8. சுவீடிஷ் | சுவீடன், அமெரிக்கா | 9,000,000 |
| 9. டேனிஷ் | டென்மார்க், ஜெர்மனி | 5,200,000 |
| 10. நார்வேஜியன் | நார்வே | 4,000,000 |
| 11. பிரஞ்சு | பிரான்சு, கானடா | 65,000,000 |
| 12. பிரஞ்சு கிரியோல் | ஹெயிட்டி | 5,000,000 |
| 13. பிராவன்சல் | பிரான்சு | பல இலட்சங்கள் |
| 14. பிரிட்டன் | பிரான்சு | 900,000 |
| 15. போர்ச்சுக்கீஸ் | பிரேசில், போர்ச்சுக்கல் | 85,000,000 |
| 16. போர்ச்சுக்கீஸ் கிரியோல் | வெர்தெ குடா தீவுகள் | 200,000 |
| 17. ரயட்டோ ரொமான்ஸ் | இத்தாலி, சுவிச்சர்லாந்து | 600,000 |
| 18. ருமேனியன் | ருமேனியா, சோவியத் ரஷ்யா | 20,000,000 |
| 19. வெல்ஷ் | இங்கிலாந்து, அமெரிக்கா | 1,000,000 |
| 20. ஸ்காட்டிஷ் கேயலிக் | ஸ்காட்லாந்து | 1,000,000 |
| 21. ஸ்பானிஷ் | மெக்சிக்கோ, ஸ்பெயின் | 145,000,000 |

பிற்சேர்க்கை 1

| மொழிக்குடும்பங்கள் | நாடுகள் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1. அமெரிக்க- இந்திய மொழிகள் | அமெரிக்கா மெக்சிக்கோ | 12,000,000 |
| 2. ஆப்பிரிக்க- ஆசிய மொழிகள் | ஆப்பிரிக்கா ஆசியா | 125,000,000 |
| 3. ஆஸ்திரேலிய- மொழிகள் | ஆஸ்திரேலியா | 200,000 |
| 4. இந்தோ—ஐரோப்பிய மொழிகள் | ஐரோப்பா ஆசியா ஆஸ்திரேலியா அமெரிக்கா ஆப்பிரிக்கா | 1,580,000,000 |
| கிரீக் | | 10,000,000 |
| ரொமான்ஸ் மொழிகள் | | 390,000,000 |
| மேற்கு ரொமான்ஸ் | | 310,000,000 |
| கிழக்கு ரொமான்ஸ் | | 80,000,000 |
| கெல்டிக் மொழிகள் | | 3,000,000 |
| கோடலிக் (கெல்டிக்) | | 1,000,000 |
| பிரிட்டானிக் | | 2,000,000 |
| ஜெர்மானிக் மொழிகள் | | 420,000,000 |
| மேற்கு ஜெர்மானிக் | | 400,000,000 |
| வடக்கு ஜெர்மானிக் | | 20,000,000 |

| | | | |
|---|---|---|---|
| 5. | உராலிக்-அல்டய்க் | பின்லண்டு<br>ஹங்கேரி<br>எஸ்தோனியா<br>துருக்கி, ரஷ்யா<br>சீனு, மங்கோலியா | 90,000,000 |
| 6. | கொரியன் | கொரியா | 37,000,000 |
| 7. | சீனோ-திபேத்தியன் | சீனு, திபேத்<br>பர்மா<br>பார்மோசா | 760,000,000 |
| 8. | திராவிடம் | இந்தியா<br>பாகிஸ்தான்<br>இலங்கை<br>மலேசியா<br>தென்னுப்பிரிக்கா | 120,000,000 |
| 9. | தென்கிழக்காசிய மொழிகள் | வியட்னும்<br>கம்போடியா<br>மலேசியா<br>இந்தியா | 45,000,000 |
| 10. | பாப்பன் மொழிகள் | நியூ கினி (அதைச் சுற்றியுள்ள தீவுகள்) | 2,000,000 |
| 11. | பாஸ்க் | வட ஸ்பெயின்,<br>பிரஞ்சு | 800,000 |
| 12. | மலேயோ-பாலினேசியன் | (பல்வேறு தீவுகள்)<br>இந்தோனேஷியா<br>பிலிப்பைன் | 130,000,000 |
| 13. | ஜப்பானிய மொழி | ஜப்பான் | 95,000,000 |

**வழக்கிழந்த மொழிகள்**

| | |
|---|---|
| கார்னிஷ் | பிரிட்டன் |
| காலிஷ் | (பழைய) பிரான்சு |
| கோதிக் | ஐரோப்பா முழுவதும் ஆங்காங்கே வழக்கிலிருந்தது |
| பிக்டிஷ் | ஸ்காட்லாந்து |
| பழைய நோர்ஸ் | ஸ்கேண்டி நேவியன் நாடுகள் |
| மேங்ஸ் | மேன் தீவுகள் |

உதவிய நூல்கள்

1. Ackerly, Fred. G.
A Rumania Manual

2. Agrell, S.
Die Hcrkunftder Runescript

3. Atkinson, B. F. C.
The Greek Language

4. Berulfsen, Bjarne
Norwegian Grammar

5. Bjorkhagen, G. M.
Modern Swedish Grammar

6. Brachet, Augusto
A Historical Grammar of the French Tongue

7. Branner, John. C.
A Brief Grammar of the Portuguese Language

8. Braune, Wlihelon
A Gothic Grammar

9. Buck, Carl Darling
The Greek Dialects

10. Costas, P. S.
An Outline of the History of the Greek Language

11. Darmesteter, Arsene
A Historical French Grammar

12. Dillon, Myles and Donnacha Croinin.
Teach yourself Irish

13. Dringer, David.
Writing

14. Edgren, Hjalmar. A.
A Brief Spanish Grammar

15. Einarsson, Stefan.
History of Icelandic Literature

16. Elcock, W. D.
The Romance Language

17. Elliot, Ralph, W. V.
Runes our Introduction

18. Elmguiet Louic A.
Elementary Swedish Grammar

19. Entwistle, W. J.
Aspects of Language

20. Entwistle, W. J.
The Spanish Language

21. Ewert, Alfred.
The French Language

22. Farrar, Rev. Friederic W.
Language and Languages

23. Gelp, I. J.
A Study of Writing

24. Glendenning, P. J. T
Teach Yourself Icelandic

25. Gordon, E. V.
An Introduction to Old Norse

26. Grandgent, C. H.
Italian Grammar

27. Gray, Louis H.
Foundations of Language

28. Greenberg, Joseph H.
Essays in Linguistics

29. Groth, P.
Danish Grammar Gorden, E. V. An Introduction to Old Norse

30. Hall, J., Robert A.
Descriptive Italian Grammar
Idealism in Romance Linguistics
Anthropological Linguistics
Vol. 7, No. 8, 1965
Vol. 6, No. 1964

31. Haugen, Einar I.
Beginning Norwegian

32. Hermamsson, Halldor
Modern Icelandic (in Icelandica Vol. XII)

33. Hockett, Charles. F.
A Course in Modern Linguistics

34. Householder, Fred W., Kostas Kazazis and Andreas Koutsoudas.
Reference Grammar of Literacy Dhimotiki

35. Hughes, John P.
The Science of Language.

36. Hyde, Douglass.
A Literary History of Iccland

37. Jackson, Kenneth
Language and History in Early Britain
Common Gaelic [in the Procedings of the British Academy Vol. XXXVII, 1951]

38. Jansson, Svcn, B. F.
The Runes of Sweden

39. Jenner, Henry
Hand Book of the Cornish Language

40. Jesperson, Otto
Language

41. Jones, J. Morris.
A Welsh Grammar

42. Jonsson, S.
A Primer of Modern Icelandic

43. Kelchner, Georgia Dunham.
Dreams in Old Norse Literature and Affinities in Folklore

44. Kneen, J. J.
A Grammar of the Manx Language.

45. Lehman, L. P.
Historical Linguistics, An Introduction

46. Marchant Douse, T. Le.
An Introduction to the Gothic of Ulfilas

47. Marchand, James M.
The Gothic Language, in Orbis Vol. 7 [1958]

48. Mario Pei.
The World's Chief Languages

49. Marn and Alf Sommerfelt.
Teach Yourself Norwegian

50. Mathews, W. K.
Russian Historical Grammar

51. May, A.
Practical Grammmer of the the Swedish Language

52. Melberg, H.
Origin of the Scandinavian Nations and Language

53. Muller, Siegfrted H.
The World's Living Languages

54. Nandris, Grigore.
Colloquial Rumanian

55. Pedersen, Holger.
The Discovery of Language

56. Norman, F.
"Indo-European" and "Indo-Germanic", Modern Language Review, vol. XXIV [July, 1929]

57. Otte, B. C.
The Danish Language

58. Palmer, L. R.
The Latin Language

59. Priebsch, R. and Collinson, W. E.
The German Language

60. Prokosch, E.
A Comparative Germanic Grammar

61. Pulgram, Ernst.
The Tongues of Italy

62. Ramsey, M. Montrose.
A Spanish Grammar

63. Resnick, Seymour.
Essential French Grammar

64. Rice, Allan Lake.
Swedish, A Practical Grammar

65. Sapir, Edward.
Language

66. Scisanu, Romulus.
Rumania

67. Semenov, Anatol F.
The Greek Language in Its Evolution

68. Smith, Barry C.
Elements of Latin

69. Spaulding, Robert K.
How Spanish Grew

70. Thompson, Wilmot H. and others
Essential Latin

71. Trend, J. B.
The Languages and History of Spain

72. Waterman, John T.
Perspectives in Linguistics

73. Weize, Oscar.
Language & Character of the Roman People

74. Wessên, Elias.
De Nordika Språken

75. Whatmough.
The Foundations of Roman Italy

76. Williams, Edwin B.
From Latin to Portuguese

# LANGUAGES OF THE WORLD

PART I

(INDO - EUROPEAN LANGUAGES)

BY

PROF. S. AGESTHIALINGOM, M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A.)

GREEK
LATIN
SPANISH
PORTUGUESE
CATALAN
FRENCH
PROVENCAL
RHAETO ROMANCE
ITALIAN
SARDINIAN
RUMANIAN
IRISH
SCOTTISH
WELSH
CORNISH
BRETON
MANX
GOTHIC
OLD NORSE
ICELANDIC
NORWEGIAN
DANISH
FAROESE
SWEDISH, ETC.

Jacket Printed at Commercial Printing & Publishing House Madras-1

UG
R03